# இளைஞர் தமிழ்க் கையகராதி

ஸ்ரீ:

# இளைஞர்

# தமிழ்க் கையகராதி

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

*(Tamil Pandit, E. L. M. F. High School, Madras)*

தொகுத்தது

சென்னை

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

[பதிப்புரிமை] 1928 [விலை அணா 14

# ஆக்கியோன் முன்னுரை

வெண்டா மரையின் விளங்கனை யென்மனத்
தண்டா மரையிற் றங்குவ ளினிதே.

மலர்தலை யுலகின் மன்னிய மொழிகளுள் தலை சிறந்து விளங்குந் தண்டமிழ் மொழியிற் சிறப்புற்றுத் திகழ்ந்த பண்டைப் புலவர் பெருமக்கள், தமிழ் மக்கள் பலரும் மனமகிழ்ந்தோதி அறம் பொருளின்பம் வீடென்னு மந்நாற் பொருளையு மடைதற்குக் கருவி யாக இயற்றிய பைந்தமிழ் நூல்கள் பலவுஞ் **சொன்னோக்கும் பொருணோக்குந் தொடை நோக்கு நடை நோக்குந் துறையினோக்கோ டெந்நோக்கு நோக்க விலக்கியங்களாக** விளங்குமின் றமிழ்ப் பாக்களா னியன்றன வென்பது தமிழரும் பிறரும் அறிந்ததே. பண்டைக் காலத்தில் அத்தகைய சீரிய நூல்களை மக்கள் இனிது கற்றுணர்தற்குக் கருவி நூல்களாக அமைந்தவை நிகண்டு நூல்களும் இலக்கண நூல்களுமேயாம். அந்நூல்களும் கற்போர் மனத்துப் பசுமரத் தாணிபோற் பதியும் வகையில் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டுள்ளன. ஆதலின், பண்டு தமிழ் கற்கப் புகுமாணவர், முதன் முதல் சொற்களின் பொருள்களை இனிது விளக்குவனவாகிய நிகண்டு நூல்களைக் கற்றுச் சொற் பொருளைய நீங்கி, பின்பு முறையே சிறு காப்பியங்களையும் பெருங் காப்பியங்களையும் பிற நூல்களையுங் கற்றுச் சீரிய தமிழ்ப் புலமை யுடையராய்ப் பின்னர் மொழித்திறத்தின் முட்டறுக்கும் இலக்கண நூல்களை யாராய்ந்து, மொழி வன்மை பெற்றுக் கவியரசராக விளங்கினர் என்ப.

பிற்காலத்தில் அம்முறை வீழப் புது முறை தலை காட்ட லாயிற்று. அதனால், மாணவர், நிகண்டு இலக்கிய இலக்கணங்களை முறையாக நல்லாசிரியரிடம் பாடங்கேட்டுப் பாடம் போற்று முறைமையினை யிழந்தனர். சில்லாண்டுகளுக்கு முன்னர் **வீரமா முனிவர்**

என்னும் புனைபெயருடன் தென்னிந்தியாவில் பெரும்புலவர்களின் உதவி கொண்டு தமிழ் நூல்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்த இத்தலி (Italy) தேசத்தினராகிய பெரியார் (Rev. Beschi), தமிழ் கற்போர்க்குப் பெரிதும் பயன்படுமாறு, அங்கில முறையைப் பின்பற்றித் தமிழில் **சதுரகராதி** என்னும் பெயரமைந்த அகராதி யொன்றியற்றித் தமிழுலகிற் குதவினர். பின்னர் அதனைப் பின் பற்றித் தமிழ்ப் புலவர் சிலர் சிறியவும் பெரியவுமாகப் பற்பல அக ராதிகள் தொகுத்தனர். அகராதிகள் ஏற்பட்ட பிறகு தமிழ் கற் பார் பெரிதும் அவற்றின் துணை கொண்டே கற்பது வழக்கமாய் விட்டது. **பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வகையினான் வழுவலவே?**

எனினும், இக்காலை வெளிவந்துள்ள அகராதிகள், மாணவர் தாம் செல்லுமிட மெல்லாந் தம்முடன் தாங்கிச் சென்று, அவ்வப் போது தமக்கு ஏற்படும் சொற்பொருளையங்களைத் தீர்த்துக் கொள் ளத் தகுந்த சிறிய வடிவிலும் குறைந்த விலையிலும் அமைந்தில. ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள அகராதிகள் இத்துறையில் மாணவர்க்குப் பெரிதும் துணை புரிகின்றன. ஆதலின், யான் இம் முறையில் மாணவர் கற்கும் தமிழ் இலக்கியங்களில் வரும் கடின சொற்களின் பொருள்களை யவர்களே அகராதியி னுதவி கொண்டு அவ்வப்போது அறிந்து கொள்ளும்படி சிறிய வடிவில், குறைந்த விலையில் இவ்வகராதியைத் தொகுத்து வெளியிட்டுள்ளேன். இதில் பெரும்பாலும் தமிழ் மாணவர் கற்கும் தமிழ் இலக்கியங்களிலுள்ள தமிழ்ச் சொற்களுக்கும் வட சொற்களுக்கும் பொருள் கிடைக்கு மாறு இதனைத் தொகுக்க வேண்டும் என்னு நோக்கத்துடன் யான் இதனைத் தொகுத்துள்ளேனாதலின், இது மாணவர்க்கும் பெரிதும் பயன்படுமென் றெண்ணுகிறேன்.

தமிழ் நெடுங்கணக்கின் அமைப்பின்படி மெய் முன்னும் உயிர் மெய் பின்னுமாக இதில் அமைந்துள. **தநம், பாநம்; மநநம்** முதலிய வடமொழிகள் தமிழில் பெரும்பாலும் **தனம், பானம், மனனம்** என்றே எழுதப்படுதலின், அவற்றைத் தமிழ் முறைப் படியே னகர வருக்கத்தி லமைத்துளேன். தொழிற் பெயரினின்றே

வினை விகற்பங்களை மாணவர் அறிந்துகொள்ளக் கூடுமாகையால், இதில் வினை விகற்பங்களை விரிவஞ்சி யகற்றிப் பல்வகைப் பெயர்ச் சொற்களுக்கே பொருள் எழுதித் தொகுத்தேன். தமிழ்ச் சொற் பொருள் மாணவர்க்கு எளிதின் விளங்காவென்று தோற்றிய விடங் களிலெல்லாம் அவற்றை எளிதின் விளக்கத் தக்க அங்கிலச் சொற் களையுஞ் சொற்றொடர்களையுஞ் சேர்த்துள்ளேன்.

அறிவிற் சிறந்த பெரியோர் செய்தற்குரிய இத்தொழிலை, அறிவிலும் ஆண்டிலுஞ் சிறியேனாகிய யான் ஆசை வயப்பட்ட சிந்தையனாகிச் செய்தன னாதலின், புலமை வாய்ந்த தமிழ்ப் பெரு மக்கள் இதனிடைக் குற்றங் காணிற் பொறுத்து, இதனை இன்னும் சீரிய வகையில் தமிழ் மாணவர்க்குப் பயன் படுத்து முறையினை யெனக்குத் தெரிவிப்பின், அங்ஙனமே செய்யக் கடமைப்பட் டுள்ளேன். இந்நற்றொழிலை யிடையூறின்றி யினிது முடிப்பித்த எல் லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களாற் சிந்தித்து வந்தித்து வணங்குகின்றேன்.

‘நாமகள் கழகம்’
புரசைப் பாக்கம், சென்னை
பிரபவ௵ மாசி௴ ௨௰௨.

மே. வீ. வே.

# உரிமை யுரை

---

கட்டளைக் கலித்துறை

சீர்சான்ற செந்தமிழ்த் தாயேநின் செல்வர் சிறப்புறுதற்
கேர்சான்ற நற்றொழி லெவ்வெவர் செய்யினு மேதமிலா
நார்சான்ற நின்மன நன்றென் றுவத்தலை நன்குணர்ந்து
நீர்சான்ற **விந்நூ** லுரிமை நினக்கே நிகழ்த்துவனே.

ஸ்ரீ:

# இளைஞர் தமிழ்க் கையகராதி

## அ

அ - சட்டுப்பொருளைக் குறிக்கும் ஓர் இடைச்சொல், ஒருவிகுதி.

அஃகம் - ஊறு நீர், தானியம்.

அஃகல் - வறுமை, குறைதல்.

அஃதை - கதி யற்றவன்.

அஃறிணை - தேவர், மக்கள், நரகர் ஒழிந்த மற்றப் பொருள்கள்.

அஃகசாலை - தட்டார் தொழில் செய்யு மிடம்.

அக்கம் - கண், தானியம், பொன், இந்திரியம், உருத்திராக்கம், பாம்பு.

அக்கமாலை - உருத்திராக்க மாலை, அருந்ததி.

அக்காரம் - புடவை, வெல்லம்.

அக்கி - ஒரு பூச்சி, கண்.

அக்கிர பூசை - முதலிற் செய்யும் வழிபாடு.

அக்கிரமம் - ஒழுங்கின்மை.

அக்கு - எருதின் திமில், எலும்பு, சங்கு மணி.

அகங்கை - உள்ளங்கை.

அகடு - நடு, வயிறு.

அகதி - கதி யில்லாதவன்.

அகந்தை - கர்வம்.



அகப்பா - மதில், மதிலுள்மேடை.

அகம் - மனம், வீடு, பாவம், இடம், உள்.

அகரு - அகில்.

அகல் - தகழி, சட்டி, விரிவு.

அகலம் - மார்பு, விரிவு.

அகலுள் - அகலம், ஊர், நாடு.

அகவல் - ஆசிரியப் பா, அழைத்தல், மயில் குரல், ஆடல்.

அகழ் - அகழி.

அகழ்தல் - தோண்டுதல்.

அகளங்கன் - சோழன்.

அகளம் - மிடா, சாடி.

அகற்றுதல் - விரிவாக்கல், நீக்கல்.

அகறல் - நீங்குதல்.

அகாலம் - அல்லாத காலம்.

அகி - பாம்பு, இரும்பு.

அகிலம் - பூமி, முழுமை.

அகிற் கூட்டு - சந்தனம், கர்ப்பூரம், காசுக் கட்டி, தேன், ஏலம் இவற்றின் கலவை.

அகைத்தல் - வருத்தல், முறித்தல், அறுத்தல், உயர்த்தல், அடித்தல்.

அகோரம் - உக்கிரம்.

அகோராத்திரம் - இரவும் பகலும்.
அங்கசன் - மன்மதன்.
அங்கணம் - சேறு, முற்றம், சாக்கடை, மதகு.
அங்கணன் - சிவபெருமான், கடவுள்.
அங்கதம் - பாம்பு, வாகு வலயம், வசைச் சொல், மார்பு.
அங்கம் - உடல், உறுப்பு, எலும்பு, வேதாங்கம், கட்டில்.
அங்காடி - கடைத் தெரு.
அங்காத்தல் - வாய் திறத்தல்.
அங்காரகன் - நெருப்பு, செவ்வாய்.
அங்கி - நெருப்பு, சட்டை, கார்த்திகை நாள்.
அங்கீகரணம் - சம்மதம்.
அங்கீகாரம் - சம்மதித்தல்.
அங்குசம் - யானை செலுத்துங் கருவி.
அங்குட்டம் - பெருவிரல்.
அங்குரம் - இரத்தம், மயிர், குப்பைமேனி, கலம், தளிர், முளை.
அங்குலியம் - மோதிரம்.
அங்ஙனம் - அவ்விதம், அவ்விடம்.
அச்சம் - அகத்தி மரம், தகட்டு வடிவு, பயம்.
அச்சுதன் - அழிவில்லாதவன், விஷ்ணு, கடவுள்.
அசடு - குற்றம்.
அசதியாடல் - சிரித்தல்.
அசம் - மூவருட நெல், ஆடு.
அசரம் - இயங்காப் பொருள் (Immoveables).
அசரீரி - சரீரமில்லாதது, ஆகாயம்.
அசலம் - அசையாமை, மலை.
அசனி - இடி, வச்சிராயுதம்.
அசி - ஆயுதம், வாள், இகழ்ச்சிச் சொல்.

அசும்பு - கிணறு, சேறு, நீர்ப் பொசிவு, வழுக்கு நிலம்.
அசுவம் - குதிரை.
அஞ்சம் - அன்னப் பறவை.
அஞ்சலி - கும்பீடு, வெளவால்.
அஞ்சனம் - கறுப்பு, மை, மேற்றிசை யானை.
அஞ்சித்தல் - பூசை புரிதல், அடைதல்.
அஞ்சில் - அழகிய தகட்டு வடிவான பொன் ஆபரணம்.
அஞ்சு பயம் - குடிகளுக்கு அரசனாலும், அவன் பரிசனத்தாலும், பகைவராலும், திருடராலும், விலங்கு முதலிய உயிர்களாலும் உண்டாகும் ஐவகை யச்சம்.
அஞ்சு மாலி - சூரியன் (அஞ்சு - கிரணம்).
அஞ்ஞதை - அறியாமை.
அஞ்ஞாதம் - அறியப்படாதது.
அஞ்ஞானம் - அறிவின்மை.
அஞ்ஞை - தாய், அறிவிலி.
அஞர் - துன்பம், அறிவிலார்.
அஞலம் - கொசுகு.
அட்சி - கண், கண்ணுடையாள்.
அட்டகாசம் - பெருஞ் சிரிப்பு.
அட்ட கிரி - இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் எனும் எண் மலைகள்.
அட்டகுணம் - எண் குணம் பார்க்க.
அட்டதிக்கயம் - எண்டிசை யானை பார்க்க.
அட்ட திக்கு - எண்டிசை பார்க்க
அட்ட திக்குப் பாலகர் - இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

அட்ட மங்கலம் - கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் என்னும் எட்டு மங்கலப் பொருள்கள்.

அட்டல் - அழித்தல், காய்ச்சுதல்.

அட்ட லக்குமி - தன லக்குமி, தானிய லக்குமி, தைரிய லக்குமி, சௌரிய லக்குமி, வித்தியா லக்குமி, கீர்த்தி லக்குமி, விசய லக்குமி, இராச்சிய லக்குமி எனும் 8 இலக்குமிகள்.

அட்டவசுக்கள் - அனலன், அனிலன், ஆபன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன்.

அடகு - இலை, இலைக் கறி.

அடங்கலர் - அடங்காதவர், பகைவர்.

அடம் - பொல்லாங்கு, பலாத்காரம்

அடர் - நெருங்குதல், தகட்டு வடிவு.

அடர்த்தல் - நெருக்குதல், வருத்துதல்.

அடல் - கொலை, வலி, வெற்றி, போர்.

அடவி - சோலை, திரள், காடு.

அடி - கால், முதல், பாட்டின் அடி.

அடிகள் - கடவுள், முனிவர், சுவாமி.

அடிசில் - சோறு.

அடு களம் - போர்க்களம்.

அடுதல் - சமைத்தல், நெருங்குதல், கொல்லுதல், வருத்துதல், போராடுதல்.

அடைப்பை - வெற்றிலைப்பை.

அடையலர் - பகைவர்.

அண்டசம் - முட்டையிற் பிறப்பன.

அண்டம் - ஆகாயம், மேலுலகம், முட்டை.

அண்டர் - பகைவர், தேவர், இடையர்.

அண்ணம் - மேல் வாய்.

அண்ணல் - பெருமை, பெருமையிற் சிறந்தோன்.

அண்ணாத்தல் - வாய் திறத்தல், தலை தூக்கல்.

அணங்கு - நோய், அழகு, தெய்வம், ஆசை, பெண், கொலை, வருத்தம், பேய்.

அணவல் - கிட்டுதல், சேர்தல்.

அணி - படைவகுப்பு, ஆபரணம், அலங்காரம், பெருமை, அழகு, வரிசை.

அணி கலம் - ஆபரணம்.

அணு - உயிர், நுட்பம்.

அணுகுதல் - கிட்டுதல், நெருங்குதல்.

அணை - கரை, படுக்கை, மெத்தை

அத்தம் - பொன், பாதி, கை, கண்ணாடி, சொற் பொருள், காடு, அத்த நட்சத்திரம்.

அத்தன் - மூத்தோன், தந்தை, கடவுள், குரு.

அத்தாணி - அரசிருக்கை.

அத்தி - கடல், யானை, அத்தி மரம், எலும்பு, கொலை.

அத்தியயனம் - படித்தல்.

அத்திரி - கழுதை, கோவேறு கழுதை, ஆகாயம், ஒட்டகம், குதிரை, மலை, பாணம்.

அத்து - அரை ஞாண், சிவப்பு, அசைச்சொல், தைத்தல், கூடி நிற்றல்.

அதம் - இறங்குதல், பாதலம், கீழ், சங்காரம்.

அதர் - வழி, புழுதி, நுண்மணல்.

அதள் - தோல்.
அதிபன - தலைவன்.
அதிரேகம் - மேனமை.
அதோ கதி - நரகம்.
அந்தகன - குருடன, இயமன்.
அந்தகாரம்-அஞ்ஞானம், இருள்.
அந்தணர் - முனிவர, பார்ப்பனர்.
அந்தப்புரம் - அரண்மனையில் பெண்களிருக்குமிடம்.
அந்தம் - முடிவு, அழகு, (நருடு.
அந்தரங்கம் - இரகசியம.
அந்தரம் - முடிவு, வேறுபாடு, ஆகாயம், தீமை, தனிமை, இருள், நடு, சமானம்.
அந்தரி - பார்வதி, துர்க்கை, ஆகாய வாணி.
அந்தரியாமி - கடவுள், உயிர்.
அந்தி - முச்சந்தி, மாலைக காலம், இரவு.
அந்தில் - அவ்விடம், ஓர் அசைச் சொல்.
அபசயம் - தோல்வி.
அபயம் - பயமில்லாமை, அடைக் கலம்.
அபாரம் - அளவினமை.
அபிதானம் - பெயர்.
அபிநயம் - கூத்து.
அபிநவம் -புதுமை.
அபீஷ்டம் - விருப்பம்.
அபூர்வம் - முனபு இல்லாதது.
அபேதம் - வேற்றுமை யினமை.
அம் - அழகு, நீர், சாரியை.
அம்பகம் - கண்.
அம்பணம் - தோணி, ஆமை, மரக் கால், வாழை.
அம்பம் -கண்.
அம்பரம் - கடல், ஆகாயம், சீலை, திக்கு.
அம்பல் - வசைச்சொல், சிலர்

அம்பலம் - சபை.
அம்பி - மரக்கலம், இறை கூடை, தெப்பம்.
அம்பு - நீர், மேகம், மூங்கில், பாணம்.
அம்பு சாதம் - தாமரை.
அம்புதம் - மேகம்.
அம்புதி - கடல்.
அம்புயம் - தாமரை.
அம்புயன - பிரமன.
அம்புயாதம் தாமரை.
அம்புயை - இலக்குமி.
அம்புராசி - கடல்.
அம்புலி - சந்திரன.
அம்போதி - கடல்.
அம்போருகம் - தாமரை.
அம்போருகை - இலக்குமி.
அம்மனை - தாய், நெருப்பு, அம் மனை விளையாட்டு.
அம்மை - வரு பிறப்பு, அழகு, தாய், அமைதி, பாாவதி.
அமங்கலம் - மங்கல மல்லாதது.
அமங்கலி - கைம் பெண்.
அமணர் - சமணா.
அமயம் - காலம்.
அமர் - யுத்தம்.
அமரர் - தேவர், பகைவர்.
அமலம் - பரிசுத்தம், அழகு.
அமலை - ஒலி, சோறு, பார்வதி, இலக்குமி, கூத்து, மிகுதி.
அமளி - மிகுதி, படுக்கை.
அமறல் - பொலிவு, நெருங்கல்.
அமாத்தியன - மந்திரி.
அமிதம் - அளவினமை.
அமிர்தம் - உணவு, பால், சோறு தேவருணவு, இனிமை.
அமிழ்து - அமிர்தம்.
அமுதம் - அமிர்தம், நீர், மோ சம், உப்பு.
அமரகர் - தேவர், இடையர்.

அமுது - பால், தேவருணவு, அமிர்தம்.
அமுது செய்தல் - உண்ணுதல்.
அமுதுபடி - அரிசி.
அமை - மூங்கில், அழகு.
அமைச்சன் - மந்திரி.
அமைதி - அடக்கம், சமயம், சிறப்பு.
அயம் - நீர், குளம், ஆடு, குதிரை, இரும்பு.
அயர்தல் - தளர்தல், செய்தல், அறிவழிதல்.
அயர்வு - சோர்வு.
அயவணம் - ஒட்டகம்.
அயன் - பிரமன், மகேச்சுரன்.
அயனம் - வழி, வருடப் பாதி.
அயிர் - கண்ட சர்க்கரை, நுண் மணல், நுண்மை, சந்தேகம்.
அயிர்த்தல் - சந்தேகித்தல், மறைத்தல்.
அயிராணி - பார்வதி, இந்திராணி.
அயிராவணம் - அயிராவத யானை.
அயில் - வேலாயுதம், கூர்மை.
அயிலல் - உண்ணல்.
அர்க்கன் - சூரியன்.
அர்த்தம் - பாதி, பொருள், சொற் பொருள்.
அரக்கு - மெழுகு, கள் விகற்பம், சிவப்பு.
அரங்கம் - ஆற்றிடைக் குறை, நாடக சாலை, சபை.
அரங்கு - போர்க் களம், சூதாட வகுத்த அறை, சபை, மனையின விகற்பம்.
அரசு - அரசன், இராச்சியம்.
அரசுவா - அரச யானை.
அரணம் - கவசம், காடு, மதில், வேலி.
அரணி - தீக்கடை கோல்.
அரணியம் - காடு.
அரத்தம் - இரத்தம், சிவப்பு, அரக்கு, செங்குவளை, கடப்ப மரம்.
அரதனம் - இரத்தினம், சிறப்பு.
அரந்தை - குறிஞ்சி யாழ் இசை, வருத்தம்.
அரம்பை - தெய்வப் பெண், வாழை.
அரமியம் - நிலா முற்றம், மேன் மாடி (Terrace).
அரலை - அர்க்கை, விதை, கடல், கழலை.
அரவம் - சிலம்பு, பாம்பு, ஒலி.
அரவிந்தம் - தாமரை.
அரவிந்தை - இலக்குமி.
அரவு - பாம்பு.
அரற்றல் - அழுதல், ஒலித்தல்.
அரா - பாம்பு, ஆயிலிய நட்சத்திரம்.
அராகம் - செந்நிறம், முடுகியல், பாட்டு, ஆசை, பாலை யாழ்.
அராபதம் - வண்டு.
அரி - கிளி, கடல், திருமால், தேர், தகடு, இந்திரன், காற்று, ஒளி, குதிரை, குற்றம், பன்றி, சிங்கம், பகை, புகை, பாயல், சோலை, வரி, சந்திரன், மா, வயிரம், தவளை, குரங்கு, இயமன், மூங்கில், நெருப்பு, உள் அழலை, நிறம், பொன், பாம்பு, சூரியன், கண் வரி, பூ மாலை, பசளை, அரிசி, நெற்கதிர், கள், கூர்மை, வண்டு, ஆயுதம், அரிவாள், அரிதல், சயனம், சக்கராயுதம், வலிமை, விசிப் பலகை, பறை, அரித்தல், சிலம்பின் உள் பருக்கைக் கல்.
அரிட்டம் - காகம், கள், மே முட்டை.

அரிணம் - சிவப்பு, பொன், மான், யானை, வெள்ளை.
அரிதம் - பச்சை நிறம், திக்கு.
அரிமா - சிங்கம்.
அரியணை - சிங்காதனம்.
அரில் - சிறு தூறு, பகை, குற்றம்.
அரிவை - பெண்.
அருகர் - தக்கவர், அருகனை வழிபடுவோர்.
அருகல் - குறைதல், சாதல், கிட்டல்.
அருங்கலம் - ஆபரணம்.
அருச்சுனம் - மருதமரம், வெண்மை, எருக்கு.
அருஞ்சிறை - நரகம், கடுஞ்சிறை.
அருணம் - மான, சிவப்பு, ஆடு, எலுமிச்சை.
அருணன - சூரியன் தேர்ப்பாகன், சூரியன, புதன்.
அருணை - அண்ணு மலை.
அருத்தாபத்தி - சொல்லியது கொண்டு சொல்லப்படாத பொருளைப் பெறுதல்.
அருத்தி - விருப்பம், செல்வன்.
அருந்தல் - அருமை, உண்டல்.
அருநெறி - கஷ்டமான வழி.
அருப்பம் - வழுக்கு நிலம், நோய், காடு, கோட்டை, ஊர், அருமை, அற்பம், பிட்டு, மோர்.
அருவி - தினைத்தாள், மலையாறு, கழி முகம்.
அருள் - இரக்கம்.
அருளல் - இரங்கல், கொடுத்தல்.
அரை - இடை, பாதி.
அரை சிலை - அம்மிக் கல்.
அரையன் - மன்னன்.
அல் - இரவு, இருள், மதில்.
அல்கல் - நாள், குறைதல், தங்குதல், வறுமை.
அல்லல் - துன்பம், முடைதல்.
அல்லவை - பயன் இல்லாப் பொருள், தீமை, பாவம்.
அல்லாத்தல் - துன்பமடைதல்.
அல்லி - வெள்ளாம்பல், இரவு, அகவிதழ், காயா, பூந்தாது.
அலக்கண் - துன்பம்.
அலகு - ஆயுதம், அளவு, துடைப்பம், கொதுகு, நெற்கதிர், பலகறை, பறவை மூக்கு, சோதிடம்.
அலகை - பிசாசம்.
அலங்கல் - பூமாலை, அசைதல், தளிர், ஒளி செய்தல், மனங்கலங்கல்.
அலங்காரம் - அணி, அழகு.
அலசல் - சோம்பல்.
அலத்தல் - துன்புறல், தரித்திரமடைதல்.
அலந்தலை - துன்பம்.
அலந்தை - குளம், துன்பம்.
அலம் - கலப்பை, போதுமெனல், அலமரல், தேள்.
அலம்பல் - ஒலித்தல், கழுவல், ததும்பல்.
அலமரல் - சுழலல், துன்பமடைதல்.
அலர் - பழிமொழி, நீர், மலர்ந்த பூ, பலர் அறிந்து பழிதூற்றல், மகிழ்ச்சி.
அலரி - கண் வரி, சூரியன், அழகு, ஒரு மரம், பூ.
அலவன் - நண்டு, பூனை, சந்திரன், கடக இராசி.
அலறல் - அழுதல், ஒலித்தல்.
அலாயுதன் - பலராமன்.
அலி - பேடி, நறுவிலி மரம், உழவன், வயிரம் இல்லாமரம்.
அலை - கடல், திரை (wave), கொலை.

அலைத்தல் - அசைத்தல், தாக்குதல்.
அவ்வித்தல் - பொறாமை யடைதல்.
அவ்வை - தாய், ஔவையார்.
அவண் - அவ்விடம்.
அவதாரம்-பிறத்தல், இறங்குதல்.
அவதானம் - மறப்பில்லாமை.
அவந்தி - கிளி, ஓர் ஊர்.
அவயவம் - உறுப்பு, உடம்பு.
அவல் - சிற்றுண்டி, பள்ளம், குளம், விளைநிலம்.
அவலம் - துயர், அழுதல், சோர்வு, வறுமை, வலியின்மை.
அவனி - பூமி.
அவாசி - தென்றிசை.
அவி-சோறு, நெய், தேவருணவு.
அவித்தல்-அணைத்தல், அழித்தல், கெடுத்தல்.
அவிர்தல் - ஒளி செய்தல், பீறல்.
அவிவேகம் - அறியாமை.
அவை - சபை, கூட்டம், புலவர்.
அழல் - நெருப்பு, அழுதல், வெப்பம்.
அழற் கதிர் - சூரியன்.
அழனம் - நெருப்பு, வெப்பம், பிணம்.
அழிவு-சாதல், கேடு, கழிமுகம்.
அழுக்காறு - பொறாமை.
அழுங்கல் - இரங்கல், கேடு, ஒளிமழுங்கல், அலைதல், துன்புறல், ஒலித்தல்.
அழுவம் - பரப்பு, நாடு, ஆழம், கடல், பெருமை.
அள் - வலிமை, நெருக்கம், காது, கூர்மை, பற்றிரும்பு.
அள்ளல் - அள்ளுதல், நரகம், சேறு.
அளக்கர் - பூமி, சேறு, உப்பளம், கடல், கார்த்திகை நட்சத்திரம்.
அளகம் - பெண் மயிர், நீர்.
அளகேசன் - குபேரன்.
அளவளாவுதல் - கலத்தல்.
அளவை - அளவு, எல்லை, நாள்.
அளறு - சேறு, நரகம்.
அளி - கள், வண்டு, அன்பு, கொடை, எளியன்.
அளித்தல் - கொடுத்தல், காத்தல், படைத்தல், அருள் செய்தல்.
அளிதல் - கனிதல், உருகுதல்.
அளியர் - அருளுடையவர், எளியவர்.
அளை - தயிர், மோர், மலைக்குகை, புற்று.
அளைதல் - கலத்தல், குழைதல்.
அற்றம் - மறைவு, சோர்வு, சமயம், துன்பம்.
அறக் கடவுள் - இயமன்.
அறம் - தருமம், நியாயம்.
அறல் - கருமணல், நீர், அறுதல், சிறு தூறு, கடல் அலை.
அறவர் - முனிவர், வேதியர்.
அறவாழி - தரும சக்கரம்.
அறன் கடை - பாவம்.
அறிஞர் - முனிவர், அறிவாளர்.
அறி துயில் - யோக நித்திரை.
அறுகு - சிங்கம், அறுகம்புல், யாளி, யானை.
அறு சுவை - இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு.
அறுதி - முடிவு, வரையறை.
அறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் (இவை பார்ப்பனர்க்குரியவை); ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், படை பயிலுதல், பொருது ஈட்டல் (இவை அரசருக் குரியவை); ஓதல், வேட்டல், பொருளீட்

டல், ஈதல், பசுக் காத்தல், ஏருழல் (இவை வைசியர்க் குரியவை); ஏவல் செய்தல், பொருளீட்டல், உழுதல், பசுக் காத்தல், குயிலுவத் தொழில் செய்தல், காருக வினை யாக்கல் (இவை சூத்திரர்க் குரியவை).
அறு பதம் - வண்டு.
அறு வகைத் தானை-வில், வேல், வாள், யானை, குதிரை, தேர்.
அறுவகைப்படை - மூலப்படை, கூலிப் படை, துணைப் படை, பகைப்படை, நாட்டுப் படை, காட்டுப் படை.
அறுவகைப்பருவம் - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். கார் - ஆவணி, புரட்டாசி; கூதிர் - ஐப்பசி, கார்த்திகை; முன்பனி - மார்கழி, தை; பின்பனி - மாசி, பங்குனி; இளவேனில் - சித்திரை, வைகாசி; முதுவேனில் - ஆனி, ஆடி.
அறுவை - சீலை, சித்திரை நட்சத்திரம்.
அறை - மலைக் குகை, மோதல், கற்பாறை, திரை, சிறு வீடு, சொல், ஒலி, அறுத்தல்.
அறைகூவல் - போர் செய்ய அழைத்தல்.
அனறில் - அன்றிற்பறவை, மூல நட்சத்திரம்.
அனறினர் - பகைவர்.
அனனணம் - அவவிதம்.
அன்னமூர்தி-பிரமன்.
அன்னை - முன் பிறந்தாள், தோழி, தாய்.
அனகன் - குற்ற மில்லாதவன்.
அனங்கன் - மன்மதன்.
அனந்தல் - உறக்கம், கர்வம்.
அனந்தன-கடவுள், ஆதிசேடன்.
அனல் - நெருப்பு.
அனலன - அக்கினிக் கடவுள்.
அனலி - அககினி, சூரியன.
அனுதி - முதல் பறது.
அனிகம் - சேனை.
அனிலம் - காற்று.
அனுக்கம் - வருத்தம், கேடு.
அனுக்கிரகம் - கிருபை.
அனுசன - தம்பி.
அனுட்டானம் - ஒழுக்கம்.
அனுதாபம் - பச்சாததாபம்.

## ஆ

ஆ - இரக்கக்குறிப்பிடைச்சொல், பசு, ஆச்சா மரம், இசை, வியப்பிடைச சொல், எருது, எருமை, அறபம்.
ஆக்கம் - இலககுமி, செல்வம், உயர்தல், ஆக்குதல், வளர்ச்சி.
ஆக்கல் - உயாத்தல், செய்தல், படைத்தல்.
ஆக்கிரமம் - மீறுதல், வீரம்.
ஆகவை - உடம்பு.
ஆகண்டலன - இந்திரன.
ஆகம் - மார்பு, உடம்பு.
ஆகாரம் - கவாதல், உறைவிடம்.
ஆகாச வாணி - விண்ணில் தோன் றும் வார்த்தை.
ஆகாரம் - உடம்பு, நெய், உணவு.
ஆகு - எலி, பெருச்சாளி.
ஆகுதி - ஓமஞ் செய்யும் நெய்.
ஆகுலம் - வருத்தம், ஆரவாரம்.
ஆகு வாகனன - விநாயகன்.
ஆங்கு - அவ்விடம், அசைச் சொல்.
ஆச்சிரமம் - முனிவர் இருப்பிடம், நிலை.
ஆசங்கை - விசாரணை, அச்சம்.

ஆசம் - சிரிப்பு.
ஆசயம் - தங்குமிடம் உ - ம்: மிருகாசயம்.
ஆசனம் - இருக்கை.
ஆசாரம் - ஒழுக்கம், பெருமழை, அரசிருக்கை, சீலை, தூய்மை.
ஆசாரியன் - உபாத்தியாயன்.
ஆசான் - குரு, தலைவன்.
ஆசி - வாழ்த்து.
ஆசிரியம் - அகவற் பா.
ஆசிரியன் - உபாத்தியாயன்.
ஆசினி - ஈரப் பலா, மரவுரி, மர வயிரம், ஆகாயம்.
ஆசீர்வாதம் - வாழ்த்துதல்.
ஆசு - விரைவு, குற்றம், அற்பம், கவசம், ஆசு கவி, பற்றாசு.
ஆசுகம் - அம்பு, காற்று, பறவை.
ஆசுகன் - வாயு.
ஆசை - திக்கு, பொன், விருப்பம்.
ஆஞ்ஞை - கட்டளை.
ஆட்சி - ஆளுகை, உரிமை.
ஆட்படுதல் - அடிமை யாதல்.
ஆடகம் - துவரை, பொன்.
ஆடகன் - இரணியன்.
ஆடம்பரம் - செருக்கு, பெருமகிழ்வு, இறுமாப்பு.
ஆடல் - சொல்லல், கூத்தாடல், வெற்றி, அசைதல், செய்தல், ஆளுதல், முழுகுதல், வீரம்.
ஆடவர் - ஆண்மக்கள், இளைஞர்.
ஆடி - ஆடி மாதம், கண்ணாடி, உத்தராட நட்சத்திரம்.
ஆடு-வெற்றி, வருத்தம், அடுதல்.
ஆடேஉ - ஆடவன்.
ஆடை - சீலை, பால் ஏடு.
ஆண்டகை-மக்களுட் சிறந்தவன்.
ஆண்டலை - கோழி.
ஆண்டு - அவ்விடம், வருடம்.
ஆண்மை - ஆளுந் தன்மை, வெற்றி, வலிமை, வீரம், உண்மை.
ஆணம் - குழம்பு, அன்பு, சிறுமை.
ஆணு-இனிமை, அன்பு, நன்மை
ஆணை - உண்மை, வெற்றி, கட்டளை, அடையாளம், சபதம்.
ஆத்திகன் - கடவுள் உண்டென்பவன்.
ஆத்துமா - உயிர்.
ஆதபன் - சூரியன், அந்தணன்.
ஆதரம் - ஆசை, அன்பு.
ஆதரிசம் - கண்ணாடி.
ஆதவம் - ஒளி.
ஆதவன் - சூரியன்.
ஆதன் - உயிர், அறிவில்லாதவன்
ஆதனம் - இருக்கை (Seat).
ஆதாரம் - சார்விடம்.
ஆதி - முதல், நேராக வோடுதல், அருகன், திருமால், சிவன், பிரமன், தலைவன், தொடக்கம்.
ஆதிக்கம்-மேன்மை, முதன்மை.
ஆதிக்கியம் - மேன்மை.
ஆதித்தர் - சூரியர், தேவர்.
ஆதித்தியம் - விருந்தோம்பல்.
ஆதிபத்தியம் - சுதந்திரம், தலைமையான அதிகாரம்.
ஆதிபன் - தலைவன்; மன்னன்.
ஆதீனம் - சுதந்திரம், ஆளுதல், வமிசம்.
ஆதுலன் - நோயாளி, தரித்திரன்
ஆம்பல் - மூங்கில், கள், துன்பம், அல்லி, இன்னிசைக் குழல், யானை.
ஆம்பி - ஒலி, காளான்.
ஆம்பிரம் - மாமரம், புளிப்பு.
ஆமலகம் - நெல்லிப்பழம், நெல்லி மரம், பளிங்கு.
ஆமா - காட்டுப் பசு.

ஆமாத்தியன்-சேனாபதி, மந்திரி, மருத்துவன்.
ஆமிலம் - புளிப்பு, புளியமரம்.
ஆய் - தாய்.
ஆய்ச்சி - இடைச்சி.
ஆய்தல் - நுண்மை, ஆராய்தல்.
ஆய்ப்பாடி - இடைச் சேரி.
ஆய்வு - வருத்தம், ஆராய்தல், நுட்பம்.
ஆயகன் - தமையன்.
ஆயம் - பெண்கள் கூட்டம், ஆடவர் கூட்டம், இலாபம், கூட்டம்.
ஆயன் - இடையன்.
ஆயாசம் - முயற்சி, இளைப்பு.
ஆயான் - தமையன.
ஆயி - தாய்.
ஆயிரங் கண்ணன் - இந்திரன்.
ஆயுள் - வாழ் நாள்.
ஆர் - கூர்மை, ஆத்திமரம், நிறைதல், அழகு, பூமி.
ஆர்கலி - கடல்.
ஆர்தல் - நிறைதல், பொருந்துதல், புசித்தல்.
ஆர்ப்பு - ஒலி, சிரிப்பு, போர், கட்டு.
ஆர்வம் - நரகம், அன்பு.
ஆர்வலர்-நாயகர், அன்புடையார்.
ஆரணங்கு - தெய்வம்.
ஆரணம் - வேதம்.
ஆரம் - பதக்கம், முத்து, ஆத்திமரம், சந்தன மரம், பூ மாலை, தோட்டம்.
ஆரல் - ஆரால் மீன், கார்த்திகை நட்சத்திரம், செவ்வாய், மதில், நெருப்பு.
ஆரவம் - ஒலி.
ஆரவாரம் - ஒலி, வருத்தம்.
ஆராதித்தல் - பூசித்தல்.
ஆராமம் - மகிழ்ச்சி, சோலை.
ஆரி - கதவு, சோழன், அழகு, மேன்மை.
ஆரியர் - மிலேச்சர், நல்லோர்.
ஆரை - மதில், புற்பாய்.
ஆரோகணம் - ஏறுதல், ஏணி, படி.
ஆல் - ஆலமரம், ஆமெனல், நஞ்சு.
ஆலகாலம் - ஒரு நஞ்சு.
ஆலசியம் - சோம்பல்.
ஆலம் - ஆலமரம், நஞ்சு, கலப்பை, நீர், மலர்ந்த பூ.
ஆலயம் - நகரம், தேவர் கோயில், யானைக் கூட்டம், வீடு, தங்குமடம்.
ஆலல் - ஆடுதல், ஒலித்தல்.
ஆலவாய் - பாம்பு, மதுரை நகரம்.
ஆலவாலம் - பாத்தி.
ஆலாசியம் - மதுரை நகரம்.
ஆலி - மழை, கனமழை, கள், துளி.
ஆலிங்கனம் - தழுவுதல்.
ஆலை - கரும்பு, கள், யந்திரம், யானைக கூட்டம்.
ஆலோன் - சந்திரன்.
ஆவணம் - தெரு, கடைத் தெரு, உரிமை, புனர்பூச நட்சத்திரம், அடிமைச சீட்டு.
ஆவம் - அம்புக் கூடு, வில் நாண்.
ஆவரணம் - சட்டை, தடுத்தல், மறைப்பு, கோட்டை, மதில், சீலை.
ஆவல் - விருப்பம்.
ஆவலர் - நண்பர்.
ஆவலி - வரிசை.
ஆவலித்தலே - அழுதல்.
ஆவி - குளம், வாசனை, உயிர், புகை, மூச்சு.
ஆவித்தல் - மூச்சுவிடல், கொட்டாவி விடுதல், புகைத்தல்.

ஆழி - மோதிரம், சக்கராயுதம், கடல், கூற்கரை, வட்டம்.
ஆழியான் - திருமால்.
ஆள் வினை - முயற்சி, தைரியம்.
ஆளரி - சிங்கம், நரசிங்கம்.
ஆளி-சிங்கம், ஆள்பவன்.
ஆளி யூர்தி - துர்க்கை.
ஆற்றல் - பொறுமை, முயற்சி, மிகுதி, வலிமை, ஞானம், செய்தல், தாங்குதல், சம்பாதித்தல், வெற்றி, தணித்தல்.
ஆற்றுணு - வழி யுணவு, கட்டுச் சோறு.
ஆற்றுப்படை - வழிப்படுத்தல்.
ஆறங்கம் - அரசாக்குரிய படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் எனனும் ஆறுறுப்பு.
ஆறலை - வழி பறித்தல்.
ஆறு-வழி, நதி, விதம், தன்மை.
ஆன் - அவ்விடம், பசு, எருது.
ஆன்றவர் - அறிவுடையோர்.
ஆனகம் - படகம், துந்துபி.
ஆனனம் - முகம்.
ஆனைமை - நீங்காமை, தணியாமை
ஆனி - உத்தராட நட்சத்திரம், மூல நட்சத்திரம், ஆனிமாதம், கேடு.
ஆனியம் - காலம், நாள்.
ஆனிலை - பசுக் கொட்டில்.
ஆனைத்தீ - பெரும்பசி யுண்டாக் கும் நோய்.
ஆனை மீன் - பெரிய மீன்.

## இ

இக்கு - கரும்பு, கள்.
இகத்தல் - கடத்தல், போதல்.
இகபரம் - இம்மை, மறுமை.
இகல் - பகை, வலிமை, யுத்தம், ஒப்பு.
இகலன் - பகைவன், நரி.
இகழ்தல் - நீக்கல், நிந்தித்தல்.
இகுத்தல் - கொல்லுதல், வீழ்த்து தல், சாய்த்தல், அழைத்தல், கொடுத்தல், ஒலித்தல், சொரி தல்.
இகுளை - தோழி, நட்பு, சுற்றம்.
இங்கிதம் - கருத்து, குறிப்பு.
இங்கு-இவ்விடம், பெருங்காயம்.
இங்குலிகம்-சாதிலிங்கம், சிவப்பு.
இங்ஙனம் - இத்தன்மை, இந்த இடம்.
இசித்தல் - குறித்தல்.
இசும்பு - வழுக்கு நிலம்.
இசை - புகழ், சொல், பாட்டு, ஒலி.
இசைத்தல் - சொல்லுதல், ஒலித் தல்.
இஞ்சி - இஞ்சி (Ginger), மதில்.
இஞ்சை - தீங்கு, கொலை.
இட்டாறு - உலோபம்.
இட்டி - ஈட்டி, யாகம்.
இட்டிடை - சிற்றிடை.
இடக்கர் - சொல்லத்தகாத சொல், குடம்.
இடக்கல் - தோண்டுதல்.
இடங்கம் - கல் உளி, கோபம்.
இடங்கர் - முதலை, வஞ்சகர், குடம்.
இடத்தல் - பெயர்த்தல், ஒளி வீசல்.
இடபம் - எருது, இடப ராசி.
இடம் - செல்வம், விசாலம், இடப் பக்கம், வலிமை, வீடு.
இடர் - துன்பம், தரித்திரம்.
இடவை - வழி.
இடறுதல் - எற்றுதல், தள்ளு தல்.
இடி - இடி யேறு (Thunder), உறுதிச்சொல், மா (flour).
இடுக்கண் - துன்பம், தரித்திரம்.

இடுக்கம் - ஒடுக்கம்.
இடுக்கு - ஒடுங்கிய விடம், சுருக்கம், உலோபம்.
இடு காடு - சுடு காடு.
இடும்பை - துன்பம், தரித்திரம்.
இடை - நடு, இடம், இடுப்பு, அவகாசம்.
இடை கழி - வாயில்.
இடைதல் - சாய்தல், பின்னிடல், மெலிதல்.
இடையீடு - தடை, இடை விடல்
இடையூறு - தீங்கு, தடை.
இடையெழுவள்ளல்கள் - அந்திமான், சிசுபாலன், அக்குரன், வக்கிரன், சந்திமான், கன்னன், சந்தன்.
இண்டை - தாமரை, மாலை.
இணக்கம் - சேர்க்கை, சம்மதம்.
இணர் - பூங்கொத்து, பூ, தளிர்.
இணை - ஒப்பு, ஒத்தஇருபொருள்.
இணைதல் - ஒப்பாதல், சேர்தல்.
இதண் - காவற் பரண்.
இதம் - நன்மை, இனிமை.
இதயம் - மனம்.
இதரம் - கீழ்மை, தீங்கு, வேறு.
இதழ் - கண்ணிமை, உதடு, பனையேடு, பூவிதழ்.
இதழி - கொன்றைப் பூ.
இதாகிதம் - நன்மை தீமை.
இதிகாசம் 2 - பாரதம், இராமாயணம்.
இந்தனம் - விறகு, வாசனைப் புகை, நெருப்புச் சுவாலை.
இந்தா - இங்கே வா (இந்து + ஆ).
இந்திர கோபம் - தம்பலப் பூச்சி.
இந்திரசாலம் - ஒன்றைமற்றொன்றாகக் காட்டுதல்.
இந்திரியம் - பொறிகள்.
இந்திரை - இலக்குமி, இந்திராணி.
இந்து - சந்திரன், மிருகசீரிட நட்சத்திரம்.
இப்பி - சிப்பி.
இபம் - மரக் கொம்பு, யானை.
இபாரி - சிங்கம்
இம்பர் - இவ்விடம், இவ்வுலகம்.
இம்மி - அற்பம்.
இம்மை - இப்பிறப்பு.
இமம் - பனி, சந்தனம், குளிர்.
இமய வல்லி - உமா தேவியார்.
இமிசை - கொலை, தீங்கு.
இமிர்தல் - ஒலித்தல், மூரிதல்.
இமில் - எருதின் திமில்.
இமிழ்த்தல் - ஒலித்தல், கட்டுதல்.
இமைத்தல் - ஒளி வீசல், கண்ணிதழ் குவித்தல்.
இமையவர் - தேவர்.
இயக்கம் - அசைவு, போதல், வழி.
இயங்குதல் - அசைதல், போதல்.
இயம் - ஒலி, சொல், வாத்தியம்.
இயம்புதல் - ஒலித்தல், சொல்லல்.
இயல் - இயற்கை, இலக்கணம், நடை, சாயல்.
இயல்பு - குணம், இயற்கை, முறைமை.
இயற்றல் - செய்தல்.
இயைதல் - பொருந்தல்.
இயைபு - பொருத்தம், தொடர்ச்சி.
இரங்குதல் - அழுதல், வருந்தல், ஒலித்தல், அருள் புரிதல்.
இரட்டல் - வீசுதல், இரண்டாதல், அசைத்தல், ஒலித்தல்.
இரணம் - யுத்தம், பொன், கடன், மாணிக்கம்.
இரணியம் - பொன்.
இரத்தம் - உதிரம், சாதி லிங்கம், சிவப்பு.
இரதம் - மாமரம், இனிமை, அரைஞாண், தேர்.

இரதி - பித்தளை, பெண் யானை, மன்மதன் மனைவி, விருப்பம்,
இரலை - கலைமான், ஊதுகொம்பு, அச்சுவினி நட்சத்திரம், புல்வாய்.
இரவி - சூரியன், மலை, எருக்கு.
இரவி மைந்தர் - அசுவினித் தேவர்கள்.
இரவு - யாசித்தல், இராத்திரி.
இரவோன் - யாசகன், சந்திரன்.
இராகம் - இசைப்பாட்டு, சிவப்பு, விருப்பம், நிறம்.
இராசி 12-மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.
இராசியம் - மறைவு, (Secret).
இராசீவம் - தாமரை மலர்.
இராமம் - அழகு, நன்மை.
இராவணம் - அழுதல்.
இரிதல் - அகலுதல், ஓடல், கெடுதல், அஞ்சுதல், சாய்தல், தோற்றுப் போதல்.
இருக்கு - வேதம்.
இருக்கை - இருத்தல், ஆசனம், குடியிருத்தல்.
இருசு - பண்டியுள் ளிரும்பு, நேர்மை.
இருசுடர் - சந்திர சூரியர்.
இருடி - முனிவன், ஆந்தை.
இருடி கேசன் - திருமால்.
இருதயம் - மனம், மார்பு.
இருது - பருவ காலம்.
இருந்தை - கரி (Coal).
இருபிறப்பாளர் - பார்ப்பனர்.
இருபிறப்பு - பல், பார்ப்பனர், சந்திரன், பறவை.
இருமரபு - தாய் தந்தையர்.
இருமை - இம்மைமறுமை, கருமை, பெருமை.
இருவகைத்தோற்றம் - இயங்கும் பொருள் இயங்காப் பொருள் (சரம்+அசரம்).
இருவகைப் பொருள் - கல்விப் பொருள் செல்வப் பொருள்.
இருவகை யறம் - இல்லறம் துறவறம்.
இருவினை - புண்ணியம் பாவம்.
இருள் - நரகம், மயக்கம், கறுப்பு.
இருள் வலி - சூரியன்.
இருளி - பன்றி.
இரேகை - வரை, எழுத்து.
இரை - உணவு, ஒலி, கள்.
இல் - மனைவி, இராசி, மரணம், இடம், வீடு.
இல்லம் - வீடு.
இல்லி - பொள்ளல்.
இலக்கம் - குறி, எண், இலட்சம்.
இலக்கியம-காப்பியம்,உதாரணம்.
இலகு - அற்பம்.
இலச்சினை - அடையாளம், மோதிரம்.
இலஞ்சி - மாமரம், குளம், கொப்பூழ், மதில், குணம், மகிழமரம், ஏரி.
இலதை - படரும் கொடி (Creeper), இலந்தை.
இலம்பகம் - அத்தியாயம், நுதல் அணி.
இலம்பாடு - தரித்திரம்.
இலயம் - கூத்து, கூத்தின் வேறுபாடு, அழிவு.
இலலாடம் - நெற்றி.
இலலிதம் - அழகு.
இலவணம் - உப்பு.
இலாங்கலி - கலப்பை, தென்னமரம், செங்காந்தள்.
இலாடம்-நெற்றி, குதிரைலாடம் (Horse shoe).
இலாயம் - குதிரைப் பந்தி.

இலாவணியம் - அழகு.
இலீலை - விளையாட்டு.
இலேகர் - தேவர்.
இலௌகிகம் - உலகிற்குரியது.
இவண் - இவ்விடம்.
இவர்தல் - எழுச்சி, விருப்பம், ஏறுதல், செல்லுதல், மேவுதல், பரத்தல்.
இவறல் - மறதி, விருப்பம், வேட்கைப் பெருக்கம்.
இவுளி - குதிரை.
இழவு - இழத்தல், மரணம்.
இழிஞர் - தாழ்ந்தோர்.
இழிதகவு - எளிமை.
இழிதல் - தாழ்தல், இறங்குதல்.
இழிவு - குறைவு, தாழ்வு.
இழுக்கம் - தவறு, தாமதித்தல்.
இழுக்கல் - தவறுதல், வழுக்கல்.
இழுக்கு - குற்றம், கீழ்மை, தீமை, வழுக்கு நிலம்.
இழுது - கள், சேறு, நெய்.
இழுதை - பேய், அறிவிலி.
இழுமெனல் - அனுகரணவோசை, இனிமை.
இழை - ஆபரணம், நூல்.
இழைத்தல் - செய்தல், குழைத்தல்.
இழைதல் - கூடுதல்.
இளவல் - தம்பி.
இளி - யாழின் நரம்பிலொன்று, இகழ்ச்சிக் குறிப்பு, இணங்குதல், உரித்தல், இசை.
இளிவரவு - இகழ்ச்சி, சிறுமை.
இளை - மேகம், இளமை, வேலி, தலைக்காவல், பூமி, காவற்காடு.
இளைத்தல் - மெலிதல், இரங்கல்,
இளையாள் - இலக்குமி, தங்கை.
இறப்பு - மிகுதி, இறத்தல், கடத்தல்.
இறல் - ஒடிதல், கெடுதல்.
இறவு - இறால் மீன்.
இறால் - தேன், கூடு, எருது, இறால் மீன்.
இறுத்தல் - ஒடித்தல், தங்குதல், சொல்லுதல், வடித்தல், முடித்தல்.
இறுதல் - முறிதல், அழிதல், முடிதல்.
இறுதி - முடிவு.
இறும்பு - தாமரைப் பூ, மலை, குறுங்காடு, சிறு தூறு.
இறும்பூது - பெருமை, மலை, அதிசயம், தளிர், சிறு தூறு.
இறுமாப்பு - கர்வம்.
இறுவாய் - முடிவு.
இறை - கடவுள், கடன், அரசன், கையிறை, குடியிறை, உயர்ந்தோன், அற்பம், பறவையிறகு, தங்கல், தலை, கூன், வீட்டிறப்பு, மறுமொழி.
இறைவி - தலைவி, அரசி.
இறைவை - கூடை, ஏணி.
இன்மை - தரித்திரம், இல்லாமை.
இன்றியமையாமை - இல்லாமல் முடியாமை.
இன்னணம் - இவ்விதம்.
இன்னல் - துன்பம், தீங்கு, குற்றம்.
இன்னா - தீங்கு, துன்பம்.
இன்னே - இப்பொழுது.
இனம் - சுற்றம், கூட்டம், சாதி.
இனன் - சூரியன், சந்திரன், கூட்டம்.
இனைதல் - வருந்துதல், இரங்குதல்.
இனைவரல் - வருந்துதல்.

## ஈ

ஈ - அறுகால் சிறு பறவை (**Fly**), வண்டு, தேன் வண்டு.

ஈகை - இண்டங்கொடி, கொடுத்தல், கற்பகவிருட்சம், பொன், மேகம்.

ஈங்கு - இவ்விடம்.

ஈசன் - கடவுள், அரசன், சிவன், திருமால், குரு, மூத்தோன்.

ஈசானம்-வடகீழ்த்திசை, சிவன் ஐம்முகங்களுள் ஒன்று.

ஈசுவரி - பார்வதி.

ஈட்டம்-பொருள், வலிமை, கூட்டம்.

ஈட்டுதல் - கூட்டுதல், சம்பாதித்தல்.

ஈடு - குறைவு, ஒப்பு, வலிமை, பெருமை.

ஈண்டு - இவ்விடம், இவ்வண்ணம், விரைவு.

ஈண்டுதல் - நெருங்குதல்.

ஈமம்-சுடுகாடு, பிணஞ்சுடு விறகு.

ஈர்த்தல் - உரித்தல், இழுத்தல்.

ஈர்தல் - அரிதல், பிளத்தல்.

ஈரங் கொல்லியர் - வண்ணார்.

ஈரம் - குளிர்ச்சி, அன்பு.

ஈழம்-கள், சிங்களதேசம், பொன்.

ஈற்று - ஈனுதல்.

ஈறு - முடிவு.

ஈன் - இவ்விடம்.

ஈன்றல் - பெறுதல், உண்டாதல்.

ஈன்றாள் - தாய்.

ஈன்றான் - தந்தை, பிரமன்.

ஈனோர் - இவ்வுலகத்தவர்.

## உ

உக்கம் - நெருப்பு, இடை, பசு, எருது, ஆலவட்டம், கோழி, பொன்.

உக்கிரம் - கோபம், கடுமை.

உக்கிரன் - சிவன், வீரபத்திரன்.

உகப்பு - உயர்வு, விருப்பு.

உகம் - யுகம், உலகம்.

உகல் - உகுதல்.

உகவை - விருப்பம்.

உகளுதல் - கடத்தல், குதித்தல், பாய்தல்.

உகிர் - நகம்.

உகுத்தல் - சிந்தல், சொரிதல்.

உகைதல் - எழுதல், செல்லல்.

உச்சாரணம் - உச்சரித்தல்.

உச்சி-நண்பகல்,உச்சந்தலை, நாய்.

உச்சிட்டம் - எச்சில்.

உச்சைச்சிரவம் - இந்திரன் குதிரை.

உசன் - சுக்கிரன்.

உசா - வினா, ஆராய்தல், ஒற்றர்.

உசாக்கையர் - ஆராய்வோர்.

உசாவுதல்-வினவுதல், ஆராய்தல்.

உசிதம் - உத்தமம், தகுதி.

உஞ்சை - அவந்தி நகரம்.

உஞற்று - ஊக்கம், முயற்சி, இழுக்கு, செயல்.

உட்குதல் - அஞ்சுதல், நாணுதல்.

உட்கோள் - கருத்து.

உட்சமயம் 6 - வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம்.

உட்பகை 6 - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

உடல் - பொன், உடம்பு.

உடற்றல் - சீறுதல், பொருதல், வருத்தல்.

உடு - நட்சத்திரம், அகழி, மரக்கலம் செலுத்தும் கோல், அம்புச் சிறகு.

உடுக்கை - இடை சுருங்கு பறை, சீலை, உடுத்தல்.

உடுபதி - சந்திரன்.

உடுபம் - நட்சத்திரம்.

உடை - செல்வம், சீலை.

உடைதல் - தகர்தல், வெடிதல்.

தளர்தல், தோல்வி.

'உண்டாட்டு - கள்ளுண்டு களித்து விளையாடல்.

உண்டி - உணவு, சோறு.

உண்டை - திரட்சி, படை வகுப்பு.

உணக்கல் - உலர்த்தல்.

உணங்கல் - உலர்தல், உலர்ந்த பொருள்.

உணர்த்தல் - அறிவித்தல், துயிலெழுப்பல், ஊடல் நீக்கல்.

உணர்தல் - அறிதல், ஊடல் தீர்தல்.

உணர்வு-தெளிவு, ஊடல் நீங்கல், அறிவு.

உத்தமம் - மேன்மை, உயர்வு.

உத்தமி - உயர்ந்தவள்.

உத்தர கிரியை - பின் செயல், அந்தியேட்டி முதலிய அபரக் கிரியை.

உத்தரம் - வடவா முகாக்கினி, மேல், எதிர்மொழி, வடக்கு.

உத்தராயணம் - தை மாதப் பிறப்பு.

உத்தி - சீதேவி எனனும் தலைக் கோலம், தேமல், சொல்லுதல், தந்திரம், பாம்பின் படப் பொறி.

உத்தியானம் - சோலை.

உத்திரம் - ஒரு நட்சத்திரம், வீட்டின் உத்திரம் (Beam).

உதகம் - நீர்.

உததி - கடல்.

உதரம் - வயிறு.

உதாரம் - மேன்மை, ஈகை.

உதிட்டிரன் - யுத்தத் திறமுள்ளவன்

உந்தல் - செலுத்தல், தள்ளுதல்.

உந்தி - தேருருள், ஆறு, கடல், நீர்ச்சுழி, கொப்பூழ்

உப்பளம் - உப்பு விளை நிலம்.

உப்பு - பெண்கள் விளையாட்டு, உவர்ப்பு, இனிமை, கடல்.

உபக்கிரமணிகை - முகவுரை.

உபகரணம் - துணைக் கருவி.

உபதேசம் - நன்மை கூறல், புத்தி புகட்டல்.

உபநயனம் - பூணூல் கலியாணம்.

உப புராணம் 18—நாரசிங்கம், சனற்குமாரம், நாரதீயம், சிவதனமம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாம்பேசம், பராசரம், பார்க்கவம், காபிலம், மானவம், வாசிட்டலைங்கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம்

உபமானம் - உவமை.

உபமேயம் - உவமிக்கப்படும்பொருள்.

உபயம் - இரண்டு.

உபரிகை - மேல் வீடு.

உபவாசம் - உண்ணாதிருத்தல்.

உபவீதம் - பூணூல்.

உபாதி - இடையூறு, தடை.

உபேந்திரன - திருமால்.

உபோற்காதம் - பாயிரம்.

உம்பர் - தேவர், தேவ லோகம், மேல், உவ்விடம்.

உம்பல் - ஆண் விலங்கு, யானை, குலம், எழுச்சி, வலி, புதல்வன்.

உம்மை-முற்பிறப்பு, வருபிறப்பு.

உயத்தல்-செலுத்தல், சேர்த்தல், கொண்டு போதல்.

உய்த்துணர்தல் - ஆராய்ந்தறிதல்.

உய்தல் - பிழைத்தல்

உயக்கம் - வருத்தம்.

உயங்கல் - வருந்தல்.

உயர்திணை - உயர்வாகிய சாதி.

உயல் - ஒழிதல், பிழைத்தல்.

உயவல் - நினைவு, துன்பம்.

உயவை - முல்லைக் கொடி, கான்யாறு.
உயிர் - காற்று, சீவன்.
உயிர்த்தல் - விடுதல், மூச்சுவிடல், ஈனுதல், மோத்தல்.
உயிர்ப்பு - மூச்சு, காற்று, மணம்.
உரகம் - பாம்பு.
உரங்கம் - பாம்பு.
உரம் - வலிமை, ஞானம், ஊக்கம், மார்பு, திடம்.
உரவு - அறிவு, வலிமை.
உரவோர் - வலியர், அறிஞர்.
உரற்றல் - ஒலித்தல்.
உரிஞ்சல் - தேய்த்தல்.
உரிமை - சுதந்திரம், மனைவி.
உரிவை - தோல்.
உரு - நிறம், வடிவம், அட்டை, உடம்பு, அச்சம்.
உருக்கம் - அன்பு.
உருத்தல் - முளைத்தல், கோபித்தல்.
உருத்திரம் - பெருஞ்சினம்.
உருத்திரர்பதினொருவர் - மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன்.
உருத்திரை - பார்வதி.
உருப்பம் - கோபம், வெப்பம்.
உரும் - பயம், இடியேறு (Thunder).
உருவிலி - மன்மதன், உருவில்லான்.
உரை - சொற்பொருள், சொல், தேய்வு, புகழ்.
உரையாடல் - பேசுதல், சொல்லுதல்.
உரோதனம் - அழுதல்.
உல்லாசம் - சந்தோஷம்.

உலகம் - திக்கு, ஆகாயம், பூமி, குணம், உயர்ந்தோர்.
உலகியல் - உலக நடை.
உலங்கு - திரண்டகல், கொசுகு.
உலத்தல் - குறைதல், சாதல்.
உலப்பு - முடிவு, அழிவு, குறைவு.
உலம் - திரண்ட கல்.
உலமரல் - துன்பம்.
உலவை - காற்று, மரக் கொம்பு, தழை, விலங்கின் கொம்பு.
உலா - ஊர் வலம்.
உலூகம் - கோட்டான்.
உலூகலம் - உரல்
உலூதை - எறும்பு.
உலைவரல் - வருந்தல்.
உலோகம் - மக்கள், உலகம், பொன் முதலியன.
உலோசனம் - கண்.
உவகை - களிப்பு.
உவட்டு - அருவருப்பு, பெருக்கு.
உவணம் - கருடன், உயர்வு, கழுகு.
உவணன் - கருடன்.
உவணி - வாளாயுதம்.
உவணை - தேவலோகம்.
உவப்பு - களிப்பு, பொலிவு, மேடு.
உவர் - உப்பு.
உவர்த்தல் - வெறுத்தல்.
உவரி - கடல், பெண்கள் விளையாட்டு.
உவலை - பொய், தழை.
உவளகம் - மதில், ஒரு பக்கம், குளம், பள்ளம், அந்தப்புரம் (Zenana), காவற் கூடம்.
உவா - யானை, இளையோன், பூரணை, அமாவாசை.
உழத்தல் - செய்தல், வருந்தல், அநுபவித்தல், பயிலுதல்.
உழத்தி - மருத நிலப் பெண்.
உழப்பு - வலிமை, உற்சாகம், வருத்தம்.

உழலல் - தடுமாறல், சுழலல்.
உழவர் - நில முழுவோர்.
உழி - இடம்.
உழிஞை - பகைவர் அரண் கைக் கொள்ளும்போது அணியும் மாலை.
உழிதரல், சுழலல்.
உழு படை - கலப்பை.
உழுவல் - இடை விடாத அன்பு.
உழுவை - புலி.
உழை - இடம், மான், பக்கம், யாழின் ஒரு நரம்பு.
உழையர் - மந்திரிமார்.
உள் - உள்ளிடம், மனம்.
உள்ளம் - முயற்சி, மனம்.
உள்ளல் - நினைத்தல், உள்ளான் குருவி.
உள்ளீடு - அறிவு, உறுதியான உட்பக்கம்.
உள்ளுறை - உள்ளிருக்கும் பொருள்.
உளர்தல் - சிந்துதல், தடவல், அசைதல், சுழலல்.
உளவு - இரகசியம்.
உளியம் - கரடி.
உளை - மயிர், ஓரிசை, குதிரையின் கழுத்து மயிர், சேறு, தலை.
உளைத்தவர் - வெறுத்தவர்.
உளைதல் - வருந்துதல்.
உளைப்பு - அழைப்பு, ஒளிப்பு, தேகக்குடைச்சல், வருத்தம்.
உளைவு - வருத்தம்.
உற்கை - நட்சத்திரம், கடைக் கொள்ளி.
உற்சவம் - திருநாள், விருப்பம்.
உற்சாகம் - முயற்சி.
உற்பலம் - செங்கழுநீர்ப் பூ, குவளைப் பூ.
உற்பவம் - பிறப்பு.
உற்பாதம் - பின் வரும் தீமைகளை முன் அறிவிக்குங் குறி, நுண்ணறிவு.
உறவி - எறும்பு, ஊற்று, உலைக் களம், உறவு, உயிர்.
உறழ்தல் - மாறுபாடு, இடையீடு, ஒத்தல்.
உறழ்வு - மாறுபாடு, இடையீடு, ஒப்பு, செறிவு, புணர்தல், காலம்
உறு - மிகுதி, பகை, போர்.
உறுகண் - துன்பம், அச்சம், தரித்திரம், நோய்.
உறுதல் - மிகுதல், பொருந்தல், சேர்தல்.
உறுதி - நன்மை, கல்வி, மேன்மை.
உறுப்படக்கி - ஆமை.
உறுப்பு - அவயவம், உடல்.
உறுவர் - முனிவர், பெரியோர்.
உறை - பொருள், மருந்து, வாழ் நாள், உணவு, வெண்கலம், காரம், ஆயுத வுறை, ஓர் இலக்கக் குறிப்பு, பாலிடு பிரை, நகரம், நீர்த் துளி, போர்வை, உறைப்பு, மழை.
உறையுள் - நாடு, ஊர், வீடு.
உன்மத்தம் - ஊமத்தை, மயக்கம்.
உன்னல் - நினைத்தல்.

## ஊ

ஊ - மாமிசம்.
ஊக்கம் - மனக்கிளர்ச்சி, வலிமை, உற்சாகம்.
ஊக்கல் - முயலல், செய்தல், ஆட்டுதல்.
ஊகம் - கருங்குரங்கு, குரங்கு, ஆராய்ச்சி, நீதி.
ஊங்கு-மிகுதி, முன், விசேஷம்
ஊசல் - அசைதல், ஊஞ்சல்.
ஊசி - எழுத்தாணி, துணிதைக்கு மூசி (Needle).

ஊட்டி - கழுத்து, பறவைத்தீனி.

ஊட்டுதல் - உண்ணல், உண்பித்தல்.

ஊடாடல் - பழகுதல்.

ஊடு - உள், நடு.

ஊடுதல் - வெறுத்தல், பிணங்குதல்.

ஊடுருவல் - துளைத்தல்.

ஊதியம் - இலாபம், கல்வி.

ஊதை - காற்று, குளிர் காற்று.

ஊமன் - ஊமை, கோட்டான்.

ஊர் - கிராமம், பரிவேடம், துடை.

ஊர்தி - வாகனம்.

ஊருணி - ஊரார் நீர்கொள்குளம்.

ஊழ் - முறை, வெயில், பகை, பழமை.

ஊழ்த்தல் - நினைத்தல், பருவம், பதங்கெடல், மலர்தல், இறைச்சி, உதிர்த்தல்.

ஊழ் வினை - பழவினை.

ஊழல் - நரகம், ஆகாதது, ஊத்தை, நாற்றம்.

ஊழி - உலகமுடிவு, கடல்பெருகியுலகம் அழியுங் காலம், நெடுங்காலம், பூமி.

ஊழித் தீ - வடவாமுகாக்கினி.

ஊழியம் - தொண்டு.

ஊற்றம் - இடையூறு, பற்றுக்கோடு, முயற்சி, வலிமை.

ஊற்று - ஊன்றுகோல், நீரூற்று.

ஊறு - தீமை, குற்றம், உறுவது, கொலை, தொடுதல்.

ஊறுபாடு - தீமை, துன்பம்.

ஊன் - உடல், இறைச்சி.

ஊனம் - சாரம், பிணம், குற்றம்.

ஊனுருக்கி - க்ஷய ரோகம்.

## எ

எ - வினாவெழுத்து, ஏழென்னுந் தமிழெண்.

எஃகம் - ஆயுதம், ஈட்டி, வேல், கூர்மை, சக்கராயுதம், வாள்.

எஃகு - உருக்கு, வேல், கூர்மை, புத்தி நுட்பம்.

எக்கர் - சொரிதல், குவிதல், எறுதல், மணற் குன்று, இறுமாப்புடையவர், போர் புரிவோர்.

எக்கல் - எறுதல், குவித்தல், சொரிதல், பொருதல், வயிற்றையுள்ளிழுத்தல்.

எக்களித்தல் - மிக மகிழ்தல்.

எக்காளம் - ஓர் ஊது குழல்.

எகின் - அன்னம், செம்மரம், புளி, புளிமா, புளிய மரம்.

எகினப் பாகன் - பிரமன்.

எகினம் - அன்னம், கவரிமா, நாய், நீர் நாய், புளி, புளிமா, புளிய மரம்.

எங்கணும் - எவ்விடமும்.

எங்கை - தங்கை.

எங்ஙனம் - எவ்விதம், எவ்விடம்.

எச்சம் - குறைவு, புத்திரன், யாகம்.

எச்சரித்தல் - கண்டித்தல், புத்தி புகட்டல், தூண்டுதல்.

எஞ்சாமை - குறையாமை.

எஞ்சுதல் - குறைதல், இறத்தல்.

எஞ்ஞான்றும் - எப்போதும்.

எட்சத்து - எண்ணெய்.

எட்டக்கரம் - அஷ்டாக்ஷர மந்திரம்; (ஓம் நமசிவாய நம: ஓம் நமோ நாராயணாய:)

எட்டியர் - வைசியர்.

எடுத்துக் காட்டு - உதாரணம்.

எடுப்பு - இறுமாப்பு, உயர்வு, எடுத்தல், நிந்தித்தல்.

எடுபிடி - முயற்சி.
எடை-எடுத்தல், எழுப்பல், தூக்குதல், நிறையிடல்(weight).
எண் - வலி, எள், இலக்கம், எளிமை, சோதிடநூல், ஆலோசனை, அறிவு, எண்ணம், கணக்கிடல், கணிதம், கவலை, மனம், வரையறை.
எண் கண்ணன - பிரமன்.
எண் காற்புள் - சரபப் பறவை.
எண்கு - கரடி.
எண்குணம் - தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்கல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை (இவை கடவுளுக்குரியவை).
எண்குணன - அருகன, கடவுள்.
எண் சுவை - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை.
எண்டிசை - கிழக்கு, தென்கிழக்கு; தெற்கு, தென்மேற்கு; மேற்கு, வடமேற்கு; வடக்கு, வடகிழக்கு.
எண்டிசைப்பாலகர் - அட்ட திக்குப பாலகர் பார்க்க.
எண்டிசை யானை - அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம்.
எண்டோளன் - சிவன்.
எண்டோளி - காளி, துர்க்கை.
எண்ணர் - மந்திரியர், கணிதர்.
எண்ணலர்-பகைவர், மதியாதார்.
எண்மை - எளிமை.
எண்வகைக் காட்சி - ஐயுறுதறஞ் செயல், அவாவின்மை, உவர்ப்பில் அறிவுடைமை, மூடமறுத்தல், மிகப்பழி மறுத்தல், அழிந்தோரை நிறுத்தல், அறம் விளக்கல், அறுசமயத்தவரனபு.
எண் வகைத் துணைவர் - அரசர்க்குரியவர்: கரணத்தியல்வோர், கரும அதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், குதிரைவீரர், யானை வீரர்.
எண் வகை மணம் - பிரம மணம், தெய்வ மணம், பிரசாபத்திய மணம், ஆரிட மணம், காந்தருவ மணம், ஆசுர மணம், இராக்கத மணம, பைசாச மணம்.
எண் வகை மாலை - வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.
எதிர்-ஒப்பு, முன்னிலை, மாறு.
எந்தை - என் தந்தை.
எம்பி - தம்பி.
எய் - முள்ளம் பன்றி.
எய்த்தல் - இளைத்தல், அறிதல், வருந்தல்.
எய்தல் - அடைதல், செலுத்தல்.
எய்ப்பு - இளைப்பு.
எயில் - நகரம், மதில்.
எயிறு - பல்.
எயினன் - வேடன்.
எரி - நெருப்பு.
எரி காசு - காசுக் கட்டி.
எரி மணி - மாணிக்கம்.
எருத்தம் - கழுத்து.
எருந்து - உரல், கிளிஞ்சல்.
எருவை - கொறுக்கைக்கோரை, கழுகு, செம்பு (Copper), இரத்தம், பருந்து.

எல்-ஒளி, பகல், இகழ்ச்சி, இரவு, சூரியன்.
எல்வி - இரவு.
எல்லை-அளவு, சூரியன், இடம், முடிவு.
எலு - கரடி.
எலுவன் - தோழன்.
எலுவை - தோழி.
எழில் - அழகு, இளமை, வலி, எழுச்சி, பெருமை.
எழிலி - மேகம்.
எழினி - ஒரு வள்ளல், திரைச்சீலை (Screen).
எழு - தூண்.
எழு கடல் - எழ்கடல் பார்க்க.
எழுதாக் கிளவி - வேதம்.
எழுதீவு-நாவல், இரலி, கிரவுஞ்சம், குசை, இலவம், தெங்கு, புட்கரம்.
எழுமலை - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், எமகூடம், நீல கிரி.
எழுமாதர்-அபிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைணவி, வராகி, மகேந்திரி, சாமுண்டி.
எழுமை - உயர்வு, எழு பிறப்பு.
எழு முனிவர் - அத்திரி, குற்சர், வசிட்டர், பிருகு, கௌதமர், காசிபர், அங்கிரா.
2. அத்திரி, ஆங்கிரசர், கௌதமர், சமதக்கினி, பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர் எனக் கூறுவதுமுண்டு.
எழுவகைத்தாது-இரதம், உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம்.
எழுவகை நதி - கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, காவிரி, குமரி, கோதாவரி என்னும் எழு புண்ணிய நதிகள்.
எழுவகைப் பிறப்பு-தேவர், மனிதர், நீர் வாழ்வன, விலங்கு, ஊர்வன, பறவை, தாவரம்.
எழு வகைப் பெண் பருவம் - பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண். இவற்றின் வயது முறையே 7, 11, 13, 19, 25, 31, 40 ஆகும்.
எழு வகை மேகம் - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம். இவை பொழிவன முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.
எழுவாய்-தொடக்கம், முதல்.
எள்ளல்-சிரித்தல், இகழ்தல், நிந்தித்தல்.
எளிமை-வறுமை, வலியின்மை, தாழ்வு.
எளிவரல் - எளிதிற் கிடைத்தல்.
எற்பாடு - காலை
எற்பு - எலும்பு.
எற்றுதல் - அடித்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல், கொல்லுதல்.
எறிதல் - அடித்தல், முறித்தல், வீசுதல்.
எறும்பி - யானை.
எறுழ் - வலிமை, தண்டாயுதம்.
எறுழி - பன்றி.
என்பு - எலும்பு.
என்று - எந்த நாள், சூரியன்.
என்றூழ் - சூரியன், வெயில்.

## ஏ

ஏ - வினாவெழுத்து, அம்பு.
ஏக்கறுதல் - தாழ்தல், பேராசை கொள்ளல்.
ஏக தேசம் - சிறு பான்மை.

ஏகம் - தனி, ஒன்று.
ஏகாதசம் - பதினொன்று.
ஏகாதச ருத்திரர்-உருத்திரர் பதினொருவர் பார்க்க.
ஏகாந்தம் - தனிமை, தனியிடம்.
ஏகுதல் - செல்லுதல்.
ஏங்கல் - சத்தம், அழுதல்.
ஏங்குதல் - அழுதல், ஒலித்தல், திகைத்தல், இரங்குதல்.
ஏசறவு - துக்கம், நாணம்.
ஏண் - பெருமை, வலிமை, நிலை.
ஏணி - உலகம், எல்லை, ஏணி (Ladder), மான்.
ஏத்துதல் - துதித்தல்.
ஏதம் - துன்பம், குற்றம், கேடு.
ஏதி - ஆயுதம், வாள்.
ஏதிலர் - அயலார், தரித்திரர்.
ஏது - காரணம், குற்றம்.
ஏந்தல்-பெருமை, மேடு, உயர்வு, அரசன், தாங்குதல்.
ஏம்பல் - வருத்தம், மகிழ்ச்சி.
ஏமம் - புதையல், காவல், இன்பம், பொன், இரவு, மயக்கம்.
ஏமரல் - மயங்கல்.
ஏமாப்பு - மகிழ்ச்சி, மயக்கம்.
ஏமுறல் - மயங்கல், மகிழ்தல்.
ஏய்த்தல் - ஒத்தல், வஞ்சித்தல்.
ஏய்தல் - ஒத்தல், பொருந்துதல்.
ஏர் - அழகு, உழவு, எழுச்சி.
ஏரம்பன் - விநாயகன்
ஏல்வை - காலம், குளம், நாள்.
ஏலம் - மயிர்ச்சாந்து, ஏலக்காய்.
ஏவல்-கட்டளையிடல், தரித்திரம்.
ஏழ்கடல்-உப்பு, நீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் இவற்றையுடைய கடல்.
ஏழ் பரியோன் - சூரியன்.
ஏழகம் - ஆடு, செம்மறிக் கடா.
ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் யாழினிசை நரம்புகள்.
ஏழை - தரித்திரன், அறிவிலி, பெண்.
ஏழைமை - அறியாமை.
ஏளனம் - இகழ்ச்சி.
ஏற்றம் - உயர்வு, புகழ், மிகுதி.
ஏற்றல் - யாசித்தல், வாங்குதல், அடுக்கல், எதிர்த்துப் போர் செய்தல்.
ஏறு - இடி, அச்சுவினி நட்சத்திரம், இடப ராசி, எருது, விலங்கின் ஆண்.
ஏனம் - ஓலைக் குடை, பாத்திரம், (Vessel), கருவி, பன்றி, பாவம்.
ஏனல்-செந்தினை, தினைப்புனம்.
ஏனாதி - நாவிதன் (Barber), மந்திரி, படைத் தலைவன்.
ஏனை - ஒழிபு, மற்றையென்னுமிடைச் சொல்.

## ஐ

ஐ - அழகு, கோழை, அரசன், இருமல், தலைவன், தந்தை, வியப்பிடைச் சொல்.
ஐக்கியம் - ஒற்றுமை.
ஐங்கணை - தாமரைமலர், அசோக மலர், குவளை மலர், மாம்பூ, முல்லை மலர் (இவை மன்மதனுக்குரிய ஐந்தம்புகள்).
ஐங்கணைக் கிழவன் - மன்மதன்.
ஐங்கணையவத்தை - தாமரை - சம்பிரயோகம் (சொல்லும் நினைவும்), அசோகம் - விப்பிரயோகம் (பெருமூச்சு விட்டு இரங்கல்), குவளை - சோகம் (வெதும்பி உணவை வெறுத்தல்), மா - மோகம் (அழுது பிதற்

றல்), முல்லை மாணம் (மயங்கலும் காதலும்).
ஐங்கரன் - விநாயகன்.
ஐங்குரவர் - ஐவகைப் பெரியர் : அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன்.
ஐசுவரியம் - செல்வம்.
ஐதிகம்-கர்ண பரம்பரை (Tradition).
ஐது - விரைவு, நுட்பம், அழகியது, அற்பம்.
ஐந்தரு - சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம் (இவை தெய்வத் தருக்கள்).
ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்.
ஐந்திலக்கணம்-எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
ஐம்படை - திருமால் தரிக்கும் ஐந்தாயுதங்கள் : சக்கரம், வில், வாள், தண்டு, சங்கம். (இவை, முறையே சுதரிசனம், சார்ங்கம், நாந்தகம், கௌமோதகி, பாஞ்சசன்னியம் எனப்பெயர் பெறும்).
ஐம்பால்-1. இலக்கணநூல் கூறும் ஐந்து பகுப்பு : ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால்.
2. பெண் கூந்தல்: முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை யென ஐந்து வகையாக அலங்கரிக்கப்படுவது.
ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
ஐம்பெருங்குழு - அரசர்க் குரிய ஐந்து கூட்டத்தார்: அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதர், சாரணர் (ஒற்றர்).
ஐம்பெரும்பூதம் - பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம். (இவை முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனவும் பெறும்).
ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி.
ஐம்முகன் - சிவன்.
ஐயம் - பிச்சை, பிச்சையேற்கும் கலம், சந்தேகம்.
ஐயவி - கடுகு.
ஐயன்-அரசன், தந்தை, கடவுள், தமையன், குரு.
ஐயுறவு - சந்தேகம்.
ஐயை - பார்வதி, துர்க்கை, மகள், தவப் பெண், தாய், தலைவி.
ஐராவணம் - இந்திரன் யானை.
ஐவகைச் சுற்றம் - அரசர்க் குரிய ஐவகைச் சுற்றத்தார் : போர் வீரர், சகுனம் சொல்வோர், ஆயுள்வேதர் (Doctors), நண்பர், பார்ப்பனார்.
ஐவகைத் தாயர்-ஈன்றதாய், ஊட்டுந்தாய், கைத்தாய், செவிலித் தாய், முலைத் தாய்.
ஐவகைத் திரவியம் - மலைபடு திரவியம், காடுபடு திரவியம், நாடுபடு திரவியம், நகர்படு திரவியம், கடல்படு திரவியம்.
ஐவகைத்தெய்வமணி - சிந்தாமணி, சூளாமணி, சிமந்தக மணி, சூடாமணி, கௌத்துவ மணி.
ஐவகைத்தொழில் - எண்ணல், எழுதல், இலை கிள்ளல், மலர் தொடுத்தல், யாழ் வாசித்தல்.
ஐவகை மெய்க்குற்றம்-குறுகுறுத்தல், கொட்டாவி விடுதல், நெட்டைக் கூன் கிடை, நட்டு விழுதல்.

ஐவகையுணவு - கடித்தல், நக்கல், பருகல், விழுங்கல், மெல்லல் என்னும் ஐந்துவகை யுண்டி.

ஐவகை விரை-ஐந்துவகைச் சாந்து: கோட்டம், குங்குமம், தகரம், அகில், சந்தனம்.

ஐவகை விளு- ' றியான் விளுயல், அறிவு' ஒப்புப பார்த்தல், ஐய மறுத்தல், அவனறிவு தான் கொளல், அவனுக்கு உண்மை காட்டல்.

ஐவகைவேள்வி-கடவுள் வேள்வி, பிரம வேள்வி, பூத வேள்வி, மானிட வேள்வி, பிதுர்க்கள் வேள்வி. (வேள்வி - யாகம்).

ஐவனம் - மலை நெல்.

ஐவாய் மான் சிங்கம்.

## ஒ

ஒக்கல் - சுற்றம.

ஒக்கலை - இடுப்பின் பக்கம்.

ஒகரம் - மயில்.

ஒசிதல் - முரிதல், துவளல்.

ஒட்டலர் - பகைவர்.

ஒட்பம் - அறிவு, அழகு, நன்மை.

ஒடி - வலை.

ஒண்மை - மிகுதி, நன்மை, ஒழுங்கு, அறிவு, அழகு, ஒளி.

ஒத்தறுத்தல் - தாளம்போடுதல்.

ஒதுக்கம் - நடை, மறைப்பு.

ஒப்பனை - அலங்காரம், உவமை.

ஒப்பு - உவமை, அழகு, சம்மதம்.

ஒப்புரவு - உபகாரம், சமம்.

ஒருத்தல் - யானை, ஆண் விலங்கு.

ஒருதலை - ஓரிடம், நிச்சயம்.

ஒருப்படல் - துணிதல், சம்மதித்தல்.

ஒருவுதல் - விடுதல், நீங்குதல்.

ஒல்கல்-ஒதுங்கல், சுருங்கல், தளர்தல், குழைதல்.

ஒல்லார் - பகைவர்.

ஒல்லுநர் - நண்பர்.

ஒல்லை - விரைவு, பழமை, சிறுபொழுது.

ஒலி - இடி, காற்று, ஓசை.

ஒலியல் - நதி, தோல், சீலை, பூமாலை, தெரு.

ஒழிபு - மிச்சம்.

ஒழுக்கம்-நடத்தல், உயர்வு, வழி, மேன்மை.

ஒழுகல்-நடத்தல், பாய்தல், உயர்தல்.

ஒளி-சூரியன், சந்திரன், நெருப்பு, மறைவிடம், புகழ், விளக்கு.

ஒளிவட்டம் - கண்ணாடி, சக்கராயுதம்.

ஒளிறுதல் - விளங்குதல்.

ஒற்கம் - தளர்ச்சி, தரித்திரம்.

ஒற்றன - தூதன், ஆராய்பவன்.

ஒறுத்தல் - கடிதல், வருத்தல், வெறுத்தல்.

ஒன்றுதல் - பொருந்துதல், நெருங்குதல்.

ஒன்னலர் - பகைவர்.

ஒன்னார் - பகைவர்.

## ஓ

ஓ - இரக்கக் குறிப்பு, நீங்குதல், நீர்மதகடைக்குங் கதவு, விளுவெழுத்து.

ஓகை - மகிழ்ச்சி.

ஓங்கல் - மலை, உயர்வு, மூங்கில், எழுச்சி, மேடு, வலியோன், தலைவன்.

ஓங்குதல் - வளர்தல், உயர்தல்.

ஓச்சுதல் - செலுத்துதல், உயர்த்துதல், ஓட்டுதல், வீசுதல்.

ஓசம் - ஒளி.

ஓட்டம் - மேலுதடு, ஓடல், தோல்வி.

ஓடதி - மருந்து மூலிகை.

ஓடை - நீர் நிலை, அகழி, ஒரு வகை மரம், ஒருவகைக்கொடி, நெற்றிப்பட்டம், மலை வழி.
ஓணம்-திருவோண நட்சத்திரம், ஆறு.
ஓத்து-வேதம், ஓரினப்பொருளை யொரு வழி வைத்தல்.
ஓதம் - கடல் அலை, வெள்ளம்.
ஓதனம் - சோறு, உணவு.
ஓதி - பெண் மயிர், பூனை, ஓந்தி, ஞானம், மலை, கல்வி.
ஓதிமம் - அன்னப்பறவை, மலை, கவரி மா.
ஓதை-பேரொலி, மதில், காற்று.
ஓந்தி - ஓணான்.
ஓம்புதல் - பாதுகாத்தல்.
ஓர்தல் - ஆராய்தல், எண்ணுதல்.
ஓரம் - பக்கம், பக்ஷபாதம் (Partiality).
ஓரி - ஆண் மயிர், ஒரு வள்ளல், நரி, கிழ நரி, ஆண் முசு.
ஓரை - பெண்கள் விளையாட்டு, இராசி, பெண்கள் கூட்டம்.
ஓலம்-அடைக்கலம், ஒலி, பாம்பு.
ஓலமிடல் - முறை யிடல்.
ஓவாமை - நீங்காமை.
ஓவியம் - சித்திரம்.
ஓவியர் - சிற்பிகள், சித்திரகாரர்.
ஓவுதல் - ஒழிதல், நீங்குதல்.
ஓளி - யானைக்கூட்டம், ஒழுங்கு.

## ஔ

ஔடதம் - மருந்து.
ஔதாரியம் - தரும குணம்.
ஔவியம் - பொறாமை.
ஔவை - தவப் பெண், தாய்.

## க

கஃசு-காற்பலங்கொண்ட அளவு.
ககபதி - கருடன்.
ககம் - அம்பு, பறவை, வாயு.
ககனம் - ஆகாயம், சேனை, காடு.
ககேசன் - கருடன்.
ககோளம் - ஆகாய மண்டலம்.
கங்கணம் - கை வளை.
கங்கம் - கழுகு, பருந்து, சீப்பு.
கங்காதரன் - சிவ பெருமான்.
கங்காளம் - எலும்பு.
கங்கு-கரை, கருந்தினை, பருந்து, வரம்பின் பக்கம்.
கங்குல் - இரவு, இருள்.
கச்சபம் - ஆமை.
கச்சம் - யானைக்கழுத்திற் கட்டுங் கயிறு, அளத்தல், மரக்கால்.
கச்சை - தழும்பு, கயிறு, கவசம்.
கசடர் - கீழ் மக்கள்.
கசடு - குற்றம், ஐயம், அழுக்கு.
கசம் - யானை, மயிர்.
கசிதல் - நெகிழ்தல், இரங்குதல், வருந்துதல்.
கஞ்சம் - வெண்கலம், கஞ்சா, தாமரை, வெண்கலம், அப்பம்.
கஞ்சன் - பிரமன், மூடவன்.
கஞ்சனம் - கண்ணாடி, கரிக் குருவி.
கஞ்சிகை - பல்லக்கு, சீலை, இடு திரை (Screen).
கஞ்சுகம்-சீலை, சட்டை (Coat).
கஞலல் - எழும்பல், நெருங்கல், விளங்கல்.
கட்கம் - வாள்.
கட்சி - காடு, பறவைக் கூடு.
கட்செவி - பாம்பு.
கட்டல்-தடுத்தல், பிடுங்கல், கட்டுதல், களவு.
கட்டழகு - பேரழகு.
கட்டளை - நிறையறி கருவி, உவமை, செங்கல் செய்யுங் கருவி, உரை யறி கருவி, முறை.
கட்டாரி - குற்று வாள்.

கட்டி - சர்க்கரை, கற்கண்டு, திரளை.
கட்டியம் - புகழ் மொழி.
கட்டுரை - உறுதிச் சொல், பொருள் நிரம்பிய சொல்.
கடகம் - சேனை, யானைக் கூட்டம், வட்டம், கைவளை, மதில், கேடகம் (Shield), வாகுவலயம்.
கடப்பாடு - செய் கடன்.
கடம்-கயிறு, யானைக்கவுள், காடு, கஷ்டமான வழி, உடம்பு, நீதி, குடம், யானைமதம், சுடுகாடு, யானைக்கூட்டம், கடன், குட முழா.
கட மா - யானை.
கடமை - முறை, காட்டுப் பசு.
கடல்படுதிரவியம்-உப்பு, பவளம், முத்து, சங்கு, ஓர்க்கோலை.
கடவல் - செலுத்தல், வினவுதல்.
கடவுள் - தெய்வம், முனிவன், நன்மை.
கடற் பிறந்தாள் - இலக்குமி.
கடா - கேள்வி, எருமைக் கடா.
கடாட்சம் - கடைக் கண்.
கடாம் - யானை மதம்.
கடி - கலியாணம், விரைவு, கூர்மை, காலம், பேய், விளக்கம், காவல், அச்சம், மணம், சந்தேகம், நீக்கம், அதிசயம், புதுமை, சிறப்பு, மிகுதி.
கடிகை - நாழிகை, துண்டு, தாழ் (Latch).
கடிஞை - பிச்சைப் பாத்திரம்.
கடிப்பகை-கடுகு, வேம்பு (Margosa).
கடிப்பம் - காதணி, ஆபரணச் செப்பு.
கடிப்பு - குறுந்தடி.
கடிவை - யானை.
கடு-விஷம்,முள், கடுமரம், கசப்பு.
கடுக்கை - கொன்றை.
கடுகம் - சுக்கு, திப்பிலி, மிளகு.
கடுத்தல் - உவமை, சந்தேகம், விரைவு, கோபித்தல்.
கடை - முடிவு, இடம், வாயில் (Entrance), அங்காடி, (Bazaar).
கடைக்கணித்தல் - கிருபை செய்தல்.
கடைப்பிடி-மறவாமை, தேற்றம்.
கடையெழுவள்ளல்கள் - பாரி, எழிலி, நள்ளி, ஆய், மலையன், ஓரி, பேகன்.
கண்-இடம், மரக்கணு, மூங்கில், கண், தாளை.
கண்கூடு - எதிரிற் பார்த்தல்.
கண்டகம் - உடை வாள், முள், வாள், காடு, முள்ளி.
கண்டகர் - கீழோர், கொடியவர், அசுரர்.
கண்டம் - கவசம், வெல்லம், கழுத்து,இடுதிரை (Screen), வாள், துண்டம், காடு, நாடு.
கண்டல் - தாழை, ஒரு வகை மரம், முட் செடி.
கண்டன் - சோழன்.
கண்டிகை - பதக்கம், வாகுவலயம், ஆபரணச் செப்பு, உருத்திராக்கம்.
கண்டீரவம் - சிங்கம்.
கண்ணல் - கருதல், குறித்தல்.
கண்ணழித்தல் - பாட்டிற் பதம் பிரித்தல்.
கண்ணறை - அகலம், குருடு.
கண்ணி - மாலை, வலை.
கண்ணுறல் - பார்த்தல்.
கண்ணோட்டம் - பார்வை, மகிழ்ச்சி.
கண் வளர்தல் - தூங்குதல்.

கணக்காயர் - உபாத்தியாயர்.
கணம் - நட்சத்திரம், ஒரு நோய், கூட்டம், கால்நுட்பம், பேய், வட்டம், அற்பம்.
கணவீரம் - அலரி மரம்.
கணி-வேங்கைமரம், மருத நிலம், சோதிடம் வல்லோன்.
கணிச்சி - மழு, தோட்டி.
கணித்தல் - எண்ணுதல், வரை யறுத்தல்.
கணை - அம்பு, திரட்சி.
கத்திகை - மாலை, துகிற் கொடி (**Flag**), குருக்கத்தி.
கத்தியம் - வசனம் (**Prose**).
கதம் - கோபம், வேகம், அடைந்தது, சென்றது.
கதம்பம் - கலவை, கடப்ப மரம்.
கதலி-வாழை, தேற்றுமரம், காற்றுடி, விருதுக் கொடி.
கதலிகை - துகிற்கொடி (**Flag**).
கதவம் - கதவு, காவல்.
கதழ்வு-விரைவு, சிறப்பு, மிகுதி.
கதி - நடை, வேகம், தேவ கதி முதலிய நாற்கதி, மோட்சம், செல்லுதல், வழி, நிலை, உபாயம், அறிவு, அடைதல்.
கதிர் - சூரிய கிரணம், ஒளி.
கதுப்பு - பெண்மயிர், ஆண்மயிர், தாடை (**Jaw**).
கதுமெனல் - விரைதல்.
கதை - தண்டாயுதம், சொல், பொய் வார்த்தை, காரணம், சரித்திரம்.
கந்தம் - இந்திரியம், பங்கிடல், கழுத்தடி, கிழங்கு, மணம், கருணைக் கிழங்கு.
கந்தரம் - மேகம், கழுத்து, மலைக் குகை.
கந்தருவம் - இராகம், குதிரை, தலைவனுந் தலைவியும் தாமே மணத்தல்.
கந்தழி - பரப்பிரமம்.
கந்தன் - அருகன், முருகக் கடவுள்.
கந்து - வண்டி இருசு, தூண், சந்து, பற்றுக் கோடு.
கந்துகம் - குதிரை, பந்து.
கப்பணம் - இரும்பாற் செய்த நெருஞ்சில் முள், கை வேல்.
கப்பம் - அரசர்கொடுக்கும் இறை (**Tribute**).
கப்பு - பிளவு.
கபாடம் - கதவு.
கபாலம்-மண்டையோடு (**Skull**).
கபாலி - சிவ பெருமான், வைரவன்.
கபிஞ்சலம் - காடை.
கபிலம் - புகர் நிறம், கரிக் குருவி.
கபிலை - பசு, காம தேனு.
கபோதம் - புறா, பறவை.
கபோதி - குருடன், பெண்புறா.
கபோலம் - கதுப்பு (**Jaw**).
கம் - தலை, ஆகாயம், மேகம், காற்று, நீர், பிரமன், வெண்மை.
கம்பம் - நடுக்கம், தூண், விளக்குத் தண்டு.
கம்ப மா - யானை.
கம்பலை - பயம், ஒலி, நடுக்கம், துன்பம்.
கம்பிதம் - துன்பம், நடுக்கம்.
கம்பீரம் - ஆழம், தாமரை, செருக்கு.
கம்பு-ஒருதானியம், கம்பம், சங்கு, யானை கட்டுந் தூண்.
கம்புள் - சம்பங்கோழி, சங்கு.
கம்மியர் - தொழிலாளர், கம்மாளர்.
கமடம் - ஆமை, முனிவர் நீர்ப் பாத்திரம்.

கமண்டலம்-பிரமசாரிகளும் முனிவரும் வைத்திருக்கும் ஒரு வகை நீர்ப் பாத்திரம்.
கமம் - நிறைவு.
கமலம் - நீர், தாமரை.
கமலை - இலக்குமி.
கமழ்தல்-பரிமளித்தல், தோன்றுதல்.
கமனம் - கதி, செல்லுதல்.
கமை - பொறுமை, பூமி.
கயம் - மென்மை, குளம், ஆழம், யானை, கீழ்மை, பெருமை, தேய்வு, காச நோய் (Consumption), அழிவு.
கய முனி - யானைக் கன்று.
கயவர் - கீழோர்.
கயவாய் - கரிக்குருவி, கழிமுகம், பெருவாய், எருமை.
கயவு-கீழ்மை, பெருமை, மென்மை.
கயிரவம் - வெள்ளாம்பல்.
கயில்-கழுத்து, ஆபரணக்கடைப் புணர்வு.
கயினி - விதவை, அத்த நட்சத்திரம்.
கயை - ஒரு புண்ணிய தலம்.
கர்க்கடகம் - நண்டு.
கர்த்தபம் - கழுதை.
கரகம் - ஆலங்கட்டி, கமண்டலம், நீர்த் துளி, நீர், கங்கை.
கரடம் - யானை மதம் பாய் சுவடு, காக்கை.
கரண்டம் - நீர்க் காக்கை, ஆபரணச் செப்பு, கமண்டலம்.
கரணம் - எண், திரிகரணம், கூத்து விகற்பம், காதலர் கூட்டம், காரணம், செயல், உடம்பு
கரந்தை - அரசர் தம் பகைவர் கவர்ந்த பசுக்கூட்டத்தை மீட்கும் போது அணியும் மாலை.
கரப்பு - மறைப்பு.
கரம் - சூரிய கிரணம், கை, கழுதை, விஷம், குடியரி, யானைக்கை, செயல்.
கரம்பு - பாழ் நிலம்.
கரவீரம் - அலரி, சுடு காடு.
கரா - முதலை.
கராசலம் - யானை.
கரி - கரி (Coal), சாட்சி, யானை, மர வயிரம்.
கரிசு - குற்றம்.
கரிணி-மலைக்குகை, மலை, யானை, பெண் யானை.
கரியவன் - சனி, திருமால், இந்திரன்.
கரில் - குற்றம், உறைப்பு, கொடுமை.
கரீரம் - மிடா, அகத்திமரம், யானைப் பல்லடி, முளை.
கருடக்கொடியோன் - திருமால்.
கருணை - தயவு
கருத்து - எண்ணம்.
கருதல் - எண்ணல், குறித்தல்.
கருந்தாது - இரும்பு.
கருப்பாசயம் - கருத் தங்குமிடம் (Womb).
கருப்பு - பஞ்சம் (Famine).
கரும்பொன் - இரும்பு.
கருமம் - செயல், வெம்மை.
கருமை - பெருமை, கறுப்பு, வலிமை, கொடுமை.
கருவி-வாத்தியம், துணைக்கருவி, யாழ், கவசம், ஈட்டி, ஆயுதம், தொடர்பு, மேகம், கூட்டம், கைத்தாளம்.
கரு வுயிர்த்தல் - ஈனுதல்.
கருவூலம் - பொக்கிஷம்.
கருளன் - கருடன்.
கரேணு - யானை, பெண் யானை.

கரைதல் - அழைத்தல், சொல்லுதல், அழுதல், ஒலித்தல்.
கல் - ஒலி, மலை, கல்.
கல்லணை - குதிரைமேற் றவிசு **(Saddle).**
கல்லல் - தோண்டுதல்.
கல்லாரம் - செங்கழுநீர்ப் பூ.
கல்லி - ஊர்க்குருவி, ஆமை.
கல்லூரி - கலை பயிலிடம் (College).
கல்லை - இலைக் கலம்.
கல்லோலம் - மகிழ்ச்சி, நீரலை.
கலக்கம் - அழுகை, துன்பம்.
கலங்கரை விளக்கம் - கப்பலுக்குக் கடற் கரையை விளக்குந்தீபம் (Light House).
கலம்-கலப்பை, யாழ், ஆபரணம், கப்பல், பாத்திரம்.
கலவம் - மயில் தோகை.
கலனை - கலப்பை.
கலாநிதி - சந்திரன், கல்விச் செல்வம்.
கலாபம் - மயில் தோகை, மணி வடம், பதினாறுகோவை மணி.
கலாம் - மாறுபாடு, கொடுமை. கோபம்.
கலாய்த்தல் - கலகம் புரிதல்.
கலி - வஞ்சனை, ஒலி, கடல், கலியுகம், வலிமை, எழுச்சி, கலிப்பா என்னும் செய்யுள், தரித்திரம், கர்வம், கலகம்.
கலிகை - பூ வரும்பு.
கலிங்கம் - வானம்பாடி, சீலை, ஊர்க் குருவி, வாகை மரம்.
கலித்தல் - மிகுதி, பொலிவு, எழுச்சி, ஒலித்தல், மகிழ்தல்.
கலினம் - கடிவாளம்.
கலுழ்ச்சி - துக்கம்.
கலுழ்தல் - கலங்குதல், அழுதல்.
கலுழி-கான் யாறு, கலங்கல் நீர்.
கலை-சந்திர பகுதி, சீலை, கல்வி. நூல், கலைமான், மேகலாபாணம், சரீரம், மகரமீன், மரக்கொம்பு, சாமர்த்தியம், உறுப்பு. கால நுட்பம்.
கலைப் புரவி வீரன் - வாயு.
கலை மகள் - சரஸ்வதி.
கவ்வியம் - பசுவின் பால் முதலியவை.
கவ்வை - பழிச்சொல், வருத்தம், கள், ஒலி, எள் இளங்காய், காரியம்.
கவசம் - சட்டை, தோல்.
கவடி - பலகறை.
கவடு - மரக் கொம்பு, யானைக் கழுத்திற் கட்டுங் கயிறு, பிரிவு.
கவந்தம் - நீர், உடற் குறை.
கவயம் - காட்டுப் பசு.
கவரி - சாமரம், எருமை.
கவலை - கம்பு (Millet seed), ஒரு கொடி, கவர் வழி, துன்பம், ஒரு வகை மீன், மரக் கொம்பு.
கவற்சி - வருத்தம்.
கவனம் - கலக்கம், வெப்பம், விரைவு, போர், காடு.
கவான் - தொடை.
கவி - குரங்கு, பாட்டு, புலவன், சுக்கிரன்.
கவிகை - குடை, கொடுத்தல், கவிதல்.
கவிஞர் - புலவர்.
கவித்தல் - மூடுதல்.
கவிதை - பாட்டு, காவியம்.
கவிர் - முள் முருக்கை.
கவின் - அழகு.
கவீரம் - அலரிச் செடி.
கவுசிகம் - விளக்குத் தண்டு, ஒரு பண், பட்டுச் சீலை, கோட்டான்.

கவுடம்-ஒரு கொடி, ஒரு தேசம்.
கவுள்-கன்னம், யானைக் கன்னம் (Jaw).
கவ்வை-ஆயிலிய நட்சத்திரம், காடு, கவர்வழி, எள் இளங்காய், மரக் கப்பு.
கழகம் - கல்வி பயிலு மிடம்.
கழங்கு - வெறியாட்டு, கழற்காய்.
கழல் - கழற்காய், செருப்பு, புருடர் காலணி, கால்.
கழற்சிக்காய் - கெச்சைக் காய்.
கழறல் - சொல்லுதல்.
கழனி - வயல்.
கழி - மிகுதி, காயல், உப்பளம், கோல் (Staff).
கழிதல்-சாதல், கடத்தல், மிகுதி, பிரிதல்.
கழுது - பேய், பரண், வண்டு.
கழுந்து - கழுத்து, தேய்வு.
கழுமல் - பற்றுதல், மயக்கம்.
கழுவாய்-பிராயச்சித்தம், சுத்தம்.
கழை - மூங்கில், கரும்பு, புனர்பூச நட்சத்திரம்.
கள்-களவு, கள், பூந்தேன், வண்டு.
கள்வன் - முசு, நண்டு, யானை, கரியன், திருடன்.
களகண்டம் - அன்னம், குயில்.
களதம் - பெருச்சாளி.
களங்கம் - அழுக்கு, குற்றம்.
களத்திரம் - மனைவி.
களபம்-யானைக் கன்று, சந்தனம், கலவைச் சாந்து.
களம் - போர்க் களம், கழுத்து, களாச் செடி, நஞ்சு, கறுப்பு, மனைவி, இடம், நெற் களம், உருவம்.
களர் - கழுத்து, கூட்டம், சவர்நிலம், கறுப்பு.
களரி - போர்க் களம், காடு, தொழிற் செய்யு மிடம்.
களவு - களாச் செடி, திருட்டு.
களி - களிப்பு, குழம்பு, கர்வம், மயக்கம், களிப்புள்ளவன்.
களிப்பு-மயக்கம், இன்பம், கர்வம்.
களிறு - ஆண் யானை, அத்த நட்சத்திரம், சுறு, பன்றி.
களேவரம் - பிணம், உடம்பு.
கனைகண் - புகலிடம், காப்பவன், பற்றுக் கோடு.
கற்கி - குதிரை.
கற்பம் - தேவ வுலகம், பிரமன் வாழ் நாள், கற்பக விருட்சம்.
கற்பு - கல்வி, முல்லைக் கொடி.
கற் புழை - மலைக் குகை.
கற்று - கன்றையுடைய பசு.
கற்றை - தொகுதி.
கறங்கல் - சுழலல், ஒலித்தல்.
கறங்கு-சுழற்சி, காற்றாடி, ஒலி.
கறவை - கறக்கும் பசு.
கறி - மிளகு, கடித்தல்.
கறுத்தல் - கோபித்தல், கறுப்படைதல்.
கறுப்பு - கருமை, கோபம், கறை.
கறை-குடிவரி, இரத்தம், கறுப்பு, உரல், நஞ்சு, நிறம்.
கறை யடி - யானை.
கன்று - கை வளை, கன்று.
கன்றுதல் - கோபித்தல், வருந்தல், இரங்கல், மிகுதல், நெருங்கல், அடி படுதல்.
கன்னம் - கதுப்பு (Jaw), காது, த்ராசு, சுவர்தோண்டுங் கருவி.
கன்னல் - சர்க்கரை, கரும்பு, தரகம், நாழிகை, நாழிகைவட்டில்.
கன்னி - பெண், அழிவின்மை, கட்டிளமை, கற்றாழை, கருவிளை, கலியாணமாகாதபெண்.
கன்னிகை-தாமரைப் பொகுட்டு, பெண், யானைத்துதிக்கையின் நுனி.

கன்னி நாடு - பாண்டி நாடு.
கனகம் - பொன்.
கனம் - மேகம், பாரம், நெருக்கம், திரட்சி.
கனருசி - மின்னல்.
கனலி-நெருப்பு, சூரியன், பன்றி.
கனவட்டம் - குதிரை, பாண்டியன் குதிரை.
கனவு - உறக்கம், மயக்கம், கனா.
கனிதல் - பழுத்தல்.
கனை - நெருக்கம், ஒலி.
கனைத்தல் - இருள், ஒலித்தல்.

## கா

கா - துலாக்கோல், சோலை, காத்தல், தோட் சுமை, காவடி, கள், வருத்தம், வலிமை.
காக்கை - காத்தல், அவிட்ட நட்சத்திரம், காகம்.
காக்கைக்கொடியாள் - மூதேவி.
காக்கை பாடினியம் - ஒரு யாப்பிலக்கணம்.
காகதாலியம்-ஒரு நியாயம்: காகம் ஏறப் பனம்பழம் விழுவது போல் தற்செயலாக நிகழ்வது.
காகந்தி - காவிரிப்பூம்பட்டினம்.
காகரூடி - பன்றி.
காகலீரவம் - குயில்.
காகாரி - ஆந்தை.
காகோலன் - அண்டங் காக்கை.
காகுத்தன் - இராமபிரான்.
காகுளி-ஆசனம், மிடற்றோசை, இசை, மெத்தை.
காங்கேயன் - முருகக்கடவுள், வீடுமன்.
காங்கை - வெப்பம்.
காசம்-இருமல், ஈளைநோய், கோழை, நாணல், பொன்.
காசரம் - எருமை.
காசா - நாணல், எருமை, காயா.
காசாம்பூவண்ணன் - திருமால்.
காசினி - பூமி.
காசு - குற்றம், கோழை, இரத்தினம், சிறு காசு (a pie), பொன்.
காசை-காயாஞ்செடி, நாணற்புல், காச நோய்.
காஞ்சி-மேகலாபரணம், ஒருபண், ஒருமரம், ஓர் ஊர், மீட்டெதிரூன்றல் மாலை, நிலையாமை.
காஞ்சிரம் - எட்டி மரம்.
காட்சி-அழகு, அற்புதம், அறிவு, காணல், தோற்றம், வேடிக்கை.
காட்சியர் - அறிஞர்
காட்டு - உதாரணம், ஒளி.
காடு படு திரவியம் - காட்டிலுண்டாகும் பொருள்: அரக்கு, கருந்தினை, தேன், மயிற்பீலி, கத்தூரி (Musk).
காண்டம்-திரைச்சீலை (Screen), காடு, அம்பு, கமண்டலம், ஆபரணச் செப்பு, கோல், முடிவு, சீலை, நீர், ஆயுதம், எல்லை, குதிரை, கூட்டம், தக்ககாலம், மலை.
காண்டல் - பார்த்தல், செப்தல், தோற்றம், பெறல்.
காண்டவன் - இந்திரன்.
காணம் - கொள்ளு, செக்கு, ஒரு கண் பிராணி, பொற் காசு, ஓர் அளவு, திரவியம், நிலம்.
காணலன் - பகைவன்.
காணார் - பகைவர்.
காணி-உரிமை, நிலஅளவு, நிலம்.
காணிக்கை - தட்சிணை, பரிசு.
காணுகம் - காகம்.
காத்தல் - ஆளுதல், எதிர் பார்த்தல், காவல்புரிதல், தடுத்தல், விலக்கல்.

காத்திரம்-கனம்,உடம்பு, கோபம், யானையின் முன்னங்கால், கிரி, உறுப்பு, கூத்து, முக்கியம்.
காத்திரி - கிரி, படைக் கலம்.
காதகம் - கொலை.
காதகன் - கொலையாளி.
காதரம் - அச்சம், அமைதி, துன்பம், மறதி, விருப்பம்.
காதல் - ஆசை, கொல்லுதல், அன்பு, ஆந்தைக்குரல், தறித்தல், மகன்.
காதலன் - அன்பன், மகன், கணவன்.
காதலி - தோழி, மனைவி, மகள்.
காதிமைந்தன் - விசுவாமித்திரன்.
காதிலி - செவிடன்.
காது - கொலை, செவி (ear), ஊசித் துவாரம்.
காதுகன் - கொலையாளி, கொடியவன்.
காதுகை - கொல்லுதல்.
காதுதல்-துண்டுசெய்தல், கொல்லல், தறித்தல், நெரித்தல்.
காதை - சொல், கதை, செய்தி.
காதோலை - காதாபரணம் (ear-ring).
காந்த பட்சி - மயில்.
காந்தம் - அழகு, காந்தம் (Magnet), கந்த புராணம்.
காந்தருவம் - காந்தருவ மணம்.
காந்தல் - கோபித்தல், சுடுதல், பல்லாற் கோதல், ஒளிவிடல், வருந்தல்.
காந்தள் - கார்த்திகைப் பூ.
காந்தன் - அரசன், கடவுள், கணவன், தலைவன், சந்திரன், மன்மதன்.
காந்தாரம் - ஓர் இசை, காடு, ஐம்பத்தாறு தேசங்களிலொன்று.
காந்தாரி மைந்தன் - துரியோதனன்.
காந்தாளம் - எரிச்சல், கோபம்.
காந்தி - அழகு, வெப்பம், ஒளி, சூரியகாந்தி மலர், வைடூரியம்.
காந்திமான்-சந்திரன், மன்மதன்.
காந்தை - பெண், மனைவி.
காப்பு - காவல், கூழவு, திருநீறு, ஆடை, கங்கணம், கைப்பணி (Bangle), சிறை, தெய்வ வணக்கக் கவி, மதில்.
காபாலி - சிவ பெருமான்.
காபோதம் - புறாக் கூட்டம்.
காம்பீரம் - காம்பீரியம்.
காம்பு - மூங்கில், பூவின் காம்பு, பட்டு விகற்பம், மரக் கொம்பு, பூசனி.
காம்போதி - ஓர் இராகம்.
காம கோட்டி - பார்வதி.
காம தேவன - மன்மதன்.
காமம்-அன்பு, ஆசை, விருப்பம், இன்பம், கள், திப்பிலி.
காமர் - அழகு, ஆசை, ஒளி, பேரழகு, கருமை, காமுகர்.
காமரம் - அத்த நட்சத்திரம், அடுப்பு,இசைப்பொது,அகில், இசை, சோலைத்தரு, வண்டு.
காமன் - இந்திரன், மன்மதன், வண்டு, திப்பிலி.
காமாட்சி - பார்வதி.
காமாலை-கண்ணிலுண்டாகும் ஒரு நோய்.
காமுகன் - தூர்த்தன், மன்மதன், திருமால்.
காமுறல் - ஆசைப்படல், வேண்டல்.
காய்தல் - உலர்தல், எரிச்சலடைதல், எரித்தல், கெடுத்தல், கொல்லல், கோபித்தல், பிரகாசித்தல், வெட்டல், வெறுத்தல்.
காய்மை - பொறுமை.

காயகற்பம்-உடம்பை வலுப்படுத்தும் மருந்து.
காயத்திரி-பிரமனு மனைவியருள் ஒருத்தி, சரஸ்வதி, துர்க்கை, ஒரு மந்திரம்.
காயம் - உடல், ஆகாயம், வெண்காயம், பெருங்காயம், மிளகு, காரம், கடுகு, கோபித்தல், சுக்கு, தழும்பு, புண்.
காயா - ஒரு மரம்.
கார்-நீர், மேகம், கருமை, இருள், கார் காலம், வெள்ளாடு, அச்சம், அழகு, எலி, எரில் அமைந்த இரும்பாணி, கருங் குரங்கு, கார் நெல், குளிர்ச்சி, மழை.
கார்கோள் - இராகு, கடல், சனி.
கார்த்திகேயன் - முருகக் கடவுள்.
கார்ப்பு - உறைப்பு.
கார் மலி - கடல்.
கார்முகம்-மேகம், மூங்கில், வில்.
கார் வலயம் - கடல்.
காரண்டம் - நீர்க் காக்கை.
காரணி - பார்வதி.
கார வல்லி - பாகற் காய்.
காரன் - உரியவன், செய்வோன்.
காரா - எருமை, சிறைச் சாலை.
காராக்கிருகம் - சிறைச் சாலை.
காராடு - வெள்ளாடு.
காராளர் - சூத்திரர், பூவைசியர்.
காரி-ஒருவள்ளல், ஐயனார், நஞ்சு, சனி, வைரவக்கடவுள், காகம், இந்திரன், கரிக் குருவி, கள், வெண்காரம்.
காரிகை - அழகு, பெண், கலித்துறை, யாப்பிலக்கண நூல்.
காரியதரிசி - காரியம் பார்ப்பவன் (Secretary).
காருகர்-நெய்வோர் (Weavers), கொலையாளர், வண்ணார்.
காருணியம் - இருபை.
கால் - இடம், மரக்கால், புத்திரன், குறுந்தறி, காடு, மலர்க் காம்பு, ஊன்றுகோல், யமன், மூளை, பாதம், வாய்க்கால் (Ditch), காற்று, தேருருள், காலம், காற்பங்கு ($\frac{1}{4}$), தூண்.
கால் கோள் - தொடக்கம்.
கால் வழி - சந்ததி.
கால்வாய் - வாய்க்கால் (Ditch).
காலக் கணிதம் - சோதிடம்.
காலக் கனல் - ஊழித் தீ.
கால கரணம் - காலங் கழித்தல்.
கால காலன் - சிவ பெருமான்.
காலட்சேபம் - பிழைப்பு, நேரம் போக்கல்.
கால படர் - இயம தூதர்.
காலம் - விடியற்காலம், பொழுது.
காலன் - இயமன், சனி.
காலா - ஒரு மீன்.
காலொடுதல் - முயலுதல்.
காலாதீதன் - கடவுள்.
காலாந்தகன்-சிவபெருமான், இயமன்.
காலாயுதம் - கோழி.
காலாறு - வண்டு.
காலாறுதல் - ஓய்தல் (Rest).
காலிலி - சூரியன் தேர்ப்பாகன், பாம்பு, காற்று, மீன். [தல்.
காலுதல்-கக்குதல், வடிதல், விடு
காலூரம் - தவளை.
காலைக் கடன் - காலையில் செய்ய வேண்டிய காரியம்.
காவணம் - பந்தல், மண்டபம்.
காவதம் - காதம்.
காவலன்-அரசன், கடவுள், காவலாளி, கணவன்.
காவன் - சிலந்தி.
காவி - கருங்குவளை, காவிக் கல், கள், செங்கழுநீர்ப் பூ.

காழ் - மணிவடம், பருக்கைக் கல், மர வயிரம், விதை, உறுதி, ஒளி, குற்றம்.
காழகம் - கறுப்பு, சீலை, அச்சம்.
காழி - காளி, சீகாழி.
காழியர் - வண்ணார், உப்பு வாணிகர், அப்ப வாணிகர், பிட்டு வாணிகர்.
காழியர் கோன் - சம்பந்தமூர்த்தி சுவாமிகள்.
காள கண்டம் - குயில், மயில்.
காளம் - ஊது கொம்பு, சூலம், நஞ்சு, கறுப்பு, எட்டி மரம், பாம்பு, மேகம்.
காளாஞ்சி - எச்சிற் படிக்கம்.
காளிமை - கருமை, கறை.
காளை - எருது, கட்டிளமையுடையவன், பாலை நிலத் தலைவன்.
காறு - அளவு, கொழு.
கான் - வாசனை, காடு, பூ.
கான் முளை - புதல்வன்.
கான்றல் - இருமல், கக்கல்.
கானம் - தேர், இராகம், அறிவிலி, காடு, வானம்பாடிப் பறவை, மிகுதி.
கானல் - மலையடுத்த சோலை, கடற்கரைச் சோலை, பேய்த்தேர் (Miraz), உப்பளம், ஒளி, கடற் கரை, வெப்பம்.

## கி

கிக்கிரி - மீன் குத்திப் பறவை.
கிங்கரர் - தூதர்.
கிங்கிணி - சதங்கை, கிலுகிலுப்பை.
கிங்கிரம் - குயில், குதிரை, வண்டு.
கிங்கிரன் - மன்மதன்.
கிச்சு - நெருப்பு.
கிஞ்சித்து - சிறுமை, அற்பம்.
கிஞ்சுகம் - முருக்கமரம், சிவப்பு, மயில்.
கிட்டல் - இறுக்கல், எதிர்தல், கிடைத்தல், மருவுதல்.
கிட்டலர் - பகைவர்.
கிட்டார் - பகைவர்.
கிட்டி - தலையீற்றுப் பசு, பன்றி, தாளம், இடுக்குத் தடி.
கிட்டினர் - சுற்றத்தார்.
கிடக்கை - பூமி, படுக்கை.
கிடங்கு - அகழி, குளம்.
கிடுகிடுத்தல் - அசைதல், அஞ்சல், ஒலித்தல், நடுங்கல்.
கிடுகு - ஒரு பறை, கேடகம் (Shield).
கிடை - சடை, உவமை, நெட்டி, கிடத்தல், படுக்கை, பட்டி.
கிண்கிணி - சதங்கை, தண்டை.
கிண்டுதல் - அகழ்தல், கிளறுதல்.
கிம்புரி - முடி, தோளணி, யானைத் தந்தப் பூண்.
கிம்புருடர் - பதினெண் கணத்துள் ஒரு வகுப்பினர்.
கியாதி - பிரசித்தம், புகழ், மேன்மை.
கிரகணம் - கிரகித்தல், கிராணம் பிடித்தல்.
கிரகம் - கோள் (Planet), பிடித்தல், பேய்.
கிரகித்தல் - உணர்தல், ஏற்றல், கற்றல்.
கிரணம் - ஒளி, கதிர் (Ray).
கிரணன் - சூரியன்.
கிரமம் - ஒழுங்கு, சடங்கு, முறை.
கிரயம் - விலை.
கிராணம் - கிரகணம், மூக்கு, சிறு வட்டில்.
கிராணி - ஒரு நோய்.
கிராதன் - குறவன், வேடன்.
கிரி - பன்றி, மலை.
கிரியை - தொழில்.
கிரீடம் - முடி.

கிரீடி - அரசன், அருச்சுனன்.
கிரீடை - விளையாட்டு.
கிரீவம் - கழுத்து, தலை.
கிருகம் - வீடு.
கிருட்டி - தலையீற்றுப்பசு, பன்றி.
கிருட்டிணம் - இரும்பு, கருமை, காகம், குயில், மான், மிளகு.
கிருட்டிணன் - கண்ணன், அருச்சுனன்.
கிருடிகன் - வேளாளன்.
கிருத்திமம் - கடமை, செயல், தோல், பூதம், பொய், மாயை, வஞ்சனை.
கிருத்தியம் - தொழில்.
கிருத்திரமம் - பொய், வஞ்சனை.
கிருது - செருக்கு.
கிருபணத்துவம் - உலோபம்.
கிருபணன் - உலோபி.
கிருபாகரன் - கிருபையுடையவன்.
கிருமி - புழு.
கிரௌஞ்சம் - அன்றில்பறவை, ஒரு மலை.
கிலி - பயம்.
கிலேசம் - துன்பம், கவலை.
கிழத்தி - உரியவள், தலைவி.
கிழமை - முதுமை, உரிமை, குணம், கடமை, சம்பந்தம், நாள், பெருமை, வாரம்.
கிழவன் - உரியோன், தலைவன், முதியவன்.
கிழவி - உரியவள், தலைவி, முதியவள்.
கிழார் - தோட்டம்.
கிழி - பண்பை, எழுது படம், கிழிந்த துண்டு, கோவணம், கீற்று, சீலை.
கிள்ளி - சோழன்.
கிள்ளை - கிளி, குதிரை.
கிளத்தல் - சொல்லுதல்.
கிளர் - ஒளி, பூந்தாது.
கிளர்ச்சி - இறுமாப்பு, உற்சாகம், விருத்தி.
கிளவி - சொல்.
கிளை - ஒருபண், மூங்கில், உறவு, கிளைத்தல், இனம், ஒளி, கூட்டம்.
கிளைஞர் - உறவினர், தோழர்.
கிளைத்தல் - உண்டாதல், கிளறுதல், பெருகுதல்.
கிறி - பொய், வஞ்சனை, மாயை, வழி.
கிறுக்கல் - கீறுதல், எழுதுதல்.
கிறுகிறுத்தல் - தலை சுழற்றுதல்.
கின்னரம் - நீர் வாழ் பறவை, வீணை.

## கீ

கீச்சான் - ஒரு பறவை.
கீசகம் - குரங்கு, மூங்கில்.
கீடம் - புழு, வண்டு.
கீதம் - இராகம், வண்டு, மூங்கில்.
கீர்த்தி - புகழ்.
கீர்த்திமான் - புகழுடையோன்.
கீரம் - பால், நீர், கிளி.
கீலாலம் - இரத்தம், நீர், காடி, தேன்.
கீழ் - இடம், கீழ்ச்சாதி, கிழக்கு, கீழ்மை, கடிவாளம், கீழ்மகன், பள்ளம்.
கீழ்த்திசைப்பாலன் - இந்திரன்.
கீழ்ப்படிதல் - அடங்கிநடத்தல்.
கீழ்ப்படுத்தல் - அடக்குதல், தாழ்வுபடுத்தல்.
கீழேழுலகம் - அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம்.
கீள் - நூலால் நெய்த துண்டு.
கீன்றல் - கிழித்தல்.

## கு

கு - ஒலி, நிறம், பூமி, அற்பம், இகழ்ச்சி, தடை, பாவம், நீக்குதல், நிந்தை.
குக்கல் - நாய், இருமல்.
குக்கன் - நாய்.
குக்ஷி - வயிறு.
குக்கில் - செம்போத்து, குங்கிலியம்.
குக்குடம் - கோழி, பறவைநாகம்.
குக்குடி - பெட்டைக் கோழி, இலவு மரம்.
குக்குரன் - நாய்.
குகரம் - நிலவறை, குகை.
குகன் - முருகக் கடவுள்.
குகு - அமாவாசை.
குகுரன் - நாய்.
குகூகம் - குயில்.
குச்சு - முளை, குஞ்சம், குடில்.
குச்சை - நிந்தை.
குசம் - தருப்பைப் புல், நீர்.
குசலம்-நன்மை, மாட்சிமை, வல்லமை.
குசலர் - அறிஞர், வல்லோர்.
குசன் - செவ்வாய்.
குசுமம் - மலர்.
குசேசயம் - தாமரை.
குசை - கடிவாளம், தருப்பை.
குஞ்சம் - ஈயோட்டி, கொத்து, கூன், கோள் சொல்லுதல், நாழி, குச்சு, குறுமை.
குஞ்சரம் - மயக்கம், யானை.
குஞ்சி - ஆண் மயிர், பறவைக் குஞ்சு, குடுமி, சிரம், மயிர்.
குஞ்சிதம் - ஒருகாலைத் தூக்கி நிற்றல்.
குஞ்சு - பறவைக் குஞ்சு.
குட்டம் - குஷ்டரோகம், ஆழம், குளம்.
குட்டாரி - மலை.
குட்டன் - குட்ட ரோகி, மன்மதன், ஆட்டுக் குட்டி.
குட்டிச் சுவர் - சிறு சுவர்.
குடக்கு - மேற்கு.
குடங்கர் - குடிசை, குடம்.
குடங்கை - உள்ளங்கை.
குடத்தி - ஒரு மிருகம், முல்லை நிலப் பெண்.
குடந்தம் - குடம், கும்பகோணம், வணக்கம், திரட்சி.
குடந்தை - கும்பகோணம்.
குடம் - பட்டினம், பசு, ஒரு கூத்து, குடம் (Pot), வெல்லக் கட்டி, சருக்கரை.
குடம்பை - முட்டை, கூடு, நீர் நிலை.
குடர் - குடல்.
குடவர் - இடையர்.
குடா - வளைவு.
குடாது - மேற்கு.
குடாவடி - கரடி.
குடி - குலம், புருவம், ஊர், உடம்பு, குடிகள் (Subjects), குடும்பம்.
குடிஞை - பறவை, நதி, கோட்டான், சிறு வீடு, வீடு.
குடிரம் - குடிசை.
குடில் - உடம்பு, குடிசை.
குடிலம் - வஞ்சகம், வளைவு.
குடீரம் - குடிசை.
குடுமி - ஆண் மயிர், வெற்றி, உச்சி.
குடைதல் - துளைத்தல், தேர்ண்டல், நீராடல்.
குண்டம் - ஆழம், தாழ்வு, ஆண் குதிரை, குடுவை, பானை.
குண்டலம் - காதணி (Ear-ring), ஆகாயம்.
குண்டிகை - கமண்டலம், குடம்.

குண்டியம் - பொய்.
குண்டு - ஆழம், குழி, குளம், எடைக் கல் (Weight).
குண்டை - சட்டி, எருது.
குணக்கு - மாறுபாடு, கிழக்கு, கோணல்.
குணங்கர் - பேய்.
குண திசை - கிழக்குத் திசை.
குணம் - கயிறு, தன்மை, குடம், நாணி, சத்து, சுகம், குணம், மேன்மை.
குணுகுணம் - குணமும் குணம் இல்லாமையும்.
குணி - குணமுடையது, முடம், வில்.
குணில்-குறுந்தடி, கவண், பறை யடிக்குந் தடி.
குணுங்கர் - குயிலுவர், கீழோர், பிசாசர்.
குணுங்கு - பிசாசு.
குத்தம் - எருது, இரட்சித்தல்.
குத்தி - மண், அடக்கம், சிறு குடுவை, தடிப்பு.
குத்திரம் - கொடுமை, சணல், பொய், மலை, கபடச் செயல், வஞ்சகம்.
குதக்குதல் - அதக்குதல்.
குதட்டல் - அதக்கல், கறித்தல்.
குதபம் - எருது, தருப்பைப் புல்.
குதபன் - சூரியன், நெருப்பு.
குதர் - பிரிவு.
குதர்க்கம்-முறைகெட்ட தர்க்கம்.
குதர்ச் செல்லல் - வழி தப்புதல், விலகுதல்.
குதரம் - மலை.
குதலை - அறிவிலி, மாறுபாடு, பொருள் விளங்காச் சொல்.
குதி - குதிப்பு, முயற்சி.
குதிகொள்ளல் - குதித்தல், பெருகுதல், விளங்குதல்.
குதிர் - தானியக் கூடு.
குதுகம் - விருப்பம்.
குதுகலம் - மகிழ்ச்சி, விருப்பம்.
குதுகுலம் - மகிழ்ச்சி.
குதூகலம் - விருப்பம்.
குதை - அம்புக் குதை, முனை, பாசி, விற்குதை.
குந்தகம் - தடை.
குந்தம்-ஒரு நோய், குருந்தமரம், குதிரை, கை வேல், ஈட்டி.
குந்தமம் - பூனை.
குந்தளம் - பெண் மயிர், மயிர்க் குழற்சி, நரி நாய் பன்றி புலி மான் முசு முயல் யாளி இவற்றின் குட்டி.
குப்பம் - கிராமம், மேடு.
குப்பல் - குவியல், கூட்டம்.
குப்பாயம் - சட்டை (Coat).
குப்புறல் - கடத்தல், குதித்தல், தலைகுனிதல், பாய்தல், இறத்தல்.
குப்பை - குவியல், கூட்டம், கூளம், மேடு.
குபேரன் - வட திசைப் பாலன், சந்திரன்.
கும்பம் - குடம், கும்பராசி, யானை மத்தகம், கரகம், குவியல், நெற்றி.
கும்ப முனி - அகத்தியர்.
கும்பி - குவியல், சுடு சாம்பல், சேறு, நரகம், நெற்றி, நெருப்பு, பூமி, யானை, வயிறு, மண் பாண்டம், கும்ப ராசி.
கும்பீடு - வணக்கம்.
கும்பீரம் - முதலை.
கும்பீலம் - முதலை.
கும்மாயம் - குழம்பு, சுண்ணம்பு, ஒரு சிற்றுண்டி.
குமட்டல் - தெவிட்டல், ஒக்காளித்தல்.

குமரன் - வாலிபன், மகன், முருகக் கடவுள்.

குமரி-கற்றாழை,கன்னி,துர்க்கை, காளி, கன்னியா குமரி யாறு, மகள்.

குமித்தல் - குவித்தல்.

குமிழி - நீர்க் குமிழி (Bubble).

குமுகம் - பன்றி.

குமுதம் - அடுப்பு, ஒலி, ஆம்பல் மலர், கருப்பூரம், கூட்டம், தருப்பை, மிகுதி.

குமுறுதல் - அதிர்தல், ஒலித்தல்.

குமைத்தல் - அழித்தல், துவைத்தல்.

குமைதல் - அழிதல், புழுங்கல்.

குய் - சாம்பிராணி, தாளித்தல், நறும்புகை, புகை.

குய்யம்-மறைவு, ஆமை, பொய், வஞ்சம், ஆண்குறி, பெண்குறி.

குயம் - இளமை, அரிவாள், தருப்பை, முலை.

குய வரி - புலி.

குயவு - தேர்.

குயில் - குயிற் பறவை, (Cuckoo), வார்த்தை, மேகம், துளை, இசைக் குழல்.

குயிலல் - இழைத்தல், செய்தல், சொல்லல்.

குயிலுதல் - அழுத்தல், அழைத்தல், உண்டாக்கல், உயர்தல், ஒலித்தல், கட்டல், செய்தல், சொல்லுதல், துளைத்தல், தைத்தல், நெருங்கல்.

குயிற்றல் - செய்தல், சொல்லல், பதித்தல்.

குயிறல்-நெருங்கல், அழைத்தல், துளைத்தல், செய்தல்.

குயின் - மேகம்.

குரகதம் - குதிரை.

குரண்டம் - கொக்கு.

குரத்தி - தலைவி.

குரம் - ஒலி, குளம்பு (Hoof), தருப்பை, பசு.

குரம்பை - உடல், குடிசை, கூடு சிறு வீடு.

குரல் - கதிர், இறகு, பெண்மயிர், இசை, ஒலி, கொத்து.

குரவம் - ஒரு மரம், கோட்டம், நறுமணம்.

குரவர் - அரசர், ஆசிரியர், தாய் தந்தையர், மூத்தோர்.

குரவு - ஒருமரம், குருத்தன்மை, வாசனை.

குரவை - கடல், ஒரு மீன், ஒலி, ஒரு கூத்து.

குரால் - கோட்டான், பசு.

குரிசில் - ஆண்மகன், மன்னன், தலைவன், பெருமையிற்சிறந்தவன்.

குரீஇ - குருவி.

குரு - நிறம், ஒரு நோய், ஒரு தேசம், ஆசிரியர், பாரம், வியாழன், பெருமை.

குருகு - பறவைப் பொது, இளமை, நாரை, கொல்லன், உலைமூக்கு, கோழி, கை வளை, வெண்மை, அன்னம், குருக்கத்தி மரம், கொக்கு.

குருதி - சிவப்பு, இரத்தம், செவ்வாய்.

குருந்தம் - குருந்த மரம்.

குருளை - ஆமை, இளமை, நரி நாய் பன்றி மான் புலி மூசு முயல் யாளி இவற்றின் குட்டி.

குரூபி - அழகில்லாதவன், உருவில்லான்.

குரூரம் - கொடுமை.

குரை - ஒலி, ஓர் அசைச்சொல்.

குரைத்தல் - ஒலித்தல், குலைத்தல்.

குழை முகன் - நாய்.
குரோசம் - கூப்பிடு தூரம்.
குரோட்டம் - நரி, பன்றி.
குரோட்டு - பன்றி.
குரோதம் - கோபம், பகை.
குல்யன் - மந்திரி.
குல்லம் - முறம்.
குல்லை - துளசி, வெட்சி, கஞ்சங் குல்லை, கஞ்சா.
குல நாசகம் - ஒட்டை.
குலம் - சாதி, அரண்மனை, கூட்டம், அழகு, குடி, தேவர் கோயில், மனை, பிள்ளை.
குலவுதல் - புகழ்தல், உலாவல், சிநேகித்தல், ஒளி விடுதல், பொருந்தல்.
குலாமர் - உலோபிகள்.
குலாயம் - பறவைக் கூடு, மனை.
குலாலன் - குயவன்.
குலாலி - குயத்தி.
குலிங்கம் - ஊர்க்குருவி, காக்கை, குதிரை.
குலிசம்-இடியேறு (Thunder), வச்சிராயுதம்.
குலிரம் - நண்டு.
குலீரம் - நண்டு.
குலை - செய்கரை, கொத்து, மா முதலியவற்றின் காய்க் குலை, விற்குதை.
குலைதல் - அழிதல், ஒழுங்கு கெடுதல், கலைதல், நடுங்குதல், வருந்தல்.
குவடு - மலை, மலை யுச்சி, மரக் கொம்பு.
குவலயம் - குவளை, பூமி.
குவவு - திரட்சி, குவிதல், பெருமை, கூட்டம், பூமி.
குவாகுலம் - ஒட்டகம்.
குவால்-குவியல், கூட்டம், நீடுமு.
குவிரம் - காடு.

குவை-குப்பை, கூட்டம், மேடு.
குழகர் - வாலிபர்.
குழகு - அழகு, இளமை, குழந்தை.
குழல் - துளையுடைப் பொருள், மயிர், இசைக்குழல் (Flute).
குழவி - அம்மிக்குழவி, இளமை, பிள்ளை.
குழவு - இளமை.
குழறல் - கலத்தல், கூப்பிடல்.
குழாம் - கூட்டம்.
குழாய் - துளையுடைப்பொருள்.
குழிசி - பானை, மிடா.
குழூ - கூட்டம்.
குழுமல் - கூடுதல், முழங்குதல்.
குழூஉ - கூட்டம்.
குழூஉக்குறி - அவ்வக்கூட்டத்தினர் வழங்கும் குறிப்பு மொழி.
குழை - தளிர், ஆபரணம், குண்டலம், சேறு, ஆகாயம், காடு, காது, துளையுடைப்பொருள்.
குழைதல் - இளகல், கலங்கல், தளர்தல், வளைதல், வாடல்.
குளக் குருவி - நண்டு.
குளம் - நெற்றி, சர்க்கரை, தடாகம்.
குளவி - வண்டு, காட்டுமல்லிகை.
குளிகை - மாத்திரை (Pills).
குளிர் - மழுவாயுதம், நண்டு, தங்குதல், குளிர்ச்சி, கவண், மத்தளம், சூலம், மீனெழுங்கு.
குளீரம் - நண்டு.
குற்றல் - குற்றுதல், பறித்தல் இடித்தல்.
குற்றி - தறி.
குற்றேவல் - சிறு தொழில்.
குறங்கு - தொடை.
குறடு - பலகை, திண்ணை, ஓர் ஆயுதம், நண்டு, மரத் துண்டு, மிதிபடிக் கட்டை.

69840

குறள் - குள்ளம், சிறுமை, பேய், குறள் வெண்பா, பூதம்.
குறளன் - குள்ளன்.
குறளை - புறங் கூறல், குள்ளம், கோள் சொல்லுதல்.
குறி - அடையாளம், எண்ணம், குறி (Prophecy), சகுனம்.
குறிச்சி-ஊர், குறிஞ்சிநிலத்தூர்.
குறிஞ்சி - ஓர் இசை, ஒரு பண், குறிஞ்சிநிலம், குறிஞ்சி மரம், மலை.
குறுகல் - அணுகல், குறைதல்.
குறுகலர் - பகைவர்.
குறுகார் - பகைவர்.
குறும்பர் - கீழ் மக்கள், குறுநில மன்னர், குறும்பிடையர், கொடியர், வேடர்.
குறும்பு - குறும்புத்தன்மை, சிறுமை, பகை, பொல்லாங்கு, போர், அரண்.
குறும்பூழ் - காடை.
குறும்பொறை - மலை, காடு, குறிஞ்சி நிலத்தூர். [கள்.
குறுமாக்கள் - சிறுவர், அறிவிலி
குறு முனி - அகத்தியர்.
குறுமை - அழகு, சிறுமை, சுருக்கம், தீமை.
குறை கோள் - இரத்தல்.
குறை நேர்தல்-குறை நீக்கச் சம்மதித்தல்.
குன்றம் - மலை.
குன்றல் - குன்றுதல், அழிதல், கெடுதல்.
குன்றவர் - வேடர்.
குன்ற வில்லி - சிவபெருமான்.
குன்று - மலை, குறைதல், சதய நட்சத்திரம், சிறு மலை.
குனித்தல் - ஆடல், வளைத்தல்.
குனிவு - தாழ்வு, வளைவு.
குனை - நுனி.

## கூ

கூ - அழுக்கு, கூக்குரல், கூவுதல், பூமி.
கூகம் - ஆந்தை, கோட்டான்.
கூகை - கோட்டான்.
கூச்சம் - அச்சம், கூசுதல், நாணம்.
கூட்டம் - இனம், சங்கம், நட்பு, மிகுதி.
கூட்டாளி - தோழன்.
கூட்டு - உறவு, கலப்பு, கறிக் கூட்டு, கொள்ளை, சேர்த்தல்.
கூடகம் - வஞ்சனை.
கூட பாதம் - பாம்பு.
கூடம் - வீடு, மறைவு, கொல்லன் சம்மட்டி, மலை யுச்சி, கூட்டம், புதையல், பொய், யானைப் பந்தி, வஞ்சகம்.
கூடல்-கூடுதல், இயலல், மதுரை.
கூடலர் - பகைவர்.
கூடவற்சை - தவளை.
கூடற் கோமான் - பாண்டியன்.
கூடாங்கம் - ஆமை.
கூடார் - பகைவர்.
கூண்டுதல் - கூடுதல்.
கூத்தர் - நாடக நடிப்போர்.
கூத்தன் - உயிர், சிவபெருமான், நாடகன்.
கூதல் - குளிர்.
கூதிர்-காற்று, பனிக்காற்று, ஒரு பெரும்பொழுது.
கூதை - காற்று.
கூந்தல் - பெண்மயிர், மயிற் பீலி, குதிரைப் பிடரி மயிர், தலை, யானைக் கழுத்தின் அடிமயிர்.
கூப்பல் - குவித்தல்.
கூப்பாடு - கூப்பிடுதல்.
கூபம் - கிணறு, சிறு குழி.
கூபரி - தேர்.

கூபாரம் - கடல்.
கூம்பல் - ஒடுங்கல், குவிதல்.
கூம்பு - சேறு, தேர்க்கொடிஞ்சி, பாய்மரம் (Mast), அரும்பு.
கூர் - மிகுதி, கூர்மை, காரம், நுனி.
கூர்ச்சகன் - நெய்வோன் (Weaver).
கூர்ச்சிகை - ஊசி, எழுதுகோல், அரும்பு.
கூர்த்தல் - கூராதல், கோப மதிகரித்தல், செயல், மிகுத்தல்.
கூர்தல் - கூராதல், ஆராய்தல், செய்தல், மிகுதல், நட்பமாதல்.
கூர்மம் - ஆமை, ஒரு புராணம்.
கூரணம் - உத்தியோகம், கொடுமை, முயற்சி.
கூரல் - பறவை யிறகு, பெண் மயிர்.
கூரன் - நாய்.
கூரை - இறப்பு, சிற்றில், வீட்டின் மேற்புறம், வீடு.
கூலங்கடம் - கடல்.
கூலம் - அதிர்ஷ்டம், கரை, குரங்கு, குவியல், குளம், பசு, பண்டம், நீர்க்கரை, விலங்குவால், கடை வீதி, பாகல், வரம்பு.
கூவம் - கிணறு.
கூவல் - அழைத்தல், கிணறு, பள்ளம்.
கூவிரம் - தேர், தேர்க்கொடிஞ்சி, கூவிரப் பூ, வில்வ மரம்.
கூவிளங்கனி - வில்வப் பழம்.
கூவிளை - வில்வ மரம்.
கூழ் - உணவு, பொன், மயிர், பொருள், மாச்சாதம்.
கூழை - இறகு, பெண் மயிர், படையுறுப்பு, குள்ளம், நெல், மயில் தோகை.
கூளி - பேய், உறவு, எருது, குற்றம், பூதம், படைத் தலைவன், கூட்டம், பெருங்கழுகு, வலிமை.
கூளியர் - நண்பர், பூதகண வீரர், கொலையாளிகள், வழிப றிப்போர், வேடர், படை வீரர்.
கூற்றம் - சொல், கொடும்பகைவன், இயமன்.
கூற்று - இயமன், சொல்.
கூற்றுவன் - இயமன்.
கூறு - பிரிவு, பங்கு, பாதி.
கூறை - சீலை.
கூன் - ஆந்தை, கூனன், கோணல், நத்தை.
கூனல் - சங்கு, நத்தை, வளைவு.
கூனலங்காய் - புளியங்காய்.
கூனிரும்பு - அரிவாள்.
கூனை - வாய் சிறுத்த மிடா.

## கெ

கெக்கலித்தல் - மகிழ்தல்.
கெச்சை - சிறு சதங்கை.
கெஞ்சல் - வருந்திக் கேட்டல்.
கெடலணங்கு - மூதேவி.
கெடுகுறி - உற்பாதம்.
கெடுதலை - அழிவு.
கெண்டி - கெண்டிகை, மூக்கு வைத்த நீர்ப் பாத்திரம்.
கெண்டை - சேல்மீன், சரிகை.
கெபி - குகை, குழி.
கெவுளி - பல்லி.
கெழி - நட்பு.
கெழு - நிறம், ஒளி.
கெழுதகை - உரிமை, நட்பு.
கெழுமுதல் - கற்றல், கூடுதல், நிறைதல், பொருந்தல், முளைத்தல்.
கெழுவுதல் - மயக்கம், பற்று, நிறைதல், பெறுதல், பொருந்தல்.

## கே

**கேகயம்** - மயில், ஒரு பண், அசுணப் பறவை, கேகய தேசம்.
கேகி - மயில்.
கேசகன் - அம்பட்டன்.
கேச கீடம் - பேன்.
கேசம் - மயிர், குடுமி.
கேசரம் - மகிழ மரம், பூந்தாது, பொன், பிடர் மயிர், வண்டு.
கேசரி-அனுமன் தந்தை, ஆகாயத்தில் சஞ்சரிப்பவன், குதிரை, சிங்கம்.
கேசவன் - சிவபெருமான், திருமால்.
கேட்டுமுட்டு- கேட்பதாலுண்டாகும் குற்றம்.
கேட்டை-கேட்டை நட்சத்திரம், மூதேவி.
கேடகம்-பரிசை (Shield), வாள், பலகை, பாசறை.
கேடயம் - பரிசை (Shield).
கேண்மை - அன்பு, கண்ணோட்டம், நட்பு.
கேணி - அகழி, கிணறு, சிறுகுளம்.
கேதகம் - தாழை.
கேதம்-துன்பம், குற்றம், வீடு.
கேது - ஒருகோள், துகிற்கொடி (Flag), நோய்.
கேதுபம் - மேகம்.
கேயூரம் - தோளணி.
கேவலம் - அற்பம், தனிமை, மோட்சம், துன்பம்.
கேழ் - உவமை, ஒளி, நிறம்.
கேழல் - பன்றி.
கேள் - அன்பு, சுற்றத்தார், கணவன், நட்பு.
கேள்வன் - அன்பன், தலைவன், கணவன்.
கேள்வி - காது, கல்வி, கேட்டல், வினா.
கேளார் - பகைவர், செவிடர்.
கேனி - தென்னை.
கேளிக்கை - மகளிர் விளையாட்டு.
கேளிர் - கணவர், நண்பர், சுற்றத்தார்.

## கை

**கை**- இடம், படையுறுப்பு, அலங்காரம், கைத்தலம், சிறுமை, ஒழுக்கம், சாமர்த்தியம், செய்கை, படை, முறை.
கைக்கிளை -இராகவேறுபாடு, ஒருதலைக் காமம்.
கைக்கூலி - இலஞ்சம்(Bribery.)
கை கண்டது - தேறினது.
கை கவிந்தல் - கை யமர்த்தல்.
கை கூடுதல்- சித்தி யாதல்.
கைகொடுத்தல் - உதவிசெய்தல்.
கைங்கரியம் - பணிவிடை.
கைத்தல் - கோபித்தல், கசத்தல், வெறுத்தல்.
கைத் தாய் - செவிலித் தாய்.
கைத்து - பொன், கையி லுள்ள பொருள்.
கைதகம் - தாழம்பூ.
கைதவம் - துன்பம், பொய், வஞ்சனை.
கைதவன் - பாண்டியன், வஞ்சகன்.
கைதை - தாழை, வயல்.
கைதைச்சுரிகையன் - மன்மதன்.
கைப்பு - கசப்பு, வெறுப்பு.
கை பிடி - உறுதி.
கை புனைதல் - அலங்கரித்தல்.
கைம்பெண்-அமங்கலி(Widow).
கைம்மா - யானை.
கைம்மாறு - மறு வுதவி.
கைம்மை - அமங்கலி, சிறுமை, கைம்மை நோன்பு.

கையடை - அடைக்கலம்.
கையமைத்தல் - அமைந்திருக்கச் செய்தல்.
கையர் - அறிவிலிகள், கீழோர், திருடர்.
கையரித்தல் - சேர்த்தல்.
கையறல்-கைப்பொருள் நீங்கல், ஒழுக்கமில்லாமை, செயலொழிதல்.
கையறவு-ஒழுக்கமின்மை, உதவியின்மை, செயலொழிதல், துன்பம், தரித்திரம்.
கையறுதல் - இறத்தல், செயலொழிதல்.
கையன் - கீழ்மகன்.
கையாளி - கொடியவன்.
கையிகத்தல்-நீங்குதல், இழத்தல், முறைதவறல், கடத்தல், மிகுதல்.
கையுறை - கைக்கவசம், கைப்பொருள்.
கையை - தங்கை.
கையொப்பம் - கையெழுத்து (Signature).
கைரவம் - வெள்ளாம்பல், வஞ்சகம்.
கைரவி - சந்திரன்.
கைரியம் - நரி, பொன்.
கைவந்தவன் - தொழிலிற்பழகித் தேர்ச்சி யடைந்தவன்.
கைவலம் - கைந்நலம், மோட்சம்.
கைவினைஞர் - கம்மாளர்.

## கொ

கோக்கு - மாமரம், செந்நாய், கொக்கு, குதிரை, மூலநட்சத்திரம்.
கொங்கன் - சேரன்.
கொங்கு - கள், கொங்குநாடு, தேன், மகரந்தம், வாசனை.
கொச்சை - ஆட்டுப்பொருக்கு, இழிவு, சீர்காழி, திருந்தாத சொல், வெள்ளாடு.
கொஞ்சல் - கொஞ்சுதல், மழலைச் சொல்.
கொட்டம் - தலை, தொழுவம், பொல்லாங்கு.
கொட்டில் -கொட்டகை, தொழுவம்.
கொடி - படர்கொடி (Creeper), துகிற்கொடி (Flag), காகம், ஒழுங்கு, கயிறு.
கொடியன் - தீயன், கேது.
கொடிறு - பூச நட்சத்திரம், கதுப்பு (Jaw).
கொடுங்கை - கொடுமை, வளைந்த கை, தேர்க் கொடுங்கை.
கொடுங்கோல் - அநீதி.
கொடுஞ்சூரி - கொடியவள்.
கொடும்பாவை - மழையில்லாக் காலத்தில் வைக்கோலால் செய்து தெருக்களில் இழுக்கும் ஓர் உருவம்.
கொடுமரம் - வில்.
கொடுமை - கடுமை, குரூரம், தீமை, வளைவு.
கொடுவரி - புலி.
கொடை - ஈகை.
கொண்கன் - தலைவன், கணவன்.
கொண்டல்-மேகம், காற்று, கீழ்க் காற்று.
கொண்டவன் - கணவன்.
கொண்டியம் - புறங் கூறல்.
கொண்மூ - ஆகாயம், மேகம்.
கொணர்தல் - கொண்டுவருதல்.
கொத்தளம்-அரண், மதிலுறுப்பு.
கொதுகு - கொசுகு.
கொந்தளித்தல் - கிளம்புதல்.
கொப்பளித்தல் - உமிழ்தல், கக்குதல், கொப்புளமாதல்.

கொப்புள் - குமிழி, கொப்புளம், கொப்பூழ்.
கொப்பூழ் - உந்தி.
கொம்பர் - மரக் கொம்பு, விலங்கின் கொம்பு.
கொம்மை - அழகு, இளமை, திரட்சி, பெருமை, மார்பு, வட்டம், வலி, முலை, கும்மி கொட்டுதல்.
கொய்யுளை - குதிரை, குதிரைப் பிடர் மயிர்.
கொல் - அசைச் சொல், ஐயம், வருத்தம்.
கொல்லர் - கம்மாளர்.
கொல்லுலை - கம்மாளர் உலைக்களம்.
கொல்லை - தோட்டம், புறக்கடை, புன்செய், முல்லைநிலம்.
கொலு - அரச சபை.
கொலைஞர் - கொலையாளிகள், சண்டாளர், வேடர்.
கொலைவர் - வேடர்.
கொழித்தல் - ஆராய்தல், ஒதுக்குதல், கொப்பளித்தல், தெள்ளல்.
கொழு - கலப்பையிற்பதியும் இரும்பு, மழு.
கொழு கொம்பு - கொடிபடர் கொம்பு.
கொழுதல் - கோதல், கிழித்தல்.
கொழுந்தன் - கணவனது சகோதரன் (மைத்துனன்).
கொழுமை - அழகு, இளமை, செழுமை, கொழுப்பு, நிறம்.
கொள்கை - ஒழுக்கம், குணம், அறிவு, கருத்து, கொள்ளல், விரதம்.
கொள்ளார் - பகைவர். [விறகு.
கொள்ளி - நெருப்பு, நெருப்பு
கொள்ளை - கொள்ளை நோய், கொள்ளையிடுதல் (Looting), கவர்தல், மிகுதி, கூட்டம், [விலை.
கொளு - கருத்து.
கொளுத்தல் - அறிவு புகட்டல், எரித்தல்.
கொற்றம் - வலிமை, வெற்றி, அரசியல், எல்லை.
கொற்றவர் - அரசர், வெற்றியுடையவர்.
கொற்றவை - பார்வதி, துர்க்கை, வீர லக்குமி.
கொற்றி - துர்க்கை, பசு விளங்கன்று.
கொறி - ஆடு, செம்மறி ஆடு.
கொன் - அச்சம், பயனில்லாமை, பெருமை, காலம்.
கொன்றைக்குழல் - கொன்றைப் பழத்தாலான இசைக்குழல்.
கொன்றைசூடி - சிவபெருமான்.
கொன்றைவேந்தன் - சிவபெருமான்.
கொன்னார் - பாவிகள்.

## கோ

**கோ** - கண், பசு, நீர், திசை, வச்சிராயுதம், ஆகாயம், கிரணம், பூமி, அம்பு, சொல், தேவலோகம், அரசன், அரசியல், இரங்கல், மலை, இடி, எருது, சந்திரன், சூரியன், மேன்மை.
கோகத்தி - பசுக் கொலை.
கோகநதம் - செந்தாமரை, செவ்வல்லி.
கோகிலம் - குயில், பல்லி, உலக்கை, கலப்பை, குரங்கு.
கோகு - கழுதை, குடுமி, புயம்.
கோசம் - மதிலுறுப்பு, முட்டை, புத்தகம், பொக்கிஷம், ஆண்குறி, உறை, கருப்பை, செல்வம், நூல், அரும்பு, கவசம்.

கோசலம் - கோசல தேசம், பசு மூத்திரம்.
கோசிகம் - சாமவேதம், பட்டுச் சீலை, புடவை.
கோசிகன் - விசுவாமித்திரன்.
கோட்டம் - வளைவு, மருத நிலத்தூர், நாடு, கோயில், அழுக்காறு, அறை, சத்தம், பசுத் தொழுவம், கரை, குளம், கூட்டம், கோணல், சிறைச்சாலை, மாறுபாடு, வயல், வீணை.
கோட்டி - வாயில், கூட்டம், அழகு, சபை, துன்பம்.
கோட்டுமா - கிடா, யானை, பன்றி.
கோட்பாடு - கொள்கை.
கோடகம் - குதிரை, புதுமை, குண்டிகை.
கோடரம் - குரங்கு, குதிரை, சோலை, மரக்கொம்பு, தேர் மொட்டு, மரப் பொந்து.
கோடாரி - கோடாலி, துர்க்கை.
கோடல் - பாடங்கேட்டல், கொள்ளுதல், செங்காந்தள், வெண்காந்தள், மாறுபடுதல், தவறுதல், வளைதல்.
கோடாகோடி
கோடாநுகோடி } - அளவில்லாமை.
கோடி - ஓர் எண், புதுமை, வஸ்திரம், இளமை, தொகுதி, புதுச் சீலை, முனை.
கோடிகம் - வஸ்திரம், பூந்தட்டு, ஆபரணச்செப்பு, கெண்டிகை, தட்டு.
கோடித்தல் - ஒலித்தல், பிரார்த்தித்தல், புதுப்பித்தல், அலங்கரித்தல்.
கோடு - சங்கு, ஊதுகொம்பு, மரக்கொம்பு, விலங்கின் கொம்பு, வரம்பு, மலையுச்சி, நீர்க்கரை, அறை, கூட்டம், கொடுமை, சுழி, தவறு, பிறை, மலை, முனை, வரி, வளைவு.
கோடுதல் - கொள்ளுதல், வழி தவறுதல், வளைதல்.
கோடை - மேல்காற்று, குதிரை, வெண்காந்தள், ஒளி, சத்தம், செங்காந்தள், வெயில்.
கோண்மா - புலி முதலிய வல்லியல் விலங்குகள்.
கோணம் - வாள், குதிரை, முடுக்குத்தெரு, மூக்கு, மூலை, அங்குசம், வளைவு.
கோணல் - மாறுபாடு, கூன், வளைவு.
கோணி - சாக்கு (Bag), பன்றி.
கோணை - அழிவின்மை, கொடுமை.
கோத்திரம் - பூமி, குலம், மலை, காடு, குடை, செல்வம், தெரு.
கோதம் - குற்றம், வெறுப்பு.
கோது - குற்றம், சக்கை.
கோதை - கூந்தல், பூமாலை, காற்று, ஒழுங்கு, சேரன, பெண்.
கோபம் - சினம், தம்பலப் பூச்சி, வெறுப்பு.
கோபன் - இடையன், காப்போன்.
கோபாலன் - இடையன், கண்ணபிரான்.
கோபி - இடைச்சி, நெற்றியிலிடும் ஒருவகை மண், கோப முள்ளவன்.
கோம்பல் - முன் கோபம்.
கோம்பி - ஓந்தி, பச்சோந்தி.
கோமயம் - பசுவின் சாணம்.
கோமளம் - பசு, அழகு, இளமை, களிப்பு.
கோமாட்டி - தலைவி.
கோமாயு - நரி.
கோமாளி - விகடன்.
கோமான் - மூத்தோன், அரசன், குரு, பன்றி, பெருமையிற் சிறந்தோன்.

கோரகை - குயில், இளம்பூ வரும்பு, பிச்சைப் பாத்திரம்.
கோரம் - சோழன் குதிரை, குதிரை, வட்டில், கொடுமை, பூவரும்பு, வெம்மை.
கோரம்பர் - கழைக் கூத்தர்.
கோல் - ஈட்டி, வேல், அம்பு, எழுதுகோல், தராசு, குதிரைச்சம்மட்டி (Whip), செங்கோல், திரட்சி, யாழ் நரம்பு, அளவுகோல், இலந்தை, ஊன்றுகோல், தடி, மரக் கொம்பு.
கோலம் - அழகு, பன்றி, பாக்கு, நீர்ஓட்டம், பீர்க்கு, அலங்காரம், உருவம், குரங்கு, தெப்பம், பறவை, வேடம்.
கோலல் - கொள்ளுதல், கோலுதல்.
கோவணம் - கௌபீனம்.
கோவர் - இடையர்.
கோவலர் - இடையர்.
கோவன் - அரசன்.
கோவிந்தர் - இடையர்.
கோவிந்தன் - இந்திரன், அரசன், கண்ணபிரான், பிரமன், பிருகஸ்பதி.
கோவியர் - இடைச்சியர்.
கோவிலங்கு - சிங்கம்.
கோவை - ஒழுங்கு, ஒரு பிரபந்தம், கோத்தமாலை, கோத்தல்.
கோழி - கோழி, உறையூர்.
கோழிக் கொடியன் - முருகக் கடவுள்.
கோழியான் - முருகக் கடவுள்.
கோழி வேந்தன் - சோழன்.
கோழை - கபம், அச்சம், கூச்சம், தவறு.
கோள் - இடையூறு, நவக்கிரகம், கொலை, குறளை, வலிமை, பொய், கொள்ளுதல், இயற்கை, குலை, பாம்பு, புறங்கூறல், பெருமை, வலிமை.
கோளகை - வட்டம், மண்டலிப் பாம்பு, உருண்டை, வடிவம், வாகு வலயம்.
கோளம் - உண்டை, வட்டம்.
கோளரி - சிங்கம்.
கோளி - ஆல், அத்தி, கொள்வோன், பூவாது காய்க்கும் மரம்.
கோறல் - கொல்லுதல்.
கோன் - அரசன், இடையன், எப்பொருட்கு மிறைவன்.
கோனன் - இடையன்.

## கௌ

கௌசல்யம் - சாமர்த்தியம்.
கௌசலம் - சாமர்த்தியம், வாழ்வு. [கிரி.
கௌசிகம் - கூகை, பட்டுச் சீலை,
கௌடம் - ஒருதேசம், வஞ்சகம்.
கௌணியர் - திருஞானசம்பந்தர்.
கௌத்துவம் - துளசிமணி, மாணிக்கம், திருமால் மார்பில் அணியும் மணி.
கௌமாரம் - இளம்பருவம்.
கௌமாரி - பார்வதி.
கௌவை - ஆயிலியநட்சத்திரம், ஒலி, கலக்கம், கள், காரியம், துன்பம், பழிமொழி.
கௌளி - பல்லி.

## ச

சக்கரதரன் - சக்கரத்தைத்தரித்தவன், திருமால், பாம்பு.
சக்கரபாணி - திருமால், துர்க்கை.
சக்கரம் - பெருமை, ஒரு பறவை, பூமி, பிறப்பு, வட்ட வடிவு, தேருருளை, கடல், மலை, சக்கராயுதம், செக்கு.

சக்கரவாகம் - சக்கரவாகப்பறவை.
சக்கரன் - திருமால், இந்திரன்.
சக்கிரி - குயவன், செக்கான், அரசன், திருமால், பாம்பு, இந்திரன்.
சக்கு - கண்.
சகசம் - சுபாவம், உண்மை, உடன் பிறந்தது.
சகடம் - ஊர்க் குருவி, சக்கரம், தேர், வண்டி, சகடாசுரன்.
சகடு - சகடாசுரன், சந்தேகம், தேர், வண்டி.
சகத்திரம் - ஆயிரம்.
சகம் - உலகம், வெள்ளாடு.
சகல் - கொசுகு.
சகலம் - எல்லாம்.
சகவாசம் - குடி வாழ்தல்.
சகாயம் - துணை, மலிவு.
சகிதம் - கூடி யிருத்தல்.
சகுந்தம் - பறவைப்பொது, கழுகு.
சகுனம் - கிழங்கு, பறவையினம், சகுனம் (Omen).
சகுனி - பறவை, சகுனம் பார்ப்பவன், துரியோதனன் மாமன்.
சகோரம் - சக்கரவாகப் பறவை, பேராந்தை.
சங்கடம் - வருத்தம்.
சங்கநிதி - சங்கவடிவான செல்வம்.
சங்கம் - கணைக்கால், கூட்டம், சங்கு, புலவர், நெற்றி, ஒரெண், சீங்க நிதி, விருப்பம்.
சங்கமம் - இயங்கும் பொருள் (Moveables), கலத்தல், முகத்துவாரம் (Delta).
சங்கமர் - சிவனடியார்.
சங்கரன் - சிவ பெருமான்.
சங்கரித்தல் - அழித்தல்.
சங்கலார் - பகைவர்.
சங்கற்பம் - விருப்பம், எண்ணம், நியமம்.

சங்காரம் - அழித்தல்.
சங்கியை - எண்.
சங்கேதம் - முன்னேற்பாடு, குறிப்பு.
சங்கை - அளவு, அச்சம், சந்தேகம், பகை.
சங்கோசம் - கூச்சம்.
சச்சரவு - கலகம்.
சசகம் } - முயல்
சசம் }
சசி - கர்ப்பூரம், சந்திரன், இந்திராணி.
சசி மணாளன் - இந்திரன்.
சஞ்சரித்தல் - வாழ்தல், உலாவுதல்.
சஞ்சரீகம் - வண்டு.
சஞ்சலம் - காற்று, அசைவு துன்பம்.
சட்டகம் - உடல், படுக்கை (Bed), வடிவு.
சட்டம் - விதி (Rule), செப்பம்.
சட்டம் பிள்ளை - வகுப்பு மாணவரில் தலைவன் (Monitor).
சட்டுவம் - அகப்பை.
சட்டை - அங்கி, மதிப்பு.
சடகம் - ஊர்க் குருவி, மேதன், சாராயம், வட்டில்.
சடங்கு - காரியம்.
சடம் - உடம்பு, பொய், கொடுமை, வஞ்சம்.
சடர் - மூடர்.
சடாம் - வயிறு.
சடலம் - சரீரம்.
சடன் - மூடன், கீழ் மகன்.
சடாதரன் - இருடி, சிவ பெருமான்.
சடிதி - சீக்கிரம்.
சடிலம் - நெருங்குதல், சடை. குதிரை.
சடுதி - சீக்கிரம்.
சடுலம் - அச்சம், மின்னல் அசைவு, நடுக்கம்.

சடை - நெட்டி (Cork), வேர், மயிர், பின்னல், விழுது.
சண்டம் - உறைப்பு, எருது, கருப்பம், கொடுமை, கோபம், வலிமை, வேகம்.
சண்டன் - இயமன், பேடி, சூரியன், கொடியவன், கோபி, சிவன்.
சண்டாளன் - துரோகி, இழிஞன்.
சண்டி - கோபமுள்ளவன், காளி, துர்க்கை.
சண்டிகை - காளி, துர்க்கை.
சண்பை - சீகாழி.
சத்தகன்னியர் - எழுமாதர் பார்க்க.
சத்த குல பர்வதம் - எழுமலை பார்க்க.
சத்த சமுத்திரம் - எழ்கடல் பார்க்க.
சத்ததாது - எழுவகைத்தாது பார்க்க.
சத்த தீவு - எழு தீவு பார்க்க.
சத்தநதி - எழுவகை நதி பார்க்க.
சத்தபுரி - முத்திநகரங்கள் பார்க்க.
சத்தம் - ஒலி, எழு, இசை.
சத்த மேகம் - எழு வகை மேகம் பார்க்க.
சத்த ரிஷிகள் - எழு முனிவர் [பார்க்க.
சத்தலோகம் - பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், தரா என்னும் எழு வகை உலோகங்கள்.
சத்தி - பார்வதி, வேலாயுதம், வாந்தி, குடை, வலிமை, துகிற்கொடி (Flag), ஒற்றுமை, உபாய வழி, சூலம்.
சத்தியம் - சபதம், உண்மை.
சத்திய லோகம் - பிரமலோகம்.
சத்திரம் - குடை, அன்னசாலை, கைவிடா ஆயுதம், யாகம், அதிசயம், கத்தி.
சத்து - சாரம், உண்மை, அறிவு.
சத்துரு - பகைவன்.
சதகம் - 100 பாட்டுக் கொண்ட ஒருவகைப்பிரபந்தம்.
சதங்கை - காலணி.
சதசு - சபை.
சதம் - இலை, இறகு, நூறு, உண்மை.
சதா - எப்பொழுதும்.
சதா கதி - வாயு, சூரியன்.
சதி - மனைவி, வஞ்சனை, தாளவொத்து, அழிவு, உரோகணி, கற்புடையவள், பார்வதி.
சதித்தல் - அழித்தல்.
சதிர் - நாட்டிய சபை.
சதுக்கம் - திண்ணை, சதுரம், நான்கு தெருக்கள் கூடுமிடம்.
சறுக்கல் - வழுக்குதல்.
சதுப்பு நிலம் - சேற்று நிலம்.
சதுமுகன் - பிரமன், அருகன்.
சதுர் - சாமர்த்தியம், நான்கு.
சதுர் முகன் - சதுமுகன்.
சதுர்யுகம் - நால்வகையுகம்பார்க்க.
சதுர்வேதம் - நான்மறை பார்க்க.
சதுரங்கம் - நாற்படை பார்க்க.
சதுரப்பாடு - சமர்த்து, அறிவின் மிகுதி.
சதுரர் - அறிஞர், வலியவர்.
சதுருபாயம் - சாமம், பேதம், தானம், தண்டம் (இவை அரசர்க்குரியவை).
சதை - தசை.
சதைத்தல் - நசுக்கல், சதை பற்றல்.
சந்ததம் - எப்பொழுதும்.
சந்ததி - வரிசை, பரம்பரை, பிள்ளை.
சந்தம் - அழகு, நிறம், கவி, சந்தனம்.
சந்தர்ப்பம் - தருணம்.

சந்தன வெற்பு - பொதிய மலை.
சந்தானம் - கோத்திரம், சந்ததி, ஐந்தருவி லொன்று.
சந்தாபம் - சுடுதல்.
சந்தி - மாலைக் காலம், மூங்கில், பலதெருக்கள்கூடுமிடம், புணர்ச்சி, சேர்த்தல்.
சந்திரிகை - நிலவு.
சந்தி விக்கிரகம் - அடுத்துக் கெடுத்தல்.
சந்து - இடை, இணக்கம், சந்தனம், தூது, முடுக்குத் தெரு (Lane).
சந்துட்டி - மகிழ்ச்சி.
சந்தை - பல பொருள் விற்குமிடம்.
சந்நதம் - ஆவேசம்.
சந்நிதி - முன், சமீபம், மூலஸ்தானம்.
சப்பாணி - கைசேர்த்துக் கொட்டுதல்.
சம்பத்து - செல்வம்.
சம்பந்தம் - கலப்பு, தொடர்பு.
சம்பந்தி - ஒற்றுமையானவன்.
சம்பராரி - மன்மதன்.
சம்பவம் - உண்டாதல்.
சம்பாவனை - வெகுமானம்.
சம்பாவிதம் - சம்பவிக்கக்கூடியது.
சம்பிரதம் - சித்து.
சம்பிரதாயம் - நிலைபெற்ற வழக்கம்.
சம்பு - சூரியன், நாவல், சிவன், பிரமன், திருமால், நரி, ஒருவகைப் புல், ஒரு தீவு.
சம்புகம் - நரி.
சம்புரோட்சணம் - தெளித்தல்.
சம்பூரணம் - நிறைவு.
சம்மட்டி - குதிரையோட்டுங் கருவி (Whip).

சம்மதம் - உடன்பாடு.
சம்மேளனம் - கலப்பு.
சம்ரட்சணை - பாதுகாத்தல்.
சமதை - ஒப்பு.
சம நிலை - நடு நிலை.
சமம் - ஒப்பு, போர், பொறுமை, நடு நிலை, மோட்சம்.
சமயக் கணக்கர் - சமயவாதிகள்.
சமயம் - காலம், தருணம், மார்க்கம் (Religion).
சமர் - போர்.
சமர்த்தன் - வல்லவன்.
சமர்ப்பித்தல் - உயர்ந்தார்க்குக் கொடுத்தல்.
சமரசம் - ஒப்பு, சமாதானம்.
சமரம் - போர்.
சமழ்த்தல் - வருந்துதல், நாணுதல், தாழ்த்தல்.
சமன் - இயமன், நடு, ஒப்பு.
சமாதி - யோகம், மௌனம், பிரேதக் குழி.
சமாது - ஊமத்தை.
சமிக்கை - குறி.
சமித்தல் - கெடுதல், பொறுத்தல்.
சமிப்பு - பொறுத்தல்.
சமீரணன் - காற்று, வாயுதேவன்.
சமீரணி - வீமன்.
சமுகம் - முன்னிலை, கூட்டம்.
சமுச்சயம் - சந்தேகம், கூட்டம்.
சமுசயம் - சந்தேகம்.
சமுசாரம் - இல்வாழ்க்கை, மனைவி.
சமுதாயம் - கூட்டம், பொது.
சமூகம் - கூட்டம், முன்னிலை, சபை.
சமேதம் - உடனிருத்தல்.
சமைத்தல் - உண்டாக்கல், உணவு சமைத்தல்.
சயம் - வெற்றி, சீருக்கரை, க்ஷயரோகம்.

சயனம் - படுக்கை.
சயிந்தவம் - குதிரை, தலை, இந்துப்பு.
சர்க்கம் - சருக்கம் (படலம்), விடுதல்.
சர்வஞ்ஞர் - எல்லாமறிந்தவர் (கடவுள்).
சர்வாந்தரியாமி - எல்லாவற்றுள்ளும் நிறைந்திருப்பவர் (கடவுள்).
சரகம் - தேனீ, வண்டு.
சரசு - குளம்.
சரடு - பஞ்சி நூல்.
சரண் - அடைக்கலம், பாதம்.
சரணம் - அடைக்கலம், அரசு, பாதம், மயில், வணக்கம்.
சரணாகதி - அடைக்கலம் புகுதல்.
சரதம் - உண்மை.
சரபம் - எண்காலும் இருதலையுமுடைய பறவை, மலையாடு, ஒட்டகம், யானைக் கன்று.
சரம் - அசையும் பொருள், அம்பு, உயிர், பூமாலை, மணிவடம், நாணற்புல், [illegible].
சரமகவி - இறந்தவரைக்குறித்துப் பாடும் பாட்டு.
சரமம் - முடிவு.
சரளம் - ஒழுங்கு, தடையின்மை.
சராசரம் - இயங்கும் பொருளும் இயங்காப் பொருளுமாகிய உலகம் (சர+அசரம்.
சராசனம் - வில்.
சராவம் - அகல், சலாகை.
சரி - கைவளை, வழி, ஒப்பு, சம்மதக் குறிப்பு.
சரித் - நதி.
சரித்தல் - சஞ்சரித்தல், சரியச் செய்தல், நடத்தல்.
சரித்திரம் - இயல்பு, கதை.
சரிதம் - சரித்திரம், நடை.
சரிதை - ஒழுக்கம், கதை.
சருக்கம் - அத்தியாயம், படலம்.
சருகு - உலர்ந்த இலை.
சருமம் - தோல்.
சருவஞ்ஞத்துவம் - யாவுமறியுந் தன்மை.
சருவத்திரம் - எல்லாம்.
சருவம் - எல்லாம், வெண்கலம்.
சருவ வியாபி - கடவுள்.
சரோசனன - ஒத்த கோபமுடையோன்.
சரோருகம் - தாமரை.
சரோருகன் - பிரமன்.
சல்லாபம் - கூடிப் பேசல்.
சல்லியம் - அம்பு, இக்கட்டு, ஈட்டி, எலும்பு, கலக்கம், நஞ்சு, முட்பன்றி.
சலசம் - தாமரை.
சலசை - இலக்குமி.
சலஞ்சலம் - வலம்புரி ஆயிரம் சூழ்ந்த சங்கு.
சலதரம் - மேகம்.
சலதாரை - நீரோட்டம், மதகு, நீர்க்கால்.
சலதி, சலநிதி - கடல்.
சலபம் - விட்டில்.
சலனம் - அசைவு, கலக்கம், காற்று.
சலம் - சிராக்கோபம், நீர், பொய், அசைவு.
சலவர் - பகைவர்.
சலவை - சீதளம், ஆடை வெளுத்தல்.
சலவைக் கல் - சீதளந்தருங்கல்.
சலாகு - சலாகை.
சலாகை - ஈட்டி, அம்பு, ஊசிக் காந்தம், முட்பன்றி முள்.
சலாசயம் - நீர் நிலை.
சலித்தல் - இளைத்தல், அசைதல், குறைதல், ஒலித்தல், சல்ல

டையினூற் சலித்தல், துன்புறல்.
சலிலம் - நீர்.
சவ்வாது - ஒரு வாசனைத் திரவியம்.
சவட்டல் - அழித்தல், மெல்லல், மிதித்தல், வளைத்தல், விழுங்கல்.
சவம்-நீர், பேய், விரைவு,பிணம், மூங்கில்.
சவரம் - பொற்காசு, சாமரை, மயிர், கவரி மான, நீர்.
சவலை - மெலிவு, இளமையுள்ளது.
சவி - செவ்வை, அழகு, ஒளி, கொடி, சாமரக்கோலை. சுவை, திருவிழா, வலிமை, மிளகு.
சவித்தல்-சபித்தல் (To curse).
சவிஸ்தாரம் - விரிவு.
சவிதா - சூரியன்.
சவுதரித்தல்-சம்பாதித்தல், தாங்கல்.
சவுந்தரம் } - அழகு.
சவுந்தரியம் }
சவுரி - திருமால், கள்வன், சனி, இயமன.
சவுரியம் - களவு, வீரம்.
சவை - சபை.
சழக்கன் - நீதி தவறியவன்.
சழக்கு - அறியாமை, நீதிக்கு மாறானது, பொய்.
சள்ளை - தொந்தரவு.
சளம் - நடுக்கம், மூர்க்கம், வஞ்சனை, இழிநிலை, துன்பம்.
சளிப்பு - புளிப்பு.
சற்பனை - சூதி.
சறுக்கல் - வழுக்கல்.
சன்னல்பின்னல் - கொடிமுதலியவை ஒன்றோடொன்று பின்னியிருத்தல்.
சனம் - கூட்டம்.
சனனம் - பிறவி.
சனபதம் - நாடு.
சனித்தல் - பிறத்தல்.

## சா

சா - பேய், மரணம்.
சாக்காடு - சாதல், இழிவு.
சாக்கி - சாட்சி.
சாக்கியர் - புத்தர், சாங்கிய நாயனர்.
சாக்கிரதை - கவனிப்பு, சோர்வு இன்மை.
சாக்கிரம் - விழிப்பு, கவனிப்பு.
சாக்கு - பை, கோணி (Gunny-bag), சாட்டு, பொன.
சாகசம்-கொடுமை, ஒருபறவை, தண்டனை, துணிவு, பொய்ம்மை, பலாத்காரம்
சாகதன - வலிபவன.
சாகம் - சிறு கீரை, வெள்ளாடு, தேக்க மரம், ஆடு, இலை.
சாகரம் - தூக்கம் ஒழிதல், கடல், கவசம்.
சாகாடு - வண்டி, உருள்.
சாகா மிருகம் - அணில், குரங்கு.
சாகி - மரம்.
சாகியம் - உதவி புரிதல்.
சாகினி - சேம்பு, சிறுகீரை, வெள்ளாடு.
சாகேதம் - அயோத்தி.
சாகை - இலை, சாதல், இருப்பிடம், பிரிவு, மரக்கொம்பு, வீடு, வேத நூற் பிரிவு, வேதம்.
சாங்கம் - உறுப்பு, ஒழுங்கு, சங்கின் ஒலி.
சாங்கியம் - கணக்கிடல், யூகித்தல்.
சாசனம் - அதிகாரப் பத்திரிகை, உறுதிப் பத்திரம்.

சாசுவதம் - அசையாத நிலை.
சாட்சியம் - சாட்சி.
சாட்டாங்க நமஸ்காரம் - எட்டு அங்கங்களும் நிலத்திற்படும்படி வணங்குதல்.
சாட்டியம் - வஞ்சகம்.
சாடல் - அழித்தல்.
சாடி - சீலை, தாழி, புறங்கூறல்.
சாடை - சமிக்கை, ஒப்பு.
சாணை - சாணைக் கல்.
சாத்தன் - அருகன், ஐயன், புத்தன்.
சாத்தியம் - அநுகூலம், முடிக்கத் தக்கது.
சாத்து - அணிதல், அப்புதல்.
சாத்து கவி - நூல் செய்தோன் பெருமை முதலியவற்றை விளக்கும் பாயிரம்.
சாத்துதல் - அடித்தல், அணிதல், அப்புதல், சார்த்துதல், மூடுதல்.
சாதகம் - வானம்பாடிப் பறவை, பிறப்பு, பூதம், பேய், காரிய சித்தி, துணைக்காரணம், பயிற்சி.
சாதகன்மம்-பிள்ளை பிறந்தகாலத்தில் செய்யுங் கிரியை.
சாதம்-சோறு, உண்மை, பிறப்பு, பூதம்.
சாதர் - பிறந்தவர்.
சாதரூபம் - நால்வகைப் பொன்னில் ஒன்று.
சாதனம் - அழித்தல், அடையாளம், கருவி, செல்வம், துணைக் காரணம், பயிற்சி.
சாதி - கள், தேக்க மரம், சிறு சண்பகம், இனம், உயர்ந்தது, சாதிக் காய், பிரம்பு, பிறப்பு, மரம்.
சாதித்தல் - உறுதிப்படுத்தல், அருள் புரிதல், கொல்லுதல், செய்தல்.
சாது - அழகு, பெரியோன், சாந்தம், சற்குணம்.
சாதுரியம் - சாமர்த்தியம்.
சாந்தம் - பொறுமை, சந்தனம், குளிர்.
சாந்தாற்றி - விசிறி.
சாந்தி - ஆற்றுதல், சாந்தம், தணிவு, பிராயச்சித்தம், பூசை.
சாந்திராயணம் - ஒரு விரதம். (இது ஒரு மாதத்தில் பௌர்ணமி முதல் அமாவாசைவரை ஒவ்வொரு பிடி சோறு குறைத்தும், அமாவாசை முதல் பௌர்ணமி வரை ஒவ்வொரு பிடி அதிகம் சாப்பிட்டும் அநுஷ்டிப்பது).
சாந்து-சந்தனம், கலவைச் சாந்து.
சாபம் - சபித்தல், வில்.
சாபல்லியம் - அநித்தியம், அநுகூலம்.
சாம்பர் - சாம்பல்.
சாம்பல் - ஒடுங்குதல், பழம்பூ.
சாம்பு - பொன், பறை, நாவல் மரம்.
சாம்புதல் - சோர்தல், வாடல்.
சாம்பூநதம் - நால்வகைப் பொன்னில் ஒன்று.
சாமக்கிரியை - கருவி, உபகரணம்.
சாமம் - சாம வேதம், பச்சை, யாமம், கருமை, அரச தருமங்களில் ஒன்று, குயில், சமாதானம், பஞ்சம், நடு இரவு.
சாமளம் - பச்சை.
சாமளை - பார்வதி.
சாமி - தலைவன், தலைவி, குரு, முருகக் கடவுள், பொன்.
சாய்த்தல் - அழித்தல், சரித்தல், திருப்புதல்.
சாயகம் - அம்பு, வாள்.

சாயம்-அந்திநேரம், அம்பு, நிறம்.
சாயல் - அழகு, மென்மை, மேம்பாடு, ஒப்பு, சாய்தல், நிழல், நிறம்.
சாயை - நிழல், நிறம், பிரதி பிம்பம் (Reflection).
சார் - கூடுதல், அழகு, திண்ணை, பக்கம்.
சார்ங்கம்-திருமாலின் வில், வில்.
சார்ந்தோர் - நண்பர், உறவினர்.
சார்பிலார் - பகைவர், முனிவர்.
சார்பு - அடைக்கலம், இடம், உதவி, கூட்டுறவு, பிறப்பு.
சார்வு - இடம், பற்று, சார்தல், துணை, புகலிடம்.
சாரங்கம் - ஆபரணம், குயில், சங்கு, சாதகப் பறவை, சிங்கம், மயில், மேகம், யானை, வண்டு, திருமால் வில், வில்.
சாரணர்-ஒற்றர் (Spies), சமண முனிவர்.
சாரதி - தேர்ப் பாகன்.
சாரதை - சரஸ்வதி.
சாரல் - மலைப் பக்கம், கிட்டல், தூறல்.
சாரிகை - சுங்கவரி, சுழல்காற்று, நாகணவாய்ப்பறவை, வட்டமாயோடல்.
சாரீரம் - இன்னிசை.
சாரு - அழகு, கிளி.
சாருகன் - கொலைஞன்.
சால் - அமைதி, நீர் முதலியவை நிறைக்கும் பாத்திரம், நீர் இறைக்குஞ் சால், படைச்சால் (Furrow), மிகுதி.
சால்பு - மாட்சிமை, அமைதி, கல்வி, குணம், மேன்மை.
சாலகம்-பலகணி (Window), பூவரும்பு, உபாயம், சாக்கடை, கூட்டம், பெருமை, வலை.
சாலம் - வலை, பலகணி (Window), ஆச்சாமரம், கூட்டம், மதில், பூவரும்பு, கல்வி, சால வித்தை, தாழ்வாரம், பெருமை, வஞ்சகம்.
சாலி-நெல், கள், அருந்ததி, மிக்கோன்.
சாலிகை - கவசம்.
சாலியர்-நெய்வோர் (Weavers).
சாலுதல் - அமைதல், மிகுதல், நிறைதல்.
சாலூரம் - தவளை, மேன்மை.
சாலை - குதிரைப் பந்தி, அறச்சாலை, அரசன் மனை, பாதை (Road), பாகசாலை, கோயில்.
சாவகாசம் - சாந்தி, விரைவின்மை.
சாவித்திரி - பார்வதி, பிரமன் மனைவியருள் ஒருத்தி.
சாழல் - கரடி, பெண்கள் கைகொட்டி விளையாடும் விளையாட்டு, ஒரு வகைப் பாட்டு.
சாளரம் - பலகணி (Window.)
சாற்றல் - சொல்லுதல், பறையடித்தல்.
சாறு-குலை, கள், திருவிழா, இரசம்.
சான்றவர் - அறிஞர்.
சான்று - சாட்சி.
சான்றோன் - சூரியன், பெரியோன்.
சானகி - சீதை, மூங்கில்.
சானவி - கங்கை.
சானு - மலை, முழந்தாள், மலைச்சாரல்.

## சி

சி - சிவம்.
சிக்கம் - குடுமி, சீப்பு, உறி, உச்சி, சிறைச் சாலை, செம்பு, காரியம், பின்னம், மெலிவு.

சிக்கர் - கள்.
சிக்கல் - கிடைத்தல், சிக்குதல், இளைத்தல்.
சிக்கறுக்கி - சீப்பு.
சிக்கு - வலை, தடை, தவறு, குற்றம்.
சிக்கெனல்-விரைவுக்குறிப்பு, உரமாதல், உறுதியாதல்.
சிகண்டி - மயில், பேடி, அம்பு, சேவல், ஆண் மயில்.
சிகரம் - மலையுச்சி, அலை, தலை, துளி, மலை, உயர்வு.
சிகரி-கோபுரம், மலை, சிற்றெலி, கருநாரை.
சிகழி - குடுமி.
சிகழிகை - மயிர் முடி, மாலை, கோர்த்த மாலை, தொடுத்த மாலை, கொண்டை.
சிகா - மயில்.
சிகி - மயில், நெருப்பு, கேது, அம்பு, எருது, குதிரை, சிலம்பு, சேவல், விளக்கு, மலை.
சிகிச்சை - பரிகாரம்.
சிகை - கிரணம் (Ray), குடுமி, கொண்டை, சுவாலை, தலை, மயிற் கொண்டை, மலைமுடி.
சிங்கநாதம் - சிங்கக் கர்ச்சனை.
சிங்காசனம்-சிங்காதனம் (Throne).
சிங்காரம் - அலங்காரம்.
சிங்கி - நஞ்சு, குறத்தி, பெண் சிங்கம்.
சிச்சிரம் } - மீன் குத்திப் பறவை.
சிச்சிலி }
சிசு - குழந்தை.
சிஞ்சினி - வில் நாணி.
சிட்சித்தல்-தண்டித்தல், கற்பித்தல்.
சிட்டித்தல் - படைத்தல்.
சிட்டு - ஒரு குருவி, அற்பம்.
சிணுங்கல் - கொஞ்சுதல், மழை தூறல், மூக்கால் அழுதல்.
சித்தசன் - மன்மதன்.
சித்தப்பிரமை - பைத்தியம், மன மயக்கம்.
சித்தம் - மனம், உண்மை, மனக் கருத்து.
சித்தர் - இருடிகள்.
சித்தன் - அருகன், சித்தி பெற்றோன், சிவன், தந்திரக் காரன், முருகக் கடவுள்.
சித்தாந்தம் - முடிந்த முடிபு.
சித்தி-அறிவு, கை கூடுதல், முடிதல், மோட்சம்.
சித்தித்தல் - கை கூடுதல்.
சித்திர குத்தன் - இயமன் கணக்கன்.
சித்திர பானு - ஒருவருடம், நெருப்பு, சூரியன்.
சித்திரம் - அழகு, ஒருகவி, அதிசயம், அலங்காரம், அற்பம், ஆகாயம், ஆமணக்கு, சித்திரித்த வடிவம், புதுமை, பொய்ம் மொழி.
சித்திரன் - சித்திரகாரன், தச்சன்.
சித்திராங்கி - தந்திரக்காரி.
சித்திரித்தல் - படம் வரைதல்.
சித்து - வெற்றி, ஞானம், மாய வித்தை, ஆன்மா.
சிதடன் - குருடன், மூடன்.
சிதடு - குருடு, அறியாமை.
சிதம் - நட்சத்திரம், ஞானம், வெண்மை, வெற்றிகொள்ளப் பட்டது, சந்தனம், வறுமை.
சிதம்பல் - பதனழிதல்.
சிதர் - உறி, துளி, வண்டு, சீலை, பூந்தாது, மழைத் தூறல்.
சிதர்தல் - சிந்தல்.

சிதல் - கறையான்.
சிதலை - கறையான், சீலைத்துணி, நோய்.
சிதவல் - குறைபட்டது, சிதறுதல், சீலைத் துணி, படுக்கை.
சிதை - பிணஞ் சுடு விறகு, கீழ்மை, அழிதல், பாய் மரம் (Mast).
சிந்தகம் - புளிய மரம்.
சிந்தூர் - பூதர். [தல்.
சிந்தல் - தெறித்தல், துண்டித்
சிந்தன் - குள்ளன்.
சிந்தனை - எண்ணம், கவலை, விருப்பம்.
சிந்தாமணி - தெய்வ மணிகளுள் ஒன்று, சீவக சிந்தாமணி என்னும் தமிழ்க் காவியம்.
சிந்தித்தல் - எண்ணுதல், ஆராய்தல், கவலைப்படல், தியானித்தல்.
சிந்து - நீர், ஆறு, கடல், முச்சீரடி, குறள், ஒரு தேசம்.
சிந்துரம் - புளியமரம், யானை, சிவப்புக் குடை, பொட்டு, சிவப்பு.
சிந்து வாரம் - கடல், வில்.
சிந்து வெம்முரசன் - மன்மதன்.
சிந்தூரம் - சிவப்பு, செங்குடை, பொட்டு, புளிய மரம், யானை.
சிப்பி - இப்பி, கிளிஞ்சில்.
சிம்புள் - எண்காற் பறவை.
சிமயம்-பொதிய மலை, மலை, மலையுச்சி.
சிமிலி - குடுமி, உறி, சிள்வண்டு, தோணி.
சிமிழ் - செப்பு.
சிமிழ்த்தல் - கட்டுதல்.
சிரகம்-கரகம், தலைச்சீரா, திவலை.
சிரஞ்சீவி - காகம், நெடுங்காலம் வாழ்பவன்.
சிரஞ்சீவிகள் - அசுவத்தாமன், மாவலி, மார்க்கண்டன், வியாசன், அநுமான், விபீஷணன், பரசிராமன்.
சிரம்-நெடுங்காலம், தலை, உயர்வு.
சிரம நிலை - யுத்தப் பயிற்சி.
சிரம்பி - நண்டு.
சிரல் - சிச்சிலிக் குருவி.
சிரவணம் - காது, கேட்டல்.
சிருட்டி - படைப்பு, சுபாவம்.
சிரேட்டம் - சிறந்தது.
சிரைத்தல் - மயிர் கழித்தல் (To shave).
சிரையன் - அம்பட்டன்.
சில்-அற்பம், சில, வட்ட வடிவமான ஓர் ஆபரணம்.
சில் பலி - சிறு பலி.
சில்லர் - வேடர்.
சில்லறை - அற்ப காரியம், சிதறின தொகை (Change).
சில்லி - வட்டம், சிறு கீரை, தேருருள், சிள்வண்டு, ஓட்டை.
சில்லிடுதல் - குளிர்தல்.
சில்லை - பிரண்டை, சிள்வண்டு, தார்த்தை, இழிவு, கிலுகிலுப்பை.
சிலதன்-வேலைக்காரன், தோழன்.
சிலதி - வேலைக்காரி, தோழி.
சிலம்பம் - படைக்கலப் பயிற்சி.
சிலம்பல் - ஒலித்தல்.
சிலம்பன் - குமரக் கடவுள்.
சிலம்பி - சிலந்திப் பூச்சி.
சிலம்பு - ஒலி, காற்சிலம்பு, மலை.
சிலவர் - சிலர், வேடர்.
சிலாக்கியம் - முக்கியம்.
சிலாசாசனம்-கல்லிற் செதுக்கப் பட்ட சாசனம்.
சிலா வருடம் - கன் மழை.
சிலிர்த்தல் - மயிர்க் குச்செறிதல் தளிர்த்தல்.

சிலீமுகம் - வண்டு, அம்பு, முலைக் கண், யுத்தம்.
சிலுப்புதல் - அசைத்தல், கலக்கல், தயிர் கடைதல்.
சிலும்பு - களிம்பு. [வரு.
சிலேடை - பலபொருள்பட வரு
சிலை - ஒலி, மலை, கல், வில், மார்கழி மாதம், மூல நட்சத்திரம்.
சிலைத்தல் - ஒலித்தல்.
சிவ கதி - மோட்சம்.
சிவ காமி - பார்வதி.
சிவணல் - அளவளாவல், கிட்டல், நட்பாடல், ஒத்திருத்தல், பொருந்தல்.
சிவப்பு-கோபம், கோபக் குறிப்பு, செந்நிறம்.
சிவம் - உயர்வு, களிப்பு, சுத்தம், நன்மை, நீர், மங்களம், மூர்த்தி, குறுணி.
சிவனி - கழுதை.
சிவாலயம் - சிவன் கோயில்.
சிவிகை-பல்லக்கு (Palanquin).
சிவிறி-விசிறி, நீர்வீசுந் துருத்தி.
சிவை - பார்வதி, மரவேர், கொல்லன் உலை மூக்கு, நரி, காளி.
சிற்குணன் - கடவுள்.
சிற்பம் - அற்பம், நுண்தொழில்.
சிற்பி - நுண் தொழில் செய்வோன்.
சிற்றாள் - ஏவலாள்.
சிற்றில் - சிறு வீடு, சிலை.
சிற்றினம் - கீழ் இனம்.
சிறகர் - இறகு.
சிறப்பு - அருமை, அலங்காரம், அழகு, உயர்வு, திருவிழா, செல்வம், மோட்சம்.
சிறார் - சிறுவர்.
சிறு கால் - தென்றற் காற்று.
சிறு காலை - இளமை, பிராதக்காலம்.

சிறுகு - தடை, துன்பம்.
சிறுகுதல் - சிறிதாதல், சுருங்குதல்.
சிறு செய் - பாத்தி.
சிறு சொல் - பழிச் சொல்.
சிறு தேர் - விளையாட்டுத் தேர்.
சிறு நீர் - மூத்திரம்.
சிறு நெறி - அரிய வழி.
சிறுபஞ்சமூலம் - கண்டங்கத்தரி, சிறுமல்லி, பெருமல்லி, சிறு வழுதுணை, நெருஞ்சி இவற்றின் வேர், ஒரு நூல்.
சிறு பான்மை - சிறு வழக்கு.
சிறு மணி - சதங்கை, ஒரு நெல்.
சிறுமி - பெண், புதல்வி.
சிறுமை-இளமை, எளிமை, அற்பம், குற்றம், கீழ்மை, தரித்திரம், துன்பம், நோய்.
சிறுவரை-அற்பம், சிறுபொழுது.
சிறுவன் - இளையவன், மகன்.
சிறுவி - பெண், மகள்.
சிறு விலை - பஞ்சம்.
சிறை-வேறிடம், பறவை யிறகு, காவல், அடிமை, ஏரி, இடம், சிறைச் சாலை, தடை, கரை, மதில்.
சிறைப்புறம்-சிறை, மறைவிடம்.
சின்மை - சிறுமை.
சின்னப்படுதல் - பங்கப்படுதல்.
சின்னபின்னம்-கண்ட துண்டம்.
சின்னம்-அற்பம், இழிவு, சங்கு, துண்டு, தட்டு, முறம், பீலி, அடையாளம்.
சினகரம் - கோயில்.
சினத்தல் - கோபித்தல்.
சினம் - கோபம்.
சினவர் - பகைவர்.
சினை - முட்டை, கருப்பம், மரக் கொம்பு, உறுப்பு, பூவரும்பு, மூங்கில்.

சினைத்தல் - சினை கொள்ளல், பருத்தல், எழுதல்.

## சீ

சீ - இகழ்ச்சிக் குறிப்பு, அடக்கம், இலக்குமி, செல்வம், மலை மகள், சிதல், பார்வதி, ஒளி, விஷம்.
சீக்கிரம் - விரைவு, அம்பு, காரம், கோபம்.
சீ கண்டன் - சிவ பெருமான்.
சீகரம் - கரகம், சாமரம், துளி, இலக்குமீகரம், தலை, அலை, மலை, மலை யுச்சி, மழை.
சீச்சி - இகழ்ச்சிக் குறிப்பு.
சீட்டு - பத்திரிகை.
சீடர் - மாணாக்கர்.
சீணித்தல் - பதனழிதல்.
சீதம்-நீர், குளிர்ச்சி, மேகம், சந்தன மரம்.
சீதரன் - திருமால்.
சீதளம் - ஈரம், குளிர்ச்சி, சந்தனம், தாமரை, முத்து.
சீதனம் - மகளுக்குக் கொடுக்கும் பொருள்.
சீதேவி - இலக்குமி.
சீதை - உழு படைச்சால் (Furrow), சீதா பிராட்டி, பார்வதி, மது.
சீந்துதல் - கோபித்தல், விரும்புதல்.
சீப்பு-தாழ்ப்பாள் (Latch), சீப்பு, (Comb), வாழைக் குலைச் சீப்பு.
சீ பதி - திருமால்.
சீமங்கலி - அம்பட்டன்.
சீமந்த புத்திரன் - தலை மகன்.
சீமாட்டி - செல்வி, தலைவி.
சீமான் - குபேரன், சிவ பிரான், செல்வன், தலைவன், திருமால்
சீமூதம் - மேகம், மலை.
சீயம் - சிங்கம்.
சீயர் - துறவிகள்.
சீயன் - திருமால், செல்வன்.
சீயான் - பெரு விஷமுள்ள ஒரு வகைப் பூரான்.
சீர் - செல்வம், தாள ஒத்து, மிகு புகழ், புகழ், பாரம், அழகு, ஒழுங்கு, சொல், தன்மை, நன்மை, பெருமை, பொன்.
சீர் கேடி - மூதேவி.
சீர்த்தல்-கோபித்தல், சிறப்படைதல்.
சீர்த்தி - மிகு புகழ்.
சீர்தூக்கல்-ஆராய்தல், ஒப்பு நோக்கல்.
சீர்படுதல் - குணப்படுதல், ஒழுங்காதல்.
சீர்மை - கீர்த்தி, சிறப்பு, நன்னடை.
சீரம் - கலப்பை, பால், எழுத்து, சீலை.
சீரா - கவசம், தலைச் சீரா.
சீராட்டல் - சிறப்புச் செய்தல், கொண்டாடல்.
சீரியது - சிறந்தது.
சீரியர்-சிறந்தவர், செல்வர், புலவர்.
சீருள் - ஈயம், செம்பு, செல்வம்.
சீரை - சீலை, மர வுரி.
சீலம் - குணம், அழகு, தண்டித்தல், சரித்திரம், சுபாவம், தருமம், நல்லொழுக்கம், பரிசுத்தம்.
சீலன் - நல்ல குணமுடையவன்.
சீலி - நல்ல குணமுடையவள்.
சீலை - வஸ்திரம் (Cloth).
சீவகர் - புத்தர்.
சீவதம் - ஆண்மை, உயிர், மயில், மேகம்.

சீவன் - உயிர், வியாழன், முயற்சி.
சீவனம் - உத்தியோகம், உயிர் வாழ்தல்.
சீவித்தல் - வாழ்தல்.
சீவினி - சஞ்சீவி.
சீழ்க்கை - வாயினால் ஊதும் ஒரு வகைச் சத்தம்.
சீற்றம் - கடுங் கோபம்.
சீறல் - அதட்டல், கோபித்தல், வேகம்.

## சு

சு - நன்மை, சுகம் முதலியவற்றைக் காட்டும் உபசர்க்கம்.
சுக்கல் - அற்பம், சிறு துண்டு.
சுக்கான் கல் - சுண்ணாம்புக் கல்.
சுக்கிரவாரம் - வெள்ளிக்கிழமை.
சுக்கிரன் - அசுரகுரு, தீ, வெள்ளி.
சுக்கிலம் - இந்திரியம், பூர்வ பட்சம், வெண்மை, வெள்ளி.
சுக்கை - நட்சத்திரம், பூ மாலை.
சுகந்தம் - கிழங்கு, சந்தனம், நறுமணம், நீலோற்பலம்.
சுகந்த மா - கஸ்தூரி மிருகம்.
சுகம் - கிளி, இன்பம், ஆரோக்கியம், நன்மை, முத்தி.
சுகி - சுக முடையவன், சுக முடையவள்.
சுகித்தல் - இன்பம் நுகர்தல்.
சுகிர்தம் - இன்பம், நன்மை, அறம், அதிர்ஷ்டம்.
சுகிர்லாபம் - பட்டைப் பெறுதல்.
சுங்கம் - வரி (Tax).
சுசி - சுத்தம், நெருப்பு, கோடைக் காலம், சந்திரன், சிவன், சுத்த முடையவன், சூரியன்.
சுசிகரம் - சுத்தம் செய்தல்.
சுசீலர் - நற்குண முடையவர்.
சுசுந்தரி - மூஞ்சூறு (Mole), கோப முடையவள்.
சுட்டல் - குறித்தல், காட்டல், மதித்தல்.
சுட்டி - நெற்றியிலணியும் ஆபரணம், துஷ்டன்.
சுட்டு - குறிப்பு, எண்ணம், நன் மதிப்பு, சுட்டெழுத்து.
சுடர் - விளக்கு, சந்திரன், சூரியன், நெருப்பு, ஒளி.
சுடரோன் - சூரியன்.
சுடலை - சுடு காடு.
சுடலை யாடி - சிவபெருமான்.
சுடிகை - முடி, உச்சி, நெற்றிச் சுட்டி, சூட்டு, தலை.
சுடு நிலம் - சுடு காடு.
சுடு மண் - செங்கல், ஓடு.
சுண்டன் - சதய நட்சத்திரம், மூஞ்சூறு (Mole), அறிவிலி.
சுண்டை - சுண்டைச் செடி, கள், கிணறு, யானைத் துதிக்கை.
சுண்ணம் - சுண்ணாம்பு, பரிமளக் கலவைப் பொடி, புழுதி.
சுணங்கல் - தாமதித்தல், மெலிதல்.
சுணங்கன் - நாய்.
சுணங்கு - தேமல், நாய், பூந்தாது, மெலிவு.
சுத்தன் - பரிசுத்தன், கடவுள்.
சுத்தி - அகல், சங்கு, சுத்தம், ஓர் ஆயுதம் (Hammer), கிளிஞ்சில்.
சுத்தி கரித்தல் - சுத்தி செய்தல்.
சுதந்தரம் - உரிமை (Freedom).
சுதன் - மகன்.
சுதன்மை - இந்திர சபை.
சுதி - சுருதி, அறிஞன், பெண், யாழின் நரம்பு.
சுதேசம் - சொந்த தேசம்.
சுதை - மகள், உதைக்காத பசு, சுண்ணச் சாந்து, அமிர்தம், கங்கை, சுண்ணாம்பு, பால்,

சுவை, பூந்தேன், பொருள், வெண்மை.
சுந்தரம் - அழகு, நன்மை, நிறம்.
சுந்தரி - துர்க்கை, அழகி, மூஞ்சூறு (Mole), இந்திராணி, பார்வதி.
சுப்பிரம் -ஒளி, சந்தனம், வெண்மை, வெள்ளி.
சுபம் - நன்மை, காற்று, தருமம், அழகு, வெண்மை.
சுபாவம் - இயல்பு.
சுபுத்தி - நற்புத்தி.
சும்மை-சுமை, நெற்போர், நாடு, ஒலி,
சுமங்கலி - மங்கலியப்பெண், பார்வதி.
சுமடு-அறிவின்மை, சுமை, சும்மாடு.
சுமத்தல் - தாங்குதல், ஏற்றல்.
சுமை - பாரம்.
சுயம்-சொந்தம், கலப்பில்லாதது.
சுயம்பாகி - சமையற்காரன்.
சுயம்பு-இயற்கை, தானே தோன்றுதல், கடவுள், பிரமன், சிவன், வேதம்.
சுயம் வரம் - ஒரு பெண் கணவனைத் தானே தேர்ந்து மணத்தல்.
சுயோதனன் - துரியோதனன்.
சுரகுரு-இந்திரன், பிருகஸ்பதி.
சுரங்கம்-ஒளிப்பிடம், கீழறை.
சுரத்தல்-உண்டாதல், ஊறுதல், நிறைதல், கொடுத்தல்.
சுரதம் - புணர்ச்சி.
சுரநதி - ஆகாய கங்கை, கங்கை.
சுரபதி - இந்திரன்.
சுரபி - பசு, பூமி, மது.
சுரம் - கள், காடு, இசை, பாலை நிலம் (Sandy-desert), வழி, அரிய வழி.
சுரர் - தேவர்.
சுரா - கள்.
சுராளம் - மிக்க வேகம்.
சுரிகை - கவசம், உடைவாள்.
சுரிமுகம்-சங்கு, நத்தை (Snail).
சுரியல் - சுரிதல், சுழித்தல், மயிர், வளைவு.
சுருக்கம் - குறைவு, தரித்திரம், கட்டு.
சுருங்கை - கள்ள வழி (Secret-way), நுழைவாயில் (Entrance), மதகு.
சுருதி - ஒலி, வேதம், இசை, காது, சுதி, மந்திரம்.
சுரும்பு - ஆண் வண்டு, வண்டு, மலை.
சுருளை - நெய்த் துடுப்பு.
சுரேசன்-இந்திரன், முருகக்கடவுள்.
சுரை - கள், பசுவின் முலை, உள்துளை, அமுதம், அம்புத்தலை, குழாய், களவு, சுரைக்கொடி, பூண்.
சுல்கம் - விலைப் பொருள்.
சுலவுதல்-சுழலுதல், சுழற்றுதல், சூழ்தல்.
சுலாவுதல் - சுற்றுதல்.
சுவடி - எழுதிய புத்தகம்.
சுவடு - அடையாளம், குறிப்பு, தழும்பு, நெல் இலக்கம், வண்டித் தடம்.
சுவணம் - கருடன், கழுகு, பொன்.
சுவர்ணம் - பொன்.
சுவல் - கழுத்து, தோள்மேல், மேடு, குதிரை மயிர், முதுகு.
சுவவு - பறவை யலகு, சுவர்க்கம், மூஞ்சூறு (Mole).
சுவறல் - உறிஞ்சல், வற்றுதல் ஊறுதல்.

சுவாகதம் - கிளி.
சுவாசம் - மூச்சு விடுதல், நல்ல வாசனை.
சுவாதந்தரியம் - சுதந்தரம்.
சுவாதம் - மூச்சு.
சுவிசேடம் - நற் செய்தி.
சுவீகரித்தல் - அங்கீகரித்தல்.
சுவேதம் - வியர்வை, வெண்மை, வெள்ளி.
சுவை - உருசி, இன்பம், இனிமை.
சுழல் - காற்றாடி, சுழற்சி, வஞ்சனை, வளைவு.
சுழற்சி - கலக்கம், சுற்றுதல்.
சுள்ளாணி - மெல்லிய ஆணி.
சுள்ளி - சிறு விறகு.
சுளகு - முறம்.
சுளிதல் - கோபித்தல்.
சுற்றத்தார் - உறவினர்.
சுற்றுதல் - கவர்தல், சுருட்டுதல், சூழ்தல், சுழற்றுதல், வஞ்சித்தல், திரிதல்.
சுற்றுப் புறம் - அயல் பக்கம்.
சுறுசுறுப்பு - சாக்கிரதை.
சுனகன் - நாய்.
சுனை - குளம், நீருள்ள இடம், நீரூற்று, மலைச் சுனை.

## சூ

சூக்குமம் - அணு, அற்பம், சூக்குமதேகம், நுட்ப அறிவு, வஞ்சகம்.
சூக்தம் - புகழப்படுவது.
சூகம் - இரக்கம், அம்பு, காற்று, தாமரை, சுனை, ஊர்வன.
சூகரம் - பன்றி, மான்.
சூசனம் - அறிவிப்பு.
சூசி - ஊசி, குறிப்பு, தருப்பை, துளை.
சூசிகை - ஊசி, குறிப்பு, யானைத் துதிக்கை.
சூட்சம் - அற்பம், தந்திரம், சுருக்கம், சூத்திரம், நுட்பம், புதுமை, யூகம்.
சூட்சி - தந்திரம்.
சூட்டல் - அணிதல்.
சூட்டு - தரித்தல், நுதலணி, மயில் முதலியவற்றின் கொண்டை, மாலை.
சூடகம் - கை வளையல், கிணறு, சடை.
சூடம் - தலை, உச்சிச் சடை.
சூடாகரணம் - குடுமி வைத்தல்.
சூடாமணி - ஒரு தெய்வ மணி.
சூடி - புடைவை.
சூடிகை - உச்சி, முடி.
சூடு - வெப்பம், மயில் முதலியவற்றின் கொண்டை, சூடுதல், உச்சிக் குடுமி.
சூத்திரம் - இயந்திரம், உபாயம், சூட்ச வேலை, பஞ்சி நூல், நூற்பா என்னும் ஒரு வகைப் பா.
சூதகம் - மரணத் தீட்டு, மகளிர் சூதகம், அசுத்தம்.
சூதம் - மா மரம், வண்டு, சூது, இரசம், பிறப்பு, மடைத் தொழில்.
சூதன் - தேர்ப் பாகன், சூதாடுவோன், சமையற்காரன், வஞ்சகன்.
சூதிகை - பிரசவ வீடு.
சூது - வஞ்சகம், சூதாடு கருவி, தாமரை, உபாயம்.
சூம்பல் - வாடுதல்.
சூர் - நோய், அச்சம், அஞ்சாமை, தெய்வப்பெண், கொடுமை.
சூர்ப்பம் - முறம்.
சூரணம் - பொடி, கருணைக்கிழங்கு.
சூரத்துவம் - வீரம்.
சூரம் - அச்சம், வீரம்.

சூரல் - பிரம்பு.
சூரன் - காடி, சேவல், சிங்கம், நாய், சூரியன், வீரன், புலவன், நெருப்பு.
சூராட்டி - தேவராட்டி.
சூல்-கருப்பம், சூலம், முட்டை.
சூல பாணி - சிவ பெருமான்.
சூலம்-ஓர் ஆயுதம், இரேவதி.
சூலி - கருப்பிணி (Pregnant-woman), காளி, சிவபிரான்.
சூலுதல் . தோண்டுதல்.
சூலை - ஒரு நோய்.
சூழ்ச்சி - ஆராய்தல், ஆலோசித்தல், உபாயம், நுண்ணறிவு.
சூழ்வோர்-உறவினர், மந்திரிகள்.
சூழல் - இடம், ஆராய்தல், கூட்டம்.
சூழி - சுனை, யானை முக படாம், உச்சி, கடல், நெற்றி.
சூள் - சத்தியம், சபதம், சாபம்.
சூறல் - தோண்டல்.
சூறன் - மூஞ்சூறு (Mole).
சூறாவளி - சுழல் காற்று.
சூறை - வழிபறித்தல், கொள்ளை (Looting), சுழல் காற்று.
சூன்றல் - தோண்டுதல்.
சூனு - பிள்ளை.

## செ

சேக்கர் - சிவப்பு, செவ்வானம்.
செகில் - தோள்.
செகுத்தல் - அழித்தல், வெல்லுதல்.
செங்கண் மால் - திருமால்.
செங்கதிர் - சூரியன்.
செங்களம் - போர்க் களம்.
செங்குத்து - நேரே நிமிர்ந்தது.
செங்குந்தர் - கைக்கோளர்.
செங்கோல் - நீதி.
செச்சை-ஆடு, சாந்தின் குழம்பு, சிவப்பு, வெட்சி.
செஞ்சாலி - செந்நெல்.
செஞ்சோறு -உரிமைச் சோறு.
செட்டி - வாணிகன், முருகக் கடவுள், வைசியன்.
செட்டு - சிக்கனம்.
செட்டை - இறகு.
செடி - பிரகாசம், நெருக்கம், தீமை, முடைநாற்றம், புதல்.
செண்டு - ஓராயுதம், பந்து, பூச்செண்டு.
செந்தமிழ் நாடு - பாண்டி நாடு.
செந்து - ஒரு நரகம், கிழ நரி, உயிர் (Creature), அணு.
செந்நீர் - இரத்தம்.
செப்பம் - நடு நிலை, வீதி, மார்பு, செவ்வை, வழி.
செப்பல் - சொல்லுதல்.
செப்பனிடுதல் - செவ்வை யாக்கல்.
செப்பு - சொல், காண்டகம்.
செம்பாதி - சரி பாதி.
செம்பியன்-சோழன், முதலெழு வள்ளல்களுள் ஒருவன்.
செம்புலம் - நல்ல பூமி, சுடுகாடு, போர்க் களம், பாலை நிலம்.
செம்புள் - பருந்து.
செம்மணி - மாணிக்கம்.
செம்மல் - பழம்பூ, சிவ பெருமான், அருகன், பெருமையிற் சிறந்தோன், மகன், அரசன்.
செம்மாத்தல் - இறுமாந்திருத்தல்.
செம்மாப்பு - இறுமாப்பு.
செம்மை - செவ்வை, சிவப்பு, அழகு, ஒழுக்கம்.
செய் - விளை நிலம், ஏவல்.
செய்கை - தொழில்.
செய்தி - இயல்பு, ஒழுக்கம், வரலாறு, செய்ந்நன்றி, தன்மை.
செய்யல் - ஒழுக்கம், காவல், சேறு, செய் தொழில்.

செய்யவள் - இலக்குமி.
செய்யவன் - சூரியன், செவ்வாய், சிவப்பன்.
செய்யா - செய்து.
செய்யா மொழி - வேதம்.
செய்யாள் - இலக்குமி.
செய்யுள் - பாட்டு, விளை நிலம்.
செய்யோள் - இலக்குமி.
செய்யோன் - சூரியன், செவ்வாய், சிவப்பன்.
செயல் - தொழில், ஒழுக்கம், காவல், சேறு.
செயிர் - கோபம், குற்றம், துன்பம்.
செயிர்த்தல் - கோபித்தல்.
செரு - போர்.
செருக்கு - ஆண்மை, கர்வம், இறுமாப்பு, ஒலி, களிப்பு, மயக்கம், கரும்பு, செல்வம்.
செருகல் - சொருகுதல்.
செருத்தல் - பசுமுதலியவற்றின் மடி.
செருநர் - பகைவர், வீரர்,
செல் - மேகம், இடி, போவென்னேவல், கறையான்.
செல்லல் - துன்பம், கெடுதல், நடத்தல், போகாதே.
செல்வன் - மகன், பணக்காரன், கடவுள்.
செல்வி - தலைவி, மகள், பணக்காரி, இலக்குமி.
செலவு - இறந்தகாலம், ஓட்டம், செல்லுதல், நீங்குதல், பயணம், வழி.
செவ்வன் } - செவ்வை.
செவ்வனம் }
செவ்வி-அழகு, காலம், பருவம், சமயம், தன்மை.
செவ்வை - செப்பம், செம்மை, சுத்தம்.
செவி - காது, கேள்வி.
செவிட்டல் - அழித்தல்.
செவிலி-வளர்த்ததாய், முன்பிறந்தவள்.
செழியன் - பாண்டியன்.
செழுமை-வளப்பம், கொழுமை, அழகு, மாட்சிமை.
செற்றம்-கோபம், பகைமை.
செற்றல் - அழித்தல், கொல்லுதல், வெறுத்தல்.
செற்றலர் - பகைவர்.
செற்றார் - கொலைஞர், பகைவர்.
செறித்தல் - அழித்தல், கொல்லல், நெருக்கல், வைத்தல்.
செறிவு - கலப்பு, அடக்கம், கூட்டம், நிறைவு, நெருக்கம்.
செறு - வயல்.
செறுத்தல் - கோபித்தல், கொல்லுதல், வெறுத்தல், அடக்கல்.
செறுதல் - அழித்தல்.
செறுநர் - பகைவர்.
சென்னல் - தேன், கெண்டைமீன்.
சென்னி - தலை, பாணன், சோழன், உச்சி.

## சே

சே - அழிஞ்சில் மரம், எருது, இடப ராசி, உயர்வு.
சேக்கை - விலங்கின் படுக்கை, மனிதர் படுக்கை, பறவைக் கூண்டு, கட்டில், கற்கடக இராசி, நண்டு, சிவத்தல், தங்குமிடம், வலை, முலை.
சேகரம் - தலை, மாமரம், அழகு, கூட்டம், சம்பாதித்தல், முடி.
சேகரித்தல் - சம்பாதித்தல், கூட்டல்.
சேகு - திடம், தழும்பு, பகை, மரவயிரம்.

சேங்கன்று - இளவெருது.
சேட்சி - தூரம்.
சேட்டம் - அழகு, செழிப்பு, திறம், முதன்மை, மேன்மை, ஆனி மாதம்.
சேட்டன் - தமையன்.
சேட்டை - அக்காள், அசைவு, குணங் கெட்ட செய்கை, தொந்தரவு, முறம், மூதேவி.
சேடகம் - கேடகம் (Shield).
சேடம் - அழித்தல், அடிமை, குறை, எச்சில், மேன்மை.
சேடன் - ஒரு சாதியான், தோழன், ஆதிசேடன், அடிமை, இளையவன்.
சேடி - வித்தியாதரர் உலகம், தோழி, அழகுள்ளவள், அடிமைப்பெண், இடையர்தெரு, இளையவள்.
சேடு - பெருமை, நன்மை, திரட்சி, அழகு, ஆகாயம், இளமை, சவுக்கு.
சேடை - அட்சதை யரிசி.
சேண் - அகலம், நீளம், உயரம், ஆகாயம், தூரம், தேவருலகம், நெடும்பொழுது.
சேணம் - மெத்தை, கல்லணை.
சேணி - ஏணி, வித்தியாதர உலகம்.
சேணியர் - துணி நெய்வோர்.
சேத்தல் - சிவத்தல், தங்கல், உறங்கல்.
சேதகம் - சேறு, சிவப்பு.
சேதம் - கேடு, நஷ்டம், வெட்டல்.
சேதனம் - அசையும் பொருள், அறிவு, அறிவுள்ளது, துணித்தல்.
சேதா - சிவப்புப் பசு, பசு.
சேதாம்பல் - செவ்வல்லி.
சேதித்தல் - துணித்தல், அழித்தல்.
சேது - செய்கரை, சிவப்பு.
சேந்தன் - குமாரக் கடவுள்.
சேமம் - காவல், இன்பம், சிறைச்சாலை, புதைபொருள், தஞ்சம்.
சேமித்தல் - காத்து வைத்தல்.
சேய் - முருகக் கடவுள், இளமை, தூரம், சிவப்பு, நீளம், மகன், செவ்வாய், குழந்தை.
சேய்மை - தூரம், நீளம்.
சேர்க்கை - நட்பு, புணர்ச்சி.
சேரலன் - சேரன், பகைவன்.
சேரலார் - பகைவர்.
சேரி - ஊர்.
சேல் - கயல் மீன்.
சேலை - புடவை.
சேவகம் - வீரம், யானை யுறங்குமிடம், தூக்கம், சேவகத் தொழில்.
சேவகன் - தலைவன், வேலைக்காரன், வீரன்.
சேவல் - காவல், சேறு, கோழியின் ஆண், மயில் ஒழிந்த பறவையின் ஆண்.
சேவற்கொடியோன் - முருகக் கடவுள்.
சேவித்தல் - ஊழியம் செய்தல், தரிசித்தல், வணங்குதல்.
சேவை - ஊழியம், வணக்கம்.
சேறல் - செல்லுதல்.
சேறு - சேறு (Mud), சாரம், இனிமை, திருவிழா, கள், குழம்பு, தேன்.
சேனாதிபன் - படைத்தலைவன்.
சேனாபதி - படைத் தலைவன்.
சேனை - ஆயுதம், கடைத்தெரு, படை (Army), கூட்டம், மிகுதி.

## சை

சை - இகழ்ச்சிப் பொருள் குறிக்கும் இடைச் சொல்.
சைகை - கண்சமிக்கை, சாடை.
சைந்தவம்-குதிரை, தலை, சிந்துநதி.
சையம் - கல், குடகுமலை, செல்வம், மலை.
சையோகம் - கலத்தல், புணர்ச்சி.
சைரிபம் - எருமை.
சைலம் - சேலை, மலை.
சைவம் - ஒரு புராணம், சைவ சமயம்.
சைவலம் - பாசி.

## சொ

சொக்கட்டான்-ஒருவகைச் சூது.
சொக்கம் - அழகு, களவு, பரிசுத்தம், நன்மை, மேன்மை.
சொக்கு - அழகு. பொன், மயக்கம்.
சொட்டு - குட்டு, குற்றம், துளி.
சொப்பனம் - கனு.
சொர்க்கம் - தேவலோகம்.
சொர்ணம் - பொன்.
சொரிதரல் - பொழிதல், சுழலல்
சொரிதல் - சிந்துதல், கொட்டுதல், உதிர்தல், பொழிதல்.
சொருகல் - செருகுதல்.
சொரூபம் - அழகு, உடம்பு, சாயல், விக்கிரகம், வடிவம்.
சொல் - வார்த்தை, புகழ், நெல், சொல்விளம்பி - கள். (கள்.
சொலித்தல் - பிரகாசித்தல்.
சொள்ளை - குற்றம், பழுதுபட்டது.
சொற்பம் - அற்பம்.
சொற்றல் - சொல்லுதல்.
சொறி - சொறிசிரங்கு, தினவு.
சொன் மாலை - புகழ்ந்து பாடும் கவி மாலை.
சொன்றி - சோறு, சுக்கு.
சொன்னகாரர் - தட்டார்.
சொன்னம் - பொன்.

## சோ

சோ - மதில், பார்வதி.
சோகம் - திரள், ஒட்டகம், சோம்பல், துன்பம்.
சோகாத்தல் - துன்ப மடைதல், வாடுதல்.
சோகாப்பு - துன்பம்.
சோகித்தல் - துன்பமடைதல்.
சோடச கலை - பதினாறு கலை.
சோடசம் - பதினாறு.
சோடசோபசாரம் - பதினாறு வகை யுபசாரம்: தாம்பூல மளித்தல், அமுதம் ஏந்தல், வாய் கொப்பளிக்க நீர் தரல், ஆடை சாத்தல், கருப்பூர தீபம் ஏந்துதல், கால்கழுவ நீர் தரல், கை கழுவ நீர் தரல், ஆசன மளித்தல், சந்தனம் பூசல், நறும்புகை காட்டல், நீராட்டுதல், மஞ்ச ளரிசி தூவுதல், மந்திர மலரால் அருச்சித்தல், பூச்சாத்தல், முப்புரி நூல் தரல், விளக்கேற்றல்.
சோடித்தல் - அலங்கரித்தல்.
சோணம் - இரத்தம், சிவப்பு, கடல், செந்தூரம், தீ.
சோணாடு - சோழ நாடு.
சோதரன் - சகோதரன்.
சோதரி, சோதரை } - சகோதரி.
சோதனை - ஆராய்ச்சி.
சோதி-திருமால், அருச்சுனன், சூரியன், ஒளி, விளக்கு, சிவன், கருப்பூரம். ஒரு நட்சத்திரம்,

சோதிடர் - சோசியர் (Astrologers).
சோதித்தல் - ஆராய்தல், பரீட்சித்தல்.
சோபம் - ஆட்டம், அழகு, சோர்வு, இரக்கம், கள்.
சோபனம் - அழகு, சகுனம், களிப்பு, வாழ்த்து, சுபம்.
சோபித்தல்-ஒளி செய்தல், அழகாதல், கலத்தல், சோர்தல்.
சோபிதம் - அழகு.
சோபை - அழகு, ஒளி.
சோமகர் - பாஞ்சாலர்.
சோம சேகரன - சிவன்.
சோமவாரம்-திங்கட் கிழமை.
சோமன்-ஒருவள்ளல், சந்திரன், கருப்பூரம், காற்று, குபேரன், சிவன்.
சோமேசன் - சிவன்.
சோர்தல் - அழிதல், சொரிதல், தவறுதல், தளர்தல்.
சோர்வு - அழிதல், களவு, தவறு, தளர்ச்சி, மறதி, மெலிவு.
சோரத்துவம் - திருட்டுத்தனம்.
சோரம் - களவு, வஞ்சனை, விபசாரம்.
சோரன் - திருடன், ஆட்டுக் குட்டி.
சோரி - இரத்தம், மழை.
சோலை - பூந்தோட்டம்.
சோனகர் - யவனர், துலுக்கர்.
சோனை - விடா மழை, திருவோண நட்சத்திரம்.

## சௌ

சௌசம் - சுத்தம்.
சௌந்தரம் - அழகு.
சௌபாக்கியம் - மிக்க செல்வம்.
சௌரகன் - அம்பட்டன்.
சௌரி - கருடன், கன்னன், காளிந்தி, திருமால், துர்க்கை, இயமன், சனி.
சௌரியம் - வீரம், களவு.
சௌளம் - மயிர்களைதல், குடுமி வைத்தல்.

## ஞ

ஞண்டு - நண்டு.
ஞமலி - கள், நாய், மயில்.
ஞமன் - யமன்.
ஞயம் - நயம்.
ஞரலுதல் - ஒலித்தல்.

## ஞா

ஞாங்கர் - வேலாயுதம், பக்கம், மேல், முன்பு, இடம், கரை.
ஞாஞ்சில்-கலப்பை, மதிலுறுப்பு.
ஞாட்பு - யுத்தம், கனம், கூட்டம், வலிமை.
ஞாண் - கயிறு.
ஞாதியர் - பங்காளிகள்.
ஞாயர் - தாய்மார்.
ஞாயிறு - சூரியன.
ஞாலம் - உலகம்.
ஞாழல் - குங்கும மரம், மரவயிரம்.
ஞாளி - நாய், கள்.
ஞாற்சி - தொங்குதல்.
ஞான்று - காலம்.
ஞானம் - அறிவு, கல்வி, தத்துவ நூல்.

## ஞி

ஞிமிர்தல் - ஒலித்தல், நிமிருதல்.
ஞிமிறு - தேனீ, வண்டு.

## ஞெ

ஞெகிழ்தல் - அலைதல், கழலுதல், வாடல், மலர்தல்.

ஞெகிழி - கொள்ளிக் கட்டை, சிலம்பு, தீ, விறகு.
ஞெண்டு - நண்டு.
ஞெமிர்தல் - நெரிதல், முரிதல், பரத்தல்.
ஞெமுங்கல் - அழுந்தல்.
ஞெரேலெனல்-அச்சக் குறிப்பு, விரைவுக் குறிப்பு.
ஞெலுவன் - தோழன்.
ஞெள்ளல் - பள்ளம், மேன்மை, நீண்ட தெரு, விரைவுக் குறி.

## ஞொ

ஞொள்கல் - சோம்பல், இளைத்தல், அச்சக்குறிப்பு, அலைதல்.

## த

தக்கது - தகுதியானது.
தக்கார் - அறிஞர், பந்துக்கள், பெரியோர்.
தக்கிணம் - தெற்கு.
தக்கிணை - தட்சிணை.
தகடு - இலை, தகட்டு வடிவு, இதழ்.
தகதகெனல் - பிரகாசித்தல்.
தகமை - குணம்.
தகர் - துண்டு, பூமி, ஆடு, யானை, யாளி.
தகர்த்தல் - அடித்தல், உடைத்தல்.
தகரம் - ஈயம், தகர மரம், மயிர்ச் சாந்து.
தகல் - தகுதல், தடுத்தல்.
தகவிலர் - நடுவுநிலைமையில்லார்.
தகவு - அறிவு, உரிமை, ஒழுக்கம், உவமை, குணம், தகுதி, நடுவு நிலைமை, நன்மை, நீதி.
தகழி - அகல்.
தகித்தல் - சுடுதல்.
தகுவர் - அசுரர்.
தகை - அழகு, குணம், அன்பு, பெருமை, சிறப்பு, தடை.
தகைதல் - தடுத்தல், கட்டளையிடல், விரிதல், இளைத்தல்.
தகைமை-அழகு,ஒழுங்கு, தகுதி, குணம், பெருமை.
தச்சன் - சித்திரை நட்சத்திரம், தச்சன் (Carpenter).
தசம் - பத்து, பல்லக்கு.
தசாவதாரம் - திருமாலின் பத்து அவதாரங்கள்: மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கற்கி.
தசும்பு - குடம், மிடா, பொன்.
தசை - மாமிசம், நிலைமை.
தஞ்சம்-எளிமை, பற்றுக்கோடு, துணை, பெருமை, அடைக்கலம்.
தட்சணம் - தெற்கு, உடனே, வலப்பக்கம்.
தட்சணை - காணிக்கை.
தட்சிணம் - தட்சணம்.
தட்டல் - தடுத்தல், கிட்டுதல், அபகரித்தல்.
தட்டு - தேர்நடு, குற்றம், முறம், தடை, தகடு, தோற் பலகை.
தட்டை - மூங்கில், தினைத்தாள், கிளியோட்டுங்கோல், மொட்டை.
தட்பம் - குளிர்ச்சி, அன்பு.
தடம் - மலை, பெருமை, வளைவு, வழி, நீர்க்கரை, அகலம், குளம், விசாலம்,
தடவரல்-தடவுதல், யாழ் வாசித்தல்.
தடறு - ஆயுத உறை.
தடா - பானை, மிடா.
தடாகம் - குளம்.

தடி - வயல், உலக்கை, வில், தண்டாயுதம், மின்னல், தசை, உடம்பு, அளவுகோல், ஆற்றங்கரை.
தடித்து - மின்னல்.
தடிதல்-அறுத்தல், குறைத்தல், வெட்டுதல்.
தடுமாற்றம் - கலக்கம், மயக்கம், தவறுதல், சந்தேகம்.
தண் - அருள், நீர், குளிர்.
தண்டம் - யானை செல்லும் வழி, தண்டாயுதம், குடைக்காம்பு, தண்டனை, உலக்கை, தடி.
தண்டல் - கெடுதல், சேகரித்தல், எதிர்த்தல், தடை.
தண்டலை - சோலை, பூந்தோட்டம், ஓர் ஊர்.
தண்டன்-அரசன், இயமன், குயவன், வணக்கம்.
தண்டிகை - பல்லக்கு.
தண்டு - குழாய், வீணை, தடி, சேனை, மிதுன ராசி, ஓந்தி, பல்லக்கு, தண்டாயுதம்.
தண்டுலம் - அரிசி.
தண்டை - பெண்கள் காலணி.
தண்ணடை-மருதநிலத்தூர், நாடு, பச்சிலை.
தண்ணம்-ஒருகட் பறை, மழுவாயுதம், காடு, குளிர்.
தண்ணவன் - சந்திரன்.
தண்ணளி - கிருபை.
தண்ணுமை - உடுக்கை, மத்தளம்.
தண்மை-குளிர்ச்சி, தாழ்வு, இன்பம், சாந்தம், கிருபை, மென்மை.
தணத்தல் - நீங்கல், செல்லுதல்.
தத்தல் - தாண்டுதல்.
தத்தளித்தல் - தடுமாறுதல்.
தத்து - ஆபத்து, சுவிகாரம்.
தத்துவம் - உண்மை, அதிகாரம், இயற்கை, வலிமை.
தத்தை-அக்காள், கிளி.
ததி - சமயம் (Time), கூட்டம், தயிர்.
ததும்பல் - அசைதல், நிறைதல், வழிதல்.
தந்தம் - பல், யானைத் தந்தம்.
தந்தவள் - தாய்.
தந்தாயுதம் - பன்றி.
தந்தாவளம் - யானை.
தந்தி-ஆண்யானை, கம்பி (Wire), நரம்பு, நெய்வோன், பாம்பு, யானை.
தந்தி முகன் - விநாயகக் கடவுள்.
தந்திரம் - சேனை, அலங்காரம், உபாயம், புடவை, வீடு.
தந்திரி - தந்திரக்காரன், படைத்தலைவன், மந்திரி, யாழ்.
தந்து - பஞ்சி நூல், சாஸ்திரம், கயிறு.
தந்துரை - பாயிரம்.
தந்துவாயன் - சிலம்பி, நெய்பவன் (Weaver).
தபதி - தச்சன்.
தபதியர் - கம்மாளர்.
தபனன் - சூரியன், நெருப்பு, அக்கினித் தேவன்.
தபனியம் - பொன்.
தபுதல்-சாதல், கெடுதல்.
தம்பதி - கணவனும் மனைவியும்.
தம்பம் - கவசம், தூண், பாவம்.
தம்மனை - தாய்.
தம்முன் - தமையன்.
தமக்கை - அக்காள்.
தமம் - இருள், இராகு, சேறு, துக்கம்.
தமர் - பந்துக்கள்.
தமரம் - பேரொலி, இசை.

தமனன் - கீழ்ப்படுத்துபவன், பண்டிதன், வெல்லுபவன்.
தமனியம் - பொன்.
தமாலம் - இலை, பச்சிலை மரம்.
தமி - தனிமை, இரவு, ஒப்பின்மை.
தமியன் - தனித்தவன்.
தமிழ் - இனிமை, குணம், தமிழ் மொழி.
தமிழ் முனி - அகத்தியர்.
தமிழ் வாணர் - தமிழ்ப் புலவர்.
தமிழ் வேதம் - திருக்குறள்.
தயக்கம் - கலக்கம்.
தயங்கல்-அசைதல், திகைத்தல், நடுங்கல், பிரகாசித்தல்.
தயாளம் - கிருபை.
தயிலம் - எண்ணெய்.
தயை - கிருபை.
தரக்கு - புலி.
தரங்கம் - அலை, கடல், கலக்கம்.
தரணி-பூமி, சூரியன், நீர்ப் பெருக்கு, மலை.
தரம் - உரிமை, தலை, பக்குவம், மலை, மேன்மை, வகை, ஒப்பு.
தரளம் - உருட்சி, முத்து.
தரன் - தரித்தவன்.
தராதரம் - ஏற்றத் தாழ்வு, மலை.
தராதலம் - பூமி.
தராபதி - அரசன்.
தரிசனம் - கண், காட்சி.
தரிசித்தல் - பார்த்தல்.
தரித்தல்-அணிதல், பொறுத்தல், தங்கல், தாங்கல்.
தரியலர்
தரியலார் - பகைவர்.
தரியார்
தரு - மரம்.
தருக்கல்-கர்வப்படல், களித்தல்.
தருக்கு - கர்வம், களிப்பு.
தருணம் - இளமை, சமயம், புதுமை.
தருணன் - வாலிபன்.
தருணி
தருணை -இளம்பெண்.
தருமம்-அறம், நீதி, நல்லொழுக்கம்.
தருமராசன் - புத்தன், அருகன், இயமன், பாண்டவரில் மூத்தவன்.
தருமன் - இயமன், பாண்டவரில் மூத்தோன், சன்மார்க்கன், புத்தன்.
தரு மிருகம் - குரங்கு.
தலம் - இலை, பூமி, இடம், காடு.
தலை - முதல், இடம், சிரம், ஆகாயம், பெருமை, மிக்கான்.
தலைக் குறை - கவந்தம்.
தலைக் கூடுதல் - பொருந்துதல்.
தலைப்படல் - எதிர்தல், அடைதல், தொடங்கல்.
தலைப்பாடு - கூடுதல், நேர்படல்.
தலைப் பிரிதல் - நீங்குதல்.
தலைப்பெயல்-முதல் மழை.
தலையளி - பேரன்பு.
தலையெழு வள்ளல்கள் - சகரன், காரி, நளன், துந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன்.
தவ்வை-தமக்கை, தாய், மூதேவி.
தவ - மிகுதி, குறைவு.
தவலை - கெடுவு.
தவம்-நோன்பு, தீ.
தவர் - முனிவர், துளை, வில்.
தவல் - குறைவு, கெடுதல், தவறுதல்.
தவழ்தல் - நகர்தல், பரவியிருத்தல்.
தவளம் - வெண்மை, அழகு.
தவறு - குற்றம்.

தவிசு - தடுக்கு, மெத்தை, இருக்கை (Seat), பீடம், யானைமேல் தவிசு.
தவிர்தல் - ஒழிதல், விலகுதல்.
தழங்கல் - ஒலித்தல்.
தழல்-நெருப்பு, கிளியோட்டுங் கோல், வெப்பம்.
தழும்பு - காயம், குற்றம், தடித்தல்.
தழை - இலை, மயில் தோகை.
தள்ளாமை-இயலாமை, தளர்ச்சி.
தள்ளை - தாய்.
தளப்பு - சோர்வு.
தளம் - இலை, சேனை, சாந்து, சாடி, பூவிதழ், உப்பரிகை (Terrace).
தளவம் - முல்லைப் பூ.
தளவாய் - படைத் தலைவன்.
தளவு - முல்லை.
தளி - துளி, கோயில், குளிர்.
தளிமம் - அழகு, மெத்தை, கட்டில், திண்ணை.
தளிர் - கொழுந்து.
தளிர்த்தல் - தழைத்தல், மகிழ்தல்.
தளை-விலங்கு, தொடர்பு, சிலம்பு, ஆண் மயிர், கட்டு, கயிறு, வயல்.
தளைதல் - கட்டுதல்.
தளைப்படுதல் - சிறைப்படல், கட்டுப்படல்.
தற்கு - செருக்கு.
தற்கொண்டான் - கணவன்.
தறி - கட்டை, தூண், கோடரி, துணி நெய்யுந் தறி (Loom), முளை.
தறித்தல் - வெட்டல்.
தறுகண் - அஞ்சாமை.
தறுகணன் - அஞ்சாதவன்.
தன்மம் - குணம், தருமம்.
தனமுன் - தமையன.
தன்மை-அழகு, குணம், தன்மையிடம் (First Person in Grammar), பெருமை.
தனனம்-பசுவின்கனறு, அற்பம்.
தன்னை - தமக்கை, தாய், மூத்தோன.
தனஞ்சயன - அருச்சுனன, தீ.
தனம் - முலை, பொன, பசுவின் கனறு, அழகு, பொருள்.
தனயன - மகன்.
தனயை - மகள்.
தனது - தனனுடையது.
தனி - தனிமை, ஒப்பினமை, சுத்தம்.
தனித்தம் - ஒலி.
தனி நிலை - ஆய்த எழுத்து, ஒப்பற்ற நிலை.
தனு - உடம்பு, வில், அற்பம்.
தனுசர் - அரக்கர், பிள்ளைகள்.
தனுசன - மகன.
தனை - அளவு.

## தா

தா - பகை, துன்பம், தாண்டுதல், வலிமை, கேடு, கொடு, குற்றம்.
தாக்கணங்கு-இலக்குமி, தீண்டவருத்துந் தெய்வம்.
தாக்கல் - எதிர்த்தல், அடித்தல்.
தாகம் - நீர் வேட்கை, ஆசை.
தாசர் - அடிமைகள்.
தாசரதி - இராமபிரான்.
தாசி - அடியாள், பரணி நட்சத்திரம், நாடகக் கணிகை.
தாட்சணியம் - கண்ணோட்டம்.
தாண்டவம்-கூத்து, தாண்டுதல்.
தாணு-மலை, குற்றி, சிவன், நிலைபெறல், தூண்.
தாதகி - ஆத்தி மரம்.

தாதா - வள்ளல், பாட்டன்.
தாதி - அடியவள், தாசி.
தாது - உலோகம், காவிக்கல், தேன், சப்த தாது, பஞ்ச பூதம், பூந்தாது.
தாதை - தந்தை, பாட்டன், பிரமன்.
தாபத நிலை - தவ ஒழுக்கம்.
தாபதர் - தவசிகள்.
தாபம் - வெப்பம், துக்கம்.
தாபரம் - மலைபோல் நிற்றல், உடம்பு, மரப்பொது, இடம்.
தாபரன் - கடவுள்.
தாபித்தல் - நிலை பெறச் செய்தல் (Establishment).
தாம்பிரம் - செம்பு.
தாம்பு - கயிறு.
தாம்பூலம் - வெற்றிலை பாக்கு.
தாமணி - கயிறு.
தாமதித்தல் - காலந் தாழ்த்தல்.
தாமம்-மலை, ஒழுங்கு, கொன்றை மரம், சாந்து, ஒளி, ஊர், கயிறு, பூ, மணிவடம், பூமாலை, போர்க்களம், யானை, அச்சம், விருப்பம்.
தாமரை - தாமரைப்பூ, ஓர் எண்.
தாமரை நாயகன் - சூரியன்.
தாமரையாள் - இலக்குமி.
தாமிரம் - செம்பு.
தாமோதரன் - திருமால்.
தாயம் - உடைத்தல், உரிமை, ஒரு சூது, சமயம், பங்கு.
தாயாதி - பங்காளி.
தார் - கொடிப்படை, மலர், பூமாலை, சேனை, கிங்கிணிமாலை, ஆரம், ஒழுங்கு.
தார்த்தராட்டிரர் - திருதராட்டிரன் புதல்வர்.
தாரகம் - ஆதாரம், துணை, வெள்ளி.
தாரகாரி - காளி, முருகக் கடவுள்.
தாரகை - நட்சத்திரம்.
தாரணம் - தரித்தல்.
தாரணி - பூமி, இயமன்.
தாரதம்மியம் - ஏற்றத் தாழ்வு.
தாரம் - வல்லிசை, நா, வெள்ளி, மனைவி, ஏழிசையுள் ஒன்று, கண், நட்சத்திரம், நீர், மேன்மை, மூத்து, வெண்கலம்.
தாரு - தேவதாரு, மரம்.
தாரை - கண், மழை, நேராக ஓடல், நட்சத்திரம், வழி, கூர்மை, தத்த நீர், வாலியின் மனைவி.
தாலம் - உண் கலம், நா, பூமி, பனை மரம், யானைக் காது.
தாலு - நா.
தாவகம் - வனம்.
தாவம் - காடு, தீ, காட்டுத் தீ, வெப்பம்.
தாவரம் - நிலையியற் பொருள் (Immoveables), இடம், உடல், நிலை, பூமி, மரம், மலை.
தாவு - உறைவிடம், கேடு, குற்றம், செல்லுதல், பகை, வருத்தம், வலிமை.
தாழ்-தாழ்ப்பாள் (Latch), சீப்பு.
தாழ்வு - அடக்கம், தவறு, வறுமை, குறைவு,
தாழி - குடம், சாடி (Jar).
தாழை - தாழை, தென்னமரம்.
தாள் - தாழ்ப்பாள் (Latch), பாதம், முயற்சி.
தாளாண்மை - ஊக்கம், முயற்சி.
தாளாளன் - முயற்சியுடையவன்.
தாளி - பனை மரம்.
தாறு - விற்குதை, அளவு, மரக்குலை, முட்கோல், அங்குசம்.
தானம் - யானை மதம், நீராட்டல், கொடுத்தல், தேவ லோகம்.

தானவர் - அசுரர்.
தானகரன் - தானத்திற்கு இருப்பிடமானவன், (கன்னன்).
தானியம் - நெல் முதலியவை.
தானை - சேனை, வஸ்திரம், ஆயுதப் பொது.

## தி

திக்கு - ஆதரவு, உலகம், திசை.
திக்குப் பாலகர் - அட்ட திக்குப் பாலகர் பார்க்க.
திகந்தம் - திக்கின் முடிவு.
திகம்பரர் - சமண முனிவர், நிருவாணிகள்.
திகம்பரி - பார்வதி, நிருவாணி.
திகழ்தல் - விளங்குதல், பிரகாசித்தல்.
திகிரி - மூங்கில், வட்ட வடிவு, தேர் உருளை, சக்கராயுதம், மலை, தேர், சக்கரம்.
திகிரிகை - சக்கரம்.
திகில் - பயம்.
திகை - திசை, தேமல், திகைப்பு, மயக்கம்.
திங்கள் - சந்திரன், மாதம்.
திசை முகன் - பிரமன்.
திட்டம் - கட்டளை.
திட்டி விடம் - கண்ணில் விஷமுடைய ஒரு பாம்பு.
திட்டு - சிறு மேடு, வசை.
திட்டை-உரல், திண்ணை, மேடு.
திட்பம் - வலிமை.
திடம் - உறுதி, தைரியம், மெய், வலிமை.
திடர் - மேடு, மலை.
திண்டாட்டம் - அலைக்கழிவு.
திண்ணம் - உண்மை, வலிமை.
திண்ணன் - வலியுடையோன், கண்ணப்ப நாயனர்.
திண்மை - கலங்கா நிலைமை, உண்மை, வலிமை.
திணறல் - மூச்சுத் தடுமாறல்.
திணித்தல் - அடைத்தல்.
திணை - நிலம், சாதி, ஒழுக்கம்.
திதலை - தேமல்.
திதி - காத்தல், நிலை பெறுதல், செல்வம், பிரதமை முதலிய திதிகள்.
திதி மைந்தர் - அசுரர்.
திப்பியம் - திவ்வியம்.
திமிதம் - நீர்த்துளி, பேரொலி.
திமிர்தல் - பூசுதல், பேரொலி.
திமிரம் - இருள்.
திமில் - எருதின் முசிப்பு, தோணி.
தியக்கம் - அசைவு, மயக்கம், சோர்வு.
தியாகம் - கைவிடல், தருமம்.
தியாகி - கொடையாளி.
தியானித்தல் - சிந்தித்தல்.
திரட்சி - உண்டை, கூட்டம்.
திரட்டல் - கூட்டல்.
திரணம் - அற்பம், துரும்பு.
திரம் - உறுதி.
திரயம் - மூன்று.
திரவம் - நீர் முதலியவை (Liquids).
திரவியம் - பொன், பொருள், சரக்கு.
திரள் - கூட்டம், சேனை.
திராரி - இந்திரன்.
திரி - மூன்று, விளக்குத் திரி (Wick), திரிதல்.
திரிகடுகம்-சுக்கு மிளகு திப்பிலி, ஒரு நீதி நூல்.
திரிகரணம் - மனம், வாக்கு, காயம்.
திரிகை - இயந்திரம், குயவன் சக்கரம், திரிதல்.

திரிகோணம் - முக்கோணம்.
திரி சொல் - கற்றவர்க்கு மாத்திரம் பொருள் விளங்கும் சொல்.
திரிதரல் - திரிதல், சுழலல், மீளல்.
திரிதல் - உலாவல், கெடுதல், வேறுபடல்.
திரிபதகை - கங்கை.
திரிபலை - கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக் காய்.
திரிபிடகம் - பௌத்தமத நூல்.
திரிபு - திரிவு, தப்புதல், வேறுபாடு.
திரிபுரம் - முப்புரங் காண்க.
திரிபுவனம் - சுவர்க்கம், மத்தியம், பாதலம்.
திரு - இலக்குமி, செல்வம், சிறப்பு, அழகு, ஓர் ஆபரணம்.
திருக்கு - குற்றம், தந்திரம், முறுக்கு, வஞ்சம்.
திருக்குழல் - அஞ்சில் என்னும் தலை ஆபரணம்.
திருகல் - முறுகல், வேறுபடல்.
திருட்டாந்தம் - உதாரணம்.
திருட்டி - அறிவு, பார்வை, கண்.
திருத்துதல் - சீர்ப்படுத்தல், விளக்கல், தேற்றல்.
திருந்தலர் - திருந்ாதவர், பகைவர்.
திருமகள் - இலக்குமி.
திருமஞ்சனம் - அபிஷேகம்.
திருமண் - வைணவர் நெற்றியிலணியும் நாமம்.
திருமலர் - தாமரை.
திருமால் - மகா விஷ்ணு.
திருவடி - திவ்விய பாதம்.
திருவமுது - திவ்விய உணவு.
திருவலகு-விளக்குமாறு (துடைப்பம்).
திருவிழா - உற்சவம் (Festival).
திருவோலக்கம் - சிறந்த சபை.
திரை - அலை, தோற் சுருக்கம், கடல், சுருள், திரைச் சீலை (Screen), ஆறு (River).
திரைதல் - சுருங்கல், திரளல், சுருள்.
தில்லை - ஒரு மரம், சிதம்பரம்.
திலகம்-மஞ்சாடி மரம், பொட்டு, மேன்மை.
திலதம் - சுட்டி, பொட்டு.
திலம் - மஞ்சாடி மரம், எள்.
திவ்வியம் - தெய்வத்தன்மை, மேன்மை.
திவசம் } - நாள்.
திவம் }
திவலை - துளி (Drop), மழை.
திவளல் - அசைதல், துவளல், விளங்கல்.
திவா - பகல்.
திவாகரன் - சூரியன், திவாகரம் என்னும் நூலின் ஆசிரியன்.
திளைத்தல் - அனுபவித்தல், நெருங்கல், நிறைதல், அசைதல், அழுந்தல்.
திறம் - உறுதி, காரணம், வலிமை, தன்மை, வகை, நிலைபெறுதல்.
திறம்பல் - தவறுதல்.
திறமை - வலிமை.
திறல் - உபாயம், வலிமை, வெற்றி.
திறை - கப்பம் (Tribute).
தின்மை - தீமை.
தினகரன் - சூரியன்.
தினவு - சொறி.

## தீ

தீ - நெருப்பு, நரகம், தீமை, இனிமை.

தீக்கிதர் - தீட்சிதர்.
தீக்கை - தீட்சை.
தீங்கு - குற்றம், துன்பம், கேடு.
தீச்சொல் - சாபம், பழிச்சொல்.
தீஞ்சொல் - இனிய சொல்.
தீட்சை - உபதேசம், சங்கற்பம்.
தீட்டல் - எழுதல், துலக்குதல், தீட்டுதல், கூராக்கல்.
தீது - குற்றம், பாவம்.
தீபம் - தீவு, விளக்கு.
தீம்பு - தீது, தாழ்வு.
தீமை - இனிமை, கொடுமை, கேடு.
தீர்க்க தண்டம்-சாஷ்டாங்க நமஸ்காரம்.
தீர்க்க தரிசி - முக்கால வருத்த மானங்களையும் அறிபவன்.
தீர்க்கம் - நிச்சயம், நீளம்.
தீர்த்தங்கரர் - சமண குருமார்.
தீர்த்தம் - நீர், திருவிழா.
தீர்த்தன் - அருகன், குரு.
தீர்தல் - ஒழிதல்.
தீர்ந்தவன்-துறவி, தேறினவன்.
தீர்வு - பிராயச் சித்தம், ஒழிதல்.
தீரம் - கரை, சிறு வரம்பு, தைரியம், வெற்றி.
தீவாந்தரம் - தீவுகள்.
தீவிரம்-சூரியக்கிரணம், விரைவு.
தீவினை - கொடுமை, பாவம்.
தீற்றுதல் - தின்னுவித்தல், பூசுதல், மெழுகுதல்.
தீனன் - தரித்திரன், யாசகன்.

## து

துகள் - குற்றம், புழுதி.
துகிர் - பவளம்.
துகில் - சீலை.
துகிலிகை - எழுதுகோல்.
துகைத்தல் - நசுக்கல், வருத்தல்.
துகையல் - நசுக்கிய பொருள்.
துங்கம் - அகலம், பெருமை, உயர்வு.
துச்சம் - தாழ்வு.
துசம் - கொடி.
துஞ்சல் - நிலை பெறல், தூக்கம், சோம்பல், மரணம்.
துட்பதம் - தீதாகிய வியாஜம்.
துடவை - சோலை, தோட்டம்.
துடி - வலம், உடுக்கை, காலநுட்பம்.
துடித்தல் - துள்ளுதல், பதறல்.
துண்டம் - சாரைப்பாம்பு, துணி, முகம், மூக்கு, துண்டித்தல்.
துணங்கறல் - இருள், உற்சவம்.
துணங்கை - திருவிழா, பேய்க் கூத்து, திருவாதிரை நட்சத்திரம்.
துணர் - குலை, கொத்து, பூங்கொத்து.
துணிகரம் - துணிவு.
துணித்தல் - துண்டு செய்தல், வெட்டுதல்.
துணிதல் - தெளிதல், நிச்சயித்தல், வெட்டுதல்.
துணிபு - துணிவு, தெளிவு.
துணுக்கம் - அச்சம், நடுக்கம்.
துணுக்கு - துண்டு, பயம்.
துணை - அளவு, ஒப்பு, ஆதரவு, இரண்டு.
துணைவர் - சகோதரர், நண்பர், மந்திரிமார், கணவர்.
துணைவி - சகோதரி, தோழி, மனைவி.
துத்தம் - ஏழிசையுள் ஒன்று, நாய், பால், வயிறு, கண் மருந்து, தீ.
துத்தல் - உண்ணல்.
துத்தி - தேமல், பாம்பின் படப் பொறி, ஒரு செடி.
துத்து - உணவு.

துதி - தோத்திரம்.
துதைதல் - செறிதல், பூசுதல்.
துப்பு - அரக்கு, வலிமை, சுத்தம், பவளம், பகை, அனுபவம், அறிவு, உணவு, நன்மை, மேன்மை.
துப்புதல் - உமிழ்தல்.
துப்புரவு - அனுபவிப்பவை, சுத்தம்.
தும்பி - யானை, வண்டு.
தும்பு - மாடு கட்டுங் கயிறு, பனை முதலியவற்றின் எடு.
துமி - சிறு துளி.
துமித்தல் - துளித்தல், துணித்தல், வெட்டுதல்.
துமிதம் - நீர்த் துளி.
துய்த்தல் - உண்ணல், அநுபவித்தல்.
துய்யாள் - சரசுவதி.
துயக்கம் - சோர்வு, தடை.
துயர் - துன்பம்.
துயல்வரல் - அசைதல்.
துயில் - தூக்கம், மரணம்.
துயிலார் - தேவர்.
துயிலுணர்தல் - விழித்தல்.
துர்லபம் - பெறுதற்கரியது.
துரகதம் - குதிரை.
துரகம் - குதிரை.
துரங்கம் } - குதிரை.
துரங்கமம் }
துரவு - பெருங்கிணறு.
துரிதம் - விரைவு, பாவம்.
துரு - கறை (Rust).
துருக்கம் - கோட்டை, கஸ்தூரி, குங்கும மரம், கலக்கம், காடு.
துருத்தி - ஆற்றிடைக் குறை தோல், ஊதுந் துருத்தி.
துருவல் - ஆராய்தல், துளைத்தல், தேடல்.
துரோணம் - எண்காற் பறவை, காகம், தும்பை, வில், பதக்கு என்னும் அளவு.
துலக்கம் - பிரகாசம்.
துலக்கல் - விளக்கல்.
துலா - தராசு.
துலை - தராசு, தூரம்.
துவ்வாமை - தரித்திரம், வெறுப்பு.
துவக்கர் - தோல்.
துவக்கல் - தொடங்கல், கட்டுதல்.
துவக்கு - தோல், பிணக்கு, கட்டு, சங்கிலி, சம்பந்தம்.
துவங்கல் - தொடங்கல்.
துவசம் - கொடி.
துவம் - இரண்டு, நிலைபேறு.
துவர் - சிவப்பு, துவர்ப்பு, பவளம், பாக்கு.
துவர்க் காய் - பாக்கு.
துவரை - ஒருபயறு, துவாரகைப் பதி.
துவலை - துளி (Drop).
துவளுதல் - அசைதல், கலங்கல், நெளிதல்.
துவனி - முழக்கம்.
துவாதசம் - பன்னிரண்டு.
துவார பாலகன் - காவலாளி.
துவாரம் - துளை, வழி, வாயில் (Entrance).
துவி - இரண்டு.
துவை - பிண்ணாக்கு, தசை, ஒலி.
துவைத்தல் - ஒலித்தல், மிதித்தல்.
துழனி - ஒலி.
துழாய் - துளசி.
துழாவுதல் - கலக்கல், ஆராய்தல்.
துள்ளி - பெண்ணாமை, துளி (Drop).

துளக்கம் - அசைவு, கலக்கம், அச்சம், ஒலி, ஒளி.

துளபம் / துளவம் / துளவு - துளசி.

துளி - திவலை, மழை, பெண்ணாமை.

துளும்பல் - திமிறல், துள்ளுதல், வருந்தல்.

துற்றல் - உண்டல், குற்றல், தின்னல், நிறைதல்.

துற்று - உணவு, செறிவு.

துறக்கம் - தேவருலகம்.

துறவர் - முனிவர்.

துறவி - முனிவன்.

துறவு - நீக்கம்.

துறை - நீர்த் துறை, எல்லை, இடம், ஆறு (River).

துனபு - துன்பம்.

துன்றுதல் - நெருங்கல், மிகுதல்,

துன்னர் - சக்கிலிகள், தையற்காரர்.

துன்னல் - நெருங்கல், தைத்தல், செய்தல்.

துன்னலர் / துன்னார் - பகைவர்.

துன்னியார் - நண்பர்.

துன்னூசி - தையலூசி (Needle).

துனி - துன்பம், நோய், நதி, கோபம், புலவி நீட்டம், அச்சம், வெறுப்பு.

துனை - விரைவு.

## தூ

தூ - சுத்தம், மாமிசம், பற்றுக்கோடு, இகழ்ச்சிக் குறிப்பு, பகை, வலிமை, வெண்மை.

தூக்கு - பாட்டு, கூத்து, நூறு பலம், ஆராய்தல், உயர்வு, உறி, தராசு.

தூங்கல் - கூத்து, யானை, தூக்கம், சோம்பல், தராசு, தாழ்தல், ஒலித்தல், தொங்கல்.

தூசர் - வண்ணார்.

தூசி - குதிரை, புழுதி, கொடிப் படை.

தூசு - புடவை, யானைக் கழுத்திற் கட்டுங்கயிறு, தூசிப்படை.

தூடணம் - நிந்தை.

தூணம் - தூண்.

தூணி - அம்புப்புட்டில், நாலுமரக் கால் கொண்ட ஓர் அளவு.

தூதுணம் - புறா.

தூதுவன் - தூதன்.

தூபம் - புகை, நறும்புகை.

தூபி - சிகரம்.

தூம்பு - மூங்கில், உள் துளை, மரக்கால், சலதாரை.

தூமக்கொடியன் - அக்கினித் தேவன்.

தூமகேது - நெருப்பு, அக்கினிக் கடவுள், வால் நட்சத்திரம்.

தூமம் - புகை.

தூய்மை - சுத்தம்.

தூயன் - சுத்தமானவன்.

தூர் - மூலம், வேர், அடிப்பக்கம்.

தூர்த்தர் - காமுகர்.

தூர்த்தல் - நிரப்புதல்.

தூரிகை - எழுதுகோல்.

தூரியம் - எருது, வஸ்திரம், வாத்தியம், எழுதுகோல், தூரம், இசைக் கருவி.

தூலம் - பருமன், ஆகாயம், பஞ்சு.

தூலிகை - எழுதுகோல்.

தூவல் - இறகு (Feather), சிந்தல், ஒழிதல், நீர்த் துளி, மழை, மழைத் துளி.

தூவானம் - காற்றால் சிதறும் மழைத் துளி.

தூவி - அன்னச் சிறகு, அன்னம், இறகு, கொண்டை.
தூளம் - தூள், திருநீறு.
தூளி - புழுதி.
தூற்றல் - சிந்துதல், பழி கூறல், மழைத் தூற்றல்.
தூறு - தீங்கு, பழிச்சொல், பற்றைக் காடு(Low jungle)புதர்.

## தெ

தெக்கணம்-வலப்பக்கம், தெற்கு.
தெங்கங்காய் - தேங்காய்.
தெப்பம் - புணை.
தெம்முனை - போர்க்களம்.
தெய்வதம் - தெய்வம்.
தெய்வப் பசு - காமதேனு.
தெய்வம் - கடவுள், ஊழ்.
தெய்வீகம் - தெய்வத் தன்மை.
தெரிதரல் - அறிதல்.
தெரியல் - ஆராய்தல், பார்த்தல், பூமாலை.
தெரிவை - பெண்.
தெருட்சி - அறிவு, தெளிவு.
தெருட்டுதல் - அறிவுறுத்துதல், மனத்தைத் தெளிவித்தல்.
தெருமரல் - துன்பம், சுழற்சி.
தெருள் - அறிவு.
தெவ் - போர், பகை, பகைவன்.
தெவ்வர் - பகைவர்.
தெவிட்டல் - அடைத்தல், உமிழ்தல், நிறைதல், ஒலித்தல், வெறுத்தல்.
தெழித்தல்-அதட்டுதல், கோபித்தல், துவைத்தல், நீக்கல்.
தெள்ளத்தெளிதல் - நன்கு தெளிதல்.
தெள்ளல் - கொழித்தல்.
தெள்ளியர் - அறிவுடையோர்.
தெள்ளேணம் - பெண்கள் விளையாட்டில் ஒன்று.
தெற்றி - திண்ணை, வாயிற்படி.
தெறல் - அழித்தல்.
தெறித்தல் - சிந்தல், துள்ளல், முரிதல்.
தெறுக்கால் - தேள்.
தெறுதல் - அழித்தல், கோபித்தல்.
தெறுநர் - பகைவர், கொலைஞர்.
தென் - இசை, அழகு, தெற்கு, கற்பு, தென்னமரம்.
தென்கால் - தென்றற் காற்று.
தென்புலம் - இயமனுலகம், பிதிர்கள் வாழிடம்.
தென்மலை - பொதிய மலை.
தென்மொழி - தமிழ்ப் பாஷை.
தென்னர் - தெற்கு, பாண்டியர்.
தென்னன் - பாண்டியன்.
தெனாது - தெற்கில் உள்ளது, தெற்கு.

## தே

தே - கடவுள்.
தேக்கம் - நிறைவு.
தேக்கிடல் - தெவிட்டல், நிறைதல்.
தேக்கெறிதல் - ஏப்பமிடுதல், தெவிட்டல், நிறைதல்.
தேகம் - சரீரம்.
தேங்கல் - அச்சக்குறிப்பு, நிறைதல், குலைதல்.
தேசசு - ஒளி.
தேசாந்தரி - பரதேசி (Foreigner).
தேசிகம் - அழகு, ஒளி, திசைச்சொல், ஒரு கூத்து, பொன்.
தேசிகன் - செட்டி, தேசாந்தரி, குரு, அழகன்.
தேசு - அழகு, ஒளி, புகழ் அறிவு.

தேசோ மயம் - ஒளி மயம், அழகுத் தன்மை.
தேட்டம் - ஆராய்ச்சி, தேடிய பொருள், பேராசை.
தேட்டை - ஆராய்தல், பொருள்.
தேம் - இடம், இனிமை, தேன், வாசனை, திக்கு, தேசம்.
தேம்பல் - இளைத்தல், வாடல், விம்மி யழுதல்.
தேய்த்தல் - அழித்தல், குறைத்தல்.
தேய்வை - சந்தனக் குழம்பு.
தேயம் - நாடு, சரீரம், ஒளி, களவு.
தேயு - நெருப்பு, மயக்கம்.
தேர்தல் - அறிதல், ஆராய்தல், கொள்ளல், தெளிதல், துணிதல்.
தேரார் - கல்லாதவர், கீழோர்.
தேவ குலம் - கோவில்.
தேவ பதி - இந்திரன்.
தேவபாடை - சம்ஸ்கிருத பாஷை (Sanskrit).
தேவராட்டி - தெய்வமாடுபவள்.
தேவராளன் - தெய்வமாடுபவன்.
தேவி - மனைவி, அரசி, துர்க்கை, தலைவி.
தேற்றம் - கடைப்பிடி, தெளிவு, துணிவு.
தேற்றுதவர் - அறியாதவர்.
தேறல்-கள் தெளிவு, சாறு, கள், துணிதல், தெளிதல், தேன்.
தேறுதலை - தைரியம், ஆறுதல்.
தேன் - கள், வண்டு, வாசனை, நறவு (Honey).
தேனர் - திருடர்.
தேனிறால் - தேன் கூடு.
தேனு - களவு.

## தை

தை - தை மாதம், பூச நாள்.
தைத்தியர் - அசுரர்.
தையல்-அழகு, பெண், அலங்காரம், தைத்தல்.
தைலம் - எண்ணெய்.
தைவரல் - தடவல், கூடைத்தல்.

## தொ

தோக்கு - தோல், உடல்.
தொகல் - கூடல், மறைதல்.
தொகுத்தல் - திரட்டல், சுருக்குதல்.
தொகுத்துரை - பொழிப்புரை.
தொகுதி - கூட்டம், திரட்சி.
தொங்கல் - பீலிக் குஞ்சம், பூமாலை, தூக்கம், ஆண் மயிர், குடை, தொங்குதல், மயில் தோகை.
தொட்டல் - தொடுதல், தோண்டுதல், உண்டல்.
தொட்டுக் காட்டல்-சுட்டிக் காட்டல்.
தொடக்கம் - முதல், தொடங்குதல்.
தொடக்கு-கட்டு, சம்பந்தம்.
தொடர் - கோவை, சங்கிலி, நட்பு, பூ மாலை.
தொடர்ந்தார் - நண்பர்.
தொடர்பு - நட்பு, தொடர்ச்சி, பாட்டு, ஒழுங்கு.
தொடி - ஒரு பலம், கைவளை, கங்கணம், பூண்.
தொடித்தடி - வளைதடி.
தொடு - தோட்டம், வஞ்சகம்.
தொடுத்தல் - அணிதல், எய்தல், கட்டல், கோத்தல், பொருத்துதல். வளைக்கல்.

தொடை - அம்பு, கட்டு, மாலை, ஓர் உறுப்பு (Thigh), செய்யுள்
தொடையல் - பூ மாலை.
தொண்டர் - அடியவர்.
தொண்டு - பழமை, ஒன்பது, அடிமை, வழிபாடு.
தொண்டை - ஆதொண்டைச் செடி, கொவ்வை, யானைத் துதிக்கை, மிடறு, தொண்டை மண்டலம்.
தொத்து - பூங்கொத்து, அடிமை, ஒட்டு.
தொந்தம் - தொடர்பு, சம்பந்தம்.
தொந்தி - வயிறு.
தொப்பி - கள், தலைத் தொப்பி.
தொய்யல் - உழவு, சேறு, துன்பம், களிப்பு, இளைப்பு, சோர்வு.
தொய்யில் - உழுநிலம், எழுதுங் குழம்பு.
தொல் - பழமை.
தொல்லை - பழமை, தொந்தரவு.
தொலைத்தல் - கொல்லல், தோல்வியடையச் செய்தல்.
தொழு - தொழுமரம், இரேவதி நட்சத்திரம், குஷ்ட நோய் (Leprosy), பசுக் கொட்டில்.
தொழுகுலம் - மறையவர் குலம்.
தொழுதி - பறவையொலி, கூட்டம், இனம், பறவைக் கூட்டம்.
தொழுநோய் - குஷ்ட நோய், (Leprosy).
தொழும்பர் - அடிமைகள்.
தொழும்பு - அடிமை, அடிமை வேலை.
தொள்ளல் - துளைத்தல்.
தொள்ளை - துளை.
தொளை - துளை, மூங்கில்.
தொறு - அடிமை, கூட்டம், பசுக் கூட்டம், தொழுவம்.
தொறுத்தி - இடைச்சி.
தொறுவர் - இடையர்.
தொறுவி - இடைச்சி.
தொன்மரம் - ஆலமரம்.
தொன்மை - பழமை.
தொன்று - பழமை, ஊழ்.
தொன்னீர் - கடல்.
தொனி - ஒலி.

## தோ

தோகம் - சிறுமை.
தோகை - மயிற்பீலி, மயில், இறகு, விலங்கின் வால், பெண்.
தோகையர் - பெண்கள்.
தோட்கோப்பு - கட்டுச் சோறு.
தோட்டி - அங்குசம், கதவு, கீழ் மகன், அழகு, செங்காந்தள்.
தோடம் - குற்றம், பாவம்.
தோடு - பூவிதழ், கூட்டம், ஓலை, காதணி, வளையம்.
தோணி - இரேவதி நட்சத்திரம், மரக்கலம், அம்பு, தெப்பம், சேறு.
தோணிபுரம் - சீகாழி (Shiyali).
தோணோக்கம் - பெண்கள் ஆட்டத்தில் ஒன்று.
தோத்திரம் - துதி.
தோதகம் - வஞ்சகம், வருத்தம்.
தோப்பு - சோலை.
தோம் - குற்றம்.
தோமரம் - இருப்புலக்கை, வேலாயுதம், தண்டாயுதம்.
தோய்தல் - அணிதல், உறைதல், கலத்தல், நனைத்தல், பொருந்துதல்.
தோயம் - நீர், சமுத்திரம்.
தோயல் - கலத்தல், தயிர்.

தோரை - ஒரு வகை நெல், மூங்கில் அரிசி, கையிறை, மூங்கில்.

தோல்-யானை, எண்வகை வனப்பில் ஒன்று, சொல், துருத்தி, தோற்பலகை, தோல்வி, கேடகம் (Shield), மூங்கில்.

தோல்வி - அபஜயம் (Failure).

தோழம் - மாட்டுக் கொட்டில்.

தோழமை - நட்பு.

தோழன் - நண்பன்.

தோளாமணி - துளைக்கப்படாத மாணிக்கம்.

தோற் கருவி - தோலால் மூடப்பட்ட வாத்தியம்.

தோற்பு - தோல்வி.

தோற்பை - உடம்பு.

தோற்றம் - உற்பத்தி, உயர்வு, காட்சி, புகழ்.

தோற்றல் - வலிமை, பிறத்தல், தோன்றுதல், தோல்வி, புகழ்.

தோற்றுவாய் - ஆரம்பம், தொடங்கு மிடம்.

தோன்றல் - உயர்ச்சி, தலைவன், தோற்றம், மகன், வெளியாதல்.

தோன்றி - செங்காந்தள்.

## தௌ

தௌவல் - கெடுதல், தாவுதல்.

தௌவை - அக்காள், தாய், மூதேவி.

## ந

நக்கல் - சிரித்தல், புசித்தல், கெடுத்தல், மலர்தல்.

நக்கன் - அருகன், சிவன், நிருவாணி.

நகம் - மலை, மரம், உகிர்.

நகர் - வீடு, ஊர், இடம், கோயில்.

நகர்தல் - ஊர்தல், நகருதல்.

நகர்படு திரவியம்-நகரத்தில் உண்டாகும் பொருள்: கண்ணாடி, பித்தன், மந்தி, யானை, அரசன்.

நகரம் - இராசதானி, ஊர், கோயில்.

நகரி - பட்டினம்.

நகல் - மகிழ்தல்.

நகிலம் - முலை.

நகுலம் - கீரிப்பிள்ளை.

நகை - மகிழ்ச்சி, ஒளி, சிரிப்பு, ஆபரணம், பல், மலர்.

நகைத்தல் } - சிரித்தல்.
நகையாடல் }

நங்கூரம் - மரக் கலத்தை இடம் விட்டுப் பெயராமல் இருக்கச் செய்யும் கருவி (Anchor).

நங்கை - பெண்ணிற் சிறந்தவள்.

நச்சு - விருப்பம், விஷம் (Poison).

நச்சுதல் - விரும்புதல்.

நசிதல் - அழிதல்.

நசை - அன்பு, ஆசை.

நஞ்சு - விஷம் (Poison).

நட்டம் - கூத்து, கேடு.

நட்டல் - சிநேகித்தல், நடுதல்.

நட்டவர் - சிநேகிதர்.

நட்டார் - சிநேகிதர், உறவினர்.

நட்டுவன் - நடனம் செய்விப்போன்.

நட்டோர் - சிநேகர், உறவினர்.

நட்பு-உறவு, சிநேகம், புணர்ச்சி.

நடக்கை - நடத்தல், ஒழுக்கம்.

நடத்துதல்-இயற்றுதல், செலுத்துதல்.

நடப்பு - நடக்கை.

நடம் - கூத்து.

நடர் - கூத்தர்.

நடலை - வஞ்சனை, பொய், அசைவு, துன்பம், நடுக்கம்.
நடவை - வழி.
நடன் - கூத்தன், சிவன்.
நடாத்துதல் - நடத்துதல்.
நடி - நாடகக் கணிகை.
நடித்தல்-பாவனை செய்தல், கூத்தாடல்.
நடுவுநிலைமை - நீதி.
நடை-வழி, ஒழுக்கம், செல்வம்.
நண்ணல் - கிட்டுதல்.
நண்ணலர் / நண்ணார் - பகைவர்.
நண்ணுநர் - சிநேகர்.
நண்பகல் - மத்தியானம்.
நண்பன் - கணவன், தோழன்.
நண்பு - சிநேகம்.
நணுகல் - கிட்டல், சேர்தல்.
நணுகலர் / நணுகார் - பகைவர்.
நத்தம் - இருள், இரவு, சங்கு, ஊர், நத்தை (Snail).
நத்து-சங்கு, மூக்கிலணியும் ஆபரணம்.
நத்துதல் - விரும்புதல்.
நதம் - மேற்கிலோடும் ஆறு.
நதிபதி - கடல், வருணன்.
நந்தல் - ஆக்கம், கேடு, மிகுதல்.
நந்தவனம் / நந்தனவனம் - பூந்தோட்டம்.
நந்தி - சிவன், எருது, நந்திதேவர்.
நந்து - நத்தை, சங்கு.
நந்துதல் - நந்தல்.
நபுஞ்சகன் - பேடி.
நம்பன் - சிவன்.
நம்பி - ஆடவரில் சிறந்தவன்.
நம - வணக்கம்.
நமர் - நம்மவர்.
நமராங்கள் - நம்மவர்.
நமன் - இயமன், நமபுவன்.
நமை - தினவு.
நமோ - வணக்கம்.
நயச்சொல் - முகஸ்துதி.
நயத்தல் - விரும்புதல், பயன்படல்.
நயந்தோன் - தோழன், கணவன்.
நயம் - மகிழ்ச்சி, இன்பம், நன்மை, பயன், நீதி, உபசாரம்.
நயவர் - நண்பர்.
நயனம் - கண்.
நரகம் - பாவம் செய்தோர் அடையும் இடம் (Hell).
நரகாரி - திருமால்.
நரகு - நரகம் (Hell).
நரந்தம் - நாரத்தை, கஸ்தூரி.
நரப்புக்கருவி-நரம்புடைய வீணை முதலிய இசைக் கருவிகள்.
நரபதி - அரசன்.
நரம்பு - தந்தி, நார், நாடி, வீணை.
நரமேதம் - மனிதனைக் கொன்று செய்யும் யாகம்.
நரலுதல் - ஒலித்தல்.
நரலை - கடல்.
நரன் - மனிதன், அருச்சுனன்.
நராதிபன் - அரசன்.
நரேந்திரன் - அரசன்.
நரை - வெள்ளைக் குதிரை, வெண்மை, எருது, சாமரம், நாரை, நவிர மயிர்.
நரைமை - வெண்மை.
நல்கல் - கொடுத்தல், பெறுதல்.
நல்குரவு - தரித்திரம்.
நல்கூர்தல் - தரித்திர மடைதல்.
நல்கூர்ந்தார் - தரித்திரர்.
நல்லார் - உத்தமர், பெண்கள்.
நல்வினை - புண்ணியம்.
நலங்கல் - முடங்கல், வருந்தல்.

நலம் - நன்மை, தேள், அழகு, அன்பு, உபகாரம், சுகம், மேன்மை.
நலன் - நலம்.
நலிதல் | - அழிதல், மெலிதல், வருந்தல்.
நலிவு |
நவ் - தோணி. [இளமை.
நவ்வி - தோணி, மான், அழகு,
நவ கண்டம் - ஒன்பது கண்டங்கள் (9 continents).
நவக்கிரகம் - சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன, சனி, இராகு, கேது.
நவ தானியம் - உழுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை, அவரை, துவரை, நெல், பயறு.
நவ தீர்த்தம் - கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, சிந்து, காவிரி, கோதாவரி, சோண நதி, துங்கபத்திரை.
நவநீதம் - வெண்ணெய்.
நவபுண்ணியம் - எதிர் கொள்ளல், பணிதல், உட்காருவித்தல், கால் கழுவல், அருச்சித்தல், தூபங்காட்டல், தீபங்காட்டல், அறுசுவையுணவு படைத்தல், புகழ்தல்.
நவம் - ஒன்பது, புதுமை, நட்பு, கார் காலம்.
நவ மணி - கோமேதகம், நீலம், பவளம், புருட ராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம்.
நவியம் - மழுப்படை, கோடாலி.
நவிர் - ஆண் மயிர், வாள், மருத யாழ்த் திறம்.
நவிரம் - மயில், இழிவு, மலை, உச்சி, தலை, வாள், ஆண்மயிர்.
நவிலல் - சொல்லல், செய்தல்.
நவிற்சி - சொல்லுதல்.
நவிறல் - சொல்லல்.
நவீனம் - புதிது.
நவை - குற்றம்.
நள் - செறிவு, நடு, மிகுதி.
நள்ளார் - பகையர்.
நள்ளுநர் - நண்பர்.
நளி - குளிர்ச்சி, செறிவு, பெருமை.
நளிர் - குளிர்ச்சி, பெருமை, நண்டு, நெருக்கம்.
நளி விடம் - தேள்.
நளினம் - தாமரை, பரிகாசம்.
நளினி - இலக்குமி, சரஸ்வதி.
நற்றாய் - பெற்ற தாய்.
நறவம் - கள், அனிச்ச மரம்.
நறவு - கள், தேன்.
நறா - கள், தேன், வாசனை.
நறை - இனிமை, கள், தேன், புகை.
நறைக்காய் - சாதிக் காய்.
நன்காடு - சுடுகாடு.
நன்கு - அழகு, மிகுதி, நன்மை.
நன்றி - தருமம், நன்மை.
நன்று - பெருமை, நன்மை.
நன்னர் - நன்மை.
நன்னூல் - நல்ல நூல்.
நன்னெறி - நல்ல வழி.
நனந்தலை - அகலிடம், நடு.
நனவு - அகலம், தெளிவு.
நனி - மிகுதி, பெருமை.
நனை - கள், பூவரும்பு, தேன்.
நனைத்தல் - ஈரமாக்கல்.

## நா

நா - நாக்கு, நடு, வார்த்தை.
நாகம் - ஆகாயம், குரங்கு, புன்னை மரம், நல்ல ஆடை, மலை,

பாம்பு, யானை, ஞாழல், அத்த நாகம், தேவ லோகம், நஞ்சு, நாக லோகம்.
நாதர் - நாகலோகத்தார், தேவர்.
நாகரிகம் } - கண்ணோட்டம்,
நாகரீகம் } சாதுரியம், விநோதம்.
நாக லோகம் - கீழுலகம், தேவர் உலகம்.
நாகாதிபன் - இந்திரன், இமய மலை, ஐராவதம், ஆதிசேடன், மலை யரசன்.
நாகு - சங்கு, நத்தை, இளமை, எருமை முதலியவற்றின் பெண்.
நாகை - நாகப் பட்டினம்.
நாங்கூழ் - நாகப் பூச்சி.
நாசம் - அழிவு.
நாசி - மூக்கு.
நாஞ்சில் - கலப்பை, மதிலுறுப்பு.
நாட்டம்-கண், ஓர் இராகம், வாள், அழகு, ஆராய்ச்சி.
நாட்டமைதி 6:- நாட்டின் சிறப் பிற் குரியன: அவை: செல் வம், விளைவு, செழுவளம், செங்கோல், நோயின்மை, குறும்பின்மை.
நாட்டுக் குற்றம் 7:- அவை: விட் டில், கிளி, யானை, பன்றி, தொட்டியர், கள்வர், பெரு மழை.
நாட்டுதல் - நிறுத்துதல்.
நாட்பு - போர், போர்க்களம்.
நாடல் - ஆராய்தல்.
நாடி - நாழிகை (24 minutes), நரம்பு, தாது.
நாடுதல் - தேடுதல், நினைத்தல், ஆராய்தல்.
நாடுபடு திரவியம் 5:-நாட்டிலுண் டாகும் பொருள்: செந்நெல், செவ்விளநீர், சிறு பயறு, வாழை, கரும்பு.
நாண் - வெட்கம், கயிறு.
நாண்மலர் - புது மலர்.
நாண்மீன் - நட்சத்திரம்.
நாணம் - வெட்கம்.
நாணல் - ஒரு புல், வெட்கப்படு தல், வளைதல்.
நாத்தழும்பேறல் - நாவில் வடு உண்டாதல்.
நாத்திகம் - கடவுள் இல்லை யெனுங் கொள்கை.
நாத்தூண் - மைத்துனி (கணவன் சகோதரி).
நாதம் - ஒலி.
நாதன் - அருகன், கடவுள், தலை வன்.
நாந்தகம் - வாள்.
நாந்தி-மங்கல வாழ்த்து, பாயிரம்.
நாப்பண் - தேர் நடு, நடு, யாழ் உறுப்பு.
நாபி - கொப்பூழ்.
நாம்-அச்சம், தன்மைப் பன்மை.
நாம்பல் - இளைத்தல்.
நாமகரணம் - பெயரிடுதல்.
நா மகள் - சரஸ்வதி.
நாமம் - அச்சம், பெயர், வைண வர் தரிக்கும் திருமண்.
நாய்கர் - செட்டிகள்.
நாயகம் - தலைமை.
நாயகன் - அரசன், தலைவன், கடவுள், கணவன்.
நாயகி - தலைவி, மனைவி.
நார் - கயிறு, அன்பு.
நாரணன் - திருமால்.
நாரணி - துர்க்கை.
நாரம் - அன்பு, நீர்.
நாராசம் - இருப்புச் சலாகை.
நாராயணன் - திருமால்.

நாரி - பன்னாடை, பெண், வாசனை, வில் நாணி, கள், தேன், பார்வதி.
நால்வகைச் சேனை - நாற்படை.
நால்வகைச்சொல் - பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.
நால்வகைப்பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.
நால்வகைப் பூ - கொடிப் பூ, கோட்டுப் பூ, நீர்ப் பூ, நிலப் பூ.
நால்வகைப் பொன் - சாதரூபம், கிளிச் சிறை, ஆடகம், சாம்பூநதம்.
நால்வகையரண் - காட்டரண், மலையரண், நீர் அரண், மதில் அரண்.
நால்வகையாச்சிரமம்-நான்கு வகையான மக்கள் நிலை; பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்.
நால்வகையிழிச்சொல் - குறளை, பொய், கடுஞ்சொல், பயனில்சொல்.
நால்வகையுகம்-கிரேதா,திரேதா, துவாபரம், கலி.
நால்வகை யுணவு - உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன.
நால்வகை யுபாயம் - சாமம், பேதம், தானம், தண்டம்.
நால்வர் - திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர்.
நால்வாய் - யானை.
நாலல் } - தொங்குதல்.
நாலுதல் }
நாவலர் - புலவர்.
நாவாய் - மரக்கலம்.
நாவி - ஊமத்தை, கஸ்தூரி மிருகம்

நாவிதன் - அம்பட்டன்.
நாழி - ஒருபடி, அம்பறாத் தூணி, நாழிகை.
நாழிகை - கால அளவு (24 minutes), அம்பறாத் தூணி.
நாளம் - பூந்தண்டு, உள்துளை.
நாளிகேரம் - தென்னை.
நாற்கதி - நான்குவகைப் பிறப்பு: தேவ கதி, மக்கள் கதி, விலங்கின் கதி, நரக கதி.
நாற்கவி - ஆசு, சித்திரம், மதுரம், வித்தாரம்.
நாற்குணம் - (க) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி (இவை ஆடவர்க் குரியவை).
(உ) நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. (இவை பெண்டிர்க் குரியவை).
நாற்படை - யானைப் படை, தேர்ப்படை, குதிரைப் படை, காலாட் படை.
நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு.
நாற்றம் - மணம், தோன்றுதல்.
நாற்று - முளை பயிர்.
நாற்றுதல் - தொங்க விடுதல்.
நாறுதல் - மணத்தல், உண்டாதல்.
நான்கு வருணத்தார் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.
நான்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வம்.
நான்மாடக்கூடல் - மதுரை நகர்.
நான்முகன் - அருகன், பிரமன்.
நானம் - பூசும் பூச்சு, கஸ்தூரி, குளி நீர்.
நானிலம் - நால்வகை நிலம்: முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம்.

நி

நிக்கிரகம் - கீழ்ப்படுத்தல், தண்டனை.
நிகர் - சமானம்.
நிகர்த்தல் - ஒத்திருத்தல்.
நிகரம் - விழுங்கல், சேனை, கூட்டம்.
நிகழ்ச்சி - சம்பவம்.
நிகழ்த்தல் - சொல்லுதல், செய்தல்.
நிகளம் - சங்கிலி, விலங்கு.
நிகாதன - வஞ்சகன.
நிகாயம் - கூட்டம்.
நிகேதனம் - கோயில், வீடு.
நிசா - இரவு.
நிசா சரர் - அசுரர்.
நிசா பதி - சந்திரன.
நிசாரி - சூரியன்.
நிசி - இரவு, மஞ்சள், பொன்.
நிசி சரர் - அசுரர்.
நிசை - இரவு.
நிட்காமியம் - விருப்பினமை.
நிட்டூரம் - கொடுமை.
நிட்டை - சமாதி, அசையாமை.
நிணம் - கொழுப்பு [தும்.
நித்தியம் - அழியாமை, எப்போ
நித்திரை - தூக்கம்.
நித்திலம் - முத்து.
நிதி - பொன், திரவியம்.
நிதிக்கிழவன் - குபேரன.
நிதியம் - திரவியம்.
நிந்தனை - பழி.
நிபந்தம் - கட்டளை.
நிபம் - காரணம்.
நிமலன் - கடவுள், சுத்தன்.
நிமித்தம் - சகுனம்.
நிமித்திகன் - சோதிடன்.
நிமித்தியம் - நிமித்தம்.
நியுதி - முறைமை.

நியமம் - செய்கடன், தெரு, நிச்சயம், நகரம், கோயில், இடம், கடைத் தெரு.
நியமனம் - ஏற்பாடு.
நியமித்தல் - ஏற்படுத்தல்.
நியாயவாதி - நீதிவாதி (Vakil).
நிர்ணயம் - நிச்சயம்.
நிரம்பா மென்சொல் - மழலை.
நிர்மலம் - குற்ற மின்மை.
நிர்மாணம் - செய்கை.
நிர்விகற்பம் - வேறுபாடு இன்மை.
நிரந்தரம் - எப்பொழுதும்.
நிரபபு - நிறைவு, தரித்திரம்.
நிரபராதி - குற்ற மற்றவன்.
நிரயம் - நரகம் (Hell).
நிரல் - வரிசை, ஒழுங்கு.
நிராகரித்தல் - மறுத்தல்.
நிரீச்சுரவாதி - நாத்திகன.
நிருதர் - இராட்சதர்.
நிருதித் திசை - தென் மேற்கு.
நிருபன - அரசன. [தல்.
நிருமித்தல் - படைத்தல், ஆராய்
நிரை - ஒழுங்கு, பசு, பசுக் கூட்டம், வரிசை.
நிலவல் - ஒளி செய்தல்.
நிலவறை - கீழ் நிலை.
நிலவுதல்-ஒளி செய்தல், விளங்குதல்.
நிலை - இடம், தன்மை, நிலைமை.
நிலைமை - இயல்பு, புகழ்.
நிவத்தல் - உயர்தல்.
நிவாசம் - இருப்பிடம்.
நிவாத கவசர் - சஸ்திரங்களால் உடைபடாத கவச முடையவர்.
நிவாரணம் - நீக்கம்.
நிவேதனம் - நைவேத்தியம்.
நிழல் - செல்வம், குளிர்ச்சி, சாயை, அருள்.

நிழற்றுதல் - நிழல் செய்தல், ஒளி செய்தல்.
நிறம் - மார்பு, ஒளி, குணம், வண்ணம்.
நிறுவுதல் - நாட்டுதல், நிறுத்துதல்.
நிறை - கற்பு, தராசு, அழிவின்மை, நீர்ச்சால்.
நிறைமொழி - மந்திரம்.
நின்மலம் - குற்றமின்மை.
நின்மலன் - கடவுள்.
நினைவு - எண்ணம், கருத்து.

## நீ

நீ - முன்னிலை ஒருமைப் பெயர்.
நீக்கம் - நீக்குதல்.
நீகம் - தவளை.
நீகாரம் - பனி (Snow).
நீச்சு - நீந்துதல் (Swimming).
நீசம் - இழிவு.
நீசர் - கீழ் மக்கள்.
நீட்சி, நீட்டம் - நீளம்.
நீட்டித்தல் - தாமதித்தல்.
நீடல் - நீளுதல்.
நீடு - தாமதித்தல், நெடுநேரம்.
நீத்தம் - வெள்ளம்.
நீத்தல் - நீக்கல், துறத்தல்.
நீத்தார் - முனிவர்.
நீத்து - நீந்துதல்.
நீதம் - நீதி.
நீதி - நியாயம், முறைமை.
நீபம் - உத்திரட்டாதி நட்சத்திரம், காரணம், நீர்க்கடம்பு.
நீமம் - ஒளி.
நீயிர் - நீங்கள்.
நீர் - நீங்கள், ஜலம், குணம், பூராட நட்சத்திரம், கடல், தன்மை.
நீர்க்கடன் - எள்ளுந் தண்ணீரு மிறைத்தல் (திலதர்ப்பணம்).
நீர்க்கிழவன், நீர்க்கோன் - வருணன்.
நீர்நிலை - குளம், ஏரி முதலியன.
நீர்மை - தன்மை, குணம், ஒளி.
நீர் வலயம் - பூமி.
நீர்வாரம் - தினை யரிசி.
நீரசம் - தாமரை.
நீரம் - நீர்.
நீரரண் - அகழ்.
நீரர மகளிர் - நீரில் வாழும் தெய்வப் பெண்கள் (Sea nymphs).
நீரவர் - அறிஞர்.
நீராஞ்சனம் - ஆலாத்தி.
நீல் - நீலம்.
நீல கண்டன் - சிவன்.
நீலம் - கருங்குவளை, நீல நிறம், கறுப்பு, காற்று, விஷம், நீல இரத்தினம்.
நீலன் - சனி.
நீலி - கறுப்பு, துர்க்கை, காளி, பார்வதி.
நீலிதம் - நீல நிறம்.
நீலோற்பலம் - கருங்குவளை.
நீவாரம் - குள நெல்.
நீவி - நீங்கி, துடைத்து (வினையெச்சம், வஸ்திரம், கொய்சகம்.
நீவிர் - நீங்கள்.
நீவுதல் - தடவுதல், கழுவுதல், துடைத்தல், நீங்கல்.
நீளிடை - தூரம்.
நீறு - விபூதி, சாம்பல்.
நீறுபடுதல் - அழிதல்.

## நு

நுகம் - நுகத்தடி (Yoke), வலிமை.
நுகர்ச்சி, நுகர்தல், நுகர்வு - அநுபவம், உண்ணுதல்.

நுங்கள் - உங்கள்.
நுங்குதல் - விழுங்குதல்.
நுங்கை - உன் தங்கை, உன் தாய்.
நுசுப்பு - இடை.
நுட்பம் - நுண்மை.
நுடங்கல் - அசைதல், நுவளல், வளைதல்.
நுண்மை - கூர்மை, சிறுமை.
நுணங்கல் - நுட்பமாதல்.
நுணங்கியோர் - அறிவுடையோர்.
நுணங்கு - நுண்மை, சேமல்.
நுணல் | - தவளை.
நுணலை |
நுணுக்கம் - கூர்மை, நுண்மை.
நுதல் - புருவம், நெற்றி, சொல்.
நுதலல் - குறித்தல், சொல்லல்.
நுதி - நுனி.
நுந்தை - உன் தந்தை.
நும்பியர் - உம் தம்பியர்.
நுமர் - உம்மவர்.
நுமள் - உம்மவள்.
நுவணை - கல்வி நூல், நுட்பம், மா (Flour).
நுழை - துவாரம், சிறுவழி, பல கணி (Window), நுண்மை.
நுளைச்சி - நெய்தனிலப் பெண் (செம்படவப் பெண்)
நுளையர் - நெய்தனிலத்தவர் (செம்படவர்).
நுனி - நுட்பம், முனை.
நுனித்தல் - கூராக்கல், ஆராய்தல்.
நுனை - முனை, நுனி.

## நூ

நூக்கல் - செலுத்தல், தள்ளல்.
நூங்கு - பெருமை, மிகுதி.
நூதனம் - புதுமை.
நூபுரம் - காற்சிலம்பு (Anklet).
நூல் - சாஸ்திரம், பஞ்சி இழை, கயிறு.
நூலோர் - அறிஞர், மந்திரிகள், பார்ப்பனர்.
நூழல் - நூறல், அழித்தல்.
நூழில் - கொல்லுதல், யானை, படர்கொடி (Creeper), மறைந்து செல் வழி.
நூழை - நுழைவாயில் (Entrance), நுண்மை.
நூற்றல் - நூலாக்குதல் (Spinning).
நூறல் | - அழித்தல்.
நூறுதல் |
நூன்முகம் - முகவுரை (Preface).
நூனம் - நிச்சயம், குறைதல்.

## நெ

நேக்கல் - உருக்கல்.
நெக்குடைதல் - நெகிழ்ந்துருகு [தல்.
நெக்கு விடுதல் - பிளவுபடுதல்.
நெகிழ்தல் - இளகல், பிரிதல், உருகல், மலர்தல்.
நெகிழி - கொள்ளிக் கட்டை.
நெகுதல் - கரைதல், உருகல்.
நெசவு - நெய்தல் (Weaving).
நெஞ்சம் | - மனம், மார்பு.
நெஞ்சு |
நெட்டி - கிடை (Cork) நெட்டை.
நெட்டுதல் - தள்ளுதல்.
நெட்டுயிர்த்தல் | - பெருமூச்சு விடுதல்.
நெட்டுயிர்ப்பு |
நெட்டை - நெடுமை (Tallness).
நெடிது - நெடுங்காலம்.
நெடுங்கணக்கு - அரிச்சுவடி (Alphabet).
நெடுங்கழுத்தன் - ஒட்டகம்.
நெடுந்தகை - பெருங்குணமுடையான்.
நெண்டல் - நெளிதல்.

நெய் - தேன், நறுநெய் (Ghee), கொழுப்பு, புழுகு.
நெய்த்தல் - கொழுத்தல்.
நெய்த்தோர் - இரத்தம்.
நெய்தல் - கடலைச்சார்ந்த இடம், பிணப்பறை, ஆடை நெய்தல் (Weaving), குவளைப் பூ.
நெய்தற் கடவுள் - வருணன்.
நெய்யரி - பன்னாடை.
நெரித்தல்-வருத்தல், நசுக்குதல்.
நெரிதல் - சாய்தல், நசுங்கல்.
நெருக்கடி - துன்பம்.
நெருடல் } - இழை பொருந்துதல்.
நெருடுதல் }
நெருநல் - முன்னாள், நேற்று.
நெளிதல் - வளைதல், புரளுதல்.
நெற்று - உலர்ந்த பழம்.
நெறி - வழி, நீதி, ஒழுங்கு.
நெறித்தல் - நெளித்தல், முறிப்பெடுத்தல்.
நெறிமை - நீதி.
நெறியிலார் - கீழ்மக்கள்.
நென்னல் - நேற்று.

## நே

நேசம் - அன்பு, விருப்பம்.
நேடல் } - தேடுதல்.
நேடுதல் }
நேத்திரம் - கண், பட்டு வஸ்திரம்.
நேமி - சக்கராயுதம், பூமி, வட்டம், சக்கரவாகப் பறவை, சமுத்திரம், சக்கரம், மூங்கில்.
நேமித்தல் - ஏற்படுத்துதல்.
நேமிநாதன் - திருமால், அருகன்.
நேயம் - அன்பு, எண்ணெய், நெய்.
நேர் - எதிர், ஒப்பு, கொடுத்தல், பாதி, நீளம், உடன்பாடு, நுட்பம், ஒழுங்கு.
நேர்ச்சி - சிநேகம்.
நேர்த்தி - சிறப்பு.
நேர்தல் - சம்மதித்தல், கொடுத்தல், எதிர்ப்படல், சமமாதல், கிடைத்தல், சம்பவித்தல்.
நேர்படல்-உடன்படல், கிடைத்தல்.
நேர்மை - செம்மை, இணக்கம்.
நேரல் - உடன்படல்.
நேரலர் } - பகைவர்.
நேரார் }
நேரிடுதல் - சம்பவித்தல்.
நேற்று - முன்னாள்.

## நை

நைகரம் - துன்பம்.
நைதல் - வருந்தல், தளர்தல்.
நையல் - துன்பம்.
நைவு - வருத்தம், நோய்.
நைவேத்தியம் - தெய்வத்துக்கு அமைக்கும் பொருள்கள்.

## நொ

நொ - துன்பம்.
நொச்சி - நொச்சிச்செடி, மதில், சிற்றூர், மதில்காப்போர் சூடும் மாலை.
நொசிதல்-வருந்தல், நுட்பமாதல், துவளல்.
நொடி - விடுகதை, சொல், ஒரு மாத்திரை நேரம், பள்ளம்.
நொடித்தல் - அழித்தல், சொல்லல், கைந்நொடித்தல்.
நொதுமல் - அயல்.
நொதுமலர் - அயலோர்.
நொந்தார் - பகைவர்.
நொய்து-மெல்லியது, அற்பம்.
நொய்மை - இலேசு, சிறுமை, இழிவு.
நொருக்குதல் - அடித்தல்.

நொள்ளை - குருடு.
நொறில் - அடக்கம், விரைவு.
நொறுக்குதல் - அடித்தல், பொடியாக்கல்.
நொறுங்கல் - பொடியாதல்.

## நோ

நோ - துன்பம், வருந்துதல்.
நோக்கம் - கருத்து, அழகு, கண், பார்த்தல்.
நோக்கல்-பார்த்தல், தேடுதல்.
நோக்காடு - நோதல்.
நோக்கு - அழகு, கண், அறிவு, பார்வை.
நோண்டுதல்-கிளறுதல், தோண்டுதல்.
நோதக்க-வெறுக்கத் தகுந்தவை.
நோய் - பிணி, வருத்தம், பயம்.
நோல் - வலிமை.
நோலாதவர் - தவஞ்செய்யாதவர்.
நோலுதல் - நோற்றல், தவஞ்செய்தல்.
நோற்றல் - தவஞ்செய்தல், பொறுத்தல், விரத மிருத்தல்.
நோன் - வலி.
நோன்பு - தவம், விரதம்.
நோனாமை - பொறுக்காமை, தவமின்மை.
நோனார் - பொறாதவர், பகைவர், தவஞ் செய்யாதவர்.

## ப

பஃறி - ஓடம், மரக்கலம்.
பக்கணம் - ஊர், வேடர் வீதி.
பக்கம்-பறவைச்சிறகு, நட்பு, பிரதமை முதலிய திதி, சமீபம்.
பக்கரை - அங்கவடி.
பக்கல் - பக்கம்.
பக்கி - பறவை.
பக்கு - பிளவு, பொருக்கு.
பக்குவம் - தகுதி.
பகட்டு - தந்திரம், மயக்கம்.
பகடு - ஆண் யானை, பெருமை, எருது, ஓடம், எருமைக்கடா, யானை.
பகம் - காந்தி, கொக்கு, பெண் குறி.
பகர்ச்சி - சொல்.
பகர்தல் - விற்றல், பேசல்.
பகரம் - அலங்காரம்.
பகல்-நாள், ஒரு முகூர்த்த காலம், சூரியன், நடு, ஒளி, பகற்போது, பகுத்தல், பிரிதல்.
பகலவன் / பகலோன் - சூரியன்.
பகவதி-தருமதேவதை, துர்க்கை, பார்வதி.
பகவன் - சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தன், சூரியன்.
பகவான் - சிவன்.
பகழி - அம்பு, அம்புக் குதை.
பகிர்தல் - பங்கிடல்.
பகிரங்கம் - வெளிப்படை.
பகிரண்டம் - பேருலகம்.
பகீரதி - கங்கை.
பகுதி - பங்கு, பிரிவு, படை, இறைப் பணம் (Tribute).
பகுப்பு - பிரிவு.
பகுவாய் - தாழி, பிளந்த வாய்.
பகை - விரோதம், பகைவன்.
பகைஞர் - விரோதிகள்.
பகோளம் - வான வட்டம்.
பங்கசம் / பங்க சாதம் - தாமரை.
பங்கம் - சேறு, குற்றம், வேறுபாடு, அழிவு, தோல்வி, வஸ்திரம், வெட்கம்.
பங்கயம் - தாமரை.
பங்கயன் - பிரமன்.

பங்கி - ஆண்மயிர், கஞ்சா, பிற மயிர்.
பங்கு - முடம், பாதி, சனி.
பங்குசம் - தலைக் கோலம்.
பங்கேசம் } - தாமரை.
பங்கேருகம்
பச்சாத்தாபம் - செய்த குற்றத்தைக் குறித்து வருந்துதல்.
பச்சை - மரகதம், தோல், ஒருவாசினைப் புதர், திருமால், புதன், ஈரம், பசுமை.
பச்சோந்தி - பச்சை ஓணான்.
பசத்தல் - பசுமையாதல், தலைவனைப்பிரிந்த தலைவி ஆற்றாது நிறம் வேறுதல்.
பசலை - பசப்பு, வயலைக் கீரை, வருத்தம்.
பசாசம் } - பேய்.
பசாசு
பசு - எருது, உயிர், ஆ, யாக ஆடு.
பசுபதி - சிவன்.
பசை - ஒட்டும் பசை (Gum), பற்று.
பசைதல் - அன்பு கொள்ளல்.
பசைந்தார் - நண்பர்.
பஞ்ச கதி - குதிரையின் ஐவகை நடை : மயூர கதி, மல்ல கதி, வானர கதி, விடப கதி, வியாக்கிர கதி.
பஞ்சகவ்வியம் - கோசலம், கோமயம், தயிர், நெய், பால் (இவற்றின் கலப்பு).
பஞ்ச கன்னிகள் - அகலிகை, சீதை, தாரை, திரௌபதி, மண்டோதரி.
பஞ்ச காவியம் - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து தமிழ்ப் பெருங் காப்பியங்கள்.
பஞ்ச கிருத்தியம் - சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்தொழில்.
பஞ்ச சத்தி - பராசத்தி, ஆதி சத்தி, இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி.
பஞ்ச சயனம் - மயில் தூவி, இலவம் பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத் தூவி இவற்றால் செய்த படுக்கை.
பஞ்சணை - பஞ்சாற் செய்த படுக்கை.
பஞ்ச தந்திரம் - மித்திர பேதம், சுகிர்ல்லாபம், சந்தி விக்கிரகம், அர்த்த நாசம், அசம்பிரேக்ஷிய காரித்துவம்என்னும் ஐவகைத் தந்திரங்களையுடைய ஒரு நூல்.
பஞ்ச தரு - ஐந்தரு பார்க்க.
பஞ்ச பட்சி - வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.
பஞ்ச பாணம் - ஐங்கணை பார்க்க.
பஞ்ச பாணன் - மன்மதன்.
பஞ்ச பாதகம் - கொலை, களவு, பொய், கட்குடித்தல், குருநிந்தை.
பஞ்ச பூதம் - ஐம்பெரும் பூதம் பார்க்க.
பஞ்சம் - கருப்புக் காலம் (Famine), ஐந்து.
பஞ்ச முகன் - சிவன்.
பஞ்ச மூலம் - ஐவகை மூலம் : அவை இருவகை: (க) சிறு பஞ்ச மூலம் : திப்பிலி, சித்திர மூலம், மிளகு, சுக்கு, பேராத்தை.
(உ) பெரும்பஞ்ச மூலம் : தழுதாழை, பாதிரி, பெருங் குமிழ், வாகை, வில்வம்.
பஞ்சரம் - செருந்தி மரம், கூடு.

பஞ்சலக்கணம் - ஐந்திலக்கணம்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
பஞ்சலிங்கம் - பிருதிவி யிலிங்கம் (காஞ்சி), அப்பு இலிங்கம் (திருவானைக்கா), தேயு இலிங்கம் (திருவண்ணாமலை), வாயு விலிங்கம் (சீகாளத்தி), ஆகாய விலிங்கம் (சிதம்பரம்).
பஞ்ச லோகம்-பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு.
பஞ்சவர் - பாண்டியர், பாண்டு மன்னன் புதல்வர்: (தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன்).
பஞ்சவன் - பாண்டியன்.
பஞ்ச வன்னம் - ஐந்து நிறம்: கருமை, செம்மை, பசுமை, மஞ்சள், வெண்மை.
பஞ்ச வாசம் - ஐந்து வாசனைப் பொருள்: ஏலம், தக்கோலம், இலவங்கம், சாதிக்காய், கருப்பூரம்.
பஞ்சாங்கம் - (க) ஐந்துறுப்புக்கள், (உ) வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம்.
பஞ்சாட்சரம் - ஐந்தெழுத்தாலாகிய மந்திரம்.
பஞ்சாயுதம் - ஐம்படை பார்க்க.
பஞ்சாயுதன் - திருமால்.
பஞ்சானனம் - சிங்கம்.
பஞ்சி நாண் - பூணூல்.
பஞ்சேந்திரியம் - ஐம்பொறி பார்க்க.
பஞ்சை - யாசகன்.
பஞ்ஞீல் - மக்கள் பரப்பு.
பட்சணம் - தின் பண்டம்.
பட்சணி-உண்பவன், உண்பவள், உண்பது.
பட்சம் - பக்கம், பிரியம், பதினைந்து நாள்.
பட்சி - பறவை.
பட்சித்தல் - உண்ணல்.
பட்டம் - குளம், வஸ்திரம், பதவி, வாள், கவரி மா, காற்றாடி (Kite), நெற்றிப் பட்டம்.
பட்டயம் - சாசனம்.
பட்டவர்த்தனர் - பட்டஞ் சூடிய மன்னர்.
பட்டாங்கு - இயல்பு, உண்மை.
பட்டி - அட்டவணை (List), களவு, சிற்றூர், புடைவை, நாய், பசுத்தொழும், படல்.
பட்டிகர் - திருடர்.
பட்டிகை - மூலைக் கச்சு, தெப்பம், அரை ஞாண், ஏடு.
பட்டிமண்டபம் - கல்விமண்டபம்.
பட்டினம் - நெய்தல் நிலத்தூர்.
பட்டு - சிற்றூர், பட்டுத் துகில் (Silk cloth).
பட்டோலை-அட்டவணை (List), அரசர் திருமுகம்.
படகம்-இரணபேரிகை, கவரிமா, தம்பட்டம், திரைச் சீலை.
படகு - ஒருவகை மரக்கலம் (Boat).
படங்கு - மேற்கட்டி (Canopy), பெருங்கொடி, கூடாரம்.
படப்பை-ஊர்ப்புறம், தோட்டம், கொல்லை.
படபடத்தல் - துடி துடித்தல்.
படம் - யானை முகபடாம், சீலை, பாம்பின் படம், சித்திரம் (Picture).
பட மாடம் - கூடாரம் (Tent).
படர் - வழி, நினைப்பு, துன்பம், படைவீரர், ஏவலாளர், நடை, நினைவாலுண்டாகும் நோய்.
படர்க்கை-மூவிடங்களில் ஒன்று (Third Person in Grammar).

படர்ச்சி - நடை, பரந்த வடிவம்.
படர்தல்-செல்லுதல், நினைத்தல், பரவுதல்.
படல் - உண்டாதல், சாதல், அகப் படல், தட்டி.
படலம் - இலக்கியச் செய்யுட் பிரிவு (Chapter), நேத்திரப் படலம், செறிவு.
படலிகை - பீர்க்கு, வட்டவடிவு, கைம்மணி, பூந்தட்டு, படலம்.
படலை - பரந்த வடிவு, பூமாலை, வாயகன்ற பறை, குதிரைக் கிண்கிணி, மாலை, இலைமாலை, தாழை, திரள்.
படவு - படகு.
படாப்பழி-இல்லாப் பெரும்பழி.
படாம் - சீலை, திரைச்சீலை, கூடாரம் (Tent), பெருங்கொடி.
படி - குதிரை அங்கவடி, கற்படி, பகை, குணம், ஒப்பு, பூமி, சம்பளம், நாழி, வாயிற்படி, வடிவம், விதம்.
படிக்கால் - ஏணி.
படிகம் - பளிங்கு, பிச்சை.
படிதல் - கலத்தல், இறங்கல், அமைதல், தாழ்தல், பழகல், திருந்தல்.
படிமக்கலம் - கண்ணாடி.
படிமத்தாள் - தெய்வ மாடுபவள், தேவராட்டி.
படிமத்தான்-தெய்வ மாடுபவன், தேவராளன.
படிமம் - சுத்தம், பாவை, கண்ணாடி, வெண்மை, வெறியாட்டு.
படிமை - தவ வேடம், தெய்வ வடிவம்.
படியளந்தோன் - திருமால்.
படிவம் - உருவம், நோன்பு, உடல்.
படிவர் - முனிவர்.
படிறர் - திருடர், பொய்யர், வஞ்சகர்.
படிறு - பொய், களவு, வஞ்சனை.
படீரம் - சந்தனம், சிவப்பு.
படு - மரக்குலை, கள், நீர்நிலை, நன்மை, பேரறிவு, மிகுதிக் குறிப்பு.
படுக்கை - படுத்தல், மக்கட் படுக்கை (Bed).
படுகர் - பள்ளம், குளம், இறங்கியேறும் வழி.
படுகளம் - போர்க்களம்.
படுகாடு - சுடுகாடு.
படுகுழி - பெரும்பள்ளம்.
படுத்தல் - கொலை செய்தல், சயனித்தல், தளவரிசை யிடுதல், தாழ்த்திக் கூறுதல், அமைத்தல்.
படுதல் - ஒலித்தல், அழிதல், உண்டாதல், பூத்தல், அகப்படல், தாழ்தல்.
படுபயன் - பெரும்பயன்.
படுபழி - மிக்க பழி.
படுபொய் - முழுப் பொய்.
படுவர் - கள் விற்போர்.
படுவி - கள்விற்பவள், தொழுத்தை.
படுவை - தெப்பம்.
படை - ஆயுதம், கலப்பை, உறக்கம், குதிரைக் கலனை (Saddle), சேனை.
படைக் கலம் - ஆயுதம்.
படைச்சால் - உழவுசால் (Furrow).
படைத்தல் - உண்டாக்கல், பெறுதல், இடுதல்.
படையுறுப்பு-சேனையின் அணி.
படையுறை - ஆயுத உறை.
பண் - இசை, இசைப் பாட்டு, குதிரைக் கலனை, அலங்காரம்.

பண்டம் - பொன், பல பொருள், அறிவு, உடல், தின்பண்டம்.
பண்டாரம் - ஆண்டி, பொக்கிஷம் (Treasury), பல பண்டம்.
பண்டி - வண்டி, வயிறு.
பண்டிகை - திருவிழா.
பண்டிதன் - அறிஞன், வைத்தியன்.
பண்டிதை - மிகக் கற்றவள்.
பண்டை - முன்.
பண்ணவன்-முனிவன், தேவன், குரு, அருகன், வலியவன், பாடகன்.
பண்ணிகாரம் - பல பண்டம்.
பண்ணுவார் - குதிரைப் பாகர்.
பண்ணை - வயல், குளம், மருதநிலம், விலங்கின்படுக்கை, ஒரு கீரை, தோட்டம், மகளிர் கூட்டம், மகளிர் விளையாட்டு.
பண்படுத்தல் - சீர்ப்படுத்தல்.
பண்படுதல் - சீர் திருந்தல்.
பண்பி - குணத்தை யுடையது.
பண்பு - குணம், அறம்.
பணம் - பாம்பின் படம், பாம்பு, பொற்காசு (Coin), சூதாடு பந்தயம்.
பணயம்-பணம், அடகு (Pledge) சூதாடு பந்தயம்.
பணவை - பரண், பேய்.
பணாமணி - நாக இரத்தினம்.
பணி - சொல், தொழில், பாம்பு, தோற்கருவி, அருளல், ஆபரணம், ஏவல்.
பணித்தல்-கட்டளையிடல், சொல்லல், தாழ்த்தல்.
பணிதல் - தாழ்தல், வணங்குதல்.
பணிப்பெண் - வேலைக்காரி.
பணிமொழி - மென்சொல்.
பணியார் - பகைவர்.
பணிலம் - சங்கு.
பணிவிடை - குற்றேவல்.
பணிவு - தாழ்வு, வணக்கம்.
பணை - வயல், குதிரைப் பந்தி, பருமை, மூங்கில், அரசமரம், பெருமை, மரக்கொம்பு, மருதநிலம், வாத்தியம், தந்தம்.
பணைத்தல்-கிளைத்தல், பருத்தல்.
பத்தர்-தட்டார் (Goldsmiths), அன்பர், யாழின உறுப்பு.
பத்தா - கணவன்.
பத்தி - முறைமை, ஒழுக்கம், வழிபாடு, அன்பு, ஒழுங்கு, வரிசை.
பத்திரம் - இலை, அழகு, ஆயுதம், நன்மை, இறகு, அம்பு, உடைவாள், உறுதிப் பத்திரம் (Bond), சாக்கிரதை.
பத்திரி-பறவை, காளி, குதிரை, இலை, அம்பு.
பத்தினி - மனைவி, கற்புடையவள்.
பதகன் - கொலைஞன்.
பதங்கம்-பறவைப் பொது, விட்டிற் பூச்சி.
பதங்கன் - சூரியன்.
பதச் சேதம் - பதம் பிரித்தல்.
பதடி - பதர், வில்.
பதம் - சோறு, இன்பம், காலம், வழி, கால், வரிசை, சொல், இருப்பிடம், ஈரம், பதவி.
பதர் - அறிவீனன், பதடி.
பதலை-ஒருகண் பருவாய்ப் பறை, மலை, சாடி (Jar).
பதவாயுதம் - கோழி.
பதவி - இடம், முத்தி, நிலை.
பதவை - வழி.
பதறுதல் - திடுக்கிடுதல்.
பதன் - பக்குவம்.
பதனம் - தாழ்தல், இறங்கல்.
பதாகினி - சேனை.

பதாகை - பெருங்கொடி (Flag).
பதாதி - காலாள், சேனைகள்.
பதாயுதம் - கோழி.
பதார்த்தம் - சொற்பொருள், பொருள்கள் (Things), கறிகள்.
பதி - அரசன், நாயகன், ஊர், வீடு.
பதிகம்-பத்துச் செய்யுளால் முடியும் நூல், பாசி, முகவுரை (Preface).
பதிகன் - வழிப் போக்கன்.
பதித்தல் - அழுத்துதல், பதியவைத்தல்.
பதிதன் - ஒழுக்கந் தவறினவன்.
பதிவிரதம் - கற்புத் தவறாமை.
பதிவிருத்தல் - மறைந்திருத்தல்.
பதினாலுலகம் - மேலேழுலகம், கீழேழுலகம் பார்க்க.
பதினாறுபேறு - புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.
பதினெண் கணம் - அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர் (நாகர்), ஆகாயவாசியர், போகபூமியர்.
பதினெண்கீழ்க்கணக்கு - நாலடியார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறு பஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி.
பதினெண் புராணம் - மச்சம், கூர்மம், வராகம், வாமனம், பதுமம், வைணவம், பாகவதம், பிரமம், சைவம், இலிங்கம், பௌடியம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம்.
பதுக்கை - பாறை, சிறுபுதர், சிறுதிட்டு.
பதுங்கல் - ஒளித்தல்.
பதுமநாபன் - திருமால்.
பதுமநிதி - தாமரை வடிவான பொக்கிஷம்.
பதுமம் - கோடா கோடி (நூறு கோடி), ஒரு மாணிக்கம், தாமரை, ஒரு புராணம்.
பதுமன் / பதுமாசனன் - பிரமன்.
பதுமை - இலக்குமி, காளி, பொம்மை.
பதைத்தல் - துடித்தல்.
பந்தம் - உறவு, கட்டு, அழகு, திரள், தீவர்த்தி (Torch), விலங்கு.
பந்தர் - பந்தல், நிழல், பற்றுள்ளார்.
பந்தனம் - கட்டு.
பந்தனை - கட்டு, மகள்.
பந்தி - ஒழுங்கு, குதிரைச் சாலை, யானைச் சாலை, வரிசை, கூட்டம்.
பந்தித்தல் - கட்டுதல்.
பந்து - எறி பந்து (Ball), மட்டத் தருத்தி, உறவு, திரட்சி.

பந்துத்துவம் - சம்பந்தம்.
பப்பு - பரப்பு, ஒப்பு.
பம் - நட்சத்திரம்.
பம்பல் - பரந்த வடிவம், துளி (Drop).
பம்புதல் - நெருங்கல், ஒலித்தல், எழுதல், பரவுதல்.
பம்பை - ஒரு வாத்தியம், ஒரு குளம்.
பயசு - நீர், பால்.
பயத்தல் - கொடுத்தல், படைத்தல்.
பயந்தாள் - தாய்.
பயந்தோர் - பெற்றோர்.
பயந்தோன் - தந்தை.
பயம் - அமிர்தம், நீர், அச்சம், பால், பயன், குளம், பழம்.
பயம்பு - யானை படுகுழி, பள்ளம்.
பயல் - பள்ளம், சரி பாதி, சிறு பிள்ளை.
பயன் - நீர், பால், பிரயோசனம்.
பயிர் - ஒலி, பயில், பறவைக்குரல், அருவருப்பு, விளை பயிர்.
பயிர்ப்பு - பிசின் (Gum), அருவருப்பு (பெண் குணம்).
பயிலுதல் - சொல்லுதல், சேவித்தல், நிறைதல்.
பயிற்சி - பழக்கம்.
பயிற்றல் - கற்பித்தல்.
பயிறல் - சொல்லுதல், கற்றல்.
பயின் - பிசின் (Gum).
பயோததி - கடல்.
பயோதரம் - மேகம், முலை.
பர்க்கன் - சிவன், சூரியன்.
பர்ண சாலை - இலைக் குடிசை.
பர்த்தா - கணவன்.
பர்வதம் - மலை.
பர்வத ராசன் - மலை யரசன்.
பர்வம் - பக்குவம், பொழுது.
பரக்கழிவு - பழி.
பரகதி - மோட்சம்.
பரகாயப்பிரவேசம் - கூடுவிட்டுக் கூடு பாய்தல்.
பரஸ்பரம் - ஒன்றற் கொன்று.
பரசமயம் - பிறமதம்.
பரசிவம் - சதாசிவம்.
பரசு - கோடாலி.
பரசுதல் - துதித்தல்.
பரஞ்சுடர் / பரஞ்சோதி } - மேலான ஒளி, கடவுள்.
பரடு - கால் பரடு (Ankle).
பரண் - மேல் தட்டு.
பரணி - அடுப்பு, பரணி நட்சத்திரம், ஒரு பிரபந்தம், ஒரு பாத்திரம்.
பரத்தல் - பரவுதல்.
பரத்துவம் - கடவுள் தன்மை.
பரத்தை - வேசி.
பரத கண்டம் - இந்திய நாடு.
பரதம் - கூத்து, ஒரு கண்டம், இலட்சங் கோடி கோடா கோடி.
பரதயம் - குயில்.
பரதர் - நெய்தல் நிலத்தவர், செட்டிகள்.
பரத வருடம் - பரத கண்டம்.
பர தாரம் - பிறர் மனைவி.
பர தேசம் - அன்னிய நாடு.
பர தேசி - கதியிலி, அயல் நாட்டான் (Foreigner).
பரந்தாமம் - வைகுந்தம்.
பரந்தாமன் - திருமால்.
பரபிருதம் - காகம், குயில்.
பரப்பிரமம் - கடவுள்.
பரப்பு - விசாலம், பூமி, கடல், திரள்.
பர பக்கம் - பிறர் மதம்.
பரபதம் - மோட்சம்.
பரபரப்பு - விரைவு.
பரம் - கவசம், சரீரம், கடவுள், பாரம், பிரயோசனம், மேன்

மை, மோட்சம், மிகுதி, குதிரைக் கல்லணை (Saddle).
பரம்பரை - குலத்தொடர்ச்சி (Generation).
பரம்பு - நிலத்தைத் திருத்தும் பலகை, விசாலம், வரம்பு.
பரம்பொருள் - கடவுள்.
பரம பதம் - மோட்சம்.
பரமன் - கடவுள்.
பரமாணு - கண்ணுக்குப் புலனாகாத அணு.
பரமானந்தம் - பேரின்பம்.
பரல் - பருக்கைக்கல் (Pebble).
பரலோகம் - மோட்சம்.
பரவசம் - பிறர் வசமாதல், மூர்ச்சித்தல்.
பரவல் | பரவுதல் | - சொல்லுதல், விசாலமாதல், துதித்தல், புகழ்தல்.
பரவை - கடல், பரப்பு, திருமகள் கூத்து.
பராக்கிரமம் - வீரம்.
பராக்கு - அசட்டை (Carelessness).
பராகம் - துகள், மகரந்தம்.
பராதீனம் - சுதந்திர மின்மை.
பராபரன் - கடவுள்.
பராமரித்தல் - ஆதரித்தல்.
பராமுகம் - அசட்டை (Carelessness).
பராயணி - கன்னன்.
பரார்த்தம் - ஆயிரங்கோடி கோடா கோடி.
பராரை - பரு மரத்தடி (The trunk of a tree).
பராவுதல் - சொல்லுதல், துதித்தல்.
பரி - குதிரை, தாங்கல், விரைவு, பாதுகாத்தல், வருத்தம், அன்பு, உயர்வு, சுமை, பருத்தி.
பரிகம் - அகழ், மதிலுள் மேடை, மதில், வளை தடி.
பரிகரித்தல் - நீக்குதல்.
பரிகலம் - உண்கலம்.
பரிகாரம் - பிராயச்சித்தம், நீக்குதல்.
பரிசம் - தொடுதல்.
பரிசயம் - பழக்கம்.
பரிசனம் - உறவினர், தொடுதல்.
பரிசவேதி | பரிசனவேதி | - தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக்கும் கருவி.
பரிசாரகன் - வேலைக்காரன்.
பரிசாரிகை - வேலைக்காரி.
பரிசித்தல் - தீண்டல்.
பரிசில் - வெகுமதி (Prize).
பரிசிலர் | பரிசிலாளர் | - யாசகர் (Beggars).
பரிசு - தன்மை, விதம், வெகுமதி, நற்குணம்.
பரிசை - கேடகம் (Shield).
பரிணமித்தல் - வேறுபடுதல்.
பரிணயம் - கலியாணம்.
பரிணாமம் - வேறுபாடு.
பரித்தல் - அடக்குதல், தாங்குதல், தரித்தல்.
பரித்தியாகம் - முற்றும் விடுதல்.
பரிதபித்தல் - வருந்தல்.
பரிதல் - அறுத்தல், அன்பு செய்தல், இரங்குதல்.
பரிதாபம் - இரக்கம், வெப்பம்.
பரிதானம் - கைக்கூலி (Bribe).
பரிதி - பரிவேடம், வட்டம், சூரியன், சக்கராயுதம்.
பரிதிவட்டம் - சந்திர சூரியரைச் சூழ்ந்துள்ள வட்டம்.
பரிபக்குவம் - தகுந்த பக்குவம்.
பரிபவம் - எளிமை, இழிவு, துன்பம்.

பரிபாலனம் } - காத்தல்.
பரிபாலித்தல் }
பரிபுரம் - பாதக் கிண்கிணி.
பரிபூரணம் - எங்கும் நிறைதல்.
பரிமகம் - அசுவமேதம் Horse sacrifice).
பரிமளம் - மிக்க வாசனை.
பரிமா - குதிரை.
பரிமாணம் - அளவு.
பரிமாறுதல் - இடுதல்.
பரிமேதம்-அசுவமேதம் (Horse sacrifice).
பரியங்கம் - கட்டில்.
பரியந்தம் - எல்லை.
பரியல் - இரங்குதல்.
பரியாய நாமம் - வேறு பெயர்.
பரிவட்டம் - ஆடை.
பரிவருத்தனம் - மாற்றுதல்.
பரிவாரம்-சூழ்ந்திருப்போர், கூட்டம்.
பரிவு-இன்பம், துன்பம், அன்பு.
பரிவேடம் - சந்திர சூரியரைச் சூழ்ந்து தோன்றும் வட்டம், சூழ்தல்.
பரீக்கை-சோதனை (Examination).
பரீட்சகர் - பரீட்சிப்பவர் (Examiner).
பரீட்சை-சோதனை, ஆராய்தல் (Examination).
பருக்கை-சோறு, பருக்கைக் கல் (Pebble).
பருகல் } - குடித்தல்.
பருகுதல் }
பருணிதர் - புலவர்.
பருத்தல் - தடித்தல்.
பருப்பதம் - மலை.
பருப்பொருள் - நுட்பமில்லாப் பொருள்.
பருமம் - கவசம், பெருமை, ஒப்பனை, பதினெண்கோவை மணி.
பருவதம் - மலை.
பருவம் - இளமை, பக்குவம், வயது, காலம்.
பருவரல் - துன்பம்.
பறை - 5 மரக்கால் கொண்ட அளவு, பார்வதி.
பரோபகாரம் - பிறர்க்கு உபகாரம் செய்தல்.
பல்கல் - பெருகுதல்.
பல்கால் - பலமுறை, அடிக்கடி.
பல்லக்கு-சிவிகை (Palanquin).
பல்லம் - அம்பு, குதிரைக்கலனை (Saddle), கரடி, ஓர் எண்.
பல்லவம் - தளிர்.
பல்லாண்டு - வாழ்த்து, பல வருடம்.
பல்லார் - பலர்.
பல்லுகம் } - கரடி.
பல்லூகம் }
பலகணி - சாளரம் (Window).
பலகை - கேடகம் (Shield).
பலம்-பழம், பயன், காய், சேனை, வலிமை, கிழங்கு, நிறையளவில் ஒன்று.
பலவினீட்டம் - பல பொருளின் கூட்டம்.
பலவு - பலா மரம்.
பலன் - இலாபம், பழம், பிரயோசனம்.
பலாசனம் - கிளி.
பலாசு - முருக்க மரம்.
பலாதோகம் - மா மரம்.
பலி - பூசை, பிச்சை, திருநீறு, காகம், உணவு, காய்த்த மரம்.
பலினம் - காய்த்த மரம்.
பலுகம் - குரங்கு.
பலை - பசி தாக முதலியவற்றை யழிக்கும் மந்திரம்.

பவ்வம் - கடல், நீர்க்குமிழி, மரக்கணு, பருவம், பௌர்ணிமை.
பவ்வீ - மலம்.
பவனை - கழுகு.
பவம் - பிறப்பு, பாவம்.
பவர் - கொடி.
பவளம் - நவமணியிலொன்று (Coral).
பவனம் - இராசி, பூமி, காற்று, வீடு, அரண்மனை.
பவனன் - காற்று.
பவனி-உலாப் போதல் (Procession).
பவானி - பார்வதி, துர்க்கை, ஓர் ஆறு (River).
பவித்திரம் - பரிசுத்தம், தருப்பை, பூணூல்.
பவித்திரன் - சுத்த முள்ளவன்.
பவித்திரை - சுத்த முள்ளவள்.
பவுரி - மண்டல மிடுதல்.
பழங்கண் - துன்பம், ஒலி, இளைப்பு.
பழவினை - ஊழ் வினை.
பழனம் - குளம், வயல், மருத நிலம்.
பழி - நிந்தை, குற்றம்.
பழிச்சல் } - துதித்தல்.
பழிச்சுதல் }
பழிப்பு - குற்றம், நிந்தை.
பழுக்காய் - பாக்கு.
பழுத்தல் - கனிதல், முதிர்தல்.
பழுது - குற்றம், அழிவு.
பழுதை - கயிறு.
பழு மரம் - ஆல மரம், பழுத்த மரம்.
பழுவம் - காடு, சோலை.
பழையர் - கள் விற்பவர்.
பள்ளி - மருதநிலத்தார், சிற்றூர், கோயில், படுக்கை(Bed), தூக்கம், முனிவர் இருப்பிடம், பள்ளிக்கூடம், ஒரு சாதியான்.
பள்ளியெழுச்சி - துயிலெழுப்புதல்.
பளகு - குற்றம்.
பளபளப்பு - ஒளி வீசல்.
பளிங்கு - கர்ப்பூரம், படிகம்.
பளிதம் - கர்ப்பூரம்.
பற்குனன் - அருச்சுனன்.
பற்ப நாபன் - திருமால்.
பற்பம் - தாமரை, புழுதி.
பற்றல் - தொடர்தல், பிடித்தல்.
பற்றலர் } - பகைவர்.
பற்றார் }
பற்று-அன்பு, தொடர்ச்சி, செல்வம்.
பற்றுக்கோடு - ஆதாரம், ஊன்று கோல்.
பறந்தலை-சுடுகாடு, போர்க்களம், பாசறை (Tent of an army).
பறம்பு - மலை, முலை.
பறவாக்குளவி - மலை மல்லிகை.
பறவாக்கொக்கு - மாமரம்.
பறவை - பட்சி, பட்சி யிறகு, அவிட்ட நட்சத்திரம்.
பறவை வேந்தன் - கருடன்.
பறழ் - குட்டி.
பறி - பொன், மீன் கூடை, கொள்ளை.
பறித்தல் - கொய்தல், பிடுங்கல், களைதல்.
பறிதல் - நீங்குதல், ஒழுகுதல்.
பறை - வாத்தியம், சொல், பறவை இறகு, பறத்தல்.
பன்னகம் - பாம்பு.
பன்னக வைரி - கருடன்.
பன்ன சாலை - இலை வீடு.
பன்னம் - இலை.
பன்னல் - நெருக்கம், சொல், பருத்தி.

பன்னுதல் - சொல்லல், நெருங்கல், பஞ்சு நூற்றல்.
பனசம் - பலா.
பனவர் - பார்ப்பனர்.
பனவி - பார்ப்பனி.
பனாட்டு - பனை வெல்லக்கட்டி.
பனி - நடுக்கம், துன்பம், அச்சம், குளிர்ச்சி, பனி(Snow), நீர்.
பனிச்சை - பின்னி முடிக்கும் மயிர்ச்சுருள்.
பனித்தல்-மழை பெய்தல், நடுங்கல், துளித்தல், துன்பம்.
பனிப் பகை - சூரியன்.
பனிப்பு - நடுக்கம்.
பனி மலை - இமய மலை.
பனுவல் - சொல், சாஸ்திரம், நூல் (Thread), ஆராய்ச்சி.
பனுவலாட்டி - சரஸ்வதி.
பனைக் கொடியோன் - பலபத்திரன்.
பனை வட்டு-பனை வெல்லக்கட்டி.

## பா

பா - பஞ்சி நூல், பாட்டு, பரவுதல், பரப்பு, பருகுதல், பாம்பு, தூய்மை.
பாக்கம் - ஊர்.
பாக்கன் - பூனை.
பாக்கியம்-புண்ணியம், செல்வம்.
பாக்கு-எதிர்கால இடைச்சொல், துவர்க்காய்.
பாக சாதனன் - இந்திரன்.
பாக சாலை - சமைய லறை.
பாகம் - பிச்சை, பங்கு, சமைத்தல், பக்குவம், பாதி.
பாகர் - யானை குதிரை முதலிய நடத்துபவர்.
பாகல் - பாகற் காய், பலா மரம்.
பாகலம் - யானை நோய்.
பாகவதர் - வைணவர்.
பாகன் - குதிரை யானை முதலிய நடத்துபவன்.
பாகீரதி - கங்கை.
பாகு - பாக்கு, பாகன், பங்கு, குழம்பு, கற்கண்டு, சர்க்கரை, பால்.
பாகுடம்-பகை அரசர்க்கு அளிக்கும் கப்பம் (Tribute).
பாகுபாடு - பகுப்பு.
பாகுவன் - சமையற்காரன்.
பாகை - தலைப்பாகை, ஒரு கால அளவு.
பாங்கர் - இடம், பக்கம், கணவர், நண்பர்.
பாங்கன் - தோழன்.
பாங்கி - தோழி.
பாங்கு - இடம், உரிமை, அழகு, உறவு, நற்குணம், பக்கம், நண்பன்.
பாசடை - பசுமையான இலை.
பாசம் - கயிறு, பேய், ஊசித்துளை, அன்பு, கவசம், இயமன் ஆயுதம்.
பாசறை - பச்சிலை வேய்ந்த சிறு வீடு, சேனை தங்கு மிடம்.
பாசனம் - உறவு, பாத்திரம், உண்கலம்.
பாசாங்கு - பாவனை.
பாசாங்குச தரன் - விநாயகன்.
பாசி - இயமன், நாய், நெட்டி (Cork), நீர்ப்பாசி.
பாசிலை - பச்சிலை, வெற்றிலை.
பாசு - பசுமை, மூங்கில்.
பாசுபதம் - பாசுபதாஸ்திரம்.
பாசுரம் - பாட்டு, வாசகம்.
பாஞ்ச சன்னியம் - ஆயிரம் வலம்புரிச் சங்கங்களால் சூழப் பட்ட ஒரு சங்கு.
பாஞ்சாலி - திரௌபதி.
பாடகம் - காலணி, தெரு.

பாடகர் - பாடுவோர்.
பாடணம் - சம்பாஷணை.
பாடபம் - சோனி குதிரை.
பாடலம் - சிவப்பு, பாதிரி மரம், குதிரை.
பாடவம் - சமர்த்து, களிப்பு.
பாடினமகள் - பாடுபவள்.
பாடி - சேனை, நாடு, நகரம், பாசறை (Tent of an army), பாடுபவள், முல்லை நிலத்தூர்.
பாடியம் - விருத்தி யுரை.
பாடி வீடு - சேனை தங்குமிடம்.
பாடு - இடம், பெருமை, ஓசை, உண்டாதல், கெடுதல், உறக்கம், படுக்கை, முறைமை, வருத்தம், தொழில்.
பாடுநர் - புலவர்.
பாடை - பாஷை (Language), பிணந் தாங்குங் கருவி.
பாண் - இசைப் பாட்டு, பாழ், பாணச் சாதி.
பாண்டம் - பாத்திரம்.
பாண்டித்தியம் - சிறந்த கல்வியறிவு.
பாண்டில் - எருது, வட்டம், மூங்கில், கட்டில், விளக்கின் தகழி (அகல்), தாளம், கண்ணடி, பண்டி.
பாண்டு - வெண்மை, ஒரு நோய்.
பாண் மகள் - பாடுபவள்.
பாணம் - அம்பு, பட்டு வஸ்திரம், மழை வண்ணக் குறிஞ்சி.
பாணன் - யாழ் வாசிப்பவன், பாழ்பட்டவன்.
பாணி - ஊர், நீர், கை, ஓசை, பற்று, காடு, காலம், நாடு, சோலை, பல பண்டம், வாத்தியம், அழகு, அன்பு, இசை, கூத்து, சொல், தாளம்.
பாணிக் கிரகணம் - கலியாணம்.
பாத்தல் - பங்கிடுதல், கொடுத்தல்.
பாத்தி - சிறு நிலம், வீடு, பகுத்தல்.
பாத்தியம் - சம்பந்தம், கால் கழுவு தற்களிக்கும் நீர்.
பாத்திரம் - பாண்டம் (Vessel), தகுதி.
பாத்து - கஞ்சி, சோறு, பகுத்தல்.
பாதக் காப்பு - செருப்பு.
பாத கடகம் - பாடகம்.
பாதகம் - துரோகம்.
பாத சாலம் - காலணி.
பாதபம் - மரம்.
பாதம் - கால், காற்பங்கு, செய்யுள் அடி.
பாத ரட்சை - செருப்பு.
பாதலம் - பாதாள உலகம்.
பாதவம் - மரம், மலை.
பாதிரி - பாதிரி மரம், மூங்கில், கிறிஸ்தவ குரு (Reverend).
பாதீடு - காத்தல், செறித்தல், பகுத்திடுதல்.
பாதுகம் - செருப்பு.
பாதுகாத்தல் / பாதுகாப்பு / பாதுகாவல் - காத்தல்.
பாதுகை - மிதியடி.
பாதேயம் - கட்டுச் சோறு.
பாதை - மரக்கலம், வழி, துன்பம்.
பாந்தம் - பகர விகுதி.
பாந்தல் - பதுங்கல்.
பாந்தள் - பாம்பு, பெரும்பாம்பு.
பாப்புப் பகை - கருடன்.
பாபத்தி - வேட்டை.
பாப மூர்த்திகள் - வேடர்.
பாம்பு - அரவு, கரை.
பாம்புண் பறவை - கருடன்.

பாம்புரி - அகழி, மதிலுறுப்பு, பாம்புத் தோல்.
பா மகள் - சரஸ்வதி.
பாமம் - பரப்பு, ஒளி.
பாமரம் - அறிவின்மை.
பாய்த்து - பாய்தல்.
பாய்தல் - தாண்டல், பரவுதல், நீர் ஓடுதல், முட்டுதல்.
பாய் மரம் - கப்பற் பாய்மரம் (Mast).
பாய்மா - குதிரை, புலி.
பாயசம் - பால், பரமான்னம்.
பாயம் - நீர்.
பாயல் - உறக்கம், படுக்கை.
பாய லுணர்த்தல் - எழுப்பல்.
பாயா வேங்கை - வேங்கை மரம்.
பாயிரம் - வரலாறு, முகவுரை.
பார் - பூமி, தேர்ப்பலகைப் பரப்பு, உரோகிணி நட்சத்திரம், பாறை, வண்டியின் பார்.
பார்க்கவி - இலக்குமி.
பார்த்தன் - அருச்சுனன்.
பார்த்திவம் - பூமி.
பார்த்திவன் - அரசன்.
பார்ப்பதி - பார்வதி.
பார்ப்பு - பறவைக் குஞ்சு, பார்த்தல், பிராமண சாதி, விலங்கின் பிள்ளை.
பார் மகள் - பூமி தேவி.
பார்வை - கண், பார்த்தல்.
பாரகம் - திரைச்சீலை (Screen), தோணி, பூமி.
பாரகர் - சுமப்பவர், நாயகர், கரை கண்டவர்.
பாரசிகை - பருந்து.
பாரணம் } - உபவாச மிருந்து
பாரணை } புசித்தல்.
பாரதர் - குரு குல மன்னர்.
பாரத வருடம் - பரத கண்டம்.
பாரதி - சரஸ்வதி, மரக்கலம்.
பாரம் - கவசம், தோணி, குதிரைக் கலனை, பொறுமை, நீர்க்கரை, கனம், ஓர் எடை, பூமி, தேர், கடமை, சுமை.
பாராட்டல் - கொண்டாடுதல், மெச்சுதல்.
பாராயணம் - முறைப்படிப் படித்தல்.
பாராயணி - சரஸ்வதி.
பாராவாரம் - கடல், கடற்கரை.
பாரி - கடை வள்ளல்களில் ஒருவன், கட்டில், மனைவி, கள், நல்லாடை, கடல், பூமி.
பாரிசம் - பக்கம்.
பாரிசேடம் - ஒழிபு, மிச்சம்.
பாரிடம் - பூதம், பூமியிடம்.
பாரித்தல் - உண்டாக்கல், மிகுதல், காத்தல், வளர்த்தல், வெளிப்படுத்தல்.
பாரித்துரைத்தல் - விரித்துரைத்தல்.
பாரியாள் - மனைவி.
பாரை - இருப்புலக்கை, கட்டபாரை (Crowbar).
பால் - பக்கம், குணம், திசை, பங்கு, பால் (Milk), ஏழாம் வேற்றுமை யுருபு, பகுதி, விதி (Fate), வெண்மை.
பால்யம் - பாலப் பருவம்.
பாலகன் - காப்பவன், குழந்தை, புதல்வன்.
பாலம் - வாராவதி (Bridge), மழுவாயுதம், நெற்றி, பூமி.
பாலர் - சிறுவர், இடையர், காப்பவர்.
பாலனம் - காத்தல், பாற்சோறு.
பாலிகை - உதடு, வட்டம், படைவாளின் முட்டி, அம்பு, கத்திப்பிடி, பெண் பிள்ளை முளைப் பாலிகை.

பாலித்தல் - காத்தல், அருள் புரிதல்.
பாலேயம் - கழுதை.
பாலை - ஒரு மரம், பாலை நிலம் (Sandy desert), பாலைக் கொடி, பதினாறு வயதுக்குட்பட்ட பெண், பாலை நிலப் பாடல்.
பாலைக் கிழத்தி - துர்க்கை.
பாவகம் - தியானம், தோற்றம், பாவனை.
பாவகன் - அக்கினித் தேவன்.
பாவகாரி - பாவஞ் செய்வோன்.
பாவம் - தீவினை, தியானம், அபிப்பிராயம், பாவனை.
பாவல் - பரவுதல், பாதக் குறடு.
பாவலர் - பாடுதலில் வல்லவர்.
பாவனை - எண்ணம், தியானம், நடிப்பு.
பாவாணர் - புலவர்.
பாவித்தல் - தியானித்தல், எண்ணுதல், பொய்யாக நடித்தல்.
பாவுதல் - பரப்புதல், விரித்தல்.
பாவை - கருவிழி, பதுமை, பெண், சித்திரப் பாவை.
பாழ் - அழிவு, கெடுதி, நஷ்டம், வறுமை.
பாழி - வலிமை, விலங்கின் படுக்கை, ஊர், பகைவர் ஊர், அகலம், சிறுகுளம், பெருமை, முனிவர் இருப்பிடம், குகை.
பாளம் - உலோகக் கட்டி.
பாளி - பாசறை (Tent of an army).
பாளிதம் - சோறு, கண்டசருக்கரை, குழம்பு, பட்டுப் புடவை, கருப்பூரம், சந்தனம்.
பாளை - கமுகு முதலியவற்றின் பாளை.
பாளையகாரன் - படைத்தலைவன்.
பாளையம்-படை, பாசறை (Tent of an army).
பாற்கடற் பிறந்தாள் - இலக்குமி.
பாற்கரன் - சூரியன்.
பாற்று - உரியது.
பாறல் - சிதறு, ஓடல், இடபஇராசி, கெடல், பொருதல்.
பாறு - கழுகு, பருந்து, மரக்கலம், நீக்கெண்ணைவல்.
பாறை - ஒடுதல், கற்பாறை (Stone), திட்டை.
பான்மை - தன்மை, குணம், பகுதி.
பானகம் - பருகும் நீர்.
பானசியர் - சமையற்காரர்.
பானம் - கள், குடித்தல்.
பானல் - வயல், கருங்குவளை, கள், மருத நிலம்.
பானாள் - நடு யாமம், பாதி நாள்.
பானியம் / பானீயம் - நீர், குடித்தற் குரியவை.
பானு - ஒளி, சூரியன்.
பானு மைந்தர் - சூரிய புதல்வர்: கன்னன், சனி, சுக்கிரீவன், இயமன்.

## பி

பிகம் - குயில்.
பிகானந்தம் - வசந்த காலம்.
பிங்கலந்தை - பிங்கல முனிவராற் செய்யப்பட்ட நிகண்டு.
பிங்கலம்-பொன், பொன்னிறம், பிங்கல நிகண்டு.
பிங்கலை - ஆந்தை, பார்வதி.
பிச்சம் - ஆண்மயிர், பீலிக்குடை, வெண்குடை, இறகு.
பிச்சன் - பித்தன்.
பிச்சாடனம் - பிச்சை யெடுத்தல்.
பிச்சி - ஒரு மல்லிகை.

பிச்சு - பித்து, மூளை, மயல்.
பிசகு - குற்றம்.
பிசறுதல் - கலத்தல்.
பிசாசம் } - பேய்.
பிசாசு
பிசி - பொய், சோறு, அரும் பொருள், நற்பொருள், பொன்.
பிசிதம் - நீர், இறைச்சி, வேம்பு.
பிசிதர் - அசுரர்.
பிசிதாசனர் - இராக்கதர்.
பிசிர் - ஊற்றுநீர், திவலை, மழைத் துளி, பாண்டி நாட்டிலுள்ள ஓரூர்.
பிசின் - சாம்பிராணி, பஞ்சிநூல், மரப்பிசின் (Gum).
பிசினி - பசை (Gum), கள்.
பிசுகுதல் - கொசறுதல்.
பிசுனன் - கோளன், பொய்யன், உலோபி.
பிசைதல் - குழைத்தல்.
பிஞ்சகம் - கொலை.
பிஞ்சம் - இறகு, கொலை.
பிஞ்ஞகன் - சிவன்.
பிட்சை - பிச்சை.
பிடகம் - புத்தநூல், கல்விநூல், கூடை.
பிடகை - கூடை.
பிடர் - புறங்கழுத்து.
பிடர்த்தலை } - பிடர்.
பிடரி
பிடவம் - பிடவ மரம்.
பிடாரன் - பாம்பாட்டி.
பிடாரி - காளி.
பிடி-ஒட்டகம் யானை கவரிமான் இவற்றின் பெண், கைப்பிடி.
பிடித்தாடி - பலகறை.
பிடிதம் - பிச்சை.
பிடிப்பு - பிடித்தல், சுளுக்கு.
பிடிவாதம்-கொண்டதுவிடாமை.
பிண்டப் பொருள் - தொகைப் பொருள்.
பிண்டம்-திரட்சி, பிச்சை, உடல், கருப்பம், கவளம், சோறு, தொகுதி, பிதிர் தேவதை களுக்கிடும் உணவு.
பிண்ட வுரை - பொழிப்புரை.
பிண்டி - மா (Flour), அசோக மரம், தொகுத்தது, தினைமா, பிண்ணாக்கு.
பிண்டித்தல் - தொகுத்தல்.
பிண்டி பாலம் - எறி யாயுதம்.
பிணக் காடு - சுடுகாடு.
பிணக்கு - ஊடல், மாறுபாடு, துவக்கு, நெருக்கம்.
பிணர் - சருச்சரை (Roughness), கோங்கு.
பிணவு } - விலங்கின் பெண்.
பிணா
பிணாப் பிள்ளை - பெண் பிள்ளை.
பிணி - கட்டு, துன்பம், நோய், பந்தம்.
பிணித்தல் - கட்டுதல்.
பிணித்தோர் - நோயாளிகள்.
பிணிப்பு - கட்டு.
பிணிமுகம்-மயில், பறவை, அன்னம், முருகக்கடவுளின்யானை.
பிணியன் - நோயாளி.
பிணை - ஆசை, விலங்கின்பெண், கட்டு, பூமாலை, மான், அடகுப் பொருள் (Pledge).
பிணைத்தல்-இணைத்தல், கட்டல், தொடுத்தல்.
பிணையல் - மாலை.
பித்தம் - மயக்கம்.
பித்தன் - சிவன், பைத்தியக்காரன்.
பித்திகை-சிறு சண்பகம், சுவர்த் தலம், கருமுகை.
பித்து - பைத்தியம்.

பித்தை - ஆண் மயிர், மயிர்.
பிதற்றல் - பல முறை பேசல்.
பிதா - சிவன், பிரமன், பெரு நாரை, தந்தை.
பிதாமகன் - பாட்டன், பிரமன்.
பிதிர்-கதை, கைந்நொடி, தூவல், சுணங்கு, தந்தையின் வழியில் முற்பட்டோர்.
பிதிர்தல் - சிதறுதல்.
பிதுங்கல் - வெளிப்படல்.
பிந்துதல் - பிற்படல்.
பிய்த்தல் - பிரித்தல்.
பியல் - தோள்.
பிரக்கியாதி - கீர்த்தி (Fame).
பிரகடனம் - வெளிப்படுத்தல்.
பிரகற்பதி - தேவ குரு.
பிரகாசம் - ஒளி.
பிரகாரம்-விதம், அடித்தல், மாட வீதி, சுற்று மதில்.
பிரகிருதி - பகுதி, இயல்பு, பிர தானம், சடம் (Matter).
பிரசங்கம்-விரிவுரை (Lecture).
பிரசண்டம் - வேகம், வீரம்.
பிரசம் - தேன், கள், தேனீ, வண்டு.
பிரசவம்-பிறப்பு, பிள்ளைப்பேறு.
பிரசன்னம் - காட்சி, வெளிப்படு தல்.
பிரசாதம் - திருவருள், சிறந்த அமுது.
பிரசாபதி - அரசன், பிரமன்.
பிரசாரம் - விஸ்தரித்தல்.
பிரசித்தம் - அறிவித்தல், விளக் கம்.
பிரசுரம் - அறிவிப்பு.
பிரசை - குடிகள், பிள்ளை.
பிரஞ்ஞை - அறிவு.
பிரத்தியட்சம் - காட்சி யளவை.
பிரத்தியேகம் - தனிமை.
பிரதமம் - முதன்மை.
பிரதாபம் - வீரம், பிரகாசம்.
பிரதானம்-தலைமை, முதன்மை.
பிரதிகூலம் - மாறுபாடு.
பிரதிஞ்ஞை - மேற்கோள்.
பிரதிட்டை - ஸ்தாபித்தல்.
பிரதிநிதி-பதிலாக அமைந்தவன்.
பிரதிபலித்தல்-சாயை தோன்று தல் (Reflection).
பிரதிபிம்பம் - சாயை (Reflection).
பிரதிமை - விக்கிரகம்.
பிரதி யுபகாரம் - பதிலுதவி.
பிரதிவாதி - எதிர்வாதி (Defendant).
பிரதேசம்-இடம், வேறுதேசம், தேசம்.
பிரதை - பிரசித்தி யுடையவள், குந்தி தேவி.
பிரபஞ்சம் - உலகம்.
பிரபந்தம் - தொடர்பு.
பிரபலம் } - பிரசித்தம்.
பிரபலியம் }
பிரபாகரன் - சூரியன்.
பிரபாவம் - ஒளி, மகிமை.
பிரபு - பெருமையிற் சிறந்தவன்.
பிரபை - ஒளி.
பிரமகத்தி - பிராமணக் கொலை.
பிரம புரம் - சீகாழி நகரம்.
பிரமம்-வேதம், யாகம், மந்திரம், பிரமன், திருமால், சூரியன், நெருப்பு, முனிவர், மோட்சம், சிவன், சந்திரன்.
பிரமரம் - வண்டு.
பிரமாணம் - அளவை, சத்தியம், மேற்கோள்.
பிரமாணிக்கம் - உண்மை.
பிரமாதம்-தவறுதல், வருத்தம்.
பிரமித்தல் } - திகைத்தல்.
பிரமிப்பு }
பிரமை - அறியாமை, மயக்கம்.

பிரயத்தனம் - முயற்சி.
பிரயாசம் } - உழைப்பு, வருத்
பிரயாசை } தம்.
பிரயாணம் - பயணம்.
பிரயுதம்-பதிலட்சம்(Million)
பிரயோகம்-உதாரணம், செலுத்துதல்.
பிரயோசனம் - பயன்.
பிரலாபம் - துக்கம், அழுதல்.
பிரலாபித்தல் - அழுதல்.
பிரவர்த்தி - முயற்சி.
பிரவாகம் - வெள்ளம்.
பிரவேசித்தல் - நுழைதல், தொடங்குதல்.
பிரளயம்-வெள்ளம், உலக முடிவு காலம்.
பிராகாரம் - சுற்று மதில்.
பிராகிருதம் - அழியத்தக்கது, ஒழுங்கு கெட்ட வடமொழி.
பிராசனம் - சோறூட்டல்.
பிராசீனம் - பழைமை.
பிராட்டி - தலைவி.
பிராணன் - உயிர்.
பிராணி - உயிருள்ளது.
பிராதக் காலம்-சூரியோதயத்திற்கு முற்பட்ட ஐந்து நாழிகைக் காலம்.
பிராந்தி - மயக்கம்.
பிராமி - சரஸ்வதி.
பிராயச்சித்தம்-சாந்தி, தண்டனை.
பிராயம் - வயது.
பிரார்த்தனை - வேண்டுகோள்.
பிரான் - தலைவன், கடவுள்.
பிரியம் - அன்பு, விருப்பம்.
பிரியை - பெண், மனைவி, பிரியமுடையவள்.
பிரிவினை - பிரிவு, வேறுபாடு.
பிரீதி - விருப்பம், அன்பு.
பிருதிவி - பூமி.
பிருதை - குந்தி தேவி.
பிருந்தை - துளசி.
பிரேதம் - பிணம், பிசாசம்.
பிரேரணம் } - ஏவுதல்.
பிரேரணை }
பிலம்-கீழறை, குகை, பாதாளம்.
பிலவங்கம் - குரங்கு, தேரை, தவளை.
பிலிற்றல் - சிந்துதல், தூற்றல்.
பிழம்பு - திரட்சி.
பிழி - கள், தேன்.
பிழிதல் - வடித்தல், பிசைதல்.
பிழை - குற்றம்.
பிழைத்தல் - உய்தல், தவறுதல்.
பிழைப்பு - தவறு, வாழ்வு.
பிழைபாடு - குற்றம்.
பிள்ளை -வைரவக்கடவுள், காக்கை அணில் கீரி பூனை, முயல் முதலியவை, இளங்குழந்தை, கரிக் குருவி, கிளி, தெங்கு முதலியவற்றின் கன்று, பறவைக் குஞ்சு, மகன், ஒரு பட்டப் பெயர். [திரன்.
பிள்ளைப் பிறை-இளம்பிறைச்சந்
பிள்ளையார் - விநாயகர், முருகக் கடவுள்.
பிளப்பு - பிளத்தல், வெடிப்பு.
பிளிற்றல் - கொப்பளித்தல்.
பிளிறல் - ஒலித்தல், கிண்டல்.
பிளிறு - பேரொலி.
பிற்றை - பின்பு.
பிற - வேறு.
பிறக்கம் - தொகுதி, மலை.
பிறக்கிடல் - புறங் கொடுத்தல்.
பிறக்கு - தவறு, பின்பக்கம், வேறு.
பிறங்கல் - மிகுதி, மலை, நிறைவு, ஒலித்தல், பெருமை, விளங்கல்.
பிறந்தை-தன்மை, பிறப்பு, பிறப்பிடம்.

பிறவி - உற்பத்தி.
பிறழ்தல்-நடுக்கம், மாறுதல், ஒளி செய்தல், திரும்புதல், விளக்கம், வேறுதல்.
பிறன் - அயலான்.
பிறண்டு - வேறிடம்.
பிறிது - வேறு.
பிறை - இளஞ்சந்திரன்.
பிறை சூடி - சிவன்.
பிறை யிரும்பு - அரிவாள்.
பின்பற்றல் - தொடர்தல்.
பின்றல் - பின் தங்குதல்.
பின்றை - பின்பு.
பின்றோன்றல் - தம்பி.
பின்னம்-பின்பு, சிதைவு, தடை, வேறு, பழுது, வேறுதல்.
பின்னர் - பிறகு.
பின்னல் - சடை, பின்னுதல், முடைதல், சிக்குப்படல்.
பின்னவர் - சூத்திரர்.
பின்னவன் - தம்பி.
பின்னி - தங்கை.
பின்னை - பின்பு, தங்கை, இலக்குமி.
பின்னை கேள்வன் - திருமால்.
பின்றோன் - தம்பி.
பினாக பாணி - சிவன்.
பினாகம் - சிவன் வில், சிவன்.

## பீ

பீ - மலம், அச்சம்.
பீச நியாயம் - மூல நியாயம், பீஜாங்குர நியாயம்.
பீசம் - மூலம், விதை.
பீசாட்சரம் - மூல எழுத்து.
பீடம் - ஆசனம் (Seat).
பீடிகை-கடைத்தெரு, பூந்தட்டு, பீடம், முகவுரை, அணிகலச் செப்பு.
பீடித்தல் - துன்புறுத்தல்.
பீடு - பெருமை, வலிமை, குறைவு.
பீடை - துன்பம்.
பீதகம் - ஒரு வகைச் சாந்து, பொன்னிறம், பொன், வெட்டிவேர், தேன், பித்தளை, மஞ்சள்.
பீத சாலம் - வேங்கை மரம்.
பீதம் - பீதகம் பார்க்க.
பீதன் - பயங் கொள்ளி.
பீதாம்பரம் - பொன் வஸ்திரம்.
பீதி - பயம்.
பீந்தோல் - மேல் தோல்.
பீர் - முலைப்பால், பீர்க்கு, பசலை நிறம், அச்சம், துளி, வெளுத்தல்.
பீரிடுதல்-நீர் முதலியவை தாரையாகப் பாய்தல்.
பீரு - பயங் கொள்ளி, புருவம், அச்சம், பசலை, பீர்க்கு, முலைப் பால்.
பீருகன் - பயங் கொள்ளி.
பீரை - பீர்க்கு.
பீலி - ஆலவட்டம், மலை, மயில் தோகை, மயில், பறை, பனங் குருத்து, பெண்கள் கால்விரலணி.
பீலிக் குடை - மயில் தோகைக் குடை.
பீலித் தண்டம் - எறி யாயுதம்.
பீழ்த்தல் - வருந்தல்.
பீழை - துன்பம்.
பீள் - கருப்பம், தானிய இளங் கதிர்.
பீளை - கண் அழுக்கு.
பீற்றல் - கந்தை.
பீறல் - கந்தை, கிழியல்.
பீறுதல் - கிழித்தல்.
பீனம் - பருமை, பாசி.

# பு

புக்ககம் - மாமியார் வீடு.
புக்கில் - வீடு, புகலிடம்.
புகட்டல் - அறிவுறுத்தல், ஊட்டுதல், நுழைத்தல்.
புகர் - சுக்கிரன், குற்றம், கபில நிறம், அழகு, இரத்தக் கறை, சோறு, நிறம், புள்ளி.
புகர் முகம் - யானை.
புகரவன், புகரோன் - சுக்கிரன்.
புகல் - குதிர், சரீரம், சொல், வெற்றி, தஞ்சம், புகுதல், விருப்பம்.
புகலல் - சொல்லல்.
புகலி - சீகாழி நகரம் (Shiyali).
புகலிடம் - அடைக்கலமானவிடம், ஊர்.
புகலுதல் - சொல்லுதல், விரும்புதல்.
புகவு - உணவு.
புகழ், புகழ்ச்சி - கீர்த்தி.
புகழ்தல் - உயர்த்திக் கூறுதல், புசித்தல்.
புகழ் பொருள் - உவமேயம்.
புகற்சி - விரும்புதல்.
புகறல் - குறித்தல், சொல்லல்.
புகார் - கழி முகம், காவிரிப்பூம் பட்டினம்.
புகுடி - புருவம் (Eyebrow).
புகுதல் - சம்பவித்தல், நுழைதல், தொடங்குதல்.
புகைதல் - கோபித்தல், புகையெழல், மனம் வருந்தல்.
புங்கம் - உயர்வு, அம்பு, அம்பின் குதை, சிறு துகில்.
புங்கவர் - உயர்ந்தோர், தேவர்.
புசங்கம் - பாம்பு.
புசித்தல் - உண்டல், அனுபவித்தல்.
புஞ்சம் - திரட்சி.
புட்கரம் - நிறைவு, தீர்த்தம், நீர், ஆகாயம், பருந்து, வாள், தாமரை, யானைக்கைந் நுதி, குருகு, ஒரு தீவு, பாண்ட முகம்.
புட்கரிணி - குளம்.
புட்டம் - காக்கை, சீலை, நிறைவு.
புட்டில் - அம்பறாத்தூணி, இறைகூடை, தக்கோலக் காய்.
புட்பகம் - புட்பக விமானம்.
புட்பக விமானன் - குபேரன்.
புட்ப சரன் - மன்மதன்.
புட்பம் - பூ, மகளிர் சூதகம்.
புடம் - சுத்தம், புறம்.
புடவி - பூமி.
புடை - அடித்தல், அன்பு, ஒலி, இடம், பக்கம்.
புடைத்தல் - அடித்தல், ஒலித்தல், கொழித்தல், உடைத்தல், பருத்தல், வீங்குதல்.
புடைபடல் - அணுகல்.
புடை பெயர்தல் - நிலை மாறுதல்.
புடையல் - மாலை.
புடைவை - சீலை.
புண்டரம் - கழுகு, நெற்றிக்குறி, வெண்டாமரை.
புண்டரிகம், புண்டரீகம் - தென் கீழ்த்திசை யானை, புலி, வண்டு, கழுகு, தாமரை, வெண்டாமரை.
புண்ணியம் - நன்மை.
புண்ணியன் - தருமிஷ்டி.
புண்ணியை - தருமவதி.
புண்ணீர் - இரத்தம்.
புண்மொழிதல் - நிமித்தஞ் சொல்லுதல்.
புண்படுதல் - புண்ணுதல், நோதல்.
புணர்க்கை - மாயம்.

புணர்ச்சி - சேர்தல், இணக்கம், சந்தி.
புணர்ப்பு - உடல், இணைப்பு, உபாயம், மாயம், நியாயம், துணை.
புணர்வு - சேர்ப்பு, கலவி.
புணரி - கடல், அலை, கரை.
புணை - தெப்பம், மூங்கில், மரக்கலம்.
புத்தகம் - எடு, சித்திரப்படம், மயிலிறகு.
புத்தன் - திருமால், அருகன், புத்தன் (Buddha).
புத்திரகாமேட்டி - புத்திரனைப் பெற விரும்பிச் செய்யும் யாகம்.
புத்திரம் - அம்பு (Arrow).
புத்திரன் - தாய் தந்தையரைப் 'புத்' என்னு நரகத்தினின்று நீக்குபவன் (மகன்).
புத்திரி - மகள்.
புத்தேள் - புதுமை, தெய்வம்.
புத்தேளிர் - தேவர்கள்.
புதர் - அறிஞர், தேவர், தூறு (Shrubs), புல்.
புதல் - சிறுதூறு (Shrub), புல், நாணல், புருவம்.
புதல்வன் - மகன்.
புதல்வி - மகள்.
புதவு - கதவு, அறுகம்புல், வாயில் (Entrance).
புதினம் - புதுமை.
புதுக்கல் - புதுப்பித்தல்.
புதுமை - நூதனம், மிகுதி, அதிசயம்.
புதுவது - புதியது.
புதை - அம்புக் கட்டு, புதுமை, அம்பு, மறைவு, சரீரம்.
புதைத்தல் - சேமித்தல், மறைத்தல், மூடல், பதித்தல்.
புதையல் - பூமியில் மறைந்து கிடந்த பொருள்.
புந்தி - புதன், புத்தி.
புமான் - ஆண் மகன்.
புய்க்கல் - பறித்தல், பிடுங்கல்.
புயங்கம் - பாம்பு.
புயங்கன் - சிவன்.
புயம் - தோள்.
புயல் - பெருங்காற்று, மேகம், மழை.
புரகரன் - சிவன்.
புரசு - முருக்கமரம்.
புரசை - யானைக் கழுத்திலிடும் கயிறு.
புரட்டு - பொய், மாறுபாடு, திருப்பு.
புரணி - ஊன், தோல்.
புரத்தல் - காத்தல், கொடுத்தல்.
புரந்தரன் - இந்திரன்.
புரம் - மருத நிலத்தூர், முன், உடம்பு, இராசதானி, ஊர், நகரம்.
புரவலன் - வள்ளல், அரசன், காப்போன்.
புரவி - குதிரை.
புர விசயன் - சிவன்.
புரவி மேதம் - அசுவமேதம் (Horse sacrifice).
புரவு - அரசு, கொடை, காத்தல், விளை நிலம்.
புரளி - பொய்.
புராணம் - பழமை, வேத வாக்கியப் பொருள்களை வலியுறுத்து நூல்.
புராணிகன் - புராணஞ் செய்தவன், புராணங்கற்றுச் சொல்பவன்.
புராதனம் - பழமை.
புராந்தகன் - சிவன்.
புராரி - சிவன்.

புரி - சங்கு, விருப்பம், செய்தல், நகரம், கயிறு, கட்டு, முறுக்கல்.
புரிசை - மதில்.
புரிதல் - ஆராய்தல், செய்தல், மிகல், வளைதல், விரும்பல்.
புரிந்தார் - நண்பர்.
புரி நூல் - பூணூல்.
புரிவு - தப்புதல், செய்கை, அன்பு, விருப்பம்.
புருகூதன் - இந்திரன்.
புருட மேதம் - மனித யாகம் (Human sacrifice).
புருடர் - ஆடவர்.
புருட ராகம் - புட்ப ராகம்.
புருட வாகனன் - குபேரன்.
புருடன் - ஆண்மகன், கணவன்.
புருடார்த்தம் - புருடர் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்.
புருடோத்தமன் - புருடரில் சிறந்தவன், திருமால்.
புருவை - ஆடு, இளமை.
புரை-குற்றம், ஒப்பு, வீடு, துளை (Hole), உயர்வு, அறிவு, இரகசியம், பன்ன சாலை.
புரைக்கேறல் - புரை யேறல்.
புரைதல்-ஒப்பிடல், இழைத்தல்.
புரைபடல் - வருந்தல்.
புரையுநர் - ஒப்பவர்.
புரையோர் - கீழ்மக்கள், திருடர், மேலோர்.
புரோகதி - நாய்.
புரோகிதன் - பார்ப்பான், முன்னுடி நன்மை செய்பவன்.
புரோட்சிதம் - சுத்தஞ் செய்தல்.
புல் - புலி, கலவி, அற்பம், புல் (Grass), பனை, அனுட நட்சத்திரம், தருப்பை.

புல்லகம் - நெற்றி யாபரணம்.
புல்லம் - எருது.
புல்லர் - கீழ் மக்கள்.
புல்லல் - கூடல், பொருந்தல், கிட்டல்.
புல்லறிவு - அற்ப அறிவு.
புல்லன் - அற்பன்.
புல்லாங்குழல் - ஊது குழல் (Flute).
புல்லாடவன் - புல்லாற் செய்த ஆண் மகன் வடிவம்.
புல்லார் - பகைவர்.
புல்லி - புற இதழ்.
புல்லிதழ் - பூவின் புற இதழ்.
புல்லுதல் - தழுவல், புணர்தல்.
புல் வாய் - மான், கலை மான்.
புலங்கடந்தோர் - முனிவர்.
புலத்தல் - வெறுத்தல்.
புலப்படல் - விளங்குதல்.
புலம் - அறிவு, இடம், திசை, தேயம், வயல்.
புலம்பல் - இரங்கல், ஒலித்தல், அழுதல், வருந்தல்.
புலம்பு - ஒலி, தனிமை, பயம், குற்றம், துன்பம், நடுக்கம்.
புலம்புதல் - அழுதல், ஒலித்தல்.
புல மகள் - சரஸ்வதி.
புலமை - அறிவு.
புலர்த்தல் - உலர்த்தல், பூசுதல்.
புலர்தல் - உலர்தல், தெளிதல், வாடல், விடிதல்.
புலரி - விடியல்.
புலவர் - அறிஞர், கவி வாணர், தேவர், கூத்தர், புதன், கம்மாளர்.
புலவி - வெறுத்தல், ஊடல் முதிர்வு.
புலவு-மாமிசம், இரத்தம், முடை நாற்றம்.

புலன் - அறிவு, இந்திரியம், நிலம், விஷயம்.
புலாகம் - சோற்றுப் பருக்கை.
புலால் - மாமிசம்.
புலானீர் - இரத்தம்.
புலிக்கொடியோன் - சோழன்.
புலிங்கம் - தீப்பொறி, ஊர்க்குருவி.
புலித்தோலுடையோன் - சிவன்.
புலிமுனி - வியாக்கிரபாத முனிவர்.
புலியூர் - சிதம்பரம்.
புலுதம் - அளபெடை, மெய்யெழுத்து.
புலை - அசுத்தம், பறையன், மாமிசம், பொய்.
புலைஞர் - சண்டாளர்.
புலைத்தொழில் - கொலைத் தொழில்.
புலைப்பாடி - பறைச்சேரி.
புலையன் - தாழ்ந்த குலத்தான்.
புலோமசை - இந்திராணி (புலோமன் மகள்).
புவலோகம் - சந்திர சூரியர் வாழுமிடம்.
புவனம் - நீர், பூமி.
புவனி - பூமி.
புவி - தேர், பூமி.
புழுக்கம் - வெப்பம்.
புழுக்கல் - அவித்தல், சோறு, அவித்த பயறு.
புழுக்கை - அடிமை, அவித்தல்.
புழுகு - ஒரு வாசனைத் திரவியம்.
புழுங்கல் - வெம்பல், சினத்தல், வருந்துதல்.
புழுதி - துகள்.
புழை - சிறு வாயில், உள் துளை (Hole).
புழைக்கை - துதிக்கை, யானை.
புள் - வண்டு, பறவை, நிமித்தம், அவிட்ட நட்சத்திரம்.
புள்ளம் - அறிவாள், கொடுவாள்.
புள்ளரசு - கருடன்.
புள்ளி - மெய்யெழுத்து (Consonant), அடையாளம்.
புள்ளுவம் - வஞ்சகம்.
புள்ளுவர் - கீழோர், வஞ்சகர், வேடர்.
புளகம் - சோறு, மயிர் சிலிர்த்தல், கண்ணாடி.
புளிஞர் - வேடர்.
புளினம் - மணற் குன்று, மணல் திட்டு.
புளினர் - வேடர்.
புளுகு - பொய்.
புளைத்தல் - உயர்தல்.
புற்கலம் - உடல்.
புற்கை - கூழ்.
புற்புதம் - நீர்க்குமிழி.
புறக்கணித்தல் - வெறுத்தல்.
புறக்கிடல் - புறங்கொடுத்தல்.
புறங்கடை - தலைவாயில்.
புறங்காட்டல் - தோற்றோடுதல்.
புறங்காடு - சுடுகாடு.
புறங்காணல் - தோற்கச் செய்தல்.
புறங்காத்தல் - பிறர் வருத்தாமற் காத்தல்.
புறங்கூறல் - பிறரைக் காணாத இடத்தில் பழித்தல்.
புறங்கை - மேல் கை.
புறங்கொடுத்தல் - தோல்வியடைதல்.
புறணி - குறிஞ்சி நிலம், முல்லை நிலம், புறம், தோல், மரப்பட்டை, அவதூறு.
புறந்தரல் - பாதுகாத்தல், தோற்றல்.
புறம் - முதுகு, வீரம், இடம், பக்கம், மதில், உடல், வெளி.
புறம்பு - பக்கம், தனிமை, முதுகு, வெளியிடம்.

புறவம் | - காடு, குறிஞ்சி நிலம்,
புறவு | முல்லை நிலம், புறா.
புறவுரை - பாயிரம் (Preface).
புறனடை - புறத்திற் சொல்லிய குறிப்பு (Exception or remark).
புன்கண் - நோய், துன்பம், தரித்திரம்.
புன்செய் - சிறு தானியம் விளை நிலம்.
புன்சொல் - தாழ்ந்த சொல்.
புன்மதி-அற்ப புத்தி, இளஞ்சந்திரன்.
புன்முருவல் - இளஞ்சிரிப்பு.
புன்மை - இழிவு.
புன்னகை - இளஞ்சிரிப்பு.
புன்னாகம் - புன்னை மரம்.
புன்னெறி - பாவ வழி.
புனக்காரம் - வணக்கம்.
புனம் - காடு, கொல்லை, குறிஞ்சி நிலம், வயல்.
புனல் - குளிர்ச்சி, நீர்.
புனல் வேந்தன் - வருணன்.
புனனாடன் - சோழன்.
புனிதம் - சுத்தம்.
புனிறு - புதுமை, ஈன்றணிமை.
புனை - அழகு, பொலிவு, அலங்காரம், விலங்கு.
புனைதல் - அணிதல், அழகு செய்தல், செய்தல்.
புனைந்துரை - முகவுரை (Preface).

## பூ

பூ - அழகு, மலர், கூர்மை, பொலிவு, பிறப்பு, பூமி, தாமரைப் பூ, புகர்.
பூக்கம் - கமுகு, ஊர், மது, மருதநிலத்தூர்.
பூகதர் - புகழ்வோர்.
பூகதன் - பூமியிற் பிறந்தவன்.
பூகம் - திரட்சி, கமுகு, கழுகு, கூந்தற் பனை.
பூகம்பம் - பூமியினது நடுக்கம் (Earth quake).
பூங்கா - நந்தவனம்.
பூச்சு - பூசுதல், வெளிக்காட்சி.
பூசல்-கழுவல், பூசுதல், சண்டை, வருத்தம்.
பூசறுத்தல் - சுத்தி செய்தல்.
பூசனை - ஆராதனை.
பூசாரி - பூசை பண்ணுபவன்.
பூசித்தல் - ஆராதித்தல்.
பூசிதன் - ஆராதிக்கப்படுபவன்.
பூசுரர் - பிராமணர், முனிவர்.
பூசை - ஆராதனை, பூனை.
பூஞை - பூனை.
பூட்கை - யானை, மேற்கோள், யானை யாளி, வலிமை.
பூட்சி - உடல்.
பூட்டு - வில் நாண், தந்திரம், பூட்டு (Lock).
பூட்டை - இறை கூடை, ஏற்றம்.
பூடணம் - ஆபரணம்.
பூடு - புல், பூண்டு.
பூண் - ஆபரணம், தடி முதலிய வற்றுக்கிடும் பூண், கவசம்.
பூணி - எருது.
பூணுதல் - அணிதல்.
பூத்தல் - உண்டாதல், சிருஷ்டித்தல், பொலிதல், மலர்தல், பருவ மடைதல்.
பூத நாதன் - சிவன்.
பூத நாயகி - பார்வதி.
பூதம் - ஆலமரம், இறந்த காலம், சுத்தம், ஐம்பூதம், உயிர், கமுகு, கூந்தற் பனை, பூத கணம்.
பூதரம் - மலை, மேரு மலை.
பூதலம் - பூமி.

பூதி - நரகம், செல்வம், துர்க்கந்தம், புழுதி, விபூதி, தசை.
பூதிகம் - பூமி.
பூதிமம் } - உடல், பூமி.
பூதியம் }
பூதேவர் - பார்ப்பனர்.
பூந்தை - அம்பு (Arrow).
பூப்பு - பூத்தல், பெண்கள் சூதகம்.
பூபதி } - அரசன்
பூபன் }
பூபாலன் - அரசன், வேளாளன்.
பூமகள் - இலக்குமி, பூமிதேவி.
பூமன் - பிரமன், செவ்வாய்.
பூமாது - இலக்குமி, சரஸ்வதி, பூமி தேவி.
பூர்த்தி - நிறைவு.
பூர்வம் - கிழக்கு, முன்பு, முதுமை.
பூர்வீகம் - பழமை.
பூரணம் - நிறைவு.
பூரணை - பௌரணை (Full moon).
பூரம் - ஒரு நட்சத்திரம், ஒரு மருந்து, நிறைவு, கருப்பூரம்.
பூராயம் - ஆராய்வு, விசித்திரம்.
பூரி - பொன், நூறுகோடிகோடி கோடா கோடி.
பூரித்தல் - களித்தல், நிரப்பல், பருத்தல்.
பூரிப்பு - களிப்பு.
பூரியர் - கீழோர்.
பூருவம் - பழமை, முதன்மை, முன்பு, கீழ்த்திசை.
பூருவீகம் - பழமை, முதன்மை.
பூவல் - சிவப்பு, செம்மண்.
பூவலயம் - பூ மண்டலம்.
பூவா வஞ்சி - கருவூர்.
பூவாளி - மன்மதன் அம்பு, மன்மதன்.
பூவை - காயாமரம், நாகணவாய்ப் பறவை (Mina), பெண்.
பூழ் - காடை.
பூழி - புழுதி, சேறு, விபூதி, சேற்றிலெழுங் குமிழி.
பூழியன் - பாண்டியன்.
பூழில் - அகில், பூமி.
பூழை - துளை (Hole).
பூளை - இலவம்பஞ்சு, பூளைப்பூ, பூளைச் செடி.

## பெ

பெகிலம் - பல.
பெட்டகம் - பெட்டி.
பெட்டல் - விரும்பல், பெருவேட்கை.
பெட்டார் - நண்பர்.
பெட்டு - பொய்.
பெட்டை - கழுதை குதிரை மரை ஒட்டகம் யானை இவற்றின் பெண், பறவைப்பெண்.
பெட்பு - பெருமை, அன்பு, பேணுதல், விருப்பம்.
பெடை - பறவைப்பெண், பெண் யானை.
பெண்டகன் - அலி.
பெண்டு - பெண், மனைவி.
பெண்ணை - பனைமரம், பெண்ணை யாறு (The river Pennai).
பெண்மை - பெண் தன்மை.
பெதும்பை - பதினொரு வயதுப் பெண்.
பெம்மான் - பெருமான்.
பெய்தல் - இடுதல், சொரிதல், செறித்தல்.
பெய்வு - பெய்தல்.
பெயர் - பெருமை, புகழ், பேர்.
பெயர்ச்சி - திரும்புதல்.

பெயர்த்தல் - திரும்பல், பிடுங்கல், பிரித்தல், புரட்டல், வேறு படுத்தல், சிதைத்தல்.
பெயர்தல் - ஆடல், இடம்மாறல், மீளுதல், வேறுபடல்.
பெயல் - மேகம், மழை.
பெருக்கம் - நிறை செல்வம், மிகுதி, விசாலம்.
பெருக்கு - மிகுதி, வெள்ளம், விசாலம்.
பெருங்குழி - கடல் (Sea).
பெருச்சாளி வாகனன் - விநாயகன்.
பெருந்தகை - மிக்க பெருமையுடையவன்.
பெருந்திணை - பொருந்தாக்காமம்.
பெருந்துருத்தி - விசிறி.
பெருந்தேவி - பட்ட மகிஷி.
பெருநீர் - கடல்.
பெரும்பஞ்ச மூலம் - பஞ்சமூலம் பார்க்க.
பெரும்பான்மை - மிகுதி.
பெரும்பொழுது - அறுவகைப் பருவம் பார்க்க.
பெருமகன் - அரசன், முதல் மகன், பெருமையிற் சிறந்தவன்.
பெருமன் - தலைவன்.
பெருமா - யானை.
பெருமாட்டி - தலைவி.
பெருமாள் - பெருமையிற் சிறந்தவன்.
பெருமான் - அரசன், கணவன், சிவன், பெருமையிற் சிறந்தவன்.
பெருமிதம் - களிப்பு, செருக்கு.
பெருமுத்தரையர் - சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றுக்கும் தலைவர்.
பெருவாயன் - கழுதை.
பெற்றம் - எருது, பசு, காற்று.
பெற்றோர் - தாய் தந்தையர்.
பெற்றி - தன்மை, கருத்து.
பெற்றிமை - தனமை.
பெறுதல் - அடைதல், பிரசவித்தல்.
பெறுதி - பெரும்பயன, பெறுதல், இலாபம்.
பெறுவ கொள்வாள் - வேசி.
பென்னம்பெரிது - மிகப் பெரிது.

## பே

பே - நுரை, அச்சம்.
பேடகம் - பெட்டகம், ஒருகூத்து.
பேடன் - அலி.
பேடி - அலி, நடு விரல்.
பேடு - ஊர், அலி, மதன் கூத்து, நடு விரல், பறவைப் பெண்.
பேடை - பறவைப் பெண்.
பேணல் - காத்தல், மதித்தல், விரும்பல்.
பேணலர், பேணலார் - பகைவர்.
பேணமை - பகைமை.
பேணார் - பகைவர்.
பேணுதல் - பேணல்.
பேணுநர் - பாதுகாப்பவர்.
பேதகம் - பேதம்.
பேதம் - ஓர் உபாயம், வேறுபாடு, பிரிவு.
பேதமை - அறியாமை (மடமை).
பேதித்தல் - பிரித்தல், வேற்றுமைப்படுத்தல்.
பேது - அறியாமை, மயக்கம், தடுமாற்றம்.
பேதுறல், பேதுறவு, பேதுறுதல் - புத்தி மயங்கல், வருந்தல்.
பேதை - அறிவிலான், தரித்திரன், பெண், எழுவயதுப் பெண்.

பேதைமை-அறியாமை (Ignorance).
பேய் - பிசாசு.
பேய்ச்சி - பெண் பேய், பேய்க் குண முடையவள்.
பேய்த்தேர் - கானல் (Mirage).
பேயோடாடி - சிவன்.
பேர்-பெயர், கீர்த்தி, பெருமை, பொலிவு.
பேரண்டம் - பெரிய உலகம், தலையோடு (Skull).
பேரி - பறை, முரசு.
பேரிகை - ஒரு தோற் கருவி.
பேரிளம்பெண்-நாற்பது வயதுப் பெண்.
பேழ் - பெருமை.
பேழ்வாய் - பெரிய வாய்.
பேழை - பெட்டி.
பேறு-இலாபம், செல்வம், வரம், பெற்றெடுத்தல்.

## பை

பை - பாம்பின் படம், பச்சை, அழகு, பணம் முதலியன வைக்கும் பை (Bag), மென் மை, இளமை.
பைக்கம் - பிச்சை.
பைங்கூழ் - பயிர்.
பைசாசம் - பிசாசு, இரும்பு, பைசாச மணம்.
பைசாச மணம்-மூத்தோர், களித்தோர், துயின்றோர் இவர்களைப் புணரும் புணர்ச்சி.
பைசாசர் - ஒரு தேவ சாதியார்.
பைஞ்ஞீல் - மக்கட் பரப்பு.
பைஞ்ஞிலம் - மக்கள் தொகுதி.
பைஞ்சேறு - சாணம்.
பைத்தல் - கோபம், பசுமையாதல், பாம்பு படம் விரித்தல், பரவுதல்.
பைதல் - இளமை, குளிர், துன் பம், சிறுவன் குணம்.
பைதிரம் - நாடு.
பைது - பசுமை, ஈரம்.
பைப்பய - மெல்ல மெல்ல.
பைபீலம் - எறும்பு.
பைம்பூண் - பசுமையான பொன் னால் செய்யப்பட்ட ஆபரணம்.
பைம்மை - தவப் பெண் (Nun).
பைமறி - பையின் உட்புறத்தை வெளிப்புற மாக்குதல்.
பையப் பைய - மெல்ல மெல்ல.
பையல் - பயல், சிறுவன்.
பையாப்பு - துன்பம்.
பையுள் - அற்பம், நோய், துன் பம்.
பைரவி - காளி.
பைவர் - துன்பமுடையவர்.

## பொ

பொக்கணம் - ஒரு வகைப் பை.
பொக்கம் - பொய், மிகுதி, பொலிவு.
பொக்கு - மரப் பொந்து.
பொகுட்டு - தாமரைப் பூங்கொட் டை, மலை, சேற்றில் உண் டாகுங் குமிழி (Bubble).
பொகுவல் - ஒரு பறவை.
பொங்கடி - யானை.
பொங்கர் - மரக் கொம்பு, மலை, இலவ மரம், சோலை.
பொங்கல் - மிகுதி, பொங்குதல், உயர்வு, கோபித்தல், கள், சமைத்தல், பொலிதல்.
பொங்குதல் - மிகுதல், உயர்தல், கொதித்தல், கோபித்தல், சமைத்தல், செழித்தல், பொலிதல், விம்முதல்.
பொங்கோதை - கடல்.
பொச்சம் - பொய், குற்றம்.

பொச்சாத்தல் } -குற்றம், மறதி,
பொச்சாப்பு } சோர்தல், பொல்லாங்கு.
பொச்சாவாமை - சோர்வடையாமை.
பொச்சை - காடு, கரிக் காடு, சிறுமலை, மலை.
பொசிதல் } - கசிதல், வடிதல்,
பொசிவு } மன முருகல்.
பொசுக்குதல் - தீய்த்தல்.
பொட்டு - நெற்றிப் பொட்டு, வட்ட வடிவம்.
பொட்டை - குருடு, குருடன்.
பொடி - சூரணம், திருநீறு.
பொடித்தல் - தூளாக்கல், கெடுத்தல், நீறுக்கல், பொடியாதல், மயிர் சிலிர்த்தல், முளைத்தல்.
பொடிதல் - தூளாதல், கெடுதல்.
பொடியாடி - சிவன்.
பொடுதலை - ஒரு வகைப் பூடு (a kind of plant).
பொத்தல் - துளை, துளைத்தல், மூடல்.
பொத்து - குற்றம், பொந்து, பொய்.
பொத்தை - துளை (Hole).
பொதி - சுமை, முடிப்பு, மலர் அரும்பு.
பொதிசோறு - கட்டுச் சோறு.
பொதிதல் - கட்டல், அடைத்தல், மறைத்தல்.
பொதியம் - பொதிய மலை.
பொதியவெற்பன் - பாண்டியன்.
பொதியில் - அம்பலம், பொதிய மலை.
பொது - சபை, சிறப்பின்மை (Common).
பொதுப்பெண் - வேசி.
பொதும்பர் - சோலை, மரப் பொந்து.
பொதும்பு - சோலை, சிறுகாடு, பொந்து, புகலிடம்.
பொது மகள் - வேசி.
பொதுமை - பொதுத்தன்மை.
பொதுவர் - இடையர்.
பொதுவன் - நடுவன், முல்லை நிலத் தலைவன், இடையன்.
பொதுவி - முல்லை நிலப் பெண்.
பொதுவியர் - இடைச்சியர்.
பொதுவில் - அம்பலம்.
பொதுளல் - தழைத்தல், நெருங்கல்.
பொம்மல் - பொலிவு, சோறு, பொம்மை.
பொம்மெனல்-விரைவுக்குறிப்பு.
பொய்-அசத்தியம், மரப்பொந்து.
பொய்கை - குளம்.
பொய்த்தல் - பொய்யாதல், பொய் பேசல்.
பொய்தல் - மகளிர் கூட்டம், மகளிர் விளையாட்டு, சிற்றில்.
பொய்ந்நீர் - கானல் (Mirage).
பொய்ப்பு - பொய்த்தல்.
பொய்மை - பொய்.
பொய்யாமை - பொய்பேசாமை, தவறுமை.
பொய்யில்புலவர் - மெய்ஞ்ஞானிகள்.
பொரி - நெல் முதலியவற்றின் பொரி, பொருக்கு.
பொரித்தல்-பொரியச் செய்தல், குஞ்சுண்டாக்கல்.
பொரிதல் - மெல்ல ஒலித்தல், பொரியாதல், வெடித்தல்.
பொரியல் - பொரிக்கறி, பொரிதல்.
பொருக்கெனல் - விரைவுக் குறிப்பு.
பொருகளம் - யுத்த பூமி.
பொருட் செல்வி - இலக்குமி.

பொருட்டு - காரணம், பொருளை யுடைப்பது.
பொருட்படுத்தல் - மதித்தல்.
பொருட் பெண்டிர் - வேசிகள்.
பொருண்மை - பொருளின் தன்மை.
பொருத்தம் - இணக்கம், தகுதி.
பொருத்தல்-போரிடச் செய்தல்.
பொருதல் - மோதல், சூதாடல், போர் செய்தல், தடவுதல்.
பொருந்தலர் - பகைவர்.
பொருந்தாமை - இசையாமை.
பொருந்துதல் - தங்குதல்.
பொருநர் - படைத் தலைவர், நடிகர், அரசர், புகழ்ந்து பாடுவோர், வீரர்.
பொருநன் - அரசன், உவமிக்கப் படுபவன், ஒப்பற்றவன், பாணன், தலைவன், குறிஞ்சி நிலத்தலைவன், நடிகன், படை வீரன், போர் செய்பவன், புகழ்ந்து பாடுபவன்.
பொருநுதல் - மாறுவேடம் புனைதல்.
பொருப்பர் - குறிஞ்சிநிலவேடர்.
பொருப்பு - மலை.
பொருமல் } - வீங்கல், அழுதல்.
பொருமுதல் }
பொருவு - ஒப்பு.
பொருள் - அர்த்தம் (Meaning), பண்டம், பொன், குணம், மகன், உண்மை, மோட்சம்.
பொருள் கோள் - அநுவயம்.
பொல்லர் - சக்கிலியர், தையற்காரர்.
பொல்லாங்கு } - குற்றம், கேடு.
பொல்லாப்பு }
பொல்லார் - தீயோர்.
பொலம் } அழகு, பொன்.
பொலன் }
பொலிதல் - சிறத்தல், புணர்தல், விளங்கல், மிகுதல்.
பொலிவு - அழகு, சிறப்பு, பகுவம், விளக்கம், மிகுதி.
பொழிதல் - சொரிதல்.
பொழிப்புரை - தொகுத்துரைத்தல்.
பொழில் - பூமி, பெருமை, சோலை, நாடு.
பொழுது - காலம், சூரியன்.
பொள்ளல் - பொத்தல், செதுக்கல், மரப் பொந்து.
பொளிதல் - கொத்தல், துளைத்தல்.
பொற்கிழி - பொன் முடிச்சு.
பொற்கொல்லன் - தட்டான், கம்மாளன்.
பொற்கோள் - பிரகஸ்பதி.
பொற்பு - அழகு, பொலிவு, அலங்காரம்.
பொற்றார் - அழகிய மாலை.
பொற்றை - சிறு மலை, மலை.
பொற்றொடி - பொன்வளை (Gold bangles), பெண்.
பொறாமை - சகியாமை.
பொறி - தோணி, செல்வம், இலக்குமி, இயந்திரம் (Machine), அறிவு, அடையாளம், எழுத்து, ஐம்பொறி, தேமல், தீப்பொறி, புள்ளி, பொலிவு, விதி, மதிலுறுப்பு, முத்திரை.
பொறித்தல் - எழுதுதல், சித்திரம் வரைதல், அடையாள மிடல்.
பொறியிலி - அறிவிலி.
பொறுத்தல் - தாங்குதல், சகித்தல்.
பொறுப்பாளி - உத்தரவாதி.
பொறுப்பு - கடமை (Duty).

பொறை - மலை, துறுகல், பாரம், பொறுமை, கருப்பம், பூமி, சுமை, வலிமை.
பொறையுயிர்த்தல் - ஈனுதல்.
பொன் - அழகு, இலக்குமி, இரும்பு, வியாழன், உலோகப் பொது (Metal), சூரியன்.
பொன் மலை - மேருமலை, இமய மலை.
பொன்மை - பொன்னிறம், பொன் தன்மை.
பொன் வாய்ப் புள் - சிச்சிலிக் குருவி (The king fisher).
பொன வினை மாக்கள் - தட்டார்.
பொன்றல் / பொன்றுதல் - சாதல்.
பொன்னகர் - சுவர்க்கம் (Heaven).
பொன்னி - காவிரி யாறு.
பொன்னித் துறைவன் - சோழன்.
பொன்னுலகு - தேவ லோகம்.

## போ

போக்கம் - பொலிவு.
போக்கல் - செலுத்தல்.
போக்கியம் - செல்வம், அனுபவிக்கப்படுவது.
போக்கு - வழி, இடம், குற்றம், கழிப்பு, போதல், செலுத்தல்.
போகடல் - போக விடல்.
போக பூமி - விளை நிலம், தேவ லோகம்.
போகம் - பாம்புடல், களிப்பு, அனுபவம், விளைவு.
போகர் - தேவர்.
போகி - இந்திரன், பாம்பு, ஒரு பண்டிகை, சுகம் அனுபவிப்பவன்.
போகீதழ் - நீண்ட இமை.
போகில் - பறவை, பூ வரும்பு, கொப்பூழ் (The navel).
போகுதல் - நீளல், நேர்மை, போதல், அழித்தல்.
போகை - போதல்.
போசனம் - உணவு.
போத்திரி - பன்றி.
போத்து - விலங்கின் ஆண், செம்போத்து, மரக் கன்று.
போதகம் - யானைக் கன்று, இளமை, போதித்தல், புலி, மரக் கன்று, யானை.
போதகன் - ஆசிரியன்.
போதம் - ஞானம், மரக்கலம்.
போதரல் - போதல்.
போதன் - பிரமன், அருகன்.
போதனை - போதித்தல்.
போதி - அரச மரம், ஞானம், மலை.
போது - காலம், பூ (Flower).
போந்தது - வந்தது.
போந்து - பனை, பனை மாலை, பல்லி (Lizard).
போந்தை - பனை, பனை மாலை, அனுட நட்சத்திரம், யானை.
போம் - போகும்.
போர் - குவியல், யுத்தம், சதய நட்சத்திரம்.
போர்க்களம் - யுத்த பூமி.
போர்த்தல் - மூடல்.
போர்வை - ஆடை, உறை (Cover), தோல், மூடல், கவசம், மேற்போர்வை.
போராடல் - யுத்தம் செய்தல்.
போலி - ஒன்றைப்போன் றிருத்தல் (Imitation).
போலும் - ஒக்கும்.
போழ் - பிளவு, தகடு, வார்.
போழ்தல் - பிளத்தல்.
போழ்து - பொழுது.

போழ் முகம் - பன்றி.
போழ்வு - பிளப்பு.
போளி - அப்ப விருக்கம்.
போற்றல் - புகழ்தல், பாதுகாத்தல், துதித்தல், வணங்கல், விரும்பல், தெளிதல்.
போற்றலர் / போற்றார் - பகைவர்.
போற்றி - துதி (Praise), காப்பாயாக.
போற்றிசைத்தல் - வந்தனம் சொல்லுதல்.
போற்றுதல் - போற்றல்.
போறல் - போலுதல் (ஒத்திருத்தல்).
போனகம் - சோறு, உணவு.

## பௌ

பௌத்தம் - புத்த மதம்.
பௌத்தர் - புத்தர்.
பௌத்திரன் - சுத்தன், பெயரன் (Grand-son).
பௌத்திரி - பேர்த்தி (Grand-daughter).
பௌதிகம் - பூதங்களாலானது.
பௌதீகம் - உலகம், பூத சம்பந்தம்.
பௌர்ணிமி / பௌர்ணிமை / பௌரணை - பூரணசந்திரன் (Full moon).
பௌரவர் - பூரு வமிசத்தவர்.
பௌவம் - கடல், பூரணை, மரக்கணு.

## ம

ம - சந்திரன், சிவன், இயமன், அசோகு, ஆணவ மலம், பிரமன், திருமால்.
மஃகான் - மகரம்.
மக்கள் - மனிதர், பிள்ளைகள்.
மக்குதல் - அழிதல்.
மக - இளமை, பிள்ளை.
மகடூஉ - பெண்.
மகத்துவம் - மேன்மை.
மகதத்துவம் - அறிவு.
மக பதி - இந்திரன்.
மகம் - யாகம், மக நட்சத்திரம்.
மகமாயி - பார்வதி.
மகரக் குழை / மகர குண்டலம் - காதணியி னொன்று.
மகர கேதனன் - மன்மதன்.
மகர சங்கராந்தி - தை மாதப் பிறப்பு.
மகரத்துவசன் - மன்மதன்.
மகரந்தம் - கள், தேன், பூந்தாது, குயில் (Cuckoo).
மகரம் - சுறா மீன், பூந்தாது, அரச சின்னத்து னொன்று, மகர ராசி, முதலை.
மகராகரம் / மகராலயம் / மகரி - கடல்.
மகவான் - இந்திரன், சிவன்.
மகவு - பிள்ளை.
மகள் - பெண், புதல்வி.
மகன் - புதல்வன், ஆடவன், கணவன், வீரன்.
மகன்மை - ஆண் தன்மை.
மகாநிதி - கோடி கோடாகோடி.
மகா சங்கம் - ஆயிரங் கோடா கோடி.
மகாசோபம் - நூறு கோடி கோடா கோடி.
மகாத்மா - அறிஞர், பெரியவர்.
மகா பதுமம் - பத்துக் கோடா கோடி.
மகார் - புதல்வர்.
மகாரதன் - பதினோராயிரந் தேர்களுக்குத் தலைவன்.
மகி - பூமி.

மகிடம் - எருமைக் கடா.
மகிபதி }
மகிபன் } - அரசன்.
மகிபாலன் }
மகிமை - பெருமை.
மகிழ் - மகிழமரம், கள், களிப்பு.
மகிழ்ச்சி - இன்பம்.
மகிழ்தல் - களித்தல்.
மகிழ்நன் - கணவன்.
மகிழ்வு - களிப்பு.
மகிழம் - மகிழ மரம்.
மகுடம் - முடி (Crown).
மகுட வர்த்தனர் - அரசர்.
மகோததி - கடல் (Sea).
மகோதரம் - பெரு வயிறு, ஒரு நோய்.
மங்கல் - கெடுதல், மழுங்கல்.
மங்கல நாண் - தாலிக் கயிறு.
மங்கலம்-சுபம், சிறப்பு, வாழ்த்து, ஆக்கம், தாலி.
மங்கலன் - செவ்வாய்.
மங்கலியம் - தாலி.
மங்கலியன் - அம்பட்டன்.
மங்கலை - சுமங்கலி, இலக்குமி, பார்வதி.
மங்களம் - மங்கலம்.
மங்களை - பார்வதி. [திக்கு.
மங்குல்-மேகம், இருள், ஆகாயம்,
மங்குல்வாணி - அசரீரி.
மங்குலி - இந்திரன்.
மங்கை - பெண்.
மங்கை பாகன் - சிவன்.
மச்சம் - மீன், மச்சதேசம், பங்குனி மாதம்.
மச்சை - எலும்பினுள் ளிருக்கும் சாரம், பழச் சதை, மறு, மூளை.
மசக்குதல் - கலக்கல், மயக்கல்.
மசகம் }
மசம் } -கொசுகு (Mosquito).
மசாரதம் - கானல் (Mirage).
மசிதல் - கடைதல்.
மஞ்சம் - கட்டில். [தளிர்.
மஞ்சரி - பூங்கொத்து, பூமாலை,
மஞ்சன் - மகன்.
மஞ்சனச் சாலை - குளியலறை (Bath room).
மஞ்சனம் - அபிடேகம்.
மஞ்சாடி - இரண்டு குன்றி மணி எடை, ஒரு மரம்.
மஞ்சிகன் - அம்பட்டன்.
மஞ்சிகை - குண்டலம், பெட்டி.
மஞ்சு - ஆபரணம், வலிமை, அழகு, மேகம், யானை முதுகு, இளமை, பனி.
மஞ்சுளம் - அழகு.
மஞ்ஞை - மயில்.
மஞ்ஞை யூர்தி - முருகக் கடவுள்.
மட்கலம் - மண் பாண்டம்.
மட்குதல் - மழுங்குதல்.
மட்டம் - எல்லை, சமம், மிதம்.
மட்டித்தல் - பூசுதல், வட்டமாக்கல்.
மட்டு - அளவு, கள், எல்லை, தேன்.
மட்பகைஞன் - குயவன்.
மடக்கல் - வளைத்தல், அடக்கல்.
மடக்கு - மடிப்பு, பெரிய அகல்.
மடக்கொடி - பெண்.
மடங்கல் - இடி, சிங்கம், இயமன், நோய், யுகம், ஊழித்தீ, மடங்குதல்.
மடங்கற் கொடியோன் - வீமன்.
மடங்கு - பங்கு, அளவு.
மடந்தை - பெண், பதினொறு வயதுப் பெண்.
மட நடை - மென்னடை.
மடம் - அறிவின்மை, சத்திரம், முனிவர் இருப்பிடம், அழகு, மேன்மை.

மடமை - அறிவின்மை.
மடல் - பனையேடு போன்றவை, பூவிதழ், ஒரு பிரபந்தம்.
மடவரல் - இளம்பெண்.
மடவரலியர் - பெண்கள்.
மடவார் - பெண்கள்.
மடவாள் - மனைவி.
மடி - அடங்குதல், சோம்பல், வயிறு, நோய், புடைவை, தாழ், கெடுதல், பொய், சோம்பேறி, மடிப்பு.
மடித்தல் - கொல்லுதல், மடிக்குதல், சோம்பல் கொள்ளல்.
மடிதல் - அழிதல், கெடுதல், சாய்தல், மடங்குதல்.
மடு - குளம், ஆற்றிலுள்ளபள்ளம்.
மடுத்தல் - உண்ணல், அழுத்தல், நிறைத்தல், பாய்தல்.
மடை - நீர் மதகு, சோறு, ஆபரணக் கடைப்புணர்வு.
மடைத் தொழில் - சமையல் தொழில்.
மடைப்பள்ளி - சமையலறை.
மடையன் - சமையற்காரன்.
மண் - அணு, அலங்காரம், கழுவுதல், பூமி, மத்தள மார்ச்சனை.
மண்டல் - நெருங்கல்.
மண்டல புருடன் - சூடாமணி நிகண்டின் ஆசிரியன்.
மண்டலம் - குதிரை, ஊர், வட்டம், நாற்பது நாள் கொண்ட கால அளவு, பூமி. [நாய்.
மண்டலி - பூனை, பாம்பு, பூமி,
மண்டலீகர் - அரசர்.
மண்டிலம் - குதிரை, சூரிய சந்திரமண்டிலம், நாடு, வட்டம், வட்டமா யோடல்.
மண்டூகம் - தவளை (Frog).
மண்டை - இரப்போர் பாத்திரம், தலையோடு (Skull).
மண்ணல் - அலங்கரித்தல், கழுவுதல்.
மண்ணவர் - மனிதர்.
மண்ணீடு - திண்ணை, சுண்ணாம்புப் பொம்மை.
மண்ணீர் - கழுவும் நீர்.
மண்ணுண்ணி - ஒரு பாம்பு, திருமால்.
மண்ணுதல் - மண்ணல்.
மண்ணுறுத்தல் - பண்ணல், அலங்கரித்தல்.
மண்ணை - பேய், இளமை, மூடன்.
மண்ணோர் - மனிதர்.
மண மகள் - பூமி தேவி. [தல்.
மணத்தல் - பரிமளித்தல், கூடு
மணம் - வாசனை, கூட்டம், கலியாணம்.
மணவறை - கலியாணம் பண்ணுமிடம், பள்ளியறை (Bed room).
மணவாட்டி - மண மகள்.
மணவாளர் - நாயகர்.
மணாட்டி - மண மகள்.
மணாளன் - மண மகன்.
மணி - இரத்தினம், அழகு, கறுப்பு, நன்மை, அடிக்குமணி (Bell), இரண்டரை நாழிகை நேரம் (An hour), கண் மணி, தாமரைக்கொட்டை, தானியமணி.
மணிக்கட்டு - கையின் ஓர் உறுப்பு (Wrist).
மணி கண்டன் - சிவன்.
மணிபூரம் - கொப்பூழ் (The navel).
மணி வடம் - இரத்தின மாலை.
மத்தகம் - நெற்றி, தலை, யானைத் தலை.
மத்தம் - ஊமத்தை (Narcotic plant), களிப்பு, செருக்கு.

மத்திகை - குதிரைச் சம்மட்டி (Whip), விளக்குத் தண்டு, மாலை.
மத்திமம் - இடை, குறைவு.
மத்தியத்தன் - நடு நியாயக்காரன்.
மத்து - ஊமத்தை (Narcotic plant), தயிர் முதலிய கடையும் மத்து, தயிர்.
மத்தை - ஊமத்தை (Narcotic plant).
மத கயம் - யானை.
மதகு - குளத்தின் நீர்த்தாரை.
மதங்கர் - பாணர்.
மதங்கி - பாண் மகள், காளி, பார்வதி.
மதம் - யானை மதம், செருக்கு, கருத்து, கொள்கை, சமயம், (Religion), தேன், வலிமை.
மத மொய் - யானை.
மதர் - களிப்பு, மிகுதி, செருக்கு.
மதர்வு - மனக் களிப்பு, அழகு, வலிமை, இடம், மிகுதி.
மதலை - மகன், கொன்றை மரம், மரக்கலம் (Ship), கொடுங்கை, தூண், பற்றுக் கோடு.
மத வலி - முருகன், அரசன்.
மதன் - வலிமை, மன்மதன், அழகு, செருக்கு.
மதனன் - மன்மதன்.
மதாசலம் - யானை.
மதாணி - பதக்கம்.
மதாவளம் - யானை.
மதி - சந்திரன், மாதம், புத்தி, முன்னிலை யசைச் சொல், குபேரன்.
மதித்தல் - உபசரித்தல், கடைதல், எண்ணுதல், அளவிடல்.
மதிப்பகை - இராகு.
மதிப்பு - மதித்தல்.
மதி மகன் - புதன்.
மதியம் - சந்திரன், மாதம்.
மது - கள், தேன், வசந்த காலம்.
மதுகம் - இலுப்பை மரம், எட்டி மரம், அதிமதுரம், தரா என்னும் உலோகம், அழகு, வண்டு.
மதுகரம் - ஆண் வண்டு, வண்டு, தேனீ, கள், எட்டி மரம்.
மதுகை - அறிவு, வலிமை, வெற்றி (Victory).
மது சூதன் / மது சூதனன் - திருமால்.
மதுரம் - இனிமை, அதிமதுரம், மதுர கவி.
மதோன்மத்தன் - மிகு களிப்பு உடையவன்.
மந்தகாசம் - புன்னகை.
மந்தணம் - இரகசிய ஆலோசனை.
மந்தம் - அசீரணம், அற்பம், சோம்பல், தாமதம்.
மந்த மா - யானை.
மந்த மாருதம் - இளந்தென்றல்.
மந்தரம் - ஒரு மலை, ஓர் இசை.
மந்தன் - கூர்மையில்லான், சனி.
மந்தாகினி - கங்கை.
மந்தாரம் - ஐந்தருவி லொன்று, செவ்வரத்தம்.
மந்தி - பெண் குரங்கு, வண்டு.
மந்திரம் - ஆலோசனை, தேவர் கோயில், குதிரைக் கூட்டம், வீடு, கள், அரண்மனை, வேதம், மறை மொழி.
மந்திரி - குபேரன், சுக்கிரன், பிரகஸ்பதி, அமைச்சன் (Minister).
மப்பு - மந்தம், மந்தாரம்.
மம்மர் - துன்பம்.
மமதை - கர்வம்.
மயக்கம் - கலத்தல்.

மயக்கு - மயக்கம், கலத்தல்.
மயம் - அழகு, செருக்கு, சிற்பநூலுள் ஒன்று.
மயர்வு - மயக்கம்.
மயல் - செத்தை, மயக்கம், பேய், ஆசை.
மயானம் - சுடுகாடு.
மயிர் - கவரி.
மயிர்க்கூச்சு - மயிர் சிலிர்த்தல்.
மயிர் பொடித்தல் - மயிர் சிலிர்த்தல்.
மயில் வாகனன் - முருகன்.
மயிலை - மீன ராசி, மீன், இருவாட்சி, மயிலாப்பூர்.
மயூரம் - மயில்.
மர்க்கடம் - குரங்கு.
மரக் கலம் - கப்பல் (Ship).
மரக்கால் - ஆயில்ய நட்சத்திரம், சோதி நட்சத்திரம், திருமால் கூத்து, துர்க்கை கூத்து, முகத்தலளவைக் கருவி.
மரகதம் - பச்சைக் கல்.
மரணம் - சாவு.
மரபு - முறைமை, பழமை, வமிசம்.
மரமல்லிகை-அன்னப்பறவை.
மரவடி - பாதக் குறடு(Wooden slippers).
மரவம் - குங்கும மரம், வெண்கடம்பு.
மராடி - மரவடி.
மரா மரம் - ஆச்சா மரம்.
மரித்தல் - சாதல்.
மரியாதை - ஒழுங்கு, நீதி.
மரு - வாசனை, மருக்கொழுந்து.
மருகன் - மருமகன்.
மருகி - மருமகள்.
மருங்கு - இடை, பக்கம், குலம், செல்வம்.
மருங்குல் - இடை.
மருஞ்சகம் - இரசக் கற்பூரம்.
மருட்சி - மயக்கம்.
மருட்டல் } - மயக்கல்.
மருட்டுதல் }
மருண்மா - யானை.
மருத்து - காற்று.
மருத்துவம் - வைத்தியம்.
மருத்துவர் - வைத்தியர், அசுவினி தேவர்கள்.
மருத்துவிச்சி - வைத்தியச்சி.
மருதம் - மருதமரம், வயல், மருத நிலத்து ராகம்.
மருந்து - அமுதம், மருந்து (Medicine).
மருப்பு - மரக்கொம்பு, விலங்கின் கொம்பு, இஞ்சி (Ginger), யானைத் தந்தம்.
மருமம் - மார்பு, உயிர் நிலை, இரகசியம் (Secret).
மருமான் - மருமகன், வழித்தோன்றல்.
மருவல் - அணைத்தல், கலத்தல், நெருங்கல், பொருந்தல்.
மருவலர் } - பகைவர்.
மருவார் }
மருவாளி - பச்சைக் கற்பூரம்.
மருவுதல் - மருவல்.
மருள் - மயக்கம், பேய்.
மருளல் - மயங்கல்.
மரூஉ - இலக்கண விதி சிதைந்து வழங்குஞ் சொல்.
மரை - காட்டுக் குதிரை, தாமரை, தவளை.
மல் - வளம், வலிமை, திருமால் கூத்து.
மல்கல் - பெருகல், நிறைதல்.
மல்லல் - வலிமை, வளம், அழகு.
மலங்கு - ஒரு மீன்.
மலங்குதல் - கலங்குதல்.
மலடி - பிள்ளை பெறாதவள்.

மலம் - அழுக்கு, குற்றம்.
மலயக் கால் - தென்றல்.
மலயசம் - சந்தனம், தென்றல்.
மலயம் - சந்தனம், பொதியமலை.
மலய முனி - அகத்தியர்.
மலர் - பூ (Flower).
மலர்ச்சி - பொலிவு, மலர்தல்.
மலர்தல் - எதிர்தல், தோன்றுதல், விரிதல்.
மலரவன் } - பிரமன்.
மலரோன் }
மலாடு - மலையமான் நாடு.
மலிதல் - மிகுதல், நிறைதல்.
மலிபு - மிகுதி.
மலினம் - அழுக்கு, குற்றம்.
மலைத்தல் - தடுமாறல், மாறுபடுதல், பொருதல்.
மலைதல் - சண்டையிடல், அணிதல், திகைத்தல்.
மலை நாடு - சேரநாடு.
மலைப்பு-திகைப்பு, யுத்தம், மாறுபாடு.
மலைபடு திரவியம் - மலையில் உண்டாகும் பொருள்கள்: மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்.
மலை மடந்தை - பார்வதி.
மலையமான் - சேரன.
மலையாளிலம் - தென்றல்.
மலைவு-உவமை, யுத்தம், மயக்கம், மாறுபாடு.
மவுலி - முடி(Crown), சடை.
மழ - இளமை, பிள்ளை.
மழலை - குதலைச்சொல் (Prattling).
மழவர் - இளைஞர், வீரர்.
மழவு - இளமை.
மழித்தல் - மொட்டையடித்தல்.
மழு - எரியிரும்பு, கோடரி (Axe).
மழுக்கம் - மழுங்கல்.
மழுங்கல் - ஒளிகெடல், கூர்மை கெடல்.
மழுவாளி - சிவன், பரசுராமன்.
மழுவேந்தி - சிவன்.
மழை - குளிர்ச்சி, மேகம், நீர், மாரி(Rain).
மழை யலர் - நீர்.
மள்ளம் - வலிமை.
மள்ளர் - உழவர், படை வீரர், வலியவர், குறிஞ்சி நில மாக்கள், மருத நில மாக்கள்.
மர்குணம்-மூட்டுப் பூச்சி(Bug).
மற்போர் - மல் யுத்தம்.
மற்று - அசைநிலை, பிறிது, வினை மாற்று.
மறதி - மறப்பு.
மறம் - ஆண்மை, கோபம், பிணக்கு, இயமன, வீரம், பாவம், வலிமை, கொலை.
மறல் - பிணக்கு, இயமன், எழுச்சி, பகை, மயகக்ம், மறத்தல், மறுத்தல், வறுமை.
மறலி - மயக்கம், இயமன், மறதி, பொறுமை.
மறவம் - மறதி.
மறவர் - படை வீரர், வேடர், அரசர்.
மறவன் - வலியவன், வீரன், வேடன்.
மறவி - கள், மறதி, இழிவு, பொறுமை.
மறி-ஆடு குதிரை மான் இவற்றின் குட்டி, மான், மேடராசி.
மறித்தல் - தடுத்தல், திருப்புதல்.
மறிதல் - தடை படல், மடங்குதல், திரும்பல்.
மறு - குற்றம், மச்சம் (Mole), வேறு.
மறுக்கம் - சுழற்சி.

மறுகு - சிறுதெரு, தெரு.
மறுகுதல் - மனம் குழம்பல்.
மறுத்தல் - நீக்கல்.
மறுதலை - பகைவன்.
மறுப்பு-மறுதலித்தல் (Refusal).
மறுமை - வரு பிறப்பு.
மறுமொழி - உத்தரம் (Reply).
மறுவல் / மறுவி } -கஸ்தூரி மிருகம்.
மறை - மறைவு, வேதம், அடைக்கலம், இரகசியம், மறுத்தல், மந்திரம்.
மறைத்துமொழிகிளவி - இடக்கர் அடக்கல்.
மறைபொருள் - உட்பொருள்.
மறைமுதல் / மறைமுதலி } - சிவன்.
மறைமொழி - மந்திரம்.
மறையோன - பிரமன், பிராமணன், வியாழன்.
மன் - நிலை, மிகுதி, அரசன், அசை நிலை, மந்திரம்.
மன்பதை - மக்கட் பரப்பு.
மன்றம்-வெளி, வாசனை, சபை, நிச்சயம், நெடுந்தெரு.
மன்றல் - வாசனை, கலியாணம்.
மன்றாடுதல்-கெஞ்சிக் கேட்டல்.
மன்று - சபை.
மன்னல் - நிலைபெறுதல், அடுத்தல், பெருமை, வலிமை.
மன்னவன் / மன்னன் } - அரசன், உத்திரட்டாதி நட்சத்திரம்.
மன்னித்தல் / மன்னிப்பு } - பொறுத்தல்.
மனக்கோட்டம் - பொறாமை, மனக் கோணல்.
மனவு - மணிப்பொது, சங்கு, அக்கு மணி.
மனனம் - சிந்தித்தல்.

மனு - ஓர் அரசன், மந்திரம், மனு தரும சாஸ்திரம்.
மனுடன் - மனிதன்.
மனு மக்கள் - மனிதர்கள்.
மனை - மனைவி, வீடு.
மனையறம் - இல்லறம்.
மனையாட்டி / மனையாள் } - மனைவி.
மனைவி - நாயகி (Wife).
மனை வேள்வி - இல்லறம்.
மனோகரம் - மகிழ்ச்சி, அழகு.
மனோரதம்-இன்பம், விருப்பம்.
மனோரம்மியம் - மனத்திருப்தி.

## மா

மா - வண்டு, பெருமை, இடித்த மா (Flour), அழகு, குதிரை, அழைத்தல், வெறுப்பு, விலங்கு (Beast), செல்வம், கருமை, இலக்குமி, ஓர் எண், பூமி, சரஸ்வதி, சீலை, மாமரம், வயல், தாய், வலிமை.
மாக்கள் - மனிதர், விலங்குகள்.
மாகதர் - புகழ்ந்து பாடுபவர்.
மாகம் - ஆகாயம், திக்கு, யாகம், மேகம், மாசி மாதம்.
மாகாணம் - நாடு (Presidency).
மாகாணி - ஓர் எண், சுடுகாடு.
மாகு - வலை மணி, வலை.
மாகுலவர் - வேடர்.
மாங்கலியம் - தாலி.
மாசி-மக நட்சத்திரம், ஒருமாதம்.
மாசியம் - இறந்தவர்க்கு மாதந் தோறும் இயற்றும் கடன்.
மாசு - அற்பம், குற்றம், மேகம், அழுக்கு.
மாசுணம் - பாம்பு, பெரும்பாம்பு.
மாசை - பொன்.
மாட்சி / மாட்சிமை } - நன்மை, பெருமை.

மாட்டல் - மூட்டல், அழித்தல், வருத்தல்.
மாட்டாமை - இயலாமை.
மாட்டார் - இயலாதவர்.
மாட்டுதல் - செலுத்தல், இயலுதல், மூட்டுதல், கட்டுதல், பூணுதல், சொருகுதல்.
மாடகம் - யாழின் முறுக்காணி.
மாடம் - உழுந்து, வீடு, உப்பரிகை (Terrace).
மாடு - பொன், செல்வம், பக்கம், இடம், பசுப் பொது.
மாடை - பொன்.
மாண் - பெருமை.
மாண்டல் - இறத்தல், சிறத்தல்.
மாண்டவர்-இறந்தவர், சிறந்தவர்.
மாண்பு - அழகு, பெருமை.
மாணல் - பெருமை, சிறத்தல்.
மாணவகன், மாணவன் - கற்பவன் (Student), பிரமசாரி.
மாணுக்கன்-கற்பவன் (Student)
மாணுர் - பகைவர்.
மாணி - பிரமசாரி, குள்ளம்.
மாணை - ஒருகொடி (Creeper).
மாத்திரம் - அளவு, தனிமை.
மாத்திரை - கண்ணிமைப் பொழுது (a second), அற்பம்.
மாத்திரைக்கோல் - அளவுகோல்.
மாதங்கம் - யானை.
மாதங்கர் - சண்டாளர்.
மாதங்கி - பார்வதி, காளி.
மாதர் - இடைச்சொல், ஆசை, அழகு, பெண்கள்.
மாதரி - காளி.
மாதலி - இந்திரன் சாரதி.
மாதவம்-தவம்,கள்,வசந்தகாலம்.
மாதவன் - திருமால், முனிவன், மன்மதன்.
மாதவி - குருக்கத்திக் கொடி, சுபத்திரை, கோவலன் காதலி.
மாதா - தாய், பார்வதி, சரஸ்வதி.
மாதா மகன் - தாயைப் பெற்ற பாட்டன்.
மாதாமகி-தாயைப்பெற்றபாட்டி.
மாதி - வட்டமா யோடல்.
மாதிரம் - திக்கு, ஆகாயம், மலை, யானை, பூமி.
மாதிரி - விதம் (Specimen).
மாது - அசைச் சொல், காதல், பெண்.
மாதுரியம் - இனிமை.
மாதுலன் - தாயுடன் பிறந்த மாமன் (Maternal uncle, Father-in-law).
மாதுலா, மாதுலி, மாதுலை - மாமன் மனைவி, மாமி (Maternal aunt, Mother-in-law).
மாதேவன் - சிவன்.
மாந்தர் - மனிதர்.
மாந்தல் - உண்டல், பருகல், சாதல்.
மாந்தி - மா மரம்.
மா புலி - சிங்கம்.
மா மணி - மாணிக்கம்.
மாமாத்திரர் - வைத்தியர்.
மாமி - அம்மான் மனைவி.
மாமை - நிறம், அழகு, கருமை.
மாய்த்தல் - கொல்லல், மறைத்தல்.
மாய்தல், மாய்வு - சாதல், மறைதல்.
மாயம் - வஞ்சனை, பொய், கனவு, அழகு, கறுப்பு.
மாயவன், மாயன் - கரியவன், திருமால்.
மாயூரம் - ஒரு சிவ தலம், மயில்.
மாயை - வஞ்சனை, காளி, ஒரு முத்தி நகரம்.

மாயோள் - பெண்.
மாயோன் - திருமால்.
மாயோன் மருகன் - முருகக் கடவுள்.
மார்க்கணம் - அம்பு.
மார்க்கம் - சமயம் (Religion), தெரு, வழி.
மார்ச்சாலம் - பூனை.
மார்த்தாண்டன் - சூரியன்.
மார்பம் - மார்பு.
மார காகளம் - குயில் (Cuckoo).
மாரன் - மன்மதன்.
மாராயம் - உவகை.
மாரி - மரணம், கள், நோய், மேகம், காடுகாள், மழை.
மாரீசம் - வஞ்சகம்.
மாருதம் - காற்று.
மாருதி - அனுமன், வீமன்.
மால் - புதன், பெருமை, மேகம், திருமால், மயக்கம், காற்று, அருகன், இந்திரன், கருமை.
மாலி - சூரியன், கள்.
மாலிகை - மாலை (Garland).
மாலுதல் - மயங்குதல்.
மாலுந்தி வந்தோன் - பிரமன்.
மாலுமி - கப்பலோட்டி (Sailor)
மாலூர்தி - கருடன்.
மாலை - அந்திப் பொழுது, இரவு, பூமாலை, ஒழுங்கு.
மாவலர் - குதிரைப் பாகர்.
மாவுத்தன் - குதிரைப் பாகன், யானைப் பாகன்.
மாழ்கல் / மாழ்குதல் / மாழாத்தல் } - மயங்குதல்.
மாழை - பெண், உலோகக்கட்டி, அறிவின்மை, அழகு, ஓலை, இளமை, புளிமா, மாமரம்.
மாளல் / மாளுதல் } - சாதல்.
மாற்றம் - சொல், மாற்றுதல்.
மாற்றலர் / மாற்றார் } - பகைவர்.
மாற்று - உவமை, எதிர், நீங்கல்.
மாற்றுதல் - அழித்தல், மறுத்தல், வேறாக்கல்.
மாறர் - சடகோப ஆழ்வார்.
மாறன் - சடகோபர், பாண்டியன்.
மாறாட்டம் - மாறுபாடு, மயக்கம்.
மாறு - துடைப்பம், பகை, விரோதம், இறத்தல்.
மாறுகோள் - விரோதம், ஒவ்வாமை.
மாறுபாடு - மாறு படல்.
மான - விலங்கின் பொது (Beast), மான் (Deer), மகர ராசி, குதிரை, மலை, மகான், மகத்துவம்.
மான்மகன் - பிரமன், மன்மதன்.
மான் மதம் - கஸ்தூரி (Musk).
மான்மியம் - மகிமை.
மான் மைந்தன் - மன்மதன், பிரமன்.
மான்றல் - மயங்கல்.
மானம் - அளவு, வெட்கம், விமானம், பெருமை, குற்றம், ஒப்பு.
மானல் - மயக்கம், ஒத்தல்.
மானவர் - மனிதர்.
மானார் - பகைவர், பெண்கள்.
மானி - மானமுடையவன்.
மானியம் - பரிசாகக் கொடுத்த நிலம்.
மானினி - பெண்.
மானுதல் - மானல்.

## மி

மிக்கவை - தீயவை, மிகுதியானவை.
மிக்கான் - அறிஞன், பெரியன்.

மிக்கோர் - அறிஞர், பெரியோர்.
மிகல் } - அதிகரித்தல்.
மிகுதல் }
மிகுதி - அதிகம்.
மிகை - அதிகம், குற்றம், பகை, துன்பம்.
மிச்சம் - மிகுதி, பொய், சேடம்.
மிச்சில் - மிகுபொருள், எச்சில்.
மிச்சை - அறிவின்மை, பொய், தரித்திரம்.
மிசிரம் - கலப்பு.
மிசை - உணவு, மேடு, மேல்.
மிசைதல் - உண்ணல்.
மிஞ்சல் } - கடத்தல், மிகுதியாதல்.
மிஞ்சுதல் }
மிஞிறு - வண்டு.
மிடல் - வலிமை.
மிடறு - கழுத்து, தொண்டை.
மிடா - பானை, குழிசி.
மிடி } - தரித்திரம்.
மிடிமை }
மிடுக்கு - வலிமை.
மிடை - தூறு (a bush).
மிடைதல் - நெருங்குதல், வருந்தல்.
மிண்டன் - வலியவன்.
மித்திரன - நண்பன், சூரியன்.
மித்திரை - தோழி.
மித்துரு - நண்பன.
மித்தை - பொய்.
மிதக்கல் } - மேலே கிளம்புதல் (Floating).
மிதக்குதல் }
மிதத்தல் }
மிதம் - அளவு.
மிதவை - தெப்பம், சோறு.
மிதியடி - பாதுகை (Wooden slippers).
மிரட்டல் - வெருட்டல்.
மிரியல் - மிளகு.
மிருக தரன் - சந்திரன், சிவன்.
மிருகம்-மான், விலங்கு (Beast).
மிருக மதம் - கஸ்தூரி (Musk).
மிருக ராசன் - சிங்கம்.
மிருகாதனம் - புலி.
மிருகேந்திரன் - சிங்கம்.
மிருத்து - மரணம், மண்.
மிருத்துஞ்சயம் - மரணத்தை விலககும் மந்திரம்.
மிருதங்கம் - மத்தளம்.
மிருதசஞ்சீவி } - உயிர் தரும் மருந்து.
மிருதசஞ்சீவினி }
மிருது - மென்மை.
மிலாறு - வளார்.
மிலேச்சன - அறிவீனன், கீழ்மகன.
மிலைச்சல் } - சூடுதல்.
மிலைச்சுதல் }
மிலைதல் }
மிழலை - மழலை (Prattling).
மிழற்றல் } - சொல்லுதல்.
மிழற்றுதல் }
மிளிர்தல் - ஒளிசெய்தல், விளங்குதல், புரளுதல்.
மிளை - குறுங்காடு.
மிறை - குற்றம், வருத்தம்.
மிறைக் கவி - சித்திர கவி.
மிறைத்தல் - வருந்தல்.
மின் - ஒளி, மினனல்.
மினமினி - மின்மினிப்பூச்சி.
மின்னல் - ஒளி செய்தல், மின் (Lightning).
மின்னோர் - பெண்கள்.
மினுக்கு - ஒளி.

## மீ

மீ - ஆகாயம், மிகுதி, மேலிடம்.
மீக்கூர்தல் - மிகப் பெருகுதல்.
மீக்கூற்றம் } - புகழ் (Fame).
மீக்கூற்று }
மீக்கூறு }

மீக்கோள் - ஏறுதல், போர்வை.
மீகாமன் } -மாலுமி (Sailor).
மீகான்
மீச்செலவு - இறுமாப்பு.
மீட்சி - மீளுதல்.
மீட்டல் - திருப்பல், யாழ் வாசித்தல்.
மீது - மேல்.
மீதூரல் - நெருங்கல்.
மீந்தோல் - மேல் தோல்.
மீமிசை - மேன்மேல்.
மீயான் - மாலுமி (Sailor).
மீளாக் கதி - மோட்சம்.
மீளி - வலிமை, வலியவன், மேன்மை யுள்ளோன், பெருமை, இயமன்.
மீளிமை - வலிமை, வீரம்.
மீளுதல் - திரும்புதல்.
மீறுதல் - அடங்காதிருத்தல்.
மீன் - மச்சம் (Fish), நட்சத்திரம், சித்திரை நட்சத்திரம்.
மீனக்கொடியன் - பாண்டியன், மன்மதன்.
மீனம் - மீன், மீன ராசி.
மீனவன் - பாண்டியன்.
மீனேறு - மகர மீன்.

## மு

முக்கடு } -சுக்கு, மிளகு, திப்பிலி.
முக்கடுகம்
முக்கடுகு
முக்கண் - மூன்று கண், தேங்காய்.
முக்கண்ணன் - சிவன், விநாயகன், வீரபத்திரன்.
முக்கண்ணி - பார்வதி, காளி, தேங்காய்.
முக்கரணம் - திரிகரணம்.
முக்கல் - முக்குதல்.
முக்கனி - முப்பழம்.
முக்காரம் - எருதின் தொனி.
முக்காலம் - இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்.
முக்காழ் - மூன்று கோவையான முத்து வடம்.
முக்கியம்-மேன்மை, பிரதானம்.
முக்குடுமி - சூலம்.
முக்குணம் - சாத்துவிகம், இராசதம், தாமதம்.
முக்குற்றம்-காமம், வெகுளி, மயக்கம்.
முக்கோணம் - மூன்று மூலை (Triangle).
முகங்கொடுத்தல் - எதிரில் இசைந்திருத்தல்.
முகடி - மூதேவி.
முகடு - உச்சி.
முகத்தல் - தோண்டல், மொள்ளல், யாசனை பார்த்தல், முகத்தல் அளவை.
முகத்துதி - ஒருவனைப் பார்த்து போது புகழ்தல் (Flattery).
முகப்பு - தலைப்பு, முன், முகத்தல்.
முகபடாம் - யானை முகப் போர்வை.
முகமன் - உபசாரம்.
முகவுரை - முன்னுரை (Preface).
முகவை - அகப்பை, முகத்தல், இராம நாத புரம் (Ramnad).
முகன் - முகம், முகத்தையுடையவன்.
முகாந்தரம் - காரணம்.
முகில் - மேகம்.
முகிழ் - அரும்பு (Bud).
முகிழ்த்தல் - குவிதல், சிலிர்த்தல்.
முகிழ்ப்பு - குவிவு.
முகுடம் - முடி (Crown).

முகுந்தன் - திருமால்.
முகுரம் - கண்ணாடி, மல்லிகை.
முகுளம் - அரும்பு.
முகூர்த்தம் - நல்ல காலம், இரு நாழிகைநேரம் (48 minutes).
முகை - அரும்பு.
முச்சங்கம் - பாண்டி நாட்டில் விளங்கிய முதல் இடை கடைச் சங்கங்கள்.
முச்சந்தி - மூன்று தெருக் கூடுமிடம், 1. காலை, 2. உச்சி, 3. மாலை.
முச்சில் - சிறு முறம்.
முச்சுடர் - சந்திரன், சூரியன், அக்கினி.
முசலம் - உலக்கை, இருப்பு உலக்கை (Iron pestle).
முசலி-உடும்பு(Guana), தாழை, பலதேவன, பல்லி (Lizard), முதலை (Crocodile) ஓணான்.
முசிப்பு - இளைத்தல்.
முசு - குரங்கு.
முசுடர் / முசுண்டர் - கீழ் மக்கள்.
முஞ்சுதல் - சாதல், முடிதல்.
முட்டு - குறைவு, தடை, மேடு, குற்றம், மோதுதல், வருந்தல்.
முட்புறக் கனி - பலாப் பழம்.
முடக்கல் - வளைத்தல்.
முடங்கல் - தாழை, ஓலைச் சீட்டு, நோய், வளைவு, மூங்கில்.
முடங்குளை - சிங்கம்.
முடத்தி - முடப்பெண்.
முடம் - குற்றம், நொண்டி, வளைவு.
முடலை - திரட்சி, உருண்டை.
முடவன் - நொண்டி.
முடி - மயிர் முடி, தலை, கிரீடம் (Crown), முடிச்சு.
முடிதல் - சாதல், கெடுதல், கட்டுதல், முற்றுதல்.
முடிவு - சாவு, இறுதி.
முடுக்கு - மூலை, கோணல், கோணல் தெரு.
முடுகல் - துரத்தல், எதிர்த்தல், விரைதல்.
முடை - புலால் நாற்றம்.
முடைதல் - பின்னுதல் (Plaiting).
முண்டகம் - தாழை, கள், தாமரை, நெற்றி, முட்செடி.
முண்டகாசனை - இலக்குமி.
முண்டம் - உடற்குறை, நெற்றி, திரட்சி.
முண்டனம் - மொட்டை.
முண்டிதம்-மொட்டையடித்தல்.
முண்டை - விதவை (Widow).
முத்தகம் - தன்னில் பொருள் முடியும் செய்யுள்.
முத்தம் - அன்பு உதடு, மருத நிலம், முத்து, கொஞ்சுதல்.
முத்தமிழ்-இயல் இசை நாடகம்.
முத்தர்-மோட்சத்துக் குரியவர்.
முத்தரையர் - சேர சோழ பாண்டி நாடுகளுக்குத் தலைவர்.
முத்தலைக் கழு / முத்தலை யயில் / முத்தலை வேல் - சூலம்.
முத்தாடல் - முத்தமிடல்.
முத்தி - மோட்சம்.
முத்திதன் - முத்தியைக் கொடுப்பவன்.
முத்தி நகரங்கள் 7: - அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.
முத்திரை - அடையாளம் (Seal, Stamp).

முத்தீ - ஆகவனீயம், தட்சிணாக்கினியம், காருகபத்தியம். (இவை முறையே சதுர வடிவமாகவும், முக்கோண வடிவமாகவும், வில் வடிவமாகவு மிருக்கும்).
முத்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல்.
முதம் - சந்தோஷம்.
முதலல் - தொடங்கல்.
முதலாளி - தலைவன்.
முதலி-ஒரு பட்டப்பெயர், முதல்வன்.
முதலெழு வள்ளல்கள் - குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி.
முதனிலை - காரணம், பகுதி (Root).
முதிதம் } - உவகை.
முதிதை }
முதியர் - பெரியர்.
முதியாள் - மூத்தவள்.
முதிர்தல்-முற்றுதல், தேறுதல்.
முதிரம் - ஒரு மலை.
முதிரை - அவரை துவரை கொள் பயறு முதலியன.
முதுக்குறைந்தோர் - பேரறிஞர்.
முதுக்குறைவு - அறிவு மிகுதல்.
முதுகாடு-சுடுகாடு.
முதுசொல் - பழமொழி (Proverb).
முதுமை - பழமை, மூப்பு.
முதுமொழி - பழமொழி (Proverb).
முதுவர்-புலவர், மந்திரிகள், மூத்தவர்.
முந்தல் - முற்படல்.
முந்திரி - ஒரு பின்னம் ($\frac{1}{320}$).
முந்திரிகை - ஒரு மரம்.
முந்து - பழமை.
மூந்தூழ் - பழவினை, மூங்கில்.
முந்தை - பாட்டன், பழமை, இளமைப் பருவம், முன்.
முந்தையோர் - முன்னோர்.
முந்நீர் - கடல் (Sea).
முந்நூல் - பூணூல், (முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்னும் மூவகை நூல்).
முப்பகை - முக்குற்றம்.
முப்பத்திரண்டறம் - ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்கு உண்டி, பசுவுக்குத் தீனி, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச் சோறு, பிள்ளை பெறுவித்தல், பிள்ளை வளர்த்தல், பிள்ளை பால்வார்த்தல், அறவைப் பிணஞ் சுடல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்க்கு மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண் மருந்து, தலைக்கு எண்ணெய், பெண்போகம், பிறர் துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறு விடுத்தல், விலை கொடுத் துயிர்காத்தல், கன்னிகா தானம்.
முப்பத்து மூன்று தேவர்-ஆதித்தர் பன்னிருவர், அசுவினிகள் இருவர், உருத்திரர் பன்னிருவர், வசுக்கள் எண்மர்.
முப்பலை - திரிபலை பார்க்க.
முப்பழம் - மாம்பழம், பலாப் பழம், வாழைப் பழம்.
முப்பாட்டன் - பாட்டனுக்குப் பாட்டன்.
முப்பால்-அறம், பொருள், இன்பம் (திருக்குறள்).

முப்பான் - முப்பது.
முப்புடைக்காய் - தேங்காய்.
முப்புரம் - பொன் வெள்ளி இரும்பு இவற்றாலான புரங்கள்.
முப்புரமெரித்தோன் - சிவன்.
முப்புரி நூல் - பூணூல்.
முப்புவனம் - சுவர்க்கம், மத்தியம், பாதலம்.
மும்மதம் - யானையின் கன்னமதம், கபோலமதம், பீசமதம்.
மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை.
மும்முரசு - மங்கலமுரசு, வெற்றி முரசு, கொடை முரசு.
மும்முரம் - உக்கிரம்.
மும்மூர்த்தி - பிரமன், விஷ்ணு, உருத்திரன்.
மும்மை - உம்மை, இம்மை, மறுமை என்னு முப்பிறப்பு.
முமூட்சு - மோட்சத்தில் விருப்பமுடையவன்.
முயங்கல்-புணர்தல், பொருந்தல்.
முயலல் - முயற்சி செய்தல்.
முயற் கூடு - சந்திரன்.
முயற்று - முயற்சி.
முயறல் - முயலுதல்.
முயிறு - ஒரு வகை எறும்பு.
முரகரி - திருமால்.
முரசக்கொடியோன் - தருமன்.
முரசு - பேரிகை, வாத்தியப் பொது, உத்திரட்டாதிநட்சத்திரம்.
முரண் - வலிமை, பகை, போர், மாறுபாடு.
முரண்டன் - மாறுபாடுள்ளவன்.
முரம்பு - பாறை, மேடு.
முரலல் - ஒலித்தல்.
முரள் - இப்பி (Shell).
முரளி - மூக்கால்வாசிக்குங்குழல்.
முரற்சி | முரற்றல் | - ஒலித்தல்.
முராரி - திருமால்.
முரிதல் - ஒடிதல், கெடுதல்.
முருக்கு - முருக்க மரம்.
முருக்குதல் - அழித்தல், கொல்லுதல்.
முருகன் - இளையவன், முருகக் கடவுள், வெறியாட்டாளன.
முருகு - கள், இளமை, முருகக் கடவுள், வாசனை, அழகு, திருவிழா, காதணி, தேன்.
முருங்கல் - அழிதல்.
முருடன் - வேடன்.
முருந்து - வெண்மை, மயில்இறகின அடி முள்.
முல்லை - வனமல்லிகை, வெற்றி, முல்லை நிலம், கற்பு, சாதாரி என்னும் பண், கஞ்சா.
முல்லையர் - இடையர்.
முழக்கம் | முழக்கு | - ஒலி.
முழங்கல் - ஒலித்தல்.
முழந்து - முழங்கால்.
முழம் - 8 அங்குல அளவு (Cubit).
முழவம் | முழவு | - மத்தளம், பறை.
முழவுக் கனி - பலாப் பழம்.
முழா - முழவு.
முழுக்காளி - முத்துக் குளிப்பவன் (A pearl-diver).
முழுக்கு - ஸ்நானம் (Bathing).
முழுத்தம் - முகூர்த்தம்.
முழுத்தல் - முழுமையாதல்.
முழுது - எல்லாம்.
முழு மக்கள் - மூடர்.
முழு மகன் - மூடன்.
முழுவல் - நீர்ப்பறவை, முத்துக் குளித்தல் (Pearl-diving).

முழை - குகை (Cave).
முழைஞ்சு - மலைக் குகை (Cave).
முள்காத்தல் - மௌனமா யிருத்தல்.
முள்ளி - முட்செடி, கள்.
முளரி - விறகு (Fire-wood), நெருப்பு, தாமரை, நுண்மை, காடு, முட்செடி.
முளவு - முள்ளம் பன்றி.
முளா - முள்ளங்கி.
முளிதல் - காய்தல்.
முளை - மூங்கில், அங்குரம், மகன், ஆப்பு (Peg).
முளைத்தல் - உண்டாதல்.
முற்படல் - எதிர்ப்படல், முந்துதல்.
முற்பனி - முன் பனிக்காலம்.
முற்றம் - வீட்டின் முற்பக்கம்.
முற்றல் - வயிரங்கொள்ளல், முதிர்தல், முடிதல், விளைதல்.
முற்றியலுகரம் - தன் மாத்திரையில் குறையாத உகரம்.
முற்றில் - சிறு முறம்.
முற்று - முடிவு.
முற்றுகரம் - முற்றியலுகரம்.
முற்றுகை - முற்றுதல்.
முற்றும் - எல்லாம்.
முறம் - சுளகு, விசாகநட்சத்திரம்.
முறி - எழுதோலை, தளிர், துண்டு, வெண்கலம் (Bronze).
முறித்தல் - ஒடித்தல்.
முறியன் - அடிமை (Slave).
முறுக்கல் - கோபித்தல், திரித்தல்.
முறுமுறுத்தல் - கோபித்தல்.
முறுவஞ்சி - முத்து.
முறுவல் - சிரிப்பு, பல்.
முறுவலித்தல் } - சிரித்தல்.
முறுவலிப்பு }
முறை - புத்தகம், ஊழ் (Fate), ஒழுங்கு, நீதி, வகை, முறையீடு, வரிசை.
முறைப்பு - விறைப்பு.
முறைமை - முறை, கிரமம்.
முறையிலார் - கீழ் மக்கள்.
முறையீடு - முறையிடுதல்.
முனவன் - முதல்வன்.
முன் பிறந்தாள் - அக்காள்.
முனவு - பழமை, முன்.
முன்றானை - வஸ்திர முகப்பு.
முன்றில் - முற்றம்.
முனோறனல் - தலைமையன்.
முன்னம் - எண்ணம், குறிப்பு, முற்காலம், முன்.
முன்னர் - முன்.
முன்னல் - நினைத்தல், மனம்.
முன்னவன் - கடவுள், தலைமையன்.
முன்னிலை - முன்னிடத்தொன்று (2nd person in grammar).
முன்னுதல் - நினைத்தல், முற்படல்.
முன்னூல் - கடவுள் சொல்லிய நூல் (The vedas).
முன்னை - அக்காள்.
முன்னையோர் - பழையவர்.
முன்னோர் - பழையவர், மந்திரிகள்.
முனி - யானைக்கன்று, முனிவன், வில், அகத்தி மரம்.
முனிதல் } - கோபித்தல், வெறுத்தல்.
முனிவு }
முனை - பகை, நுனி, வெறுப்பு, கூர்மை, படை, முதன்மை, போர் (War).
முனைதல் - பகைத்தல்.
முனைந்தோர் - பகைவர்.
முனைப்பதி - பாசறை (The tent of an army).
முனை முகம் - போர் முகம்.
முனைவர் - பகைவர், முனிவர், கடவுள்.
முனைவு - கோபம்.

## மூ

மூ - மூப்பு.
மூக்கறை - மூக்கறுந்தவன்.
மூக்கு - காம்பு, நாசி (Nose).
மூக்குத்தி - பெண்கள் மூக்கணி.
மூகம் - ஊமை (Dumbness).
மூகன் | மூகை | மூங்கன் - ஊமையன் (Dummy).
மூங்கா - கீரிப்பிள்ளை (Mongoose).
மூங்கை - ஊமை.
மூசல் - மொய்த்தல், சாதல்.
மூசாம்பரம் - காசுக் கட்டி.
மூசுதல் - மூசல்.
மூஞ்சி - முகம்.
மூஞ்சூறு - சுசுந்தரி (Mole).
மூட்டல் - பொருத்துதல், எவுதல்.
மூட்டு - கடிவாளம், சந்து.
மூட்டை - மூட்டுப்பூச்சி (Bug), பை (Bag).
மூடிகம் - பெருச்சாளி (Bandicoot).
மூத்தல் - முதிர்தல்.
மூத்தாள் - அக்காள், மூதேவி, கிழவி.
மூத்தோர் - புலவர், மந்திரிகள், முதியவர்.
மூத்தோன் - தமையன், பெரியவன், விறையுநர்.
மூதணங்கு - காடுகிழாள், மூதேவி.
மூதரித்தல் - ஒப்புவித்தல்.
மூதறிஞர் - பேரறிவாளர்.
மூதறிவு - பேரறிவு.
மூதாக்கள் - பெரியோர்.
மூதாட்டி - கிழவி.
மூதாதை - பாட்டன்.
மூதாளர் - முதியவர்.
மூதுணர்வு - பேரறிவு.
மூதுரை-பழமொழி (Proverb).
மூப்பு - முதுமை.
மூய்தல் - மூடுதல்.
மூர்க்கம்-உக்கிரம் (Obstinacy).
மூர்க்கன் - உக்கிர முள்ளவன், நாகப் பாம்பு (Cobra).
மூர்ச்சித்தல் | மூர்ச்சை - நினைவற்றுக் கிடத்தல்.
மூர்த்தம் - உடம்பு, தலை, முகூர்த்தம்.
மூர்த்தி - வடிவுடையவன்.
மூர்த்திகரம் - தெய்வீகம்.
மூரல் - சிரிப்பு, பல், சோறு.
மூரி - எருது, எருமை, வலிமை, பழமை, பெருமை, நெரிவு, சோம்பல்.
மூல தனம்-முதற்பணம் (Capital).
மூலம் - வேர், முதல், காரணம், கிழங்கு, மூல நட்சத்திரம், ஒரு நோய் (Piles), உரையில்லாப் பாடம் (Text).
மூலி - மருந்துப் பூடு.
மூலை - கோணம் (Angle).
மூவகை வைசியர் - கோவைசியர் (இடையர்), பூவைசியர் (உழவர்), தனவைசியர் (வணிகர்).
மூவர் - (க) பிரமன், திருமால், சிவன்.
(உ) அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர்.
(ந) சேரசோழபாண்டியர்.
மூவரசர்-சேரசோழ பாண்டியர்.
மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை (Person in grammar).
மூவிலைவேல் - சூலம்.
மூவுலகம் - சுவர்க்கம், மத்தியம், பாதலம்.
மூழ்கல் - அமிழ்தல், முழுகல்.
மூழ்த்தம் - முகூர்த்தம்.

மூழ்த்தல் - முதிாதல.
மூழி-அகப்பை(Ladle), சோறு, நீர் நிலை.
மூழை - அகப்பை, சோறு.
மூளுதல் - கூடல், பற்றி யெரிதல்.

## மெ

மெச்சுதல் - கொண்டாடுதல்.
மெத்தல் - நிரம்பல்.
மெத்து - மென்மை (Softness).
மெத்தெனல் - மிருது.
மெத்தை - படுக்கை, சட்டை, பஞ்சணை, மேல் வீடு.
மெது - மிருது.
மெய் - உண்மை, உடல், அறிவு, ஒற்றெழுத்து (Consonant).
மெய் காப்பாளர்-காவலர் (Body-guards).
மெய்ஞ்ஞானம் - உண்மையறிவு.
மெய்த்தல் - உண்மையாதல்.
மெய்ந் நலம் - தேக வலிமை.
மெய்ந் நீர் - மூத்திரம்.
மெய்ப்பை - சட்டை (Coat).
மெய்ப் பொருள் - உண்மைப் பொருள், கல்வி, கடவுள்.
மெய்ம்மை - உண்மை.
மெய்ம்மொழி - வேதம்.
மெய்யுதகம் - மூத்திரம்.
மெருகு - பளபளப்பு.
மெல்கல் - இலேசாதல்.
மெல்லிது - மிருதுவானது.
மெல்லியர் - பெண்கள்.
மெல்லியல் - பெண்.
மெல்விலை - வெற்றிலை.
மெலிதல் - இளைத்தல், வருந்தல்.
மெலிவு - இளைப்பு, வருத்தம்.
மெலுக்கு - வெளியலங்காரம்.
மென்னடை - அன்னம்.
மென்மை - மிருது.

## மே

மே - மேயல், மென்மை.
மேக்கு - மேல் திசை, மேல்.
மேகசம் - முத்து (Pearl).
மேகப்புள் - வானம்பாடி (Sky-lark).
மேகம் - முகில் (Cloud), ஒரு நோய், குயில்.
மேகலை - பெண்கள் இடையில் அணியும் எழு கோவை மணி.
மேக வாகனன் - இந்திரன்.
மேகானந்தி - மயில்.
மேடம் - ஆடு, மேட ராசி.
மேட மாதம் - சித்திரை மாதம்.
மேடு - உயர்வு, திடர்.
மேடை - திண்ணை, உப்பரிகை.
மேத்தியம் - சுத்தம்.
மேத்திரம் - ஆட்டுக் கிடா.
மேதகம் - கோமேதகம், மதிப்பு.
மேதகையர் - உயர்ந்தோர்.
மேதம் - கொலை, யாகம், கொழுப்பு.
மேதாவி - அறிஞன்.
மேதி - எருமை.
மேதியன் - இயமன்.
மேதினி - பூமி.
மேதை - மேதால், கள், புதன், இறைச்சி, பேரறிவு, நரம்பு, மேன்மை.
மேதையர் - புலவர்.
மேம்படல் - உயர்தல்.
மேம்பாடு - மேன்மை.
மேய்த்தல் - ஆடு மாடுகளைப் புல் மேயும்படி செய்தல்.
மேய்ப்பன் - ஆடுமாடுகளை மேய்ப்பவன் (Shepherd).
மேரு வில்லி - சிவன்.
மேல் - இடம், ஆகாயம், மேற்கு, மேன்மை, அதிகம்.

மேல் காற்று - கோடை.
மேலவர் - தேவர், பெரியோர்.
மேலிடுதல் - அதிகரித்தல்.
மேலீடு - அதிகரிப்பு, மேன்மை.
மேலுலகம் - தேவருலகம்.
மேலேழுலகம் - பூலோகம், புவலோகம், சுவர்க்க லோகம், சன லோகம், தபோ லோகம், சத்திய லோகம், மகா லோகம்.
மேலை - மேல்.
மேலையோர் - மேலோர்.
மேலோர் - தேவர், பெரியர்.
மேவல் - பொருந்தல், ஆசை, சொல்லுதல், நிரம்பல்.
மேவலர் } - பகைவர்.
மேவார் }
மேவினர் - நண்பர்.
மேழகம் - கவசம், ஆடு.
மேழி - கலப்பைக் கைப்பிடி.
மேழிப் படை - கலப்பை.
மேழியர் - வேளாளர்.
மேளனம் - கூட்டம்.
மேற்கட்டி-விதானம் (Canopy).
மேற்கோள்-ஆசிரிய வசனமாகிய முன்னோர் வழக்கு (Quotation), சபதம், போர்வை.
மேற்றிசைப்பாலன் - வருணன்.
மேன் மக்கள் - பெரியோர்.
மேனி - வடிவம், நிறம், அழகு.
மேனை - மலையரசன் மனைவி.

## மை

மை - அஞ்சனம், மேகம், மலடு, இருள், ஆடு, குற்றம், கருமை.
மைஞ்சன் - மைந்தன் (Son).
மைத்தல்-பசித்தல்,ஒளிமழுங்கல்.
மைத்துனன்-மச்சான் (Brother-in-law).
மைத்துனி - மைச்சினி (Sister-in-law).
மைதல் - மசிதல்.
மைதிலி - சீதை.
மைந்தர் - புத்திரர், மனிதர்.
மைந்தன் - வலியவன், மகன்.
மைந்து - வலிமை, அழகு, மயக்கம்.
மைம்மா - பன்றி.
மைம்மை - மலடி, மலட்டு எருமை.
மையம் - நடு (Middle).
மையல் - மயக்கம், மோகம்.
மையலவர் - பித்தர்.
மையாத்தல் - மயங்கல்.
மைனு - நாகணவாய்ப் புள்.

## மொ

மொக்கணி - குதிரைக்குக் கொள்ளுக் கட்டும் பை.
மொக்கு - பூ அரும்பு (Bud).
மொக்குள்-நீர்க்குமிழி(Bubble), பூவரும்பு (Bud).
மொக்கை - பருமை, கூரின்மை.
மொஞ்சக் கையர் - சமணர்.
மொட்டு - பூவரும்பு (Bud).
மொத்துதல் - அடித்தல்.
மொத்தை - திரட்சி.
மொந்தன் - ஒரு வகை வாழை.
மொந்தை - ஒரு வகைப் பாத்திரம் (a kind of earthen vessel).
மொய் - போர்க் களம் (War-field), போர், யானை, மொய்த்தல், வண்டு, கூட்டம்.
மொய்த்தல் - நெருங்கல்.
மொய்ம்பு - தோள், வலிமை.
மொழி - சொல், கணு.
மொழிதல் - சொல்லுதல்.
மொழி பெயர்த்தல் - ஒரு பாஷையில் உள்ளதை மற்

றொரு பாஷையிற் செய்தல் (Translation).
மொள்ளல் - முகத்தல்.

## மோ

மோக்கம் - விடுதல், மோட்சம்.
மோகம் - மயக்கம், விருப்பம்.
மோகரம் - உக்கிரம், மயக்கம்.
மோகன் - மன்மதன்.
மோகனம் - மயக்கம்.
மோகித்தல் - மயங்கல்.
மோகினி - ஒரு தேவதை.
மோசம் - பொய், வஞ்சனை.
மோசனம் - விடுதல்.
மோடி - காடுகாள், ஆக்கை, ஒரு வித்தை.
மோடு - மேடு, வயிறு, உயர்ச்சி, பெருமை.
மோத்தல் - வாசனை யறிதல்.
மோத்தை - வெள்ளாட்டுக் கிடா.
மோதகம் - உருண்டை, பிட்டு.
மோதல் - அடித்தல்.
மோதிரம் - விரலணி (Ring).
மோப்பம் - மோத்தல் (Smelling).
மோரா - பொற்காசு.
மோலி - கிரீடம் (Crown), தலை.
மோவாய் - தாடி (Chin).
மோழல் - பன்றி.
மோழை - மொட்டை, கஞ்சி.
மோனம் - மௌனம்.
மோனை - முதல், பாட்டில் முதற் சீரின் முதலெழுத்தோடு பின் வருஞ் சீரின முதலெழுத்து ஒன்றி வருவது (Alliteration).

## மௌ

மௌட்டியம் - அறியாமை.
மௌத்திகம் - முத்து (Pearl).
மௌலி - முடி (Crown).
மௌவல் - முல்லை, காட்டு மல்லிகை.
மௌனம் - மோனம்.
மௌனி - பேசாதிருப்பவன்.

## ய

யக்கன் - இயக்கன் (A yaksha).
யக்கியம் - யாகம் (Sacrifice).
யசுர் - இரண்டாம் வேதம்.
யஞ்ஞம் - யாகம்.
யஞ்ஞ மூர்த்தி - திருமால்.
யத்தனம் - முயற்சி.
யதார்த்தம் - உண்மை.
யதி - முனிவன்.
யதி ராசர் - இராமானுசர்.
யது - யயாதியின் மூத்த புத்திரன்.
யந்திரம் - சக்கரம், திரிகை, தேர்.
யமகண்டம் - நற்காரியம் செய்யத் தகாத வேளை.
யமகம் - ஓர் அடியின் முதலில் வந்த சொற்களே மற்ற அடிகளின் முதலிலும் வரும் செய்யுள்.
யம படர் - இயம தூதர்.
யம ரதம் - எருமைக் கிடா.
யமுனை - காளிந்தி நதி (The river Jamna).
யமுனைத் துறைவர் - இராமானுசருக்கு ஆசாரியராகிய ஆளவந்தார்.
யவம் - நெல்.
யவனம் - ஒரு தேசம்.
யவனர் - சோனகர், கம்மாளர், சித்திரகாரர் (Artists), மிலேச்சர்.

## யா

யா - வினா.
யாக்குதல் - கட்டுதல்.
யாக்கை - உடல். கட்டுதல்.

யாகம் - வேள்வி.
யாங்கு - எப்படி.
யாங்ஙனம் - எங்ஙனம்.
யாசகம் - பிச்சை யெடுத்தல்.
யாசகன் - பிச்சைக்காரன்.
யாசித்தல் - பிச்சை யெடுத்தல்.
யாடு - ஆடு (Goat).
யாணர் - அழகு.
யாண்டு - எவ்விடம், வருடம்.
யாண்டை - எவ்விடம்.
யாணர் - புதுமை, தச்சர், அழகு, நன்மை.
யாத்தல் - கட்டுதல்.
யாத்திரை - பயணம் (Pilgrimage).
யாதம் } -பசுக்கூட்டம்.
யாதவம் }
யாதவன்-இடையன், யது குலத்தவன், கிருஷ்ணன்.
யாதனை - துன்பம், நரகத்தில் மக்களைக் கொல்லாமல் வருத்தும் நோய்.
யாதுதானன்-அரக்கன்.
யாதுதானவர் - இராக்கதர்.
யாப்பு - பாட்டு, கட்டு, உறுதி.
யாமம் - தென் திசை, இரவு, சாமம், நள்ளிரவு.
யாமளம்-காளியைத் தெய்வமாகக் கொண்ட ஒரு வேதம், பச்சை.
யாமளை - பார்வதி, காளி.
யாமியம் - தெற்கு.
யாமினி - இராத்திரி.
யாமை - ஆமை (Tortoise).
யாய் - தாய்.
யாவதும் - சிறிதும், எல்லாம்.
யாழ் - மிதுன ராசி, வீணை, அசுவினி நட்சத்திரம், திருவாதிரை நட்சத்திரம்.
யாழ்ப்பாணர் - வீணை வாசிக்கும் சாதியார்.
யாழ் முனிவர் - நாரதர்.
யாழ் வல்லோர் } -கந்தருவர்.
யாழோர் }
யாழோர்கூட்டம்-கந்தருவமணம்.
யாளி - சிங்கம், யானை யாளி, சிங்க ராசி.
யாளியூர்தி - காளி, துர்க்கை.
யாறு - ஆறு (River).
யானம் - மரக்கலம், பல்லக்கு, வாகன விகற்பம்.
யானைத் தீ-பெரும்பசி விளைக்கும் ஒரு நோய்.
யானை முகன் - விநாயகன்.
யானை யுரித்தோன் - சிவன்.

## யு

யுகம் - இரண்டு, நால்வகை யுகம்.
யுக முடிவு - ஊழிக்காலம்.
யுகளம் - இரண்டு.
யுகாதி - வருடப் பிறப்பு (New year).
யுகாந்தம் - உலக முடிவு காலம்.
யுத்த சன்னத்தன் - போருக்கு ஆயத்த மானவன.
யுத்தம் - போர், உசிதம்.
யுத்தி - விவேகம், ஆராய்ச்சி.
யுதிட்டிரன் - தரும ராசன்.
யுவதி - பதினாறுவயதுப் பெண்.
யுவ ராசன் - இளவரசன்.
யுவன் - வாலிபன்.

## யூ

யூகம் - கருங்குரங்கு, விவேகப் தருக்கம், ஆராய்தல், படை படை வகுப்பு, பேன்.
யூகி - விவேகி.
யூகித்தல் - யோசித்தல்.
யூதபம் - யானை யரசு.
யூதம் - யானைக் கூட்டம்.
யூதர் - ஒரு தேசத்தார் (Jews).
யூதிகை - முல்லை.

யூபம் - உடற்குறை, யாகத்தூண், படை வகுப்பு, யாகம்.

யூமம் - காட்டு மல்லிகை.

## யோ

யோக்கியதை - தகுதி.

யோக்கியன் - தகுந்தவன்.

யோக நித்திரை - அறிதுயில்.

யோகம் - தியானம், கூட்டம், உபாயம், உயர்வு.

யோகி - சிவன், அருகன், யோகம் செய்பவன்.

யோகினி - காளி, ஒரு பெண் தெய்வம்.

யோகு - யோகம்.

யோசனை - ஆலோசனை, பதினொரு மைல் தூரம்.

யோசித்தல் - ஆராய்தல்.

யோனி - பிறப்பு, பெண் குறி.

## யௌ

யௌவன தசை - வாலிபப் பருவம்.

யௌவனம் - இளமை.

## வ

வஃகான் - வகர எழுத்து.

வக்கணை - வருணனை, நாகரிகம், நிந்தை.

வக்கரித்தல் - திரும்புதல்.

வக்கா - ஒரு பறவை (A kind of **stork**).

வக்கிர கிரீவம் - ஒட்டகம்.

வக்கிரதுண்டர் - விநாயகர்.

வக்கிரம் - கொடுமை, மீளுதல், மடங்குதல், வட்டம், பொறாமை.

வக்கிரன் - இடையெழு வள்ளல்களுள் ஒருவன், செவ்வாய், குரூரன், சனி.

வக்கிராங்கம் - அன்னப் பறவை.

வக்கு - வழி, வதங்குதல்.

வக்குதல் - வதக்குதல்.

வகித்தல் - மேற்கொள்ளல், ஆகித்தல்.

வகிர் - பிளவு, வழி, வார்.

வகிர்தல் - பிளத்தல், கோதுதல், பங்கிடல்.

வகுஞ்சம் - இரவு.

வகுணி - ஒலி.

வகுத்தல் - கூறு செய்தல், வகைப்படுத்தல்.

வகுத்தான் - கடவுள்.

வகுப்பு - அழகு, பகுப்பு.

வகுளம் - மகிழ மரம்.

வகுளாபரணர் - சடகோபர்.

வகை - இனம், சிறு தெரு, உபாயம், வகுப்பு, முறை.

வகையுளி - மொழி சிதைந்து பிரிந்து சீராகி நிற்பது.

வங்கணம் - சிநேகம்.

வங்கம் - வெள்ளி, மரக்கலம், ஈயம், கத்தரிச் செடி, ஒரு தேசம், ஒரு பாஷை.

வங்காரம் - பொன், உலோகக் கட்டி.

வங்கிசம் - வம்சம்.

வங்கியம் - இசைக் குழல்.

வங்கு - புற்று, துளை, குகை.

வங்கூழ் - காற்று.

வங்கை - பகை.

வச்சயம் - கலை மான்.

வச்சல் - கன்றையுடைய பசு.

வச்சிர தரன், வச்சிர பாணி - இந்திரன்.

வச்சிரம் - சதுரக்கள்ளி, மர வைரம், வைரமணி, வச்சிராயுதம்.

வச்சிரன், வச்சிரி - இந்திரன்.

வச்சை - உலோபம்.

வசதி - நல்லிடம், வீடு, ஊர்.
வசந்தம் - இளவேனில், வாசனை, இந்திர மாளிகை.
வசந்தன் - தென்றல், மன்மதன்.
வசந்திகை - தேமல்.
வசநாவி - விஷம் (Poison).
வசம் - கீழ்ப்படிதல், ஒழுங்கு, அமைதல்.
வசவி - கொடியவள்.
வசவு - இழிவுரை.
வசனம் - சொல், உரை நடை (Prose).
வசி - கூர்மை, வசியம், வாள், நீர், மழை.
வசிகரித்தல் - வசப்படுத்தல்.
வசித்தல் - தங்கல்.
வசியம் - வசமாதல்.
வசீகரணம், வசீகரம் - வசமாக்கல்.
வசு - பசுவின் கன்று, பொன், அஷ்ட வசுக்கள், நெருப்பு.
வசுதை, வசுந்தரை, வசுமதி - பூமி.
வசை - குற்றம், இகழ்ச்சி, மலட்டுப் பசு.
வஞ்சகம் - கபடம், கீழ்மை.
வஞ்சம் - கபடம், கொடுமை, அழிவு, பொய், வாள்.
வஞ்சனை - தெய்வப் பெண், மாயை, பொய்.
வஞ்சி - வஞ்சி நகரம், வஞ்சிப்பா, வஞ்சிக் கொடி, பெண், பகைமேற் செல்வோர் அணியும் மாலை, வஞ்சி மரம்.
வஞ்சித்தல் - வஞ்சனை செய்தல்.
வஞ்சியர் - பெண்கள்.
வஞ்சிரம் - ஒரு மீன்.
வஞ்சி வேந்தன் - சேர மன்னன்.
வஞ்சினம் - சபதம்.
வஞ்சுளம் - வேங்கைமரம், அசோக மரம்.
வஞ்சுளன் - கரிக்குருவி.
வட்கர் - குற்றம்.
வட்கல் - நாணம், கெடுதல், ஒளி மழுங்கல்.
வட்கார் - பகைவர்.
வட்டம் - பரிசை, நீர்ச்சால், வட்டம் (Circle), சீலை, பரிவேடம், ஆலவட்டம், கைம்மணி, யாகு வலயம்.
வட்டாடல் - சூதாடல் (Gambling).
வட்டாரம் - சுற்றுப் பக்கம்.
வட்டிகை - எழுதுகோல், சித்திரம், சாந்து.
வட்டில் - உண்கலம், கிண்ணம்.
வட்டினி - சூதில் கொடுக்கும் பந்தயப் பொருள்.
வட்டு - சூதாடு கருவி, திரட்சி.
வட்டுடை - வீரர் முழந்தாளளவில் உடுக்கு முடை.
வட்டுவம் - வெற்றிலைப் பை.
வட்டை - வழி.
வடக்கிருத்தல் - பற்று நீங்கினோர் வடதிசை நோக்கித் தியானஞ் செய்திருத்தல்.
வடகம் - தோல், வற்றல்.
வடகலை - சமஸ்கிருத நூல்கள்.
வடசொல் - சமஸ்கிருதம்.
வடந்தை - வடகாற்று.
வடபுலி - சிங்கம்.
வடம் - கயிறு, மணி வடம், ஆலமரம், ஒழுங்கு, வில் நாண்.
வடமர் - பிராமணருள் ஒரு வகுப்பினர்.
வடமலை - மேருமலை, திருவேங்கடம்.
வட மீன் - அருந்ததி.
வட மொழி - சமஸ்கிருதம்.

வடவர் - வட நாட்டார்.

வடவாமுகம் / வடவாமுகாக்கினி / வடவானலம் } - ஊழித் தீ.

வடவேங்கடம் - திருவேங்கடம்.

வடவை-ஊழித் தீ, பெண் குதிரை, பெண் யானை.

வடாது - வடக்கு.

வடி - கள், கூர்மை, மாம்பிஞ்சு, திருத்தம்.

வடித்தல்-கூர்மையாக்கல், தெளியச் செய்தல், வசமாக்கல், பழக்கல்.

வடிம்பு - விளிம்பு, நுதி.

வடிவம் - உருவம், உடம்பு.

வடிவு - அழகு, உடம்பு.

வடு - செம்பு (Copper), தழும்பு (Scar), குற்றம், வண்டு, பிஞ்சு.

வடுகு - இந்தளராகம், தெலுங்கு தேசம், தெலுங்கு பாஷை.

வண்கை - வழங்குகை.

வண்டர் - வலியவர், துஷ்டர், வண்டு, மங்கல பாடகர்.

வண்டல்-சேறு, பெண்கள்விளையாட்டு.

வண்டானம் - கொய்யடி நாரை, நாரை (Stork).

வண்டு-சங்கு, குற்றம், கைவளை (Bangles), அம்பு, வண்டு.

வண்ணம் - அழகு, நிறம், குணம், சந்தம், விதம்.

வண்ண மகள் - சிங்காரிப்பவள்.

வண்மை - கொடுத்தல், உண்மை, வளமை, புகழ், வலிமை.

வணக்கம் - தொழுதல், கீழ்ப்படிதல்.

வணக்கல் - வளைத்தல்.

வணங்கல் - பணிதல், வளைதல்.

வணர் - வளைவு, செறிவு.

வணிகன் - வாணிகன்.

வத்தி-ஊதுவத்தி, திரி (Wick).

வத்திரம் - முகம், ஆடை.

வதக்கல் - வாட்டல்.

வதங்கல் - வாடல்.

வதந்தி - வார்த்தை (Rumour).

வதம் - கொலை, விரதம்.

வதரி - இலந்தை.

வதனம் - முகம்.

வதி - சேறு, வழி, கொலைஞன்.

வதிரன் - செவிடன்.

வதிதல் - தங்கல்.

வது - பெண்.

வதுவை - கலியாணம், வாசனை.

வதூ - பெண்.

வதூவரர்-கலியாணப் பெண்ணும் பிள்ளையும், (The married couple).

வதை - கொலை.

வதைத்தல் - கொல்லுதல்.

வந்தனம் / வந்தனை } - வணக்கம்.

வந்தி - மலடி.

வந்தித்தல் - வணங்குதல்.

வந்தியர் - புகழ்வோர், மலடிகள், மங்கல பாடகர்.

வந்து - காற்று.

வபை - நிணம் (Fat).

வம்பலர் - அயலார், புதியவர்.

வம்பன் - துஷ்டன்.

வம்பு - புதுமை, கச்சு, மணம், நிலையின்மை, தூறு, வஞ்சனை.

வம்சம் - சந்ததி.

வயக்கம் - ஒளி.

வயங்கல்-ஒளிசெய்தல், நடத்தல்.

வயணம் - வகை.

வயத்தன் - வசப்பட்டவன்.

வயது - ஆயுள்.

வயப்படல் - வசமாதல்.

வயப் புலி - சிங்கம்.

வயப் போத்து - சிங்கம்.
வயம் - நீர், பறவை, வலிமை, வசம், வெற்றி (Victory).
வயமா - குதிரை, சிங்கம், யானை, புலி.
வயல் - வெளி, கழனி (Field).
வயவன் - வீரன், வலியான் பறவை (A kind of black bird), படைத் தலைவன்.
வயனம் - வசனம்.
வயா - கருப்பம் (Pregnancy), வருத்தம், ஆசை.
வயிர் - ஊது கொம்பு, மூங்கில்.
வயிரம் - நெடுங்காலம் நிகழும் கோபம், கூர்மை, வச்சிராயுதம், வைர மணி, மர வயிரம், பகை, வலிமை.
வயிரி - பகைவன், வல்லூறு (Falcon).
வயிரியர் - பாணர், கூத்தர்.
வயிறு வாய்த்தல் - பிரசவித்தல்.
வயின் - இடம், வீடு, வயிறு.
வயின தேயன் - கருடன்.
வயோதிகம் - முதுமை.
வயோதிகர் - கிழவர்.
வர்ணியம் - உபமேயம்.
வர்த்தி - வத்தி.
வரகு - ஒரு தானியம்.
வரங்கிடத்தல் - வரம்வேண்டல்.
வரதன் - வரமளிப்பவன்.
வர நதி-கங்கை (The Ganges).
வரம் - மேன்மை, வேண்டும் பொருள் (Boon).
வரம்பு - அணை, எல்லை, ஒழுங்கு, வரப்பு.
வரர் - தேவர்.
வரல் - வருதல்.
வரலாறு - வருதலின் வழி.
வரவு - வரவுப் பொருள் (Income), வருதல்.
வரளல் - வரட்சி.
வரன்-பிரமன், சிவன், கணவன், அருகன், புத்தன்.
வரன்றல் - கொழித்தல்.
வராகம் - பன்றி, ஒரு புராணம்.
வராகன்-ஒரு நாணயம் (Rs. 3½), பன்றி யுருக்கொண்ட பெருமான்.
வராட்டி - எரு.
வரால் - ஒரு வகை மீன்.
வரி - தேமல், எழுத்து, இசைப் பாட்டு, கடல், குடிவரி, நெல், கடன், நிறம், நீளம், வண்டு, இரேகை, நான்கு தெருக்கள் கூடுமிடம்.
வரிக்கடை - வண்டு.
வரிசை - ஒழுங்கு, வெகுமதி, சிறப்பு.
வரித்தல் - கட்டல், நியமித்தல், எழுதுதல், பூசுதல், தெரிதல், விரும்புதல்.
வரிதல் - கட்டல், எழுதுதல்.
வரிப்புறம் - அணில் (Squirrel).
வருக்கம்-இனம், குலம், வகுப்பு, ஒழுங்கு.
வருக்கை - பலா.
வருகை - வருதல்.
வருடம் - மழை, ஆண்டு.
வருடம் 60:-பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கீரச, சிறீமுக, பவ, யுவ, தாது, ஈச்சுர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விசு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விஜய, சர்வசித்து, சர்வதாரி, விரோதி, விகிர்தி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துன்முகி, எவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு,

பரிபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதி கிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சத, நள, பிங்கள, காலயுக்தி, சித்தார்த்தி, இரௌத்திரி, துன்மதி, துந்துபி, உருத்திரோற்காரி, இரத்தாட்சி, குரோதன, அட்சய. (இவற்றுள் முதல் 20 வருடம் உத்தமம்; இடை 20 வருடம் மத்திமம்; கடை 20 வருடம் அதமம் என்பர்).

வருடல் / வருடுதல் - தடவுதல்.

வருடை - எண்காற்பறவை, ஆடு.

வருணம் - குலம், நீர், அழகு, நிறம்.

வருணனை - வருணிப்பு (Description).

வருத்தல் - துன்பப்படுத்தல்.

வருத்தனம் - பெருகுதல், தொழில்.

வருமானம் - வரவுப் பொருள், (Income).

வரூதினி - சேனை (Army).

வரை - மலை, மூங்கில், அளவு, இடம், எல்லை, எழுத்து, கல், வரையென்னேவல்.

வரைதல் - எழுதுதல், கொள்ளுதல், நீக்குதல், விவாகம் செய்தல்.

வரைப்பு - எல்லை, குளம், மதில், இடம்.

வரையரமகளிர் - மலையில் வாழும் தெய்வ மங்கையர்.

வரையறுத்தல் - அளவிடல், மதித்தல்.

வரையறை - அளவு, எல்லை.

வல் - வலிமை, விரைவு, சூதாடு கருவி.

வல்சி - அரிசி, சோறு.

வல்லபம் - வல்லமை.

வல்லரி - தளிர், பசுங்காய், பூங்கொத்து.

வல்லவன் - கணவன், வலியவன்.

வல்லவி - மனைவி, வலியவள்.

வல்லாங்கு - திறமை.

வல்லாளன் / வல்லான் - வலியவன்.

வல்லி - படர் கொடி (Creeper), அளவு, கால்விலங்கு (Fetters), இடைச்சேரி.

வல்லியம் - செவ்வல்லி, புலி.

வல்லினம் - வல்லெழுத்து.

வல்லுநர் - வல்லவர்.

வல்லுளி / வல்லூரி - பன்றி.

வல்லூறு - இராஜாளிப் பறவை (Falcon).

வல்லை - காடு, கால விரைவு, வலிமை.

வல் விலங்கு - யானை.

வலக்காரம் - பொய், உபாயம்.

வலங்கொள்ளல் - வலமாகச்சுற்றி வருதல்.

வலம் - இடம், வெற்றி, வலிமை, வலப்பக்கம்.

வலம்புரி - நந்தியாவர்த்தம், வலம்புரிச் சங்கு, ஒரு மரம்.

வலயம் - கடல், வட்டம், வளையல், வாகு வலயம்.

வலவன் - சமர்த்தன், தேர்ப் பாகன், திருமால்.

வலவை - வல்லவன், வல்லவள், காளி, இடாகினி, காளியேவற் பெண்.

வலன் - ஓர் அசுரன், வலப்பக்கம், வலிமை, வெற்றி, வல்லவன்.

வலாரி - இந்திரன்.

வலி - ஒருநோய் (Fit), வன்மை, நோய் (Pain).

வலித்தல் - வளைத்தல், பேசல், இழுத்தல், கொழுத்தல், மெல்லெழுத்து வல்லெழுத்தாதல், வலிமை பெறல்.
வலீ முகம் - குரங்கு.
வலிமை - வன்மை.
வலியன் / வலியான் - கரிக்குருவி, வல்லவன்.
வலியுறுத்தல் - உறுதிப்படுத்தல்.
வலு - பலம் (Strength).
வலுத்தல் - பலப்படுதல்.
வலைஞர் / வலையர் - செம்படவர்.
வழக்கு - நியாய வாதம், வழக்கம், இயக்கம்.
வழக்கோரம்-பக்ஷபாதம் (Partiality).
வழங்கல் - கொடுத்தல், உலாவல், சொல்லல்.
வழங்குநர் - கொடுப்பவர்.
வழி - பழமை, இடம், பின், மார்க்கம், மகன், மரபு, முறைமை.
வழிக்கொள்ளல் - பிரயாணஞ் செய்தல்.
வழித்தெய்வம் - குல தெய்வம்.
வழித்தோன்றல் - மகன்.
வழிதல் - வடிதல்.
வழிப்பறித்தல் - வழி மறித்துக் கொள்ளையிடல்.
வழிபடுதல் / வழிபாடு - வணங்குதல்.
வழிவழி - மேன்மேலும்.
வழு - குற்றம்.
வழுக்கல்-வழுக்குதல், அடித்தல்.
வழுக்கு - தவறு, மறத்தல்.
வழுத்துதல் - வாழ்த்துதல், சொல்லுதல்.
வழுதி - பாண்டியன்.
வழுது - பொய், வைக்கோல்.
வழுதுணை - கண்டங்கத்தரி.
வழும்பு - அழுக்கு, பிணம்.
வழுவல் - நழுவல், தவறுதல்.
வழுவாமை - தவறாமை.
வழுவு - தவறு.
வழுவுதல் - தவறுதல்.
வழுவை - யானை.
வழூஉ - குற்றம்.
வள் - காது, கூர்மை, வலிமை, வளம், வாள், வார்.
வள்ளம் - மரக்கால், வட்டில் (a cup), நாழிகை வட்டில்.
வள்ளல்-அளவில்லாமல் கொடுப்பவன்.
வள்ளன்மை - வள்ளல் தன்மை.
வள்ளி - கை வளை (Bangles), ஆபரணம், படர்கொடி (Creeper), வள்ளிக்கிழங்கு, வள்ளியம்மை.
வள்ளி மணாளன் - முருகன்.
வள்ளியோர் - வள்ளல்கள்.
வள்ளுரம் - பசுவிறைச்சி, இறைச்சி (Flesh).
வள்ளுவர் - ஒரு சாதியார், திருவள்ளுவர்.
வள்ளை-ஒரு கொடி (Creeper), உலக்கைப் பாட்டு.
வளப்பம் - செழுமை, கொழுப்பு.
வளம்-பதவி, பலபண்டம், அழகு, கொழுப்பு, செல்வம், நன்மை, செழுமை.
வளமை - மாட்சிமை, கொழுப்பு.
வளர்ச்சி / வளர்த்தி - வளர்தல்.
வளவளத்தல் - பிதற்றல்.
வளவன்-சோழன், வள்மிக்கவன்.
வளவு - கொல்லை, வீடு.
வளன் - வளம்.
வளாகம் - இடம், நிலைப்புனம், வளைத்தல்.

வளார் - இளங்கொம்பு (Twig).
வளாவல் - கலத்தல், வளைத்தல்.
வளி - காற்று.
வளி மறை - கதவு.
வளை - கங்கணம், சக்கரம், கை வளை (Bangles), சங்கு, நுழை வளை (Hole).
வளைதல்-சூழ்தல், வளைவு, தடுத்தல்.
வளையம் - வட்டம், சங்கு.
வளையல் - கை வளை (Bangles).
வளையாமை - தோல்வி யடையாமை.
வற்கடம் - பஞ்சகாலம் (Famine).
வற்கடை - குறைவு.
வற்கலம் | - மரவுரி (The cloth
வற்கலை | made of bark).
வற்சரம் - வருடம் (Year).
வற்சலை - ஈன்ற பசு.
வற்சை - மலட்டுப் பசு.
வற்பம் - பஞ்சகாலம் (Famine), வன்மை.
வற்பு - வலிமை, உறுதி.
வற்புறுத்தல் - உறுதிப்படுத்தல்.
வற்றல் - உலர்தல், உலர்ந்த பொருள், வடித்தல்.
வறட்காலம் - பஞ்ச காலம் (Famine).
வறப்பு - குறைவு, வறத்தல்.
வறல் - சுள்ளி, உலர்தல்.
வறளல் - வற்றுதல்.
வறன் - வெம்மை, வறட்காலம்.
வறிஞர் - தரித்திரர்.
வறிது - அற்பம், குறைதல், அறியாமை, பயனின்மை.
வறியர் }
வறியார் } - தரித்திரர்.
வறியோர் }
வறுத்தல் - தீயில் இட்டு வதக்குதல் (Frying).
வறுதல் - தீயால் உலர்தல்.
வறு நிலம் - பாழ் நிலம்.
வறும்புலம் - பாலை நிலம், திருவடை செய்த நிலம்.
வறுமை - தரித்திரம் (Poverty).
வறை - துவட்டற் கறி.
வன்கண் - கொடுமை, அஞ்சாமை, கொடும்பார்வை.
வன்கண்ணர் - கொடியவர்.
வன்கணம் - வல்லெழுத்துகள்.
வன்சொல் - கடுஞ்சொல்.
வன்பால் - பாலை நிலம், குறிஞ்சி நிலம்.
வன்பு - வன்மை.
வன்மம் - வைராக்கியம்.
வன்மீகம் - புற்று (Ant-hill).
வன்மீன் - முதலை (Crocodile).
வன்மை - கடினம், வலிமை.
வன்னம் - நிறம், எழுத்து, தங்கம்.
வன்னி-பிரமசாரி (Bachelor), கிளி, வன்னிமரம், நெருப்பு.
வன்னியர் - ஒரு சாதியார்.
வனசம் - தாமரை.
வனசரம் - யானை.
வனசரர் - வனத்தில் வாழ்வோர், வேடர்.
வனசை - இலக்குமி.
வனப்பு - அழகு.
வனம் - நீர், துளசி, மிகுதி, காடு, சோலை, சுடுகாடு, புற்று, அழகு.
வனமலர் - ஒரிதழ்த் தாமரை.
வனமாலி - திருமால்.
வனிதை - பெண்.
வனைதல் - அலங்கரித்தல், செய்தல்.

## வா

வாக்காள் - கலை மகள்.
வாக்கியம்-முற்றுச்சொற்றொடர் (Sentense).
வாக்கின் செல்வன்-பிருகஸ்பதி.
வாக்கின் செல்வி - சரஸ்வதி.
வாக்கீசர்-திருநாவுக்கரசர்.
வாக்கு-சொல், பக்கம், திருத்தம்.
வாக்குதல் - வார்த்தல்.
வாகடம் - வைத்திய சாஸ்திரம்.
வாகம் - புயம்(Shoulder), வாகனம், குதிரை.
வாகனம்-ஏறிநடத்தற் குரியவை.
வாகினி - படை (Army).
வாகீசர் - திருநாவுக்கரசர்.
வாகீசுவரி, வாகீசை - சரஸ்வதி.
வாகு - அழகு, தோள், ஒழுங்கு.
வாகுரம் - வலை (Net).
வாகுவலயம் - தோளணி.
வாகை-குணம், ஒழுக்கம், வெற்றி, தவம், தொழில், கொடுத்தல், மிகுதி, வாகை மரம், போர் வெல்லும்போது அணியும் மாலை, புறப்பொருள் துறையுள் ஒன்று.
வாங்கம் - கடல்.
வாங்கல் - வளைத்தல், கொள்ளுதல், இழுத்தல், நீளல்.
வாச்சியம் - வாத்தியம், பொருள்.
வாசகம் - வசனம் (Prose).
வாசந்தி - குருக்கத்தி.
வாசம் - இருப்பிடம், வாசனை, பறவை இறகு, ஆடை, அரிசி, ஊர், நெய்.
வாசல் - வாயில் (Entrance).
வாசவன் - இந்திரன்.
வாசனை-மணம், யாழ் வாசித்தல், பழக்கம்.
வாசா - வாக்கு.
வாசாமகோசரம்-வாக்குக்கு எட்டாமை.
வாசாலகம், வாசாலம் - சொல் வன்மை.
வாசி - இசைக் குழல், குதிரை, அசுவினி நட்சத்திரம், வாசியென்னேவல், அதிகம், இலாபம் (Gain).
வாசிகை - மாலை, கோத்தமாலை.
வாசித்தல் - படித்தல், வீணை முதலிய வாசித்தல், மணமுண்டாதல்.
வாசுதேவன் - கிருஷ்ணன்.
வாஞ்சனை - ஆசை.
வாஞ்சித்தல் - ஆசைப்படல்.
வாஞ்சை - ஆசை.
வாட்கலியன் - திருமங்கை யாழ்வார்.
வாட்டம் - மெலிவு, வாடுதல், குறைவு.
வாட்டல் - துன்புறுத்தல், வாடச் செய்தல்.
வாட்படை - வாளாயுதம், வாள் வீரர் கூட்டம்.
வாடகை - குடிக் கூலி (Rent).
வாடல் - மெலிதல், வதங்கல்.
வாடா மாலை - பொன்னரி மாலை.
வாடாவள்ளி - வள்ளிக் கூத்து.
வாடை - தெரு, வட காற்று, வாசனை, இடைச் சேரி.
வாணம்-அம்பு, மத்தாப்பு முதலியன (Fire works).
வாணன் - வாணாசுரன், வாழ்பவன்.
வாணாள் - ஆயுள், உயிர்.
வாணி - ஒரு கூத்து, சொல், சரஸ்வதி, அம்பு.
வாணிகம் - இலாபம்.
வாணிகன் - செட்டி, துலா ராசி.

வாணி கேள்வன் - பிரமன்.
வாணிச்சி - செட்டிப் பெண்.
வாணிபம் - இலாபம்.
வாணிபர் - வியாபாரிகள்.
வாணியன் - செக்கான், செட்டி.
வாதம் - தருக்கம், காற்று, இரும்பைப் பொன்னாக்கும் வித்தை, வாத நோய், வில்வம்.
வாதராயணன் - வேத வியாசர்.
வாதனை - தடை, வருத்தம்.
வாதாயனம்-பலகணி(Window).
வாதி - வழக்காளி (Plaintiff), தருக்கஞ் செய்பவன்.
வாதித்தல் - தர்க்கித்தல், வருத்துதல்.
வாது - சண்டை, தர்க்கம்.
வாதுவர்-யானைப்பாகர், குதிரைப்பாகர்.
வாதை - துன்பம், நோய்.
வாந்தி - ஒக்காளம் (Vomiting).
வாமம் - குறுமை, இடப்பக்கம் (Left), அழகு, ஒளி, தொடை, ஒரு சமயம் (a religion), சிவன் ஐம்முகத்தொன்று.
வாமன்-அருகன், சிவன், புத்தன்.
வாமனம் - வாமன புராணம், தென் திசை யானை, குள்ளம்.
வாமனன்-குறள் வடிவு கொண்ட திருமால்.
வாமி } - பார்வதி.
வாமை }
வாய் - இடம், உண்மை, ஊது குழல், வாய் (Mouth), சொல், வாயில், விளிம்பு.
வாய்க்கரிசி - பிணத்தைக் கொளுத்து முன் அல்லது புதைக்கு முன் அதன் வாயில் இடும் அரிசி.
வாய்க்கால்-நீர்க்கால் (Ditch), மக நட்சத்திரம்.
வாய்க்கூலி - இலஞ்சம் (Bribe).
வாய்ச்சி-மரஞ் செதுக்குங் கருவி.
வாய்த்தல் - பொருந்தல், கிடைத்தல், சிறத்தல்.
வாய்தல் - வாயில் (Entrance).
வாய் நீர் - எச்சில் (Saliva).
வாய்ப்பு - சித்தி, தகுதி.
வாய்பாடு - மாதிரி (A symbolic expression).
வாய் புதைத்தல் - வாய் மூடல்.
வாய் பூசல்-வாயைச் சுத்தி செய்தல்.
வாய்மை - உண்மை, சொல்.
வாய் மொழி - வேதம்.
வாய்வது - உண்மை, கிடைப்பது.
வாய் வெருவல் - வாய் குளறல்.
வாயசம் - காக்கை (Crow).
வாயடை - உணவு.
வாயில் - ஐம்புலன், கதவு, காரணம், வழி, தூது.
வாயிலாளர் - வாயில் காப்போர் (gate-keepers).
வாயிலோர்-தமிழ்க்கூத்தர், வாயில் காப்போர், தூதுவர்.
வாயு - வாதம், காற்று.
வாயுச்சகன் - அக்கினி (Fire).
வாயுபுத்திரன்-அனுமன், வீமன்.
வாயு மூலை - வடமேற்கு.
வாயுறை - பசு முதலியவற்றுக்கு இடும் தீனி.
வாயூறல் - விரும்பல்.
வார் - நீளம், கச்சு, நீர், நேர்மை, தோல் வார்(Leather strap).
வார்த்தல் - உலோகத்தை யுருக்கி அச்சில் விட்டு உருவம் செய்தல்.
வார்த்திகம்-பொழிப்புரை, கிழத்தன்மை.
வார்த்திகன் - கிழவன்.

வார்த்தை - வசனம் (Word).
வார்தல் - நீளல், ஒழுகல்.
வார்ப்படம்-வார்ப்படவேலை (Casting).
வார்ப்பு - வார்த்தல் (Casting).
வாரணம் - கவசம், கோழி, தடுத்தல், சங்கு, கடல், யானை.
வாரணவாசி } - காசி நகரம்.
வாரணாசி
வாரம் - நீர்க்கரை, அன்பு, மலைச்சாரல், கிழமை (Week days), பங்கு, கடல், பக்ஷபாதம் (Partiality).
வாரல்-அள்ளுதல், ஓலைவாருதல், மயிர் கோதல், கவர்தல், வாராதே என்னும் எதிர் மறை வியங்கோள்.
வாராக் கதி - மோட்சம்.
வாராவதி - பாலம் (Bridge).
வாரானை - வருகை.
வாரி - நீர், வெள்ளம், கடல், கதவு, மதில், வருவாய், வழி, சீப்பு (Comb).
வாரிசம் - உப்பு, சங்கு, தாமரை.
வாரிசாதம் - தாமரை.
வாரித்தல் - தடுத்தல்.
வாரிதம் - மேகம்.
வாரிதி - கடல்.
வாரி நாதன் - வருணன்.
வாரி யுற்பவம் - தாமரை.
வாரு கோல் - துடைப்பம்.
வாருணம் - கடல், மேற்கு, ஒரு புராணம்.
வாருதல் - கொள்ளல், மயிர் கோதல்.
வாருதி - கடல்.
வாரை-வாரை விட்டம் (Beam).
வால் - வெண்மை, மிகுதி, சுத்தம், தோகை, பெருமை.
வாலதி - விலங்கின் வால் (Tail).
வாலம் - வால் (Tail).
வாலறிவன் - கடவுள்.
வாலாயம் - மிக்க பழக்கம்.
வாலி - பலதேவன், கிட்கிந்தை மன்னன்.
வாலிது - பரிசுத்தமானது.
வாலிபம் - இளமை.
வாலுகம் - வெண்மணல் (Sand).
வாலுவர் - சமையற்காரர் (Cooks).
வாலேயம் - கழுதை.
வாலை - சிறுமி.
வாவல் - வௌவால் (Bat), கடத்தல்.
வாவி - குளம்.
வாவுதல் - தாவுதல்.
வாழ்க்கை - செல்வம், ஊர், வாழ்தல், வாழ் நாள்.
வாழ்க்கைத் துணை - மனைவி.
வாழ்க்கைப் படல் - ஒரு பெண் ஒருவனை மணத்தல்.
வாழ்த்தல் - துதித்தல்.
வாழ்த்து - ஆசீர்வாதம்.
வாழ்நர் - வாழ்வோர்.
வாழ்வு - வாழ்தல்.
வாழி - வாழிய என்று வாழ்த்துதல்.
வாள் - ஒளி, வாளாயுதம்.
வாளா } - பயனின்மை, மௌனம்.
வாளாமை
வாளி - அம்பு, வட்டம், பெண் காதணியில் ஒன்று.
வாளுழவன் - வீரன் (Warrior).
வாளை - ஒரு மீன்.
வாற்சல்லியம் - நட்பு.
வான் - ஆகாயம், மேகம், மழை, பெருமை, வலிமை.
வான்மீகி - சமஸ்கிருத பாஷையில் இராமாயணம் செய்த ஒரு முனிவர்.

வான்மீன் - நட்சத்திரம் (Star).
வானகம் - தேவ லோகம்.
வானசாஸ்திரம் - நட்சத்திர முதலியவற்றின் செயல்களை அறிவிக்கும் நூல் (Astronomy).
வானதி - ஆகாய கங்கை.
வான நாடு - தேவ லோகம்.
வானப்பிரத்தம் - வனஞ்சென்று தவமியற்று நிலை.
வானம் - ஆகாயம், மழை, உலர் மரம், மரக் கனி.
வானம்பாடி - சாதகப் பறவை (Sky-lark).
வானரக் கொடியோன் - அருச்சுனன்.
வானரம் - குரங்கு.
வானவர் - தேவர்.
வானவில் - இந்திர வில் (Rain-bow).
வானவூர்தி - ஆகாய விமானம்.
வானி - மேற்கட்டி (Canopy), சேனை (Army), துகிற்கொடி (Flag).
வானுலகம்-சுவர்க்கம் (Heaven).
வானேறு - இடி (Thunder).
வானோர் - தேவர்.
வானோர் கோமான் - இந்திரன்
வானோர் முதுவன் - பிரமன்.

## வி

விக்கல்-விக்குதல் (Hiccough).
விக்கியாபனம் - (விஞ்ஞாபனம்) அறிவிப்பு.
விக்கியானம் - கல்வி.
விக்கிரகம் - உருவம், பிரிவு.
விக்கிரமம் - பராக்கிரமம்.
விக்கிரயம் - விலைப்படுத்தல் (Selling).
விக்கினம் - இடையூறு.
விக்கினேசுவரன் - விநாயகன்.
விக்குள் - விக்கல்.
விகங்கம் - பறவை, அன்னம் (Swan).
விகசித்தல் - மலர்தல்.
விகசிதம் - மலர்தல், புன்சிரிப்பு.
விகட கவி - பரிகாசக் கவி கூறுவோன் (Jester).
விகட சக்கரன் - விநாயகன்.
விகடம் - பெரியது, பரிகாசம், வேறுபாடு.
விகலம் - குறைபாடு.
விகற்பம் - வேறுபாடு, உறழ்தல்.
விகற்பித்தல் - வேறுபடுதல்.
விகாதம் - பகை.
விகாரம் - வேறுபாடு.
விகிதம் - வீதம் (Proportion, ratio), நட்பு, விதி முறை, செயல்.
விகிர்தம் - பொய், வேறுபாடு.
விகுணம் - குண மின்மை.
விகுணி-குணங்கெட்டவன், கள்.
விகுதி - மாறுபாடு, பகுபதவுறுப்பில் ஒன்று (Termination).
விச்சாதரர் - வித்தியாதரர்.
விச்சித்திரம் - விசித்திரம்.
விச்சு - வித்து (Seed).
விச்சை - வித்தை, கல்வி, அறிவு.
விசதம் - வெண்மை, வெளிப்படை, சுத்தம்.
விசயம் - வெற்றி (Victory), வெல்லம், சூரிய மண்டலம்.
விசயன் - அருச்சுனன், வெற்றியுடையவன் (Victor).
விசர்க்கம் - கழிதல், விடுதல்.
விசர்ச்சனம் - விடுதல், களைதல், கழித்தல்.
விசாதி - நோய்.
விசாரணை - ஆராய்ச்சி, விசாரித்தல் (Investigation).

விசாரம் - கவலை, ஆலோசனை.
விசாலம் - அகலம்.
விசாலாட்சி - பார்வதி.
விசி - சூரி, அலை, கட்டு, வார்.
விசிகம் - அம்பு.
விசிட்டம் - மேன்மை.
விசித்தல் - கட்டல்.
விசித்திரம் - அழகு, அதிசயம்.
விசித்திராங்கம் - மயில்.
விசிப்பு - கட்டுதல்.
விசிறுதல் - வீசுதல்.
விசும்பு - தேவ லோகம், மேகம், ஆகாயம், திசை.
விசுவகன்மா - தெய்வத் தச்சன்.
விசுவ ரூபன் } - திருமால்.
விசுவ ரூபி }
விசுவாசம் - அன்பு.
விசுவாச காதகன் - துரோகி.
விசுவாசி - அன்புடையோன்.
விசேடணம் - அடை மொழி.
விசேடம் - மேன்மை.
விசேடியம்-அடைகொளி.
விசை - பொறி, விரைவு, தரம்.
விசைத்தல் - வேகமுறல்.
விசையம் - வெற்றி (Victory).
விஞ்சுதல் - மிகுதல்.
விஞ்சை - கல்வி.
விஞ்சையர்-வித்தியாதரர், கல்வியுடையவர்.
விஞ்ஞாபனம் - அறிவிப்பு.
விஞ்ஞானம் - பேரறிவு.
விட்டம் - உத்திரம் (Beam).
விட்டவர் - துறவிகள்.
விட்டார்த்தம் - பாதி விட்டம் (Semi-Diameter)
விட்டில் - விட்டிற் பறவை.
விட்டுணு - திருமால்.
விட்டை - இலத்தி (Dung).
விடக்கு - இறைச்சி (Flesh).
விடகாரி - விஷவைத்தியன்.
விடங்கம் - அழகு, வீதியிற் கட்டியகொடி, ஆண்மை, கொடுங்கை.
விடங்கர் - சிறு வழி, திருவாரூர் தியாக ராசர்.
விடத் தேரை - ஒரு மருந்து மூலிகை.
விட தரம் - பாம்பு.
விடதரன் - சிவன்.
விடதாரி-வைத்தியன் (Doctor)
விடபம் - இடபம், இடப, ராசி, மரக் கொம்பு.
விடபக் கொடியோன் - சிவன்.
விடம் - நஞ்சு (Poison), தேள்.
விடயம் - பொருள்.
விடர் - முனிவர் இருப்பிடம், வஞ்சகர், நிலப்பிளப்பு, மலைப் பிளப்பு, காடு.
விடலை - வெற்றியாளன், பாலை நிலத் தலைவன், வலியவன், படை வீரன்.
விடவிடெனல் - நடுக்கக் குறிப்பு (Shivering).
விடன்-விடம் (Poison), வஞ்சகன், சோர நாயகன்.
விடாய் - சோர்வு, தாகம்.
விடிதல் - இருள் நீங்கல்.
விடியல் - வைகறை.
விடுகை - விடுதல்.
விடுதலை - நீக்கம் (Release).
விடுதி - வேறுபாடு, தங்குமிடம்.
விடு முறை - ஓய்வு நாள் (Holidays or Vacation).
விடுசி - அம்பு.
விடை-எதிர்மொழி (Answer), எருது, விடுத்தல், மிகுதி,
விடையோன் - சிவன்.
விண் - மேகம், தேவ லோகம், ஆகாயம்.
விண்டு - திருமால், மலை, மேகம், மூங்கில், காற்று.

விண்டு சித்தன் - ஒரு முனிவன், பெரியாழ்வார்.
விண்ணப்பம் - வேண்டுகோள்.
விண்ணாணம் - ஞானம், சாதுரியம், நாகரிகம்.
விண்ணுலகம் - தேவ லோகம்.
விண்ணொலி - ஒலிக் குறிப்பு.
விண்ணேறு-இடி (Thunder).
விண்ணோர் - தேவர்.
விண்மணி - சூரியன்.
விண்மீன்-நட்சத்திரம்.
வித்தகம்-ஞானம், சாமர்த்தியம், திருத்தம்.
வித்தகர் - அறிஞர்.
வித்தம்-பொன், பழிப்பு, ஞானம்.
வித்தரித்தல் - பெருக்கல்.
வித்தல் - விதைத்தல்.
வித்தாரம் - விரிவு, வித்தார கவி.
வித்திடல் - விதை விதைத்தல் (Sowing).
வித்தியாசம் - வேற்றுமை.
வித்தியாசாலை - கல்லூரி (College).
வித்தியார்த்தி - மாணாக்கன்.
வித்தீரணம் - விஸ்தீரணம் (Extension).
வித்து - விதை, காரணம்.
வித்துதல் - விதைத்தல்.
வித்துவாம்சன் } - புலவன்.
வித்துவான் }
வித்தை - கல்வி, அறிவு.
விதண்டை - விரோதம், தடை.
விதப்பு - நடுக்கம், மிகுதி, சிறப்பாக எடுத்துச் சொல்லுதல்.
விதம் - வகை.
விதரணம் } - ஈகை, விவேகம்.
விதரணை }
விதலை - நடுக்கம், பூமி.
விதவை - கைம்பெண்.
விதனம் - துன்பம்.
விதாதா - பிரமன், அருகன்.
விதானம் - கூட்டம், உபாயம், விதம், மேற்கட்டி (Canopy)
விதி - செய் தொழில், பிரமன், ஊழ், (Fate) நியமம் (Rule).
விதித்தல்-சிருஷ்டித்தல், நியமித்தல், சொல்லுதல்.
விதித்தோன் - பிரமன்.
விதிர்த்தல்-அசைத்தல், நடுங்கல்.
விதிர்ப்பு - அச்சம், நடுக்கம்.
விதிர் விதிர்த்தல் - மிக நடுங்கல்.
விதி வசம் - ஊழ் (Fate).
விதி வினை - உடன்பாட்டு வினை.
விது - சந்திரன்.
விதுப்பு - ஆசை, விரைவு, நடுக்கம்.
விதும்பல் - விரும்புதல்.
விதுரன் - அறிஞன், வல்லவன், மனைவியை யிழந்தவன் (Widower).
விதேகம் - தேகத்தை விடுதல்.
விதேயன் - கட்டளைப்படி நடப்பவன்.
விதை - வித்து.
விந்தம் - ஓர் எண், மலை.
விந்தர் - இடையர்.
விந்தை - துர்க்கை, வேடிக்கை, கல்வி, ஆச்சரியம்.
விப்பிர நாராயணர் - தொண்டரடிப்பொடி யாழ்வார்.
விப்பிரயோகம் - வெய்துயிர்த்து இரங்கல்.
விப்பிரன் - பார்ப்பான்.
விபத்தி - வேற்றுமை.
விபத்து - ஆபத்து.
விபரம் - விரிவு.
விபரீதம் - வேறுபாடு.
விபவம் - செல்வம்.
விபினம் - காடு (Jungle).
விபுணன் - நிபுணன்.

விபுதர் - தேவர், அறிஞர்.
விபுலம் - பூமி, விசாலம், பெருமை.
விபுலை - பூமி.
விபூடணம் - ஆபரணம்.
விபூதி - தசை, பொல்லாங்கு, செல்வம், திருநீறு, பெருமை, குற்றம்.
விம்பம் - உருவம், கொவ்வைக் கொடி, ஒளி (Light), பிரதிபிம்பம் (Reflection), வட்டம்.
விம்மல் - ஏங்குதல், ஒலித்தல், பருத்தல், அழுதல்.
விம்மிதம் - அதிசயம், உடல், அச்சம்.
விம்முறவு - வருத்தம்.
விமர்த்தனம் - அழித்தல்.
விமரிசம் - சிந்தித்தல்.
விமரிசை - சிறப்பு.
விமலம் - அழுக்கின்மை.
விமலன் - கடவுள், குற்றமற்றவன்.
விமலை - இலக்குமி, சரஸ்வதி, பார்வதி, துர்க்கை, குற்றமற்றவள்.
விமானம் - உரோகிணி நட்சத்திரம், தேர், தேவ லோகம், தேவாலயம் (Temple).
விமோசனம் - தீர்தல்.
வியக்கம் - பெருமை.
வியங்கம்-தவளை, பிறவிக்குற்றம்.
வியங்கியம் - குறிப்பு.
வியங்கோள் - மரியாதையாக ஏவுதல்.
வியஞ்சனம் - அடையாளம்.
வியத்தம் - விளக்கம்.
வியத்தல் - அதிசயித்தல்.
வியந்தரம் - பேய்.
வியப்பு - அதிசயம், மேம்பாடு.
வியபிசாரம் - ஒழுங்கு தவறுதல்.
வியம்-உடல், பறவை, பெருமை, ஏவல், வழி.
வியர் - வேர்வை (Sweat).
வியர்த்தம் - பயனின்மை.
வியர்த்தல் - கோபித்தல், வேர்த்தல் (Sweating).
வியர்வு } - வேர்வை.
வியர்வை }
வியல் - அகலம், பெருமை, காடு.
வியலிடம் - அகலம்.
வியவகாரம் - வழக்கம், வழக்கு.
வியவன்-ஏவுவோன், வலியவன்.
வியன் - அகலம், மிகுதி, வேறுபாடு.
வியனுலகு - தேவ லோகம்.
வியாக்கியானம் - உரை.
வியாக்கிரம்-மேன்மை, புலி.
வியாகரணம் - இலக்கணம்.
வியாகுலம் - வருத்தம்.
வியாச்சியம் - வழக்கு.
வியாசம் - பகுத்தறிதல், விரிவு, காரணம்.
வியாதம் - வேறுபாடு, துயரம்.
வியாதி - நோய்.
வியாபகம் - எங்கும் நிறைந்தது.
வியாபாரி - பொருள்களை, விற்பவன் (Merchant).
வியாபித்தல் - எங்கும் நிறைதல்.
வியாழன்-ஒரு நாள், பிரகஸ்பதி.
வியாளம் - புலி, பாம்பு.
வியூகம் - படை வகுப்பு, விலங்கின் கூட்டம்.
வியோகம் - விடுதல்.
விரகம் - காம நோய்.
விரகு - அறிவு, உபாயம்.
விரசுதல் - கலத்தல்.
விரசை - வைகுந்தத்திலுள்ள ஓர் ஆறு.
விரணம் - புண், விழற்புல்.
விரத்தி-வெறுப்பு, துறவு, துறவி.

விரதம் - தவம், சத்தியம்.
விரதர் - தவசிகள்.
விரதி - துறவி.
விரயம் - மிகு செலவு.
விரவல் - கலத்தல்.
விரவலர் - பகைவர்.
விரவு - கலப்பு.
விரிச்சி - நற்சகுனம்.
விரிச்சிகம்-தேள் (Scorpion).
விரிஞ்சன் - பிரமன்.
விரித்தல் - சொல்லல், மலர்தல், பரப்பல், விளக்கல்.
விரியல்-ஒளி, பரவுதல், மலர்தல்.
விரிவு - விசாலம்.
விருக்கம் - மரம்.
விருச்சிகம்-தேள், விருச்சிகராசி.
விருட்சம் - மரம்.
விருத்தம் - வட்டம், மூப்பு, பாவினத்தொன்று.
விருத்தன் - கிழவன்.
விருத்தாந்தம் - கதை (Story), வர்த்தமானம்.
விருத்தாப்பியம் - கிழத்தன்மை.
விருத்தி - தொழில், இலாபம், விரிவுரை, வளர்தல், அடிமை, செல்வம்.
விருத்தை - கிழவி.
விருதர் - படை வீரர்.
விருதா - பயனின்மை (Vain).
விருது - அடையாளம், வெற்றி, கொடி (Flag).
விருந்தம் - சுற்றத்தின் கூட்டம், விலங்கின் கூட்டம்.
விருந்தர் - புதியவர் (Guests).
விருந்தனை - மணப்பெண், மனைவி.
விருந்தாளி-புதியவன் (Guest).
விருந்தினர் - புதியவர்.
விருந்து - புதியவர்க் கமைக்கும் உணவு, புதுமை, ஒருவனப்பு, விருந்தினர் (Guests).
விருந்தை - துளசி.
விருப்பம் / விருப்பு - ஆசை.
விரும்பல்-ஆசைப்படல்.
விரூபம்-விகார ரூபம், வேற்றுமை.
விரை - வாசனை, கலவைச்சாந்து, நறும்புகை.
விரைப்பாடு - விதைத்தல் (Sowing).
விரைவு - வேகம்.
விரோசனம் - கழித்தல்.
விரோசனன் - சூரியன்.
விரோதம் - பகை, வேற்றுமை.
விரோதி - பகைவன்.
வில் - மூல நட்சத்திரம், ஒளி, வில் (Bow).
வில்லங்கம்-வழக்கு (Dispute), தடை (Difficulty).
வில்லவன் - சேரன்.
வில்லி-மன்மதன், வீரபத்திரன், வில் போர் செய்பவன்.
வில்லேருழவர் - வில்போர் செய்யும் வீரர், வேடர்.
வில்லை - வட்டம் (Circle).
விலக்கல் - மாற்றுதல்.
விலகல் - நீங்கல்.
விலங்கல் - மலை, விலகுதல்.
விலங்கு - கை கால் விலங்கு (Fetters), குறுக்கு, மிருகம்.
விலா - விலாப்பக்கம் (The rib-side).
விலாங்கு - ஒரு மீன்.
விலாசம் - விளையாட்டு, அழகு, ஒருவகை நாடகம், மேல்விலாசம் (Address) விசாலம்.
விலாழி - குதிரை வாய் நுரை, யானைத் துதிக்கை யுமிழ் நீர்.

விலைஞர் - விற்போர்.
விலை மகள் - தாசி.
விலோசனம் - கண்.
விலோதம்-கூந்தல், துகிற்கொடி (Flag), மயிர்ச்சுருள்.
விலோதனம் - பெருங்கொடி (A large flag).
விவகரித்தல்-விவகாரம் செய்தல்.
விவகாரம் - வழக்கு.
விவசாயம் - வேளாண்மை (Cultivation).
விவர்த்தம் / விவர்த்தனம் } -புரளல், மாறுதல்.
விவரணம் - வெளிப்படுத்தல்.
விவரம் - மலைக்குகை, பகுத்தல்.
விவரித்தல் - வகுத்துக் கூறல்.
விவாகம் - கலியாணம்.
விவாதம் - வழக்கு (Dispute).
விவிதம் - பல விதம்.
விவேகம் - பகுத்தறிவு.
விவேகி - அறிஞன்.
விழல் - ஒரு புல், பயனின்மை, வீண், விழுதல்.
விழலர் - வீணர்.
விழலாண்டி - வீணன் (Idler).
விழவு - மிதுனராசி, திருவிழா.
விழா - திருவிழா (Festival).
விழி - கண்.
விழித்தல் - பார்த்தல், விளங்கல், வாழ்தல், துயிலெழல்.
விழிப்பு - விழித்தல்.
விழுக்காடு - வீதம் (Proportion) பங்கு, விழுதல்.
விழுக்கு - நிணம் (Fat).
விழுகை - விழுதல்.
விழுங்கல்-கொல்லல், நுங்குதல் (Swallowing).
விழுத்தகை - வீறு.
விழுதல் - வீழ்தல், சாதல்.
விழுது-ஆலம் விழுது முதலியன, கொழுப்பு, வெண்ணெய்.
விழுப்பம் - ஆசை, சிறப்பு, குலம், நன்மை.
விழுப்பொருள்-சிறந்த பொருள்.
விழுமம்-சிறப்பு, துன்பம், நன்றி, சீர்மை.
விழுமியோர் - பெரியோர்.
விழைச்சு - இளமை, புணர்ச்சி.
விழைதல் - ஆசைப்படல்.
விழைந்தோன் - நண்பன், கணவன் (Husband).
விழைவு - புணர்ச்சி, ஆசைப் பெருக்கம்.
விள்ளல் - சொல்லல், தழுவல், மலர்தல், வேறுபடல்.
விளக்கம் - ஒளி, தெளிவு.
விளக்கு - தீபம், சோதி நட்சத்திரம், ஒளி (Light).
விளக்குமாறு - துடைப்பம்.
விளங்கல் - ஒளிசெய்தல், தெளிதல்.
விளங்கிழை - ஒளி விடும் ஆபரணம், பெண்.
விளம்பரம் - அறிக்கைப் பத்திரம் (Notice, Advertisement).
விளம்பல் / விளம்புதல் } -சொல்லல்.
விளர் - இளமை, வெண்மை, கொழுப்பு.
விளர்த்தல் / விளர்ப்பு } -வெளுத்தல்.
விளரி - இளமை, ஏழிசையில் ஒன்று, நெய்தல் நிலத்துயாழ், யாழ் நரம்பி லொன்று, வேட்கைப் பெருக்கம்.
விளவு - நிலப்பிளவு, விளாமரம்.
விளா - விளா மரம்.
விளாகம் - போர்க்களம்.
விளாவல் - கலத்தல், சூழ்தல்.

விளி - இசைப்பாட்டு, ஓசை, கொக்கரிப்பு, அழைப்பு.
விளித்தல் - அழைத்தல், கெடுத்தல் (Destruction).
விளிதல் - கெடுதல், சாதல்.
விளிம்பு-ஓரம், கரை, கண்ணிமை.
விளிவு - அவமானம், கோபம், கேடு, சாதல்.
விளைதல் - உண்டாதல்.
விளையுள் - வயல், விளைவு.
விளைவு - தானியம், செல்வம், சம்பவம், முதுமை, பழம், மேகம்.
விற்கொடியோன் - சேரன்.
விற்பத்தி - கல்வி.
விற்பன்னம் - விவேகம்.
விற்பனை - விற்றல் (Selling).
விறகு - காஷ்டம் (Fire wood).
விறகு தலையன் - ஏழை, கட்டை வெட்டி விற்பவன் (Wood-seller), மூடன்.
விறப்பு - அச்சம், நெருக்கம், பெருக்கம், வெற்றி, போர், வலிமை.
விறல் - வலிமை, வெற்றி, பெருமை, வீரம்.
விறலி - பாடுகிறவள், பதினாறு வயதுப் பெண்.
விருட்டி - வறட்டி.
விறுவிறுப்பு - கொதிப்பு, மிகு கோபம்.
விறைத்தல் - திமிர் கொள்ளல்.
வின்னம் - பின்னம்.
வினயம் - வணக்கம், புத்தி நுட்பம்.
வினவல் - கேள்வி கேட்டல்.
விஞ - புத்தி, ஞாபகம், கேள்வி.
விஞசம் - அழிவு.
விஞடி - காலநுட்பம் (A second).
விநியோகம் - உபயோகம், விடுதல்.
வினை-கருத்து, தொழில், போர், ஊழ் வினை (Fate).
வினைஞர் - கம்மாளர் (Artificers), உழவர், கூத்தர்.
வினை முதல் - எழுவாய் (Subject).
வினையுரைப்போர் - தூதர்.
வினை விஞசன் - கடவுள்.
விநோதம் - அழகு, விளையாட்டு.

## வீ

வீ-நீக்கம், பூ, பறவை, இறத்தல், பெருமை.
வீக்கம் - பெருமை, மிகுதி, கட்டு, வீங்குதல் (Swelling).
வீக்குதல் - கட்டுதல்.
வீங்கல் - பருத்தல் (Swelling).
வீச்சு - எறிதல், அடி.
வீச கணிதம் - பீச கணிதம் (Algebra), அட்சர கணிதம்.
வீசல் - எறிதல், கொடுத்தல், அடித்தல்.
வீட்சணம் - பார்வை.
வீட்டுச் சீட்டு - வீட்டுப் பத்திரம் (The sale deed of a house).
வீட்டுதல் - கொல்லுதல்.
வீட்டுமம் - வைராக்கியம்.
வீடல் - சாதல், விடுதல்.
வீடு - மனை, மோட்சம், விடுதல்.
வீடுதல் - சாதல்.
வீடு பேறு - முத்தி யடைதல்.
வீண் - பயனின்மை (Vain).
வீணன் - சோம்பேறி (Idler).
வீணு கானம் - வீணை வாசித்துப் பாடல்.
வீணுள் - வீண் காலம்.
வீணை - யாழ்.

வீதம் - முறை (Rule), பங்கு.
வீதல்-கெடுதல், சாதல், வறுமை யடைதல்.
வீதி - தெரு, நேராக ஓடுதல்.
வீது - வறுமை.
வீப்பகழி - மன்மதன் அம்பு.
வீபத்து - சந்திரன்.
வீபற்சு - அருச்சுனன்.
வீம்பு - வீண் பெருமை (Boasting), வம்பு வார்த்தை.
வீமம் - பயங்கரம்.
வீரக்கழல் - வீரர்கள் வலக்காலில் அணியும் மணி வடம்.
வீரச் செல்வி - துர்க்கை.
வீரசுவர்க்கம் } - போரில் உயிர் விடும் வீரர் அடையும் பதவி.
வீரசொர்க்கம் }
வீரத்துவம் - வீரத் தன்மை
வீர துரந்தரன் - மகா வீரன்.
வீரப்பாடு - வெற்றி (Victory).
வீரம் - பராக்கிரமம், மலை.
வீரமாமுனி - இத்தலி தேசத்து அறிஞர் (Rev. Beschi).
வீராதி வீரன் - பெரு வீரன்.
வீராவேசம் - வீர வெறி (Fury of bravery).
வீரி - வீரமுடையவள், காளி.
வீரியம்-தைரியம், வீரம், இந்திரியம்.
வீரை - துன்பம், கடல்.
வீவு - கெடுத்தல், சாவு, குற்றம்.
வீழ் - விழுது.
வீழ் கதி - நரகம் (Hell).
வீழ்ச்சி - விழுதல், அழிதல்.
வீழ்தல் - ஆசை, ஆசைப்பெருக்கம், விழுதல், மேவல்.
வீழ் நாள் - கழியு நாள்.
வீழ்பு - சுள்ளி (Twig).
வீழ்வு - விழுதல்.
வீளை - சீழ்க்கை (Whistling), சத்தம்.
வீற்றம் - வேறுபாடு.
வீற்றிருத்தல் - நிலைபெற்றிருத்தல், சிறக்க அமர்ந்திருத்தல்.
வீற்று - வேறுபாடு.
வீறாப்பு - இறுமாப்பு (Pomp).
வீறு - தனிமை, புண்ணியம், பெருமை, விளக்கம், வெறுப்பு, வெற்றி, வேறு.
வீறுதல் - பெருமை யடைதல்.

## வெ

வெஃகல் - விரும்பல்.
வெஃகாமை - விரும்பாமை.
வெக்கை - கொதிப்பு, வெப்பு நோய் (Fever).
வெகு - மிகுதி, பல.
வெகுமதி } - பரிசு.
வெகுமானம் }
வெகுளல் - கோபித்தல்.
வெகுளி - சினம்.
வெங்கண் - கொடுமை.
வெங்களம் - போர்க்களம்.
வெங்காரம்-வெண்காரம்(Borax)
வெங்குரு - சீகாழி நகரம்.
வெங்கோல் - கொடுங்கோல் (Tyranny).
வெச்செனல் - வெப்பமாதல்.
வெஞ்சமம் - கடும்போர்.
வெஞ்சமன் - இயமன்.
வெட்கக்கேடு - வெட்கமில்லாமை (Shamelessness).
வெட்கம் - நாணம் (Shame).
வெட்கல் - நாணுதல்.
வெட்சி - வெட்சிச் செடி, பகைவர் பசுக் கூட்டத்தைக் கவர்பவர் அணியும் மாலை, பகைவர் பசுக் கூட்டத்தைக் கவர்தல்.

வெட்டவெளி - பகிரங்கம் (Publicity), திறந்த வெளி (Open plain).
வெட்டி - வீண் (Vain), வழி.
வெட்டியான் - சுடுகாடு காப்பவன்.
வெட்டிரும்பு - இரும்பை வெட்டும் உளி.
வெட்டுணி - துஷ்டன்.
வெட்டெனல் - கடுமைக்குறிப்பு.
வெட்கை - கடினம், வெப்பம், கட்டாந்தரை, வெளி.
வெடி - பயம், நறும்புகை, வெளி, வேட்டு, இடி (Thunder), கள், கேடு, பிளவு.
வெடி தீர்த்தல் - வெடி போடல் (Firing).
வெடுக்கினை - கோபி.
வெடுவெடுத்தல் - கடுமையாகப் பேசுதல்.
வெடுவெடுப்பு - சினக் குறிப்பு.
வெண்கதிரோன் - சந்திரன்.
வெண்கலம் - ஓர் உலோகம் (Bronze).
வெண்காரம் - வெங்காரம் (Borax).
வெண்குட்டம் - வெள்ளைக்குட்ட நோய் (White leprosy).
வெண்கூதாளம் - நீர்த்தாளி.
வெண்சலசமுற்றாள் - சரஸ்வதி.
வெண்சுடர் - சந்திரன்.
வெண்டலை - தலையோடு.
வெண்டாது - வெள்ளி (Silver)
வெண்டாமரை - வெள்ளைத் தாமரை (White lotus).
வெண்டாமரையாள் - சரஸ்வதி.
வெண்டிங்கள் - சந்திரன்.
வெண்டேர் - கானல், பேய்த்தேர் (Mirage).
வெண்பலி - சாம்பல்.
வெண்பாட்டு - வெண்பா.
வெண்பொன் - வெள்ளி.
வெண்மணி - முத்து (Pearl).
வெண்மலை - கைலாசம்.
வெண்மீன் - வெள்ளி (Vênus).
வெண்மை - இளமை, புல்லறிவு, வெண்ணிறம்.
வெதிர் - செவிடு, மூங்கில்.
வெதிர்த்தல் | வெதிர்ப்பு - அஞ்சுதல், நடுங்குதல்.
வெதிரம் - மூங்கில்.
வெதுப்பம் - வெப்பம் (Warmth)
வெதும்பல் - வாடல்.
வெந் - முதுகு.
வெந்நிடல் - புறங்காட்டல் (தோல்வியடைதல்).
வெந்நீர் - சுடுநீர் (Hot water).
வெப்பம் - வெம்மை, விருப்பம்.
வெப்பு - சுரநோய், வெம்மை.
வெம்பல் - கொதித்தல், வாடல்.
வெம்மை - விருப்பம், வெப்பம்.
வெய்து - வெப்பமுடையது, விரைவு.
வெய்துயிர்த்தல் - பெருமூச்சு விடல்.
வெய்துறல் - சினக்குறிப்பு, அச்சக்குறிப்பு, துன்பம்.
வெய்தெனல் - விரைவுக்குறிப்பு.
வெய்யவன் | வெய்யோன் - சூரியன், கொடியவன், விருப்புற்றோன், மிருகசீரிடநட்சத்திரம்.
வெயில் - ஒளி, சூரிய கிரணம்.
வெரிந் - முதுகு.
வெரு - அச்சம் (Fear).
வெருக்கொள்ளல் - அஞ்சுதல்.
வெருகு - பூனை, ஆண் பூனை, காட்டுப் பூனை.
வெருட்சி - அச்சம் (Fear).
வெருட்டலி - பயமுறுத்தல்.
வெருவந்தம் - அச்சம் (Fear).

வெருவரல் - அஞ்சல்.
வெருவு - அச்சம் (Fear).
வெருள் - அச்சம், மயக்கம்.
வெரூஉ - அச்சம்.
வெலவெலத்தல் - திகைத்தல், களைத்தல், உதறல்.
வெவ்வுயிர்த்தல் - பெருமூச்செறிதல்.
வெவ்வுரை - கடுஞ்சொல்.
வெள்கல் - வெட்கமடைதல்.
வெள்வரி - பலகறை (Cowries).
வெள்வளை - சங்க வளை.
வெள்ளடை - வெற்றிலை.
வெள்ளம் - ஓர் எண், கடல், மிகுதி, நீர்ப்பெருக்கு.
வெள்ளறிவன் - மூடன்.
வெள்ளறிவு - அறிவின்மை.
வெள்ளாட்டி - வேலைக்காரி.
வெள்ளி - சுக்கிரன் (Venus), வெண்மை, வெண் பொன் (Silver).
வெள்ளிடை - வெளி (Open space).
வெள்ளில் - விளாமரம், பாடை (Bier).
வெள்ளிலை - வெற்றிலை (Betel-leaf).
வெள்ளை - பலபத்திரன், சங்கு, வெண்மை, வெள்ளாடு, வெண்பா, அறிவின்மை, கள், சுண்ணாம்பு, ஒரு நோய், வெள்ளி (Silver).
வெள்ளை மெய்யாள் - சரஸ்வதி.
வெள்ளை வெளேரென - மிகு வெண்மையாக.
வெள்ளெழுத்து - சாலேசரம் (Purblindness).
வெளி - ஆகாயம், வெளிப்பக்கம், வெள்ளிடை.
வெளிது - வெண்மையுடையது, வெறிது.
வெளிப்படை - வெளிப்படுதல்.
வெளியார் - அறிவீனர்.
வெளில் - அணில், யானை கட்டுந் தூண், தயிர் கடையு மத்து, பாடை (Bier), வெண்மை.
வெளிற்றுரை - பயனில்லாத சொல்.
வெளிறல் - வெண்மையாதல்.
வெளிறு - இளமை, குற்றம், வெண்மை, அறிவின்மை, வயிர மின்மை.
வெளுத்தல் - வெண்மையாதல், வெண்மையாக்கல்.
வெளுப்பு - வெண்மை.
வெற்பன் - குறிஞ்சி நிலத் தலைவன.
வெற்பு - மலை.
வெற்றம் - சமயம், வெற்றி.
வெற்றி - ஜயம் (Victory).
வெற்றிலைக் கால் - வெற்றிலைத் தோட்டம்.
வெற்றுரை - பயனில் சொல்.
வெறி - அச்சம், கலக்கம், வெறியாட்டு, வட்டம், வாசனை, பேய், ஆடு, கள், நோய்.
வெறியன் - குடியன், பைத்தியக்காரன்.
வெறியாட்டாளன் - தேவராளன்.
வெறியாட்டு - தெய்வ மாடல்.
வெறுக்கை - பொன், செல்வம், வெறுத்தல்.
வெறுப்பு - அச்சம், அவாவின்மை.
வெறுமனே - சும்மா.
வெறுமை - இல்லாமை.
வென் - வெற்றி (Victory).
வென்றி - வெற்றி (Victory).
வென்றியன் - வெற்றி பெற்றவன் (Victor).

## வே

வேக்காடு - சூடு, வேதல்.
வேக்காளம்-அதிகாங்கை(Heat), மழை யில்லாக் காலம்.
வேகசரம் - ஒட்டகம்.
வேகம் - நஞ்சு, விரைவு, கோபம்.
வேகவதி - கம்ப நதி, வைகை யாறு.
வேகாளம் - அதிவிரைவு (Swiftness), கோபம்.
வேங்கடம் - திருப்பதி.
வேங்கியம் - குறிப்பு.
வேங்கை-வேங்கைமரம், பொன், புலி.
வேசரம் - ஒட்டகம், ஒருபாவைத்.
வேசரி - கழுதை, கோவேறு கழுதை (Mule).
வேசறல் | வேசறவு - சலித்தல்.
வேசனம் - ஊர்.
வேசாறல்-சேர்தல்.
வேசி - விலை மகள்.
வேசியம் - வேசியர் தெரு.
வேசை - வேசி.
வேட்கை - விருப்பம்.
வேட்கோவன் - குயவன்.
வேட்டகம் - மாமியார் வீடு.
வேட்டம் - வேட்டை (Hunting), பிசின், சாரம்.
வேட்டல் - விரும்பல், ஓமஞ் செய்தல், கலியாணஞ் செய் தல்.
வேட்டவள் - மனைவி.
வேட்டவன் - கணவன்.
வேட்டார் - நண்பர், கலியாண மானவர்.
வேட்டி - சோமன் (Cloth).
வேட்டு - வெடி (The report of a gun).
வேட்டுவன்-வேடன், மகநட்சத் திரம்.
வேட்டை-வேட்டம் (Hunting) துன்பம், இளைப்பு.
வேடகம் - காதணி.
வேடம் - வேற்றுருக்கொள்ளல், ஒரு வகைக் காதணி.
வேடு - வேடர் கூட்டம்.
வேடுவன் - வேடன் (Hunter).
வேடை - விருப்பம், வெப்பம் (Heat).
வேண்டல்-விரும்பல், கெஞ்சல்.
வேண்டார்-விரும்பாதவர், பகை வர்.
வேண்டாவெறுப்பு - கவலை யின் மை (Indifference).
வேண்டுகோள் - பிரார்த்தனை.
வேணவா - பெருவிருப்பம்.
வேணகை - மதில்.
வேணி - சடை, ஆகாயம், நதி.
வேணு - மூங்கில், வில்,வாள், புல்லாங்குழல் (Flute).
வேணும் - வேண்டும்.
வேத்தவை - அரச சபை.
வேத்தியம் - அடையாளம்.
வேத்திரம் - பிரம்பு, அம்பு.
வேதக் கொடியோன்-துரோணு சாரி.
வேதசம் - பிரம்பு.
வே த ண் ட ம் - மலை, யானை. வெள்ளி மலை.
வேத நாயகன்-கடவுள், பிரமன்.
வேத பாரகன்-வேதத்தை நன்கு கற்றவன், பார்ப்பனன்.
வேத பாராயணம் - வேதங்களைக் கற்றல்.
வேதன் - பிரமன், வியாழன், கடவுள்.
வேதனம் - சம்பளம், பொன், துன்பம், அறிவு, தொளைத் தல்.

வேதனை-நோய்(Pain), துன்பம்.
வேதா - கடவுள், பிரமன்.
வேதாத்தியயனம்-வேதம் ஓதல்.
வேதாந்தம் - வேத முடிவு (Philosophy).
வேதாந்தி - வேதத்தின்முடிவை யறிந்தவன்.
வேதாளம் - ஒரு வகைப் பூதம் (Demon).
வேதாளி - மா காளி.
வேதாளியர் - புகழ்வோர்.
வேதி - ஓம குண்டம், மதில், கேட்டை நட்சத்திரம், திண்ணை, வேதமோதுபவன்.
வேதிகை - கேடகம் (Shield), திண்ணை, குறடு.
வேதித்தல் - வேறுக்கல்.
வேதியர் - வேதமறிந்தவர், பிராமணர்.
வேது - வெப்பம்.
வேதை - துன்பம்.
வேந்தவை - இராஜ சபை.
வேந்தன் - அரசன், சந்திரன், வியாழன், இந்திரன், சூரியன்.
வேந்து - அரசன்.
வேப்பந்தார்-வேப்பமலர் மாலை.
வேம்பன் - பாண்டியன்.
வேம்பின் தாரோன் - பாண்டியன்.
வேம்பு - வேப்பமரம்.
வேமானியர் - தெய்வப் பெண்கள்.
வேய்-உள் துளை, ஒற்று (Overhearing), மூங்கில்.
வேய்ங்குழல் - புல்லாங் குழல் (Flute).
வேய்தல் - சூடுதல், மூடுதல், அலங்கரித்தல், வீடு.
வேயர் - வேவுகாரர் (Spies).
வேயல்-மூடல், மூங்கில்.
வேயுள் - வேய்தல்.
வேர் - மரஞ்செடி கொடிகளின் வேர் (Root), வேர்வை.
வேர்ப்பு - வேர்வை (Sweat). கோபம்.
வேர்வை - (Sweat).
வேரம் - வைரஞ் சாதித்தல்.
வேரல் - மூங்கில்.
வேரி - வாசனை, கள், வெட்டி வேர்.
வேல் - ஆயுதம், வேலாயுதம், வேலமரம், சூலம், மூங்கில்.
வேலன் - முருகன், வெறியாட்டாளன்.
வேலாயுதன் - முருகன்.
வேலாவலயம் - கடல், பூமி.
வேலி - ஊர், மதில் காவல், ஒரு நில அளவை(5 Acres), நிலம், வயல்.
வேலிறை - முருகன்.
வேலினுக்கிறை - முருகன்.
வேலை-கடல், கடற்கரை, காலம், கரும்பு, தொழில், பொழுது.
வேலைப்பாடு - வேலைத்திறம் (Workmanship).
வேலையிற்றுயின்றோன் - திருமால்.
வேவாள் - வேவுகாரன் (Spy, scout).
வேவு - ஒற்று (Spy), வேதல்.
வேவுகாரர் - ஒற்றர் (Spies).
வேழம் - கரும்பு, யானை, கொறுக்கை, மூங்கில், இசை, நாணல், விளாம்பழத்தைக் கெடுக்கும் நோய்.
வேழம்பர்-கழைக்கூத்தர் (Pole-dancers).
வேள் - முருகன், மன்மதன் விருப்பம், உதவி, மண்.

வேள்வி - யாகம், மகநட்சத்திரம், கொடுத்தல், கலியாணம், பூசனை, ஓம குண்டம்.
வேள்விக்குண்டம் - யாகக்குழி.
வேள்விக்குவேந்தன் - இந்திரன்.
வேள்வித் தறி - யாகத் தூண்.
வேள்வி நாயகன் - இந்திரன்.
வேளாண்மை - கொடை, உண்மை, விவசாயம் செய்தல்.
வேளாளர் - ஈகையாளர், மூவகை வைசியர்.
வேளான் - குயவன்.
வேளிர் - தமிழ் நாட்டுப் பழங் குடிகளாகிய குறுநில மன்னர்.
வேளை - காலம், ஒரு வகைப் பூடு.
வேற்றலம் - காற்று.
வேற்றாள் - புதியவன் (**Stranger**).
வேற்றுமை - வேறுபாடு.
வேற்றுரு - வேடம் (**Disguise**).
வேறல் - வெல்லுதல்.
வேறுபாடு - வித்தியாசம்.
வேனல் - கானல், வெம்மை.
வேனில் - அழகு, அலங்காரம், கோடை காலம், பேய்த்தேர் (**Mirage**), பொலிவு.
வேனிலாளி / வேனிலான் - மன்மதன்.

## வை

வை - பூமி, கூர்மை, வைக்கோல்.
வைகடிகன் - இரத்தினத்தைச் சாணை பிடிப்பவன்.
வைகம் - பூமி.
வைகல் - விடியற்காலம், நாள், தங்குதல், துயிலுதல்.
வைகறை - விடியற்காலம்.
வைகுண்ட நாதன் - திருமால்.
வைகுதல் - தங்குதல், கழிதல்.
வைகுந்தம் - வைகுண்டம்.
வைகை - வைகை யாறு.
வைச்சிரவணன் - குபேரன்.
வைசயந்தம் - இந்திரன் மாளிகை, கொடி (**Flag**).
வைசியன் - மூன்றாம் வருணத்தவன்.
வைசூரி - ஒருநோய் (**Small-pox**)
வைடூரியம் - நவமணியிலொன்று.
வைணவம் - விஷ்ணு மதம், ஒரு புராணம், புல்லாங்குழல் (**Flute**).
வைணவர் - விஷ்ணு மதஸ்தர்.
வைத்திய நாதன் - சிவபிரான்.
வைத்தியம் - பரிகாரம்.
வைத்தியன் - மருத்துவன்.
வைத்தாறு - வைக்கோற்போர்.
வைதல் - ஏசுதல், சபித்தல்.
வைதவ்வியம் - விதவைத் தன்மை (**Widow-hood**).
வைதாளிகன் - பள்ளி எழுச்சி பாடுபவன்.
வைதிகம் / வைதீகம் - வேத சம்பந்தம்.
வைதிகர் / வைதீகர் - வேதமார்க்கத்தினர்.
வைதேகி - விதேக நாட்டரசன் புதல்வி (சீதை).
வைப்பு - இடம், ஊர், சேர்த்து வைக்கும்பொருள், வைத்தல்.
வைபவம் - செல்வம், விசேடமானது.
வைபோகம் - விசேஷம், செல்வம், சிற்றின்பக் களிப்பு.
வைமானிகர் - விமானத்திற் செல்லுந் தேவர்.
வையகம் - பூமி.
வையம் - தேர், எருது, உரோகிணி நட்சத்திரம், பூமி, பல்லக்கு, வண்டி, வாகனம்.

வையாபுரி - பழநித் தலம்.
வையாளி வீதி-குதிரை செலுத்தும் வீதி.
வையை - வைகை நதி.
வையைத் துறைவன் - பாண்டியன்.
வைரம் - வீரத் தன்மை, வயிரம் (Diamond), நீண்ட விரோதம்.
வைராக்கியம் } - வெறுப்பு.
வைராகம் }
வைராகி - துறவி.
வைரி - பகைவன்.
வைரியர் - கூத்தர்.
வைவ ர் - மனுக்களில் ஒருவன், மன் சனி.
வைவு - இகழ்ச்சி, சாபம்.
வைனதேயன் } - கருடன்.
வைனன் }

## வெள

வெளவல் - கவர்தல், கெளவுதல், வாருதல், கொள்ளையடித்தல்.
வெளவால் - ஒரு பறவை (Bat), ஒரு வகை மீன்.
வெளவி - சாதி மான் (A kind of deer).
வெளவுதல் - வெளவல்.

## தமிழில் வழங்கும் சில குறிப்பெழுத்துகள்

1. அணா ... அ
2. ரூபாய் ... ரூ
3. ஆகமொத்தம் ... ஆ‌
4. தேதி ... உ
5. மாதம் ... மீ
6. வருஷம் ... வ௵
7. மகாராஜராஜஸ்ரீ ... ம-ா-ா-ஸ்ரீ
8. மேற்படி (Above said) ௸

69840

Printed by Penrose & Co., 19, Sunkurama Chetty Street, G. T., Madras.